216829

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

ஏப்ரல் 11, 1997, தொகுதி. 30
எண். 1.

D
V2,:31;N97
N97.30.1
16829

11-04-1997

## உள்ளடக்கம்

பக்கங்கள்


தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் v-viii

Personnel of the Government of Tamil Nadu ix-xii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் xv-xvi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) xvii-xxvii

1. **வினாக்கள்-விடைகள்--**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-45

2. **தகவல் கோரல்--**

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 46-47

3. **சிறப்புக் கவன ஈர்ப்பு--**

(அ) சென்னை அருகே நேமம் கிராமத்தில் உள்ள கல்கி ஆசிரமத்தில் முறைகேடுகள் நடப்பதாக வரும் செய்திகள் 47-49

(ஆ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், தேவனாம்பட்டினம் மீனவர் மீது பாண்டிச்சேரி காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியமை 49-56

| | பக்கங்கள் |
|---|---|
| 4. கவன ஈர்ப்பு-- | |
| (அ) ஆலங்குடி தொகுதியில் சில பகுதிகளில் மின் அழுத்தக் குறைவினால் விவசாயிகள் பாதிக்கப்படுதல் | 56-58 |
| (ஆ) தேனாம்பேட்டை அருள்மிகு பால சுப்பிரமணிய சுவாமி மற்றும் ஆலையம்மன் திருக்கோயில்கள் நிலத்தில் கட்டப்பட்டுள்ள அங்காடிகளை, முன்னர் காய்கறி வியாபாரம் செய்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்தல் | 58-62 |
| 5. உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேற வேண்டுமென்று தாம் ஆணையிட்டதைப் பேரவைத் தலைவர் திரும்பப் பெறுதல் | 63-64 |
| 6. அறிக்கைகள் அளித்தல்-- | |
| அரசு உறுதிமொழிக் குழு | 65 |
| 7. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 13--நீதி நிருவாகம்<br>(ஆ) கோரிக்கை எண் 14--சிறைச்சாலைகள்<br>(இ) கோரிக்கை எண் 21--மீனளம் | 65-168 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 65,69-70, 145-164 |
| *மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் | 70,72, 137-145 |
| திரு. டி. அமரமூர்த்தி | 72-75 |
| *திரு. என். பெரியசாமி | 75-78 |
| திரு. மு. பன்னீர்செல்வம் | 78-81 |


216829




| | பக்கங்கள் |
|---|---|
| 7. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| திரு. வ. வேலுசாமி | 81-86 |
| திரு. சி. வேலாயுதன் | 86-90 |
| திரு. பா. துரைசாமி | 90-95 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 95-101 |
| திரு. இரா. ஆவுடையப்பன் | 101-105 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 105-113 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 114-118 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 118-121 |
| திரு. இரா. பெர்னார்டு | 121-123 |
| திரு. ம. சண்முகம் | 123-126 |
| *திரு. பி.என். வல்லரசு | 126-127 |
| *திரு. டி. மணி | 127-130 |
| திரு. சி. ஞானசேகரன் | 131-134 |
| திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன் | 135-136 |
| 8. உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள் | 168-169 |
| 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 169-170 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு. |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு.

10. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பாற்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகு கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு. கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. **வணிக வரிகள் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:**
வணிக வரிகள்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:**
வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
இந்து சமய அறநிலையத் துறை.

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:
சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.

26. மீன்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passport.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport..** **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Madras Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies and Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Pulavar B.M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Scheme.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. டாக்டர் வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. டி. சுந்தரராஜலு, எம். ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. க. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆலடியன், டாக்டர் வே. .. திருவட்டாறு

22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

23. ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். .. வீரபாண்டி

24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு

25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்

26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

30. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)

31. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

32. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்

35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

38. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு

39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மைலாப்பூர்

40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்காநகர்

42. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி

48. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்

49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்

54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை

58. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா... சிவகங்கை

59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

60. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி

61. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்

62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 65. கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 66. கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |
| 69. கோவிந்தன், திரு. வி. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 70. சக்ரபாணி, திரு. ஆர். | .. | ஒட்டன்சத்திரம் |
| 71. சண்முகம், திரு. கோ. | .. | திருப்பத்தூர் |
| 72. சண்முகம், திரு. சி. | .. | ஆலந்தூர் |
| 73. சண்முகம், திரு. ம. | .. | கிணத்துக்கடவு |
| 74. சந்தானம், திரு. எல். | .. | சோழவந்தான் |
| 75. சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 76. சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |
| 77. சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ்... | | சமயநல்லூர் (செ.வ.) |
| 78. சம்பத், திரு. ஏ.ஜி. | .. | முகையூர் |
| 79. சரஸ்வதி, திருமதி ஆர். | .. | தாராபுரம் (செ.வ.) |
| 80. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 81. சாமிநாதன், திரு. மு.பெ. | .. | வெள்ளக்கோவில் |
| 82. சிங்காரவேலு, திரு. வி.பி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 83. சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 84. சிவராமன், திரு. ஆர். | .. | திருப்பத்தூர் |
| 85. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 86. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. | பனமரத்துப்பட்டி |



| | | |
|---|---|---|
| 87. சிவானந்தம், திரு. ஆர். | .. | ஆரணி |
| 88. சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. | திருத்தணி |
| 89. சின்னய்யா, திரு. வெ. | .. | திருமயம் |
| 90. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. | விருதுநகர் |
| 91. சுகவனம், திரு. இ.ஜி. | .. | பர்கூர் |
| 92. சுடலைமுத்து, திரு. அ. | .. | போடிநாயக்கனூர் |
| 93. சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 94. சுந்தரம், திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 95. சுந்தரம், திரு. ந. | .. | காரைக்குடி |
| 96. சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 97. சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 98. சுப்பராயன், திரு. கே. | .. | திருப்பூர் |
| 99. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. | .. | திருவள்ளூர் |
| 100. சுப்பிரமணி, திரு. பி.என். | .. | ஆற்காடு |
| 101. சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. | திருநெல்வேலி |
| 102. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி | .. | மொடக்குறிச்சி |
| 103. சுரேஷ் ராஜன், திரு. என். | .. | கன்னியாகுமரி |
| 104. செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. | மருங்காபுரி |
| 105. செங்கை சிவம், திரு. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 106. செல்லக்குமார், டாக்டர் அ. | .. | தியாகராய நகர் |
| 107. செல்வம், திரு. ரெ. | .. | குளித்தலை |
| 108. செல்வராஜ், திரு. டி. | .. | உடுமலைப்பேட்டை |

109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
110. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் (மேற்கு)
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே. ஆர். ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
134. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே.என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161. புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்



176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. .. திருநாவலூர்
180. மணிநாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
187. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை
188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
193. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
196. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு
213. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு.ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 29, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 ஏப்ரல் 11, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்பட பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 521. திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

521—

### தொழிற் பயிற்சி கல்லூரிகள் அமைத்தல்

***5966—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூரில் தொழிற் பயிற்சி கல்லூரி, பல்தொழில் நுட்பப் பயிலகம் மற்றும் பொறியியற் கல்லூரி ஆகியவை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அவை அமைக்கப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) பல்தொழில் நுட்பப் பயிலகம் மற்றும் பொறியியல் கல்லூரி ஆகியவை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் கவனத்தில் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தனியார் தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்க எந்த புள்ளாத ஊராட்சி ஒன்றியங்களில் நிலையம் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் பயிலகம் அமைப்பது குறித்து வேலைவாய்ப்புத் துறையினால் ஆய்வு செய்யப்படும்.

**திரு. அ. சுடலைமுத்து:** இந்தியப் பெருங்கடல் போல கொண்ட அரசாங்கம் போல அன்புகொண்ட மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியாகிய போடி நாயக்கனூரில் பத்துக்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. அதில் படித்து முடிக்கும் மாணவர்கள் மேல் படிப்பிற்காக வெளியூரில் மனு செய்து, எங்கு கிடைக்குமோ என்று சிரமத்துடன் அலைகிறார்கள். எனது தொகுதியில் எந்தவிதமான தொழிற் கல்வி நிலையமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியாகிய போடிநாயக்கனூரில் இத்தனை கல்வி நிலையங்கள் இருந்தும், உதாரணமாக மதுரை மாவட்ட மற்றும் வைகை அணை அடுத்து தேனி மாவட்டத்தில் மிகப் பெரிய கல்வி நிறுவனமாகிய ஐயனார் கமலம்மாள் நினைவு மேல்நிலைப்பள்ளி இருந்தும், எந்தவிதமான தொழில் சம்பந்தமாகவோ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் துணை வினா என்ன என்பதை நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள். நீங்கள் உரையையே எழுதிக் கொண்டு வந்து படித்துக் கொண்டிருக்கிறீர்கள். கல்லூரி ஆரம்பிக்க முடியுமா என்று கேளுங்கள்.

**திரு. அ. சுடலைமுத்து:** தொழில்நுட்பக் கல்வியோ அல்லது மற்ற ஏதாவது மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட பயிலகமோ இல்லை. எனவே அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து அப்படிப்பட்ட கல்வி நிறுவனம் அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 231 சட்டமன்ற உறுப்பினர்களுள் சுமார் 200 பேர்களுடைய தொகுதியில் இப்படிப்பட்ட தொழில்நுட்பப் பயிலகங்கள் அமைக்கப்படவில்லை. தனியார் அமைக்க முன்வார்களேயானால், அது வரவேற்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் என்னை வம்புக்கு இழுத்ததாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கே தனியார் பொறியியல் கல்லூரி துவக்கக் கூடிய அளவுக்கு செல்வாக்கு படைத்தவர்கள், செல்வம் படைத்தவர்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள். அந்த முயற்சியிலே அவர் ஈடுபடவேண்டும். அப்போது நான் அவருக்கு உறுதுணையாக இருப்பேன்.

வினா எண் 522, திரு. கோ. தளபதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்

**522—**

## மேல்நிலைக்கல்வி தேர்வு மையம் அமைத்தல்

***6288—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேடப்பட்டி தொகுதி, ஏழுமலை மேல்நிலைப் பள்ளியில், மேல்நிலைக்கல்வி தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி தொகுதியிலுள்ள ஏழுமலை மேல்நிலைப் பள்ளியில் சுமார் 177 மாணவர்கள் பயிலுகிறார்கள். அந்த மாணவர்கள் 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கிராமத்திலிருந்து வந்து பயின்று மேலும் தேர்வு எழுதுவதற்காக உசிலம்பட்டிக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. அந்த ஏழை மாணவர்கள் பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கியவர்கள். அந்த மாணவர்களுடைய நிலைமையைக் கருதி இந்த ஆண்டாவது தேர்வு மையம் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பிளஸ்-2 வகுப்புத் தேர்வு எழுதுகிறவர்களுக்காக கேட்கப்பட்ட கேள்வி. இதற்கான வேண்டுகோள் காலதாமதமாகக் கிடைத்த காரணத்தினால் கருதப்பட முடியவில்லை. மேலும் அந்த வட்டாரத்தில் மாணவர்களுக்கிடையிலே சற்று கட்டுப்பாட்டுக்கு மாறாக நடந்து கொள்ளக்கூடிய ஒரு பழக்கம் இருப்பதாகத் தெரிவதால்

எச்சரிக்கையோடு கண்காணிக்க வேண்டியிருக்கிறது. எனவே, இந்த நிலைமைகளை காரணமாக உடையதாக எடுப்பது விரைவாக வருங்காலத்தில் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தேர்வு மையம் அமைந்துள்ள இடங்களில் காவல் நிலையம் இருக்க வேண்டும் என்ற விதிமுறை உள்ளதா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விதிமுறை எதுவும் இல்லை. ஆனால், அப்படிப்பட்ட தேர்வு நடக்கிற மையங்களில் கண்காணிப்புக் குழு அடிக்கடி சென்று கண்காணிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 523. திரு. அ. வெங்கடாசலம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**523**—

## துணை மின் நிலையம் அமைத்தல்

***708—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதி வசதிக்கேற்ப, 1997-98 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டு காலமாக அந்தப் பகுதியில் மிகக் குறைந்த அழுத்த





மின்சாரத்தைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 33 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி துவங்கப்பட்டு, மார்ச் 31 ஆம் தேதிக்குள் அந்தத் துணை மின் நிலையம் இயங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருந்தாலும், அந்தத் துணை மின் நிலையத்திற்குத் தேவையான பொருட்கள் வராத காரணத்தினால் தொடர்ந்து அது காலதாமதப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் பல்வேறு சங்கடங்களுக்கு ஆளாகிற விவசாயப் பெருமக்களுடைய ஏக்கத்தைப் போக்கக் கூடிய வகையில் விரைவாக துணை மின் நிலையத்திற்கு வழங்க வேண்டிய பொருட்களை வழங்கி, அந்தத் துணை மின் நிலையம் இயங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டதைப் போல் கீரமங்கலத்தில் 175 லட்சம் ரூபாய் செலவில் 33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. துணை மின் நிலையத்திற்கு வழங்க வேண்டிய சில பாகங்கள் கிடைக்காத காரணத்தினாலே, வேலைகள் தாமதம் ஆயிற்று என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பிரச்சினை தமிழகம் எங்கும் இருக்கிறது. அதற்காக ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதிக்குள்ளாக துணை மின் நிலையத்திற்குத் தேவையான உபரி பாகங்கள் வாங்கப்பட வேண்டுமென்று மின்சார வாரியத்திற்கு அரசு ஆலோசனை வழங்கி இருக்கிறது. அந்த ஆலோசனைகளை ஏற்று, மின்சார வாரியமும் நடவடிக்கையிலே ஈடுபட்டு இருக்கிறது. நிச்சயமாக இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் அந்தத் துணை மின் நிலையம் இயங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்போது அடிக்கடி மின் தட்டுப்பாடு ஏற்படுகிறது. பொதுவாக மின் உற்பத்திச் செலவும் அதிகமாகிறது. குஜராத்திலே, மனித திடக் கழிவிலிருந்து, மலத்தைக் கொண்டு மின்சாரம் குறைந்த செலவிலே தயாரிக்கப்படுகிற தகவல் கிடைத்திருக்கிறது. அதேபோல், மனித திடக் கழிவைப் பயன்படுத்தி, மின்சாரத்தைத் தயாரித்தால் - அதுவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே, சுகாதாரமும் நம்முடைய நாட்டிலே காக்கப்படக் கூடிய வாய்ப்பும் இருக்கிற

காரணத்தினாலே — மனித திடக் கழிவைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கின்ற திட்டத்தை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாட்டுச் சாணத்திலிருந்து மின்சாரம் தயாரிப்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் மனிதனுடைய திடக் கழிவுப் பொருள்களிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுமா என்று கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை தயார் செய்து அவரே தொடங்குவதற்கு முன் வருவாரானால் அரசு அவருக்கு நிச்சயமாக உரிமை அளிக்கும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 524. திரு. குத்தாலம் பி. கல்யாணம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

524—

## பாலையூரில் துணை மின் நிலையம் அமைத்தல்

***5883—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி பாலையூரில் புதிய 110 கிலோவாட் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் கேட்ட நேரத்தில் அதற்கான பணிகள் துவங்கப்படவில்லை. இப்போது இந்தப் பணி துவங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 525. திரு. பொ. முருகேசன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

525—

## குடிசைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

***3369—திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் ஆட்சேபகரமான புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வரும் குடிசைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா அளிக்க அரசு ஆவன செய்யுமா?

[illegible]

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வரும் குடிசைவாழ் மக்களுக்கு ஆட்சேபணை இல்லாத இடங்களில் மனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 526. திரு. தா. உதயசூரியன். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

526—

## கூட்டுக்குடிநீர்த் திட்டம் அமைத்தல்

***585—திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

சங்கராபுரம் மற்றும் மூங்கில்துறைப்பட்டு பகுதியிலுள்ள கிராமங்களின் குடிநீர் பஞ்சத்தைப் போக்க கூட்டுக்குடிநீர்த் திட்டம் அமைக்கும் செயல்திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

[1997 ஏப்ரல் 11

சங்கராபுரம் மற்றும் மூங்கில்துறைப்பட்டு பகுதியிலுள்ள கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. இருந்தாலும், சங்கராபுரம் தொகுதியைச் சேர்ந்த ராவுத்த நல்லூர், பொரசலூர், வடமாமந்தூர், புதுப்பேட்டை, சவேரியார் பாளையம், மூங்கில்துறைப்பட்டு, காமராஜர் நகர் மற்றும் சருடையான்பட்டு ஆகிய குடியிருப்புகளில் குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குறிப்பிட்ட 4, 5 கிராமங்களில் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டினார்கள். மூங்கில்துறைப்பட்டிலே ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்த ஆலைக்குத் தேவையான தண்ணீர் தென்பெண்ணை ஆற்றிலிருந்து எடுக்கப்படுகிறது. ஆகவே, அந்தத் தென்பெண்ணை ஆற்றை மையமாகக் கொண்டு சங்கராபுரம் வரை உள்ள 10 கிராமங்களுக்கு இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீங்கள் அமுல் செய்தால் ஏழை, எளிய மக்களுக்கு குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த தென்பெண்ணை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆவது புனரமைப்புத் திட்டத்தின்படி மூங்கில் துறைப்பட்டு மற்றும் காமராஜர் நகர் ஆகிய இரண்டுக்கும் அந்த ஆற்றுப் படுகையிலே நீர் ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டு உத்தேசமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று இருந்தது. வெள்ளப்பெருக்கு காரணத்தால் அது பாழடைந்து மறுபடியும் 1997-98 ஆம் ஆண்டுக்கான புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது முடிந்ததற்குப் பிறகு இது சீராக, செம்மையாகச் செயல்படுமானால் அதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 527, திரு. எல். சந்தானம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 11]

**527—**

## விரிவாக்கப் பகுதிகளுக்கு தெருவிளக்கு மற்றும் குடிநீர் வசதி அளித்தல்

***2069—திரு. எல். சந்தானம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள தெருவிளக்கு, குடிநீர் தற்போது விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுக்கும் அளிப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே ஏறத்தாழ 4 பேரூராட்சிகள் இருக்கின்றன. 4 பேரூராட்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகின்றன. அதிலே நிதி ஆதாரங்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அரசு செய்து தருமா என்று வினாவை நான் எழுப்பியபோது அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது செய்து தருவோம் என்கிறார்கள். அதை எவ்வளவு விரைவாக செய்து தருவார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான், வாடிப்பட்டி, அலங்காநல்லூர், பாலமேடு ஆகிய 4 பேரூராட்சி மன்றங்களுக்கும் 1995-96-ஆவது வருடத்தில் ஓரளவுக்கு தெருவிளக்கு, குடிநீர் வசதி மற்றும் சில திட்டங்களின்கீழ் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வறட்சி நிவாரணத் திட்டம், விற்பனை வரி நிதியுதவித் திட்டம் என்று இவைகளின்கீழ் ஓரளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. இருந்தாலும், அது போதுமானதாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1995-96 ஆம் வருடம் முடிவுற்ற குடிநீர் விநியோகம் செய்யப்பட்டாலும் சோழவந்தான் பேரூராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணி துவங்கும் நிலையில் உள்ளது. பாலமேடு பேரூராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியத்தின் மூலம் 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அலங்காநல்லூர் பேரூராட்சியில் பாரட்சி நிர்மாண திட்டத்தின்கீழ் 50,000 ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு குடிநீர் விநியோகிக்கும் நிலையில் தற்போது இருந்து வருகிறது. அடிப்படை வசதிகளை பகுதியில் அளிக்கப்படும் நிதியின் மூலம் ஓரளவிற்கு சரிக்கட்டலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தானிலே புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ரூ. 10 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு அதைத் தொடங்கி செயல்படுத்துவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவங்கும் நிலையில் உள்ளது என்று சொன்னால் அடுத்த ஆண்டு இல்லை. இந்த ஆண்டு தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 528. திரு. துரை. சந்திரசேகரன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**528--**

## இராமேஸ்வரத்தில் மணல் தூவைத் தடுத்தல்

***617—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரத்தில் அடிக்கடி ஏற்படும் மணல் தூவைத் தடுக்க அரசு எடுத்துள்ள தடுப்பு நடவடிக்கை என்ன?

[illegible]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. சந்திரசேகரன். இருக்கையில் இல்லை. திரு. குழந்தை தமிழரசன்.



**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த மணல் துகள்கள் அடிக்கடி அருகாமைப் பகுதியில் இருக்கின்ற நிலங்களைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கின்றன. அது விவசாயிகளுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, அதை அகற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

அதுபோல், கடந்த புயல், வெள்ளத்தால் ஆற்றுப் பகுதி ஓரங்களில் விருத்தாசலம் தொகுதியில் பல விளை நிலங்கள் மணல் மேடு ஆகிவிட்டன. புல்டோசர் வைத்து அவற்றை அகற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கனவே கோரிக்கை கொடுத்தேன். ஆனால், விவசாய பொறியியல் துறையிடமிருந்து இன்னும் புல்டோசர் வழங்கப்படவில்லை. அதையும் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மூலக் கேள்வி இராமேஸ்வரம் பற்றியது. இராமேஸ்வரம் நான்கு புறமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் தாவர அரண் அமைப்பு சற்று கடினம் என டென்மார்க் குழு ஒன்று அந்தப் பகுதியில் பார்த்துவிட்டு, அதைச் செய்ய இயலாது என்று அறிக்கை கொடுத்து விட்டார்கள். காற்று அரிப்பைத் தடுப்பதற்கு நெல்லை மாவட்டம், காமராஜர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டங்களில் 41 கோடி ரூபாய்க்கு மேல் டென்மார்க் நிதி உதவியுடன், மாநில அரசின் பங்குத் தொகையுடன் சேர்ந்து இப்போது காற்று அரிப்பைத் தடுக்கும் பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

கடந்த டிசம்பர் மாதம் பெய்த பெருமழையினால் வெள்ளம் பெருக்கெடுத்து பயிர் செய்யக்கூடிய நிலங்களில் மணலைத் தள்ளி மேடாக்கியிருக்கிறது. அதையெல்லாம் அகற்ற முடியுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேள்வியை எழுப்பினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதுபோன்று வயல்களில் மணல் மேடு ஏற்பட்டதை எல்லாம் அகற்றுவதற்கு ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

[1997 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 529. திரு. கே. தங்கமணி மற்றும் திரு. வ. வேலுசாமி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**529 –**

### பெரியாறு அணையின் நீர்மட்ட அளவை உயர்த்துதல்

***701—, திரு வ. வேலுசாமி, திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியாறு அணையின் நீர்மட்ட அளவை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம்.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பெரியாறு அணை நீர் மட்டத்தினை 152 அடியாக உயர்த்துவதற்கு கேரள அரசோடு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தையில் 152 அடியாக உயர்த்துவதற்கு முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறதா?

அதுபோக பூர்வீக வைகைப் பாசனப் பகுதிகளான பரம்பொன். இராமநாதபுரம் போன்ற பகுதிகளுக்கு கடந்த ஆண்டு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக ஒரு போக சாகுபடிக்காக இறுதி நிலையில் தண்ணீர் கிடைத்ததற்காக தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் அந்தப் பூர்வீக வைகைப் பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பெரியாறு அணையில் 152 அடி தண்ணீர் நிரப்பவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய லட்சியம். பெரியாறு அணை கட்டப்பட்டபோது அதனுடைய ஷரத்தினுடைய முக்கிய நோக்கமே அணை கட்டி 152 அடி தண்ணீர் நிறுத்துவதற்காகத்தான் அணை



1997 ஏப்ரல் 11]

கட்டப்படுகிறது என்று எழுதியிருக்கிறது. ஆனால், இதிலே ஒரு சோகம் 1979 ஆம் ஆண்டு நடந்தது. அப்போது. கேரளாவில் இருக்கிற சில பத்திரிகைகள் பெரியாறு அணை பலவீனமாக இருக்கிறது. உடைந்துவிட்டால் இடுக்கி மாவட்டம் அழிந்து விடும் என்று எழுதினார்கள். அப்போது சென்ட்ரல் வாட்டர் கமிஷன் வந்து பார்த்துவிட்டு அணை பலமாகத்தான் இருக்கிறது என்று 1978 ஆம் ஆண்டு இறுதியில் சொன்னார்கள். பிறகு 1979 ஆம் ஆண்டில் மீண்டும் கேரளாவில் எழுதிக்கொண்டே இருந்த காரணத்தால், சென்ட்ரல் வாட்டர் கமிஷனுடைய தலைவர் திரு. தாமஸ் அவர்கள். திருவனந்தபுரம் வந்து தமிழ்நாட்டில் இருக்கிற அதிகாரிகளை எல்லாம் அங்கே அழைத்துப் பேசி பிறகு அணையை பலப்படுத்தினால் நீங்கள் 152 அடி நிறுத்துவதிலே தப்பு இல்லை. எனவே. 3 கட்டமாக அணையை நீங்கள் பலப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். Emergency measure - Mid-term measure. medium term measure and long-term measure என்று 3 விதமாகக் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் ஒரு artistic cap - அந்த அணைக்கு மேலே போட்டு. டீரில் போட்டு. சுயதளைக் காய்ச்சி கம்பியோடு உள்ளே விடுவது - artistic cap போடுவது அதுவல்லாமல். மேலும் 3 வழிந்தோடுகிற வெள்ளிகள் அமைப்பது அதுவரையில் தண்ணீர் 136 அடியாக இருக்கட்டும். இந்த 2 பணிகளையும் செய்துவிட்டால் பிறகு 145 அடியோடு நிறுத்திக் கொள்ளுங்கள். பிறகு நீங்கள் 3 கட்டமாக. நாங்கள் சொன்ன எல்லாப் பணிகளையும் முடித்துவிட்டால் நீங்கள் 152 அடியில் நிறுத்திக் கொள்ளலாம் என்று சென்ட்ரல் வாட்டர் கமிஷன்தான் ஒரு பஞ்சாயத்தை செய்தது. அதற்கு இரண்டு சர்க்கார்களும் ஒத்துக்கொண்டார்கள். நம்மைப் பொறுத்தவரையில் 3 கட்டப் பணியையும் இப்பொழுது முடித்துவிட்டோம். 3 கட்டப் பணியையும் முடித்துவிட்ட பிறகும் கூட 152 அல்ல. 136-லிருந்து 145-க்குக் கூட நிறுத்துவதற்கு மறுக்கிறார்கள். கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சரோடு நான் பேசினேன். பேசுகிறபொழுது அவர் சொன்னார். அவருடைய மாநிலத்திலேயும் சில பிரச்சினைகளைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள்; எனவே. இதுகுறித்து ஆய்வதற்கு ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறோம். அந்தக் கமிட்டி தன்னுடைய ரிப்போர்ட்டைக் கொடுத்த பிறகு மீண்டும் இதைப்பற்றிப் பேசலாம் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

முற்பகல் 9-50

இதற்கிடையில் நான், டெல்லியிலே சென்ட்ரல் வாட்டர் கமிஷன் சேர்மன் அவர்களைச் சந்தித்து, மத்தியஸ்தம் செய்தது நீங்கள்தானே;

உங்கள் வார்த்தையை நம்பித் தானே நாங்கள் அதை ரிப்பேர் செய்தோம்: — ரிப்பேர் செய்தது எதற்காக? மீண்டும் தண்ணீரை நிறுத்துவதற்காகத்தான். ஆனால் கேரள அரசைப் பொறுத்தவரையில் நிறுத்த மறுக்கிறது. எனவே, மத்தியஸ்தம் செய்த சென்ட்ரல் வாட்டர் கமிஷன்தான் இதிலே தலையிட்டு, எங்களுக்குப் பரிகாரம் காண வேண்டும் என்று, சென்ட்ரல் வாட்டர் கமிஷன் சேர்மனையும், மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சரையும் வைத்துக் கொண்டு பேசினேன். அவர்கள், நாம் நீ கேட்பது நியாயம் என்று உணர்ந்து கொண்டு, சென்ட்ரல் வாட்டர் கமிஷன் போன மாதம் இந்தப் பெரியாறு அணையை வந்து பார்த்துவிட்டு, பலமாக இருக்கிறது என்றுதான் அவர்களும் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தைக் கேரள அரசுக்கு நான் தெரிவித்திருக்கிறேன். எனவே, இப்பொழுது கேரள அரசு சொல்லியிருக்கிறது, இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக நாங்கள் போட்ட கமிட்டியினுடைய ரிப்போர்ட் வந்து விடும்; வந்ததற்குப் பிறகு பேசலாம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நியாயம் கிடைக்கும் என்ற உறுதியோடு உட்கார்ந்து கொள்கிறேன்.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு நீண்ட நெடிய விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. இப்பொழுது அந்தப் பாசனத் திட்டத்தில், உசிலம்பட்டி பகுதியிலே 58 கண்மாய்களுக்குப் பாசனம் என்றும் நம்முடைய திருமங்கலம் தொகுதி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்ட நேரத்திலே நிலையூரைத் தாண்டி 28 கண்மாய்களுக்கு நீர்ப்பாசனம் கொடுப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, இப்பொழுது இருபோக சாகுபடிக்கே தண்ணீர் இல்லாமல் மேட்டுப் பகுதிகள் எல்லாம் காய்ந்து விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இடையிலேகூட வேலைகள் தடைப்பட்டு, அது நிறுத்தப்பட்டு, பின்பு பேச்சுவார்த்தைகள் நடந்து, அந்த ஒப்பந்தக்காரர்கூட கேரள மாநில உயர்நீதிமன்றத்திலே ஒரு மனுவினை அளித்து, பின்பு அந்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி வேலை நடத்தலாம் என்றுகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வேலை முழுமையாக முடிக்கப்பட்டு விட்டதா? எப்பொழுது இந்தப் பேச்சுவார்த்தைகளை உடனடியாகப் பேசித் தீர்த்து, வரக்கூடிய ஆண்டிலேயே அந்த 145 அடி உயரத்திலாவது தண்ணீரைத் தேக்க இந்த அரசு அவசர முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக, உடனடியாக என்பது இந்த அவையிலே ஒரு அசைச் சொல்லா! ஆர்வத்தினுடைய கோளாறா என்று எனக்குப் புரியவில்லை. எதை எடுத்தாலும் உடனடியாக என்கிறார்கள். 3 கேள்விகள், 4 கேள்விகளைக் கேட்டு முடித்திருக்கிறார்கள். நிலையூர் சேனலிலிருந்து எல்லாவற்றையும் கேட்டிருக்கிறார்கள். நாம் பழுது பார்க்கிற பணியெல்லாம் முடிந்து விட்டது. "வெண்ட்" என்பது நீர் வழிந்து ஓடுகிற பகுதி. அது குதிக்கிற இடத்திற்குப் பெயர் "ஏப்ரான்" என்பது. அந்த ஏப்ரானிடத்திலே கான்கிரீட் போட வேண்டும். அந்தக் கான்கிரீட் போடுவதற்குத்தான் விட மாட்டேன் என்று அவர்கள் மறுக்கிறார்கள். அதற்காகத்தான் இப்பொழுது நம்முடைய கான்ட்ராக்டர் அவர்கள் கோர்ட்டிலே ஒரு கேஸ் போட்டார்கள். கோர்ட்டிலே மறுபடியும் நீ போய்ச் செய்யலாம் என்று சொல்லிவிட்டார்கள். உடனே, வனத்துறை போய் இடையிலே ஈடுபட்டது. அதையும் தாண்டி, நேற்றைக்கு முன்தினம்தான் ஹைகோர்ட்டிலே ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். "நீங்கள் பணியை முடிக்கலாம். எந்தக் குந்தகத்தையும் செய்யக் கூடாது" என்று கேரள அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. கேரள உயர்நீதிமன்றம் நமக்கும் ஆணையிட்டிருக்கிறது. எனவே, வேலைகள் இனிமேல் நடைபெறும். மூன்றாவதாக அவர் சொன்னார்: தண்ணீரை எடுத்துவிட்டால் நிலையூர் கீழேயிருப்பவர்களுக்குப் பாசனம் போய்விடும் என்று. நிலையூர் சேனலிலே எடுக்கிறபொழுதே இது தெரிந்திருக்க வேண்டும். 58 கிராமங்களுக்கு, உசிலம்பட்டி பகுதியிலே தண்ணீரைக் கொடுப்பது என்பது, வறண்ட பகுதியை வாழ வைப்பதற்காகத்தான். இரண்டாவது, அணையிலிருந்து கீழ்ப் பகுதியிலே தண்ணீர் எடுப்பது இல்லை. வைகை அணையினுடைய உயரம் 72 அடி என்றால் அது கொள்ளளவு நிறைந்து போகிறபொழுது கிட்டத்தட்ட 70-வது அடியிலேதான் அதற்கு வேண்டிய ஸ்லூயிஸை வைப்பார்கள். எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும், 58 கிராமங்களுக்குத் தண்ணீர் தருகிற காரணத்தால் ஆயக்கட்டுதாரர்களுக்குப் பாதிப்பு இருக்காது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகும் இன்னும் துணைக் கேள்வியா? (குறுக்கீடு) இதிலே உங்கள் தொகுதியெல்லாம் பற்றிக் கேட்க வேண்டுமா? இதிலே என்ன உங்களுக்குப் பிரச்சினை?

**Tmt. A.S. Ponnammal:** Please allow me sir

**Hon'ble Speaker:** Carry on.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 58 கிராமங்களுக்குத் தண்ணீர் போவதை நான் வரவேற்கின்றேன். ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், அந்த நேரத்திலே என்ன நேர்ந்தது. வத்தலக்குண்டு ஏரியாவிலே இருந்து தான் தண்ணீர் போகிறது. அப்படிப் போகும்போது நடுவில் வாய்க்கால் வருகிறது. அப்படி வாய்க்கால் வரும்போது-என்னுடைய நிலம் இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த நிலத்திலே நடுவிலே வாய்க்கால். இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் நிலம். ஆனால், தண்ணீர் போகும்போது இதிலே நாங்கள் நஞ்சை விவசாயமும் செய்ய முடியாமல், புஞ்சை விவசாயமும் செய்ய முடியாமல் பெர்குலேஷன் வாட்டர் வந்துவிடுகிறது. நஞ்சை விவசாயம் செய்தால் பெனால்டி போடுகிறார்கள். புஞ்சை விவசாயமும் செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. அப்படிப் போகும் போது ஒருசில கண்மாய்களுக்கு மட்டும் இரண்டாயிரம் ஏக்கர்களுக்காவது இந்த நிலக்கோட்டைப் பகுதியிலே, வறண்ட பகுதியிலே வாழக்கூடிய அந்த மக்களுக்கும் தண்ணீர் கொடுத்துவிட்டுச் செல்வதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வைகை தண்ணீரிலேயே அபிஷேகம் நடைபெறுவது நிலக்கோட்டை தொகுதியிலேதான். உங்களுக்கு ஏற்கெனவே பைபாஸ் வெட்டி பேரணையிலிருந்து கொடுத்திருக்கிறோம். அதிலே, 40 ஆயிரம் ஏக்கர் கொடுத்திருக்கிறோம். இப்போது சப்ளை சேனல் வேறு வெட்டிக் கொடுக்கவிருக்கிறோம். அதற்குப் பிறகு சிறுமலை அருவி வேறு குதிக்கிறது என்று சொல்கிறீர்கள். இதற்கிடையே மறுபடியும் அங்கே 58 கிராமங்களுக்கு எடுத்துக்கொண்டு போனால், வழியில் நீங்கள் கேட்கின்றீர்கள். வழியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆரையன் என் தொகுதியில் கொடுக்க வேண்டும் என்கிறார். ஆக, இவர்கள் இரண்டு பேருக்கும் கொடுத்தால், உங்களுக்கு, உங்கள் ஊருக்கு ஒன்றும் கிடைக்காது. இருந்தாலும், வழியிலே சில கிராமங்கள் இருந்தால், தவிர்க்க முடியாதது என்று இருக்குமானால் அதை அரசு ஆராயும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பெரியாறு அணைக்கட்டாக இருந்தாலும், வைகை அணைக்கட்டாக இருந்தாலும், ரைப்பேரியன் ரைட்ஸ் பெற்றிருக்கக்கூடிய இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் மாவட்டம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். 152 அடி பெரியாறு அணைக்கட்டில் நீர் தேக்கப்படுகின்றபோதாவது இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் மாவட்டம், காமராஜர் மாவட்டத்திலே ஒரு பகுதி ஆகிய பகுதிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யப்படுமா? அதேபோல காவிரியிலே இருக்கின்ற பிரச்சினைதான் இந்த வைகை, பெரியாரிலேயும் இருக்கின்றது. காவிரியிலே இருந்து கர்நாடக மாநிலம் அதாவது எப்படி மேலே இருக்கின்றவர்கள் கபினி போன்ற பகுதிகளிலே தண்ணீரை எடுத்துக் கொள்கிறார்களோ அதைப் போலத்தான் மதுரை மாவட்டத்திலே மேல் பகுதியிலே இருக்கக் கூடியவர்கள், பல்வேறு கிளை ஆறுகளிலே இருக்கின்ற தண்ணீரை அணைக்கட்டி எடுத்துக் கொள்கிறார்கள். அதனால், ரைப்பேரியன் ரைட்ஸ் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கீழ், கடைமடைப் பாசனப் பகுதிகளில் உரிமை பெற்றவர்கள் உரிமை பாதிக்கப்படாமல் பாதுகாப்பதற்கு உரிய சட்ட நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வைகை-பெரியாறு பாசனத்தினுடைய அமைப்புமுறை தெரியாத வட ஆற்காடு மாவட்ட உறுப்பினர் இந்தக் கேள்வியை கேட்டால் நான் ஒத்துக்கொள்ள முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. கிருட்டிணன் அவர்கள் இதிலே அதிகம் புலமை பெற்றவர். வைகை பாசனம் வைகை தண்ணீர் கொண்டு நடைபெறுகிறது. பெரியாறு பாசனம் பெரியாறு தண்ணீர் கொண்டு நடைபெறுகிறது. ஆனால், இரண்டும் வைகை அணையில் இருக்கின்ற காரணத்தினால் தண்ணீர் கலக்கும். ஆனால் தனித்தனி க்யூபிக் உண்டு காரணம், பெரியாறு அணையிலிருந்து வருகின்ற தண்ணீரை பழனிசெட்டிப்பட்டி என்ற இடத்திலே அளந்து விடுகிறோம். எனவே, வைகை அணையிலே மொத்தம் 10 டி.எம்.சி. தண்ணீர் இருந்தால், பழனிசெட்டிப்பட்டியிலே அளந்தது 6 டி.எம்.சி. என்றால் 10 மைனஸ் 6, 4 வைகை தண்ணீராகும். எனவே, வைகை தண்ணீரை எந்தக் காரணத்தைக் கொண்டும்

மற்றவர்கள் எடுக்க முடியாது. பெரியாறு அணையிலிருந்து வருகின்ற தண்ணீர் பாகம் அவர்கள் எடுப்பார்கள். உங்களுக்குத் தர வேண்டிய பகுதி உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். எனவே, வைகை ஆயக்கட்டுதாரர்கள் அதாவது லோயர்ரியன் சைட்டில் உள்ளவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படக்கூடாது, ஏற்படவும் இந்த அரசு விடாது என்பதை மட்டும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குத்தான் 58 வாய்க்கால்களைக் கொடுத்தாகிவிட்டதே; பிறகு, எழுந்து என்ன கேள்வி? உட்காருங்கள்.

வினா எண் 530, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**530**—

**குளச்சல் தொகுதியில் கால்வாயை சீர்படுத்துதல்**

***926—திரு. இரா. பெர்னார்டு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதிக்குட்பட்ட ஏ.வி.எம். கால்வாயை பொதுமக்களுக்குப் பயன்படும் விதத்தில் சீர்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் தொகுதியிலுள்ள ஏ.வி.எம். கால்வாயை சீரமைப்பதற்கான செயற்குறிப்பு மதுரை மண்டல நீர்வள ஆதார அமைப்பு தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.வி.எம். கால்வாய் கேரளாவில் தொடங்கி தமிழ்நாட்டில் நீரோடி வழியாக இணையந்துறை தேங்காய்ப்பட்டினம் வந்து எனது தொகுதியில் குளச்சல் மண்டைக்காட்டுப்புதூர், மணவாளக்குறிச்சி, கடியப்பட்டினம் ஆற்றில் கலந்து கடலில் சேர்கிறது. முன்பு இந்த ஏ.வி.எம். கால்வாய்



வழியாக பெரிய வள்ளங்கள் மூலமாக தேங்காய், நார், மட்டை, ஓலை இதர பொருட்களை எடுத்துச்செல்ல பேருதவியாக இருந்தது. இப்போது தூர் நிறைந்திருக்கின்ற காரணத்தினால் தடைப்பட்டுள்ளது. ஆகவே, தூர் எடுத்தால் முன்பு போல் போக்குவரத்து வசதி செய்வதோடு, மக்களுக்கு குளிப்பதற்கு வசதி ஏற்படும். குளச்சல் தொகுதியில் மட்டுமல்ல விளவன்கோடு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. இரா. பெர்னார்டு:** விளவன்கோடு, கிள்ளியூர் தொகுதி மக்களுக்கும் இது பெரிதும் பயன்படும் என்பதால் இதைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற, விரைந்து செயல்படும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது என்று அரசு உணர்கிறது. ஆகையினாலேதான், அதைத் தூர் வாரி ஆழப்படுத்தி பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக ஆய்வு நடத்தி, மதிப்பீடு தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். மதிப்பீடு அரசுக்குக் கிடைத்த பிறகு மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீரோடி கால்வாய் நம்முடைய மாநிலத்தினுடைய கடைசிப் பகுதி. அதாவது கேரள எல்லையிலிருந்து ஆரம்பித்து இணையன்துறை வரையிலும் இப்போது தண்ணீர் வருகின்றது. ஆனால், தேங்காய்ப் பட்டினத்திலிருந்து மண்டைக்காடு வரையிலும் தண்ணீர் செல்வதற்கான சாத்தியக்கூறு, encroachments அதிகம் உள்ள காரணத்தால் தடைப்பட்டுள்ளது. 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால், மண்டைக்காடு வரை இந்தக் கால்வாயிலே தண்ணீர் சென்று வந்தது. அந்தக் கால்வாயைச் சீரமைத்தால் கடலோரப் பகுதியிலே வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மக்கள் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு, அவர்கள் குடிப்பதற்கு - ஏனென்றால் அவர்களால் நல்ல தண்ணீரே பார்க்க முடியாது - தண்ணீர் கிடைக்கும். அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அதைச் சீரமைக்கின்றபோது அதனுடைய பக்கங்களில்

பக்கச் சுவர்களைக் கட்டினால் மட்டுமே பாதுகாக்க முடியும். எனவே, இதைச் சீர்செய்து அமைக்கும் வகையிலே வழிமுறைகளைக் கையாண்டு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. மணி அவர்கள் சொன்னதைப் போல, இது கொஞ்சம் கலந்து கலந்து வரும். மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரிவிக்க வேண்டுமென்றால், சென்னையிலே பக்கிங்காம் கெனாலும், கூவம் நதியும் பல இடங்களிலே கலக்கின்றன. எங்கே பிரிகின்றன, எங்கே ஒன்றாகக் கலக்கின்றன என்று தெரியாது. அப்படித்தான் இந்தக் குளச்சல் தொகுதியிலேயும், மண்டைக்காடு வரையிலே இந்தக் கால்வாய் பிரிந்துகொண்டு போகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் அரசுக்கு ஆய்வறிக்கை கிடைத்த பிறகு, அதன் பக்கங்களிலே சுவர் கட்டிச் சீர்படுத்துவதா அல்லது R.R. Work செய்துவிட்டுப் பிறகு சீர்செய்வதா என்பதையெல்லாம் குறித்து முடிவு எடுக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் என்ன தொடர்பு? திரு. ஜி.கே. மணி, நீங்கள் கையைத் தூக்கிக் கொண்டேயிருக்கிறீர்களே, ஏன்? உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, உங்களுக்கும் இதற்கும் கூட சம்பந்தம் கிடையாது. உட்காருங்கள்.

வினா எண் 531 திரு. கு. ரவி அருணன். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**531—**

### வில்லிசைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்

***6225—திரு. கு. ரவி அருணன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வில்லிசைக் கலைஞர்களுக்கு இதுவரை எந்தவிதமான விருதும் அரசு சார்பாக வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கலைமாமணி விருது அவர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ): தமிழக அரசின் சார்பில் இயங்கி வரும் இயல், இசை, நாடக மன்றம் மூலம் 1969-70 ஆம் ஆண்டு முதல் இதுவரை 12 வில்லிசைக் கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிசை என்பது இன்றையதினம் தென் மாவட்டங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை வைத்து நீங்கள் துணைக் கேள்வியைக் கேளுங்கள். வில்லிசை என்றால் என்ன என்று இப்போது கேட்கவில்லை. நீங்கள் விருது ஒன்றுமே கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள். 12 பேருக்குக் கலைமாமணி விருதுகள் கொடுக்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு என்ன சொல்கிறீர்கள்?

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்ற பிரச்சாரப் பணிகளில் கிராமியக் கலைஞர்களை ஈடுபடுத்த அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா? கிராமியக் கலைஞர்கள் பேருந்துகளில் அவர்களுடைய கருவிகளை இலவசமாக எடுத்துச் செல்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகமெங்கும், தேவைப்படுகிறபோது நடைபெறுகின்ற கலை நிகழ்ச்சிகளில் வில்லிசைக் கலைஞர்களும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கும் வாய்ப்பு நல்கப்படுகிறது. இதுபோன்ற வில்லிசைக் கலைஞர்களும், நாடகக் குழுவினர்களும்

வேறு இடங்களுக்குச் செல்கிறபோது, அவர்களுக்குப் பேருந்துகளில் செல்வதற்கு அரைக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வில்லிசைக் கலைஞர்கள் 12 பேருக்கு அந்த விருதுகள் வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த விருதுகள் யார் யாருக்கு வழங்கப்பட்டன? கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களிலே தொடங்கி திரு. சுப்பு ஆறுமுகம் வரையிலே பலர் இந்தத் துறையிலே மிகவும் சிறந்த விற்பன்னர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அதேபோல், பேராசிரியர் கோமதி நாயகம் போன்றவர்கள் இந்த வில்லிசை பற்றி ஆய்வு செய்து ஆய்வறிக்கை கொடுத்து. புத்தகங்களை எல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பேராசிரியப் பெருமக்களுக்கும் இத்தகைய விருதுகள் வழங்கி அரசு மரியாதை செய்யுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே கலைஞர்கள் என்ற முறையிலே யார் நேரிடையாக வில்லிசையைப் பயன்படுத்தி மேடைகளிலே அரங்கேற்றினார்களோ அவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. அதே நேரத்தில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் வெவ்வேறு ஆய்வாளர்கள் வேறு தலைப்புகளை எடுத்துக்கொண்டு ஆய்வு செய்து அவற்றிலே தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். எனவே, அவர்கள் வேறு வகையில் சிறப்பிக்கப்படுவார்களே தவிர, நேரிடையாக இந்த விருதுக்கு உரியவர்களா என்பதை ஆய்வு செய்துதான் பார்க்க வேண்டும். எனினும், அவர் கேட்ட முதல் வினாவிற்கு விடையாக, இது கலைவாணர் அவர்களுடைய நேரடித் தத்துப்பிள்ளையாக, அவர்களால் வளர்க்கப்பட்ட கலையாக இருக்கிற காரணத்தாலும், சாத்தூரிலிருந்து நாகர்கோவில் வரைக்கும் இந்தக் கலை மேலோங்கி நிற்கிறது என்ற முறையிலும், 1967-லேயிருந்து தொடங்கி இந்த ஆண்டு வரைக்கும் டாக்டர் சாத்தூர் பிச்சைக்குட்டி, நா.மா. முத்துக்கூத்தன், செவல்குளம் தங்கய்யா, டி.எம். தங்கப்பன், கவிஞர் சுப்பு ஆறுமுகம், சி.எஸ். பாண்டியன், குலதெய்வம் இராஜகோபால், பி. சின்னப்பா, திருமதி எம். எஸ். இராஜலட்சுமி, மேலகரந்தை திருமதி பொன்னம்மாள்,



திருமதி ஏ. வேல்கனி, புலவர் த. முத்துசுவாமி ஆகிய பன்னிரெண்டு பேர்களுக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வாவிருக்கிற 15-1-1997 அன்று நடைபெறவிருக்கிற கலைமாமணி விருது வழங்கும் விழாவில் வில்லிசைக் கலைஞர் பேராசிரியர் துரையரசு அவர்களுக்கும் விருது வழங்கப்படவிருக்கிறது.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிசைக் கலைஞர்களுக்கு விருது வழங்குவதோடு, மற்ற கலைஞர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் வழங்குவதைப்போல, வில்லிசைக் கலைஞர்களுக்கும் அவர்கள் தங்கள் தொழிலில் இருந்து ஓய்வு பெறும்போது ஓய்வூதியம் தரப்படுமா? அதுபோன்று, இப்போது திரைப்படங்கள் மூலமாக எய்ட்ஸ் பற்றி ஏராளமாக விளம்பரங்கள் செய்வதைப்போல, கிராமங்களில் வில்லிசையைப் பயன்படுத்தி விளம்பரங்கள் செய்ய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,267 கலைஞர்கள் இப்போது நலிந்த கலைஞர்களாகக் கருதப்பட்டு ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். அவர்களில் வில்லிசைக் கலைஞர்களும் அடங்குவார்கள். எனவே, நலிந்த கலைஞர் என்று யாரையும் வேறுபடுத்திப் பார்க்காமல், யார் யாரெல்லாம் நலிவு அடைந்திருக்கிறார்கள் என்று கண்டறிந்து அவர்களுக்கெல்லாம் இந்த அமைப்பு கடந்த 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கி வருகிறது. அதே நேரத்தில் எல்லா வகையான கலைஞர்களும் தங்களுடைய கலைநிகழ்ச்சிகளை இப்போதுள்ள சமூகப் பொருளாதார நிலைக்கேற்பப் புதுப்பித்துக் கொண்டு, கலை வடிவங்களை அமைத்துக் கொள்ளும்போது, அவர்களுக்கும் நல்வாழ்வுத் துறையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையிலும், சுற்றுலாத் துறையிலும், தமிழ் வளர்ச்சித் துறையிலும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அதுபோன்று இவர்களுக்கும் அந்த வாய்ப்புகள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

[1997 ஏப்ரல் 11

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிசைக் கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்குவதைப் போல, தமிழகத்தில் கர்நாடக இசையுடன் கூடிய நாடகங்களை நடத்தும் நாடகக் கலைஞர்களுக்கும் கலைமாமணி விருது வழங்கப்படுமா? அதேபோன்று, இராம நாடகம், அரிச்சந்திரா நாடகம், வள்ளித் திருமணம், பவளக்கொடி போன்ற நாடகங்களில் மிகத் திறமை வாய்ந்த கலைஞர்கள் இருக்கிறார்கள். எனவே, அந்தக் கலைஞர்கள் அழிந்துவிடாமல் பாதுகாக்கின்ற வகையிலே அவர்களுக்கும் கலைமாமணி விருது வழங்கப்படுமா அல்லது வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைமாமணி விருதுகள் அனைத்து வகையான கலைஞர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால், அதிகமாக விருது பெறுகிறவர்கள் கிராமியக் கலைகளைப் பெரிதும் வளர்ப்பவர்கள்தான். எனவே, 15-4-1997 அன்று நடைபெறவிருக்கின்ற நிகழ்ச்சிக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வருகை தந்தால், என்னென்ன வகையான கலைஞர்களெல்லாம் விருதுகளைப் பெறுகின்றார்கள் என்பதை அவரும் அந்த நிகழ்ச்சியில் ஆர்வத்தோடு பங்குபெற்று அறிந்து கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றி. செத்துக் கொண்டிருக்கும் உயிருள்ள கலைஞர்களான, அதுவும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் மிகவும் போற்றப்பட்ட அரிச்சந்திரா, லவகுசா, வன்னிய புராணம் போன்ற பலவிதமான தெருக்கூத்துகளை நடத்துபவர்களுக்கு விருதும், மானியமும் வழங்கப்படுமா? அதேநேரத்தில், கட்சிகள் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய எரிந்த கட்சி, எரியாத கட்சி பற்றிப் பாடும் லாவணி கலைஞர்கள் நலிவினைப் போக்கப் பொருளுதவியும், விருதுகளும் வழங்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னரே சொன்னதுபோல அனைத்து வகையான கலைஞர்களும் சிறப்பிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, அரிச்சந்திரா போன்ற



1997 ஏப்ரல் 11]

தெருக்கூத்துகளை நடத்துபவர்களாக இருந்தாலும் சரி, சங்கரதாஸ்
சுவாமிகள் போன்றோருடைய நாடகத்தை இன்றைக்கும் அரங்குகளில்
நடத்துபவர்களாக இருந்தாலும் சரி, யாரும் கைவிடப்படுவதில்லை.
என்னைக் கேட்டால், நகரத்தில் இருக்கின்ற கலைஞர்கள் வெவ்வேறு
அரங்குகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தங்களுடைய
திறமைகளை வெளிப்படுத்தவும் விருதுகளைப் பெறவும் வாய்ப்புகள்
அதிகமாக இருக்கின்றன என்று சொல்வேன். ஆனால், கிராமியக்
கலைஞர்களுக்கு இந்த வாய்ப்புகள் பெரிதும் கிடைப்பதில்லை. அணுகிப்
பெறுவதற்கான ஆற்றலையும் அவர்கள் பெறுவதில்லை. எனவே, இந்த
அரசு, நகரத்தில் இருப்பவர்கள் பெறுகின்ற முன்னுரிமைகளைவிட,
கிராமியக் கலைஞர்கள் தொடர்ந்து வாழ வேண்டும், அவர்கள் வளர
வேண்டும், அந்த நாடகங்கள் நிலைபெற்று நிற்க வேண்டும் என்று
நினைக்கின்ற கலைஞர்களுக்குத்தான் முன்னுரிமை தரும். அதற்கான
எல்லா வகையான திட்டங்களையும் இந்த அரசு செயற்படுத்தி
வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்:

முற்பகல் 10-10

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கும் மற்றும் பல்வேறு
கலைஞர்களுக்கும் நிதி வழங்குவதைப் பற்றி இங்கே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கிராமப்புறங்களில் மூதாட்டியர்கள்
கிராமப் பாடல்களைப் பாடி வருகின்றனர். அதேபோன்று, இப்போது
அனைத்துக் கட்சிகளிலும் பல கலைஞர்கள் மேடைப் பேச்சை பேசிப்
பேசியே நலிந்து போயிருக்கிறார்கள். மேடைகளிலே மணிக்கணக்கிலே
பேசி, பாடி வருகின்றவர்கள் மிகவும் நலிந்த நிலையிலிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** கவியரங்குகளிலே பேசி நலிவுற்ற நிலையிலுள்ள
இந்தத் தமிழ் பேச்சாளர்களுடைய கவலையைப் போக்குவதற்குக்
கருணையுள்ளத்தோடு அமைச்சர் அவர்கள் நிதி வழங்குவார்களா
என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்று நாடெங்கிலும் பேச்சாளர்கள் பெருத்துப்
போயிருக்கிற அளவுக்கு, செயலாளர்கள் அதிகமாகவில்லை. பேச்சைத்

தவிர பிற கலைகளிலே சம்பந்தப்பட்ட கலைஞர்களைத்தான் நாம் எடுத்துக் கொள்ள முடியும். காரணம் இன்றைக்கு பேச்சு என்று வரையறுத்தால் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 5 கோடியே 88 லட்சம் பேர்களில் பாதி வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன; இதுதான் உண்மையும்கூட. அந்தவகையில் அதை எடுத்துக் கொள்ளாமல், பொதுவாகவே நலிந்து போயிருக்கிற அனைவருக்கும் வாய்ப்புகள் வழங்கப்படும். நீங்கள் சொல்வதைப்போல, கிராம அளவில் நாட்டுப் பாடல் பாடுகிறார்கள்; ஒப்பாரிப் பாடல் பாடுகிறார்கள். மிகச் சிறந்த கலைஞர்களெல்லாம் இருக்கிறார்கள். அவர்களுடைய பாடல்களெல்லாம் பல்வேறு ஆய்வாளர்களால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, ஒலி நாடாக்கள் வாயிலாகவும், ஆய்வு ஏடுகள் வாயிலாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. விரைவிலே நடைபெறவிருக்கிற 'கலைமாமணி விருது' விழாவில், சிறந்த பாடகியான, கிராமப்புறத்தில் இருந்து வெளிவந்த 'கொல்லங்குடி கருப்பாயி'க்கு ஏற்கெனவே விருது வழங்கப்பட்டது மட்டுமல்லாமல், நலிந்த கலைஞர் என்ற முறையில் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களால் ரூபாய் 10,000 மதிப்புள்ள பொற்கிழி வழங்கப்படவிருக்கிறது. அது கிராமியக் கலைஞர்களுக்குத் தரப்படுகிற சிறப்பு என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உ. திசைவீரன்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிசை போன்று தமிழகத்தினுடைய பண்பாட்டுச் சின்னம் சிலம்பம். பண்டையக் காலத்திலே சிலம்பத்திலே வெற்றி பெற்றவர்களைத்தான் பெண்கள் விரும்பி திருமணம் செய்து கொள்வார்கள் என்று வரலாறு கூட உண்டு. ஆனால் இன்றைக்கு சிலம்பம் நலிந்த நிலையிலுள்ளது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பகுதியிலும், மாணவர்களையும், விளையாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தும் விதமாக, சிலம்பாசிரியர்களைப் பணியமர்த்த ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்தான் ஆவன செய்து, பணியமர்த்த வேண்டும். ஆனால் ஒரு பகுதிக்கு நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். சிலம்பு சிறப்பாக ஆடுகிறவர்களைத்தான் பெண்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள் என்று சொன்னார்கள். எனக்கு அப்படி ஒன்றும்





தெரியவில்லை. காளை மாட்டை யார் அடக்குகிறார்களோ, அவர்களைத் திருமணம் செய்து கொள்கிற மரபுதான் இருந்தது. அப்படி இருந்த மரபை நல்லவேளையாக நம்முடைய முன்னோர்கள் இடைக்காலத்திலே, எடுத்துவிட்டார்கள். அப்படி மட்டும் எடுக்காமல் இருந்திருந்தால்........ *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு டி.வி., சினிமா போன்றவைகள் மிகப் பிரபலமாகி இருக்கின்றன. இவைகளெல்லாம் இல்லாத காலத்தில் நம்முடைய கிராமங்களிலே மிகச் சிறப்பாக விளங்கியது தெருக்கூத்து என்று சொல்லப்படுகிறது. இன்றைக்குக்கூட ஜவ்வாது மலை போன்ற எங்கள் பகுதிகளிலும், மற்ற பகுதிகளிலும், சிறப்பாக தெருக்கூத்து நடத்தப்பட்டு, சிறந்த நடிகர்கள் அதிலே பிரமிக்கத்தக்க அளவுக்கு நடிக்கிறார்கள். அவர்களுக்கு (குறுக்கீடு) கம்பெனியெல்லாம் கிடையாது. தனித்தனியாகத்தான் நடிக்கிறார்கள். எனவே அவர்கள் மீது அமைச்சர் அவர்கள் கனிவுப் பார்வை செலுத்தி, அவர்களுக்கும் பட்டத்தையும், உதவியையும் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது, பச்சையப்பனாகவே நடித்து, எல்லோருடைய பாராட்டையும் பெற்றிருக்கிறார். எனவே, அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பட்டத்தையும், பட்டயத்தையும், பணததையும் கொடுக்க ஆவன செயயப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை முதலமைச்சரிடத்தில் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப்பகுதியில் இருக்கிற கலைஞர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் பெயரைக் குறித்துக் கொடுத்து, முறையாக விண்ணப்பித்தால் அவர்களுக்கும் அந்தச் சிறப்புகள் வழங்கப்படும். இடையிலே அவர்கள் கேட்கும்போது, பச்சையப்பனாக நடித்த தமிழ்க்குடிமகனுக்கும் அந்த விருது வழங்கப்படுமா என்று கேட்டார்கள். அப்படிக் கொடுத்தால் என்னை வளர்த்து ஆளாக்கிய திரு. பவுனி நாராயணப்பிள்ளையாக நடித்த திரு. துரைமுருகன் அவர்களுக்கும் விருது வழங்க வேண்டியிருக்கும். எனவே அவர்தான் இந்தக்

கேள்வியைக் கேட்கச் சொன்னாரோ என்று ஐயம் தோன்றுகிறது. நீங்கள் குறிப்பிடுகிற அந்தக் கலைஞர்களின் பெயரைக் குறிப்பாகச் சொன்னால், எவ்வாது மலைப்பகுதியில் உள்ள கலைஞர்கள் யார், யார் விடுபட்டுப் போயிருந்தாலும், இந்த அரசு அவர்களுக்கும் உதவி செய்யும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இளங்கோ.

**திரு. கோ. இளங்கோ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பிரபலமாக விளங்கும் துடுப்பு. தாரை, தப்பட்டைக் கலைஞர் திரு. எம். இராமலிங்கம் அவர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கலைஞர் முறைப்படி இயல், இசை, நாடக மன்றத்திற்கு விண்ணப்பித்தால் அது குறித்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய நாடகங்களைத் தேர்ந்தெடுத்து, பரிசுகள் வழங்குவதற்கு, அக்கலைஞர்கள் தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ளாததனால், நகரத்தில் இருப்பவர்களே அப்பரிசுகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கர்நாடக சங்கீதத்தை வளர்ப்பதற்காக டிசம்பர் மாதம் இசைவிழா நடத்தப்படுவதைப்போல, நாடகக் கலை விழாவினை நடத்தி, கிராமிய நாடகங்களை அங்கே நடத்தி, அவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து, அக்கலைஞர்களுக்கும் ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களுக்குப் பரிசுகள் வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஏற்கெனவே அமைநர் செயற்படுத்தி வருகின்றது. தமிழ்நாட்டில், பல இடங்களில் குறிப்பாக மதுரை போன்ற தென்மாவட்டங்களிலும் மாமல்லபுரம் போன்ற இடங்களிலும் கிராமியக் கலைவிழாக்கள் நடத்தப்படுகின்றன. அவ்விழாக்களில்,





முற்றிலும் கிராமியக் கலை தொடர்பாக இருக்கின்ற கலைஞர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல், இந்த வாரத்தில் துபாயில் நடைபெறவிருக்கின்ற கலைவிழாவில் தென்பகுதியையும், அதேநோக்கில் வடபகுதியையும் சேர்ந்த கலைஞர்கள், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 கிராமியக் கலைஞர்கள் தங்களுடைய கலை நிகழ்ச்சியை நடத்துவதற்காக துபாய் செல்ல இருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்த அரசு, அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 532, திரு. பா. துரைசாமி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**532—**

**பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடைமைகளைக் கிடைக்கச் செய்தல்**

***3508—திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், வரகூர் தொகுதி, வயலூர் கூட்டுறவு வங்கியில் 1995-ல் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் அவர்களுடைய உடைமைகள் கிடைக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், வரகூர் தொகுதி, வயலூர் கூட்டுறவு வங்கியில் 1995-ல் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது குறித்து, குன்னம் காவல் நிலையத்தில் குற்றப்புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. நகைக்கடன்தாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையைக் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்று, நகை உடைமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 11]

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாகூர் தொகுதியிலே வசிக்கின்ற மக்கள் அனைவரும் விவசாயப் பெருங்குடி மக்கள். அவர்கள் தங்களுடைய நகைகளை அந்த வங்கியிலே அடகு வைத்திருந்தனர். கடந்த 1995-ஆம் ஆண்டு அந்த நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் மதிப்பு எவ்வளவு? ஒரு கிராமிற்கு எவ்வளவு பணம் இழப்பீடாக வழங்கப்பட்டது? அப்படி வழங்கப்பட்ட நிவாரணம் அவர்களுக்குப் போதவில்லையென்றால், அதை உயர்த்தித் தர அரசு முன்வருமா ஆகியவற்றைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகைகள் கொள்ளை போன தேதி 9-5-1995. காவல் துறையினர் 28-3-1996 அன்று அந்தக் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளைக் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லிவிட்ட காரணத்தால், காப்பீட்டு நிறுவனம் மூலமாக அங்கிருக்கின்ற 578 பயனாளிகளுக்குப் பணம் திருப்பித் தரப்பட்டிருக்கிறது. அப்படி திருப்பித் தரப்பட்ட மொத்தத் தொகை ரூ. 50,50,152. இதிலே மத்திய வங்கியிலேயிருந்து கடனாக ரூ. 13,15,162 நகைக்கடனாக, காசுக்கடனிலே ரூ.27,30,000 மற்றும் வட்டியாக ரூ.9,47,000 ஆக மொத்தம் ரூ. 19,85,181 அவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. இன்னும் இழப்பீடு பெறாமல் இருக்கின்ற நபர்கள் 15 பேர். அதிலே 11 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தபால் மூலம் செய்திகள் தரப்பட்டிருக்கின்றன. இந்த மாதம் 30-ஆம் தேதிக்குள் பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 533, திரு. செங்கை சிவம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**533—**

**சமையல் எரிவாயுவை குழாய்கள் மூலம் வீடுகளுக்கு வழங்குதல்**

***5072—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



[1997 ஏப்ரல் 11]

சென்னையில் சிலிண்டர்கள் மூலம் நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் சமையல் எரிவாயுவை குழாய்களின் மூலம் வீடுகளுக்கு வழங்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சென்னையில் எரிவாயுவை குழாய்கள் மூலம் வீடுகளுக்கு வழங்குவதற்கு எந்தவிதத் திட்டமும் இல்லை. ஆனால், இவ்வாறு குழாய்கள் மூலம் சமையல் எரிவாயு, சென்னை மாநகரம் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் வழங்க இயலுமா என்பது குறித்து, இந்திய எண்ணெய்க் கழகம் ஆராய்ந்து வருகிறது. இதன் முடிவு தெரிந்த பின்னர்தான் குழாய்கள் மூலம் சமையல் எரிவாயு வீடுகளுக்கு விநியோகிப்பது குறித்து மாநில அரசு, மத்திய அரசை அணுக இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இத்திட்டம் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அங்கு மீட்டர்கள் பொருத்தப்பட்டு, அவர்களுக்குச் சமையல் எரிவாயு வழங்கப்படுகிறது. ஆகவே, மத்திய அரசு, அரேபிய நாடுகளிலிருந்து, பாகிஸ்தான் வழியாகவும், கடல் மார்க்கமாகவும், சமையல் எரிவாயுவை, சென்னைக்குக் கொண்டு வருகிற திட்டம் ஒன்றை வைத்திருப்பதாக அறிகிறேன். குறிப்பாக, மும்பை நகரத்தில், அடுக்குமாடி வீடுகளுக்கு—அபார்ட்மென்ட்ஸ்'க்கு—இந்த சமையல் எரிவாயுவை, குழாய்கள் மூலமாக வழங்குகிறார்கள். இப்போதும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை, சென்னையிலும், மதுரை போன்ற பெரு நகரங்களிலும் குறைந்தபட்சம் அடுக்குமாடிகள்—'அபார்ட்மென்ட்ஸ்'-உள்ள பகுதிகளுக்கு அரசு வழங்குமா? இருக்கிற எரிவாயுவைக் கொண்டு, இந்தத் திட்டத்தைத் தீட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாக இடம் மாறி, அவர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். இது மத்திய அரசைக் கேட்க வேண்டிய கேள்வி, மத்திய அரசு அப்படி ஒரு திட்டத்தை அறிவிக்குமானால், இந்த

மாநில அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல நிறைவேற்றலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதைய தாராள பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில், அந்தந்த மாநில அரசுகளே, வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு, புதிய தொழிற்சாலைகளைத் துவக்குவதானாலும், அதேபோல், இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குவதானாலும், மாநில அரசுகளுக்கு உரிமை வழங்கப்படும் என்று மத்திய அரசு கூறியதன் அடிப்படையில், நம்முடைய மாநில அரசு, மேற்கே இருக்கக்கூடிய அரபு நாடுகளோடு தொடர்பு கொண்டு, இதற்கான திட்டத்தை உருவாக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு திட்டத்தை மத்திய அரசு அனுமதிக்குமானால், இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசலாம். ஆனால் நமக்கு இன்றைக்கு இருக்கிற பொது வினியோக முறையினுடைய அளவுகோல், மத்திய அரசு வகுத்துத் தருவதை நாம் பிரித்துத் தருகிற அளவுகோலாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், மிகப்பெரிய ஒரு தொகையை நாம் செலவிட்டாக வேண்டும். அந்த அளவுக்கு நமக்குப் பொருளாதாரத்தில் இடம் இருக்குமா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 531, டாக்டர் ஆ. ஞானசேகரன். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**534—**

**உலக வங்கி கடனுக்கான வட்டியை ரத்து செய்தல்**

***1517—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் ஓ.டி.பி. மனையில் வீடு கட்ட உலக வங்கியின் மூலம் குடிசை மாற்று வாரியம் வழங்கிய ரூ. 3,000/- கடனுக்கான அதிகப்படியான வட்டித் தொகையை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த 'ஓபன் டெவலப்டு பிளாட்ஸ்' திட்டத்தின்கீழ்.
ஏறத்தாழ எட்டாயிரம் குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே
வாழ்கின்ற குடும்பங்கள், ஒவ்வொரு குடும்பமும் ரூபாய் மூவாயிரம்
கடனாகப் பெற்று, இன்று 15 ஆயிரம் ரூபாய் அளவுக்கு அந்தக்
கடனைக் கட்டவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.
எனவே, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற அந்த 8 ஆயிரம்
குடும்பங்களும் பயன்பெறும் வகையில், அவர்களுடைய கடன்
சுமையைக் குறைக்கும் வகையில், அவர்களுக்கு வட்டியை முழுவதுமாக
தள்ளுபடி செய்து, அசலை மட்டும் அந்தக் குடும்பங்கள் 'கட்டலாம்
என்ற நிலைமையை உருவாக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அதை மறுபரிசீலனை செய்து, அந்தக் குடும்பங்கள் வாழ்வதற்கு
ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கவனத்தில்
கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து,
இதுகுறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.
இந்தத் திட்டம் ஓ.டி.பி. அல்லது எம்.யூ.டி.பி. 'மெட்ராஸ் அர்பன்
டெவலப்மென்ட் புராஜக்ட்' என்று பெயர். இதன்மூலம்,
குடிசைவாசிகளுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள்
வீடுகளைக் கட்டிக் கொள்வதற்குக் கடன் வாங்கியிருக்கிறார்கள். இந்தக்
கடனுக்கு வட்டி உண்டு; ஆனால், தண்ட வட்டி; 'பீனல் இன்டரஸ்ட்'
என்று போடுகிறார்கள், அதுதான் அதிகமாக இருக்கிறது. ஆகவே,
அதை அரசு கவனித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரத்து
செய்ய முன்வருவாரா? அதேபோல், சென்னையிலே இருக்கிற பல
குடிசைப் பகுதிகள், அரசுக்குச் சொந்தமான இடங்களில் இருக்கின்றன.
டி.என்.யூ.டி.பி. என்ற ஒரு திட்டம் இருக்கிறது. தமிழ்நாடு அர்பன்
டெவலப்மென்ட் புராஜக்ட் என்று. அதன் மூலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைச்சர் மாதிரி பேசிக் கொண்டிருக்கிறீர்கள். கேள்வி கேளுங்கள். [1997 ஏப்ரல் 11

**திரு. செங்கை சிவம்:** உலக வங்கி அதற்கும் நிதியுதவி அளிக்கிறது. அதை மாதா மாதம், குடிசைவாசிகளிடமிருந்து தவணையாகப் பெற்றுக் கொள்கிறார்கள். அந்தத் திட்டம் 31-3-1997 உடன் முடிவடைந்து விடுகிறது. இந்தத் திட்டம் முடிவடைந்தால், சென்னையிலே இருக்கிற குடிசைவாசிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, 31-3-1997-இல் முடிவடைகிற அந்தத் திட்டத்தை, இன்னும் குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்காவது நீட்டித்தா, உலக வங்கியோடு தொடர்பு கொண்டு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 31-3-1997-இல் முடிவடைந்து விட்டாலும், அதைத் தொடர்வதற்கு, குடிசை மாற்று வாரியம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்கள், அது 'ஓபன் டெவலப்டு பிளாட்ஸ் ஸ்கீம்' இல்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த ஸ்கீம் 1977-ஆம் ஆண்டு துவங்கப்பட்டு மறுபடியும் 1978-79-ஆம் ஆண்டு எம்.யு.டி.பி. என்ற திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவர்களுக்குள் இருக்கும் பிரச்சினை.

*வினா எண் 535, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

**535—**

**பத்திரிகையாளர் சம்பள போர்டு பரிந்துரைகள் அமலாக்குதல்**

***4984—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 11]

(அ) பத்திரிகையாளர் சம்பள போர்டு பரிந்துரைகள் அமலாக்கம் குறித்து ஆராய தமிழ்நாட்டில் முத்தரப்புக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பத்திரிகையாளர் சம்பள போர்டு பரிந்துரைகள் அமலாக்கம் குறித்து ஆராய தமிழ்நாட்டில் முத்தரப்புக்குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களுக்கு இதற்கு முன்னரும் சில பரிந்துரைகள் வந்திருக்கின்றன. பாலேக்கர் மற்றும் பச்சாவத் பரிந்துரைகளுக்கு ஏற்பட்ட கதி என்னவோ அதே கதிதான் இந்த சம்பள போர்டு பரிந்துரைக்கும் ஏற்படும்போல் தெரிகிறது. அதனால்தான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது—பரிந்துரைகள் என்பதே நடைமுறையில் அமலாக்க வேண்டும் என்பதற்குத்தான். அமலாக்குவதற்காக அறிவிக்கப்படுகிற பரிந்துரைகள் அமலாக்கப்படாமலேயே இருந்துவிடுகின்றன. அவற்றைத் தமிழ்நாட்டில் எத்தனை பத்திரிகைகள் அமலாக்கியுள்ளன? அமலாக்காத பத்திரிகைகளை அமலாக்க வைப்பதற்கு மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிறுவனங்களிலே பணியாற்றுகிற உழைக்கும் பத்திரிகையாளர்கள் Working Journalists மற்றும் இதரப் பணியாளர்கள் Non Journalists. Newspaper Employees ஆகிய இரண்டு பிரிவினருக்கும் சம்பளம் Revision of Wages ஆகியவற்றை மத்திய அரசு போர்டு, மத்திய ஊதியக் குழு நிர்ணயிக்கிறது. மாநில அரசு, மத்திய அரசு அந்தக் குழுவினுடைய சிபாரிசுகளை ஏற்று உத்தரவு போடுகிறபோது, ஒரு Monitoring Agency-ஆக இருந்து முத்தரப்புக் கமிட்டி அமைத்து அந்த போர்டினுடைய சிபாரிசுகளை மத்திய அரசு உத்தரவாக்கியிருப்பதை அமல் நடத்துகிறதா என்று கண்காணிக்க

வேண்டும். இந்த அடிப்படையில் தமிழக அரசைப் பொறுத்தமட்டில் முத்தரப்புக் குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் கண்காணிப்பும் செய்திருக்கிறது. தமிழ்நாட்டிலே மொத்தம் செய்தித்தாள் நிறுவனங்கள் 102. சம்பளக் குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டவை 92. பகுதி அளவில் அமலாக்கம் செய்தவை 1. அமலாக்கம் செய்யாத நிறுவனங்கள் 9. அமலாக்கம் செய்யாத 9 நிறுவனங்களில் தொழிலாளர்கள் இல்லாத நிறுவனங்கள் 6 மீதமுள்ள நிறுவனங்கள் பேகம்பட்டம், பிலிமாலயா, விடுதலை ஆகிய இந்த 3 நிறுவனங்களுக்கும் காரணம் கேட்கும் அறிவிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் தற்போது பத்திரிகை ஊழியர்களுக்கு சம்பள ரிவிஷன் சம்பந்தமாக புதிய 2 குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி திரு. ராஜ்குமார் மன்ஹாஸா தலைமையிலான அக்குழுவினர் அறிக்கை சமர்ப்பித்து விட்டார்கள். மத்திய அரசு இன்னும் அதைப் பரிசீலனையில் வைத்திருக்கிறது. ஆனாலும் இடைக்கால நிவாரணமாக உத்தரவு போட்டிருக்கிறார்கள். அடிப்படைச் சம்பளத்திலே 20 சதவிகிதமும் 100 ரூபாய் கூடுதல் தொகையும் வழங்குகிறார்கள். அதைப்போல தீக்கதிர் பத்திரிகையிலும் இது அமல்படுத்தப்படவில்லை. காரணம் கட்சி அபிமானத்தின் காரணமாக அவர்கள் விரும்பி அதில் பணியாற்றுவதாக சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேட்கப் போகிறீர்கள்? கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பள போர்டு பரிந்துரைக்கு சட்டரீதியான அந்தஸ்தை வழங்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, the Working Journalists and other Newspaper Employees (Condition of Services and Miscellaneous Provisions) Act 1955-ஐ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். மாநில அரசைப் பொறுத்தமட்டில் மானிட்டரிங் அத்தாரிட்டி அதாவது இன்ஸ்பெக்டரை நியமித்திருக்கிறோம். நடவடிக்கை எடுக்க அவருக்கு





அதிகாரம் உண்டு. பீனல் புரொவிஷன் உண்டு. அது மட்டுமல்லாமல் 'டியூஸ்' பத்திரிகையாளர்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கலெக்டர் மூலமாக தகவல் தெரிவித்து 'ரெவின்யூ அரியர்ஸ்'-ஆகப் பெற நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் இதில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 536. திரு. நா. பெரியசாமி. மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**536—**

**வரி மற்றும் கூடுதல் வரியை நீக்குதல்**

***136—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெண்ணெய், தயிர் தயாரிக்கும் தொழிலுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியையும், கூடுதல் வரியையும் (சர்சார்ஜ்) நீக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், வணிக வரிகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். 17-7-1996 அன்று அறிக்கையின்போது மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரியை நீக்குவது தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

5-3-1997 அன்று அறிவிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், தயிர் மீதான விற்பனை வரி முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. வெண்ணெய் (வணிகச் சின்னம் பெற்றது) மீதான வரி 11%-லிருந்து 10%-மாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்ணெயிலிருந்து தயாரிக்கப்படுகின்ற நெய்க்கு, வணிகச் சின்னம் பெற்றவைகளுக்கு 10 சதவீதமும், வணிகச் சின்னம் பெறாத நெய்க்கு

4 சதவீதமும் வரி விதிக்கப்படுகிறது. இந்த முறையை, பதிவு பெற்றது, பதிவு பெறாதது என்று மாற்றி அமைத்து, அதே நேரத்தில், அரசின் வருவாயும் குறையாத அளவில் இந்த நெய்க்கான வரியை சீரமைப்பு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களும், வேறு பல வணிகர் சங்கங்களின் நிர்வாகிகளும் இது தொடர்பான கோரிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசு இதைப்பற்றி பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பருத்தி மற்றும் மஞ்சளுக்கான 4 சதவிகித வரி முழுமையாக நீக்கப்படுமா? தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய காஸ்டிக் சோடா மற்றும் 'ஆஷ்' போன்ற இரசாயனப் பொருட்களுக்கு மற்ற மாநிலங்களில் 4 சதவீதம் என்ற நிலையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெண்ணெய், தயிரைப் பற்றித்தான் கேட்கவேண்டும், இது என்ன வணிக வரித் துறை மானியக் கோரிக்கையா? நீங்கள் எழுந்த உடனே வெண்ணெயைப் பற்றித்தான் கேட்கப் போகிறீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் எதையோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள், உட்காருங்கள்.

வினா எண் 537, திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**537—**

**சீர் மரபினருக்கு மாணவர் விடுதி கட்டுதல்**

***4516 அ.—திரு. சொ. கருப்பசாமி :**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரநயினார் கோவில் தொகுதி, மேலநீலித நல்லூர் ஒன்றியம், மேல இலந்தகுளம் திரு. இருதய மேல்நிலைப் பள்ளியில் சீர் மரபினருக்கு மாணவர் விடுதி கட்டப்படுமா?



**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், சங்கரநயினார் கோவில் தொகுதியில், மேலநீலித நல்லூர் ஒன்றியத்தில், மேல இலந்தகுளத்தில் சீர்மரபினர் மாணவர் விடுதி ஏதும் இயங்காததால் இங்கு விடுதி கட்டும் வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 538, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**538—**

**மண்சாலையை தார்ச்சாலையாக்குதல்**

***1016—திரு. ஆர். ஆர். சேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வனத்துறைக்குச் சொந்தமான குருவம்பட்டி-காஞ்சேரி வரையுள்ள மண்சாலையினை தார்ச்சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தியம் இல்லை.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கும் மண் சாலையை அந்தப் பகுதி மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். தர்மபுரியிலிருந்து ஏற்காட்டிற்கு டேனிஸ்பேட்டை வழியாக சாலை அமைத்துக் கொடுத்தால் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் அளவுக்கு போக்குவரத்து குறையும். ஆகவே, வனத்துறையின் அனுமதி பெற்று அந்தச் சாலையை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சேலம் மாவட்டத்தில் குருவம்பட்டி-காஞ்சேரி வரையுள்ள மண்சாலை வனத்துறைக்குச் சொந்தமான சாலையாகும். தற்சமயம் வனத்துறையில் அச்சாலை உபயோகப்படுத்தப் படுவதில்லை.

இச்சாலையை மேம்பாடு செய்து, தார்ச் சாலையாக மாற்றம் செய்யும்பட்சத்தில் வனக்குற்றங்கள் அதிகம் நிகழ வாய்ப்புள்ளது. அதனால் இச்சாலையை தார்ச்சாலையாக மாற்றுவது உகந்ததல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெண்ணாகரம் தொகுதியில் இதுவரை பாதையே இல்லாமல் இருக்கும் கோட்டூர் மலை, மொரப்பூர் காடு, மலையூர், ஆரம்பூண்டி, சின்னப்பநல்லூர் மற்றும் மேட்டூர் பகுதியில் உள்ள பாலமலை போன்ற மலைப் பகுதிகளிலே பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம், யாராவது இறந்துவிட்டாலோ, பாம்பு கடித்து விட்டாலோ, பிரசவ நேரத்தின்போதோ அவர்களைக் கொண்டு செல்வதற்கு பாதை இல்லாத காரணத்தால் படுக்கை கட்டி தூக்கிக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. அங்கே எல்லாம் அடர்ந்த காடுகளோ, முக்கியமான மரங்களோ ஏதும் இல்லை. முட்செடிகள் இருக்கக்கூடிய காடுகளாக அங்கே இருக்கின்றது. ஆகவே, அந்தக் கிராமங்களுக்கு பாதை அமைக்க, அனுமதி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய வனச் சட்டத்திற்கு உட்பட்டு, நிதிநிலையை அனுசரித்து மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 539, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**539—**

### குதிரை வளர்ப்புத் திட்டம்

***4696—Thiru. B. Venkatasamy:**

Will the Hon. the Minister for Forest and Animal Husbandry be pleased to state :

a) Whether there is any proposal to start Horse rearing in large scale at Hosur cattle farm in Dharmapuri District; and

b) if so, the details thereof ?



**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நமது மாநிலத்தில் தொலைதூர மலைப் பகுதிகளில் சரக்குப் போக்குவரத்திற்காகவும், பயணங்களுக்காகவும் மற்றும் காவல் துறையினருக்காகவும் குதிரைகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு தொன்றுதொட்டு மக்கள் பயன்படுத்திவரும் குதிரை இனங்கள் தமிழ்நாட்டில் அழிந்து போகாமல் பாதுகாக்கவும், நமது நாட்டின் குதிரைகளின் தரத்தை உயர்த்தவும் ஓசூர் கால்நடைப் பண்ணையில் உள்ள குதிரைப் பிரிவை இந்த ஆண்டு முதல் ரூ.5 லட்சம் செலவில் விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

*முற்பகல் 10-35*

THIRU B. VENKATASAMY: Hon. Speaker Sir, I would like to express my thanks for expanding the Horse farm at Hosur. Good variety of Horses will be there. I request you to see that whether there is any scope for the rearing of race horses at Hosur. May I know from the Hon'ble Minister whether such farms will be started there?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ஓசூரில் உள்ள கால்நடைப் பண்ணையில் குதிரைகள் வளர்க்கப்படுகின்றன. ஆண் குதிரைகள் நான்கும், பெண் குதிரைகள் ஆறும், குதிரைக்குட்டி ஒன்றுமாக மொத்தம் 11 இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 540, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**540—**

### உதவித் தொகையை வங்கிக் கணக்கு மூலம் அளித்தல்

***4437—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் உதவித்தொகை, விதவைப் பெண்கள் உதவித் தொகைகள் ஆகியவற்றை வங்கிக் கணக்கு மூலம் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதியோர் உதவித் தொகை, விதவைப் பெண்கள் உதவித் தொகை ஆகியவற்றை வங்கிக் கணக்கு மூலம் அளிப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்கு அரசு வழங்குகின்ற உதவித் தொகைப் பணம் தற்போது மணியார்டர் மூலமாக அனுப்பப்படுகிறது. அப்படி அனுப்பப்படும்போது மணியார்டர் பட்டுவாடா செய்வதிலே பல தவறுகள் நிகழ்வதாகச் செய்திகள் வந்துள்ளன. அதேபோன்று அங்கு இருக்கின்ற சில சூழ்நிலைகளில் கொடுக்கின்ற பணத்திலே கூட பிடித்தம் செய்யப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. கம்ப்யூட்டர் மூலமாக இயங்கக்கூடிய இந்தக் காலத்திலே வங்கிகளிலே ஒரு கணக்கை ஆரம்பித்து, அவர்களுக்கு மெயில் டிரான்ஸ்பர் செய்வதன் மூலம், இந்தத் தவறுகள் தடுக்கப்படும் என்று அரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அளிப்பதன் மூலம் ஏழை எளிய மக்களுக்குச் சேரவேண்டிய அந்த 100 ரூபாயோ அல்லது அதற்குக் குறைந்த தொகையோ முழுமையாக அவர்களுக்குச் சேரும் என்கின்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்த இந்த அரசு முயற்சி செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஏற்கெனவே, திரு. ஞானசேகரன் அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்கு நான் பதில் கூறுகின்றபோது தெளிவாக இதைபற்றி குறிப்பிட்டிருக்கிறேன். முதியோர்கள் அல்லது விதவைப் பெண்கள் வங்கிக் கணக்கு வைத்துக்கொண்டு சிறிய கிராமங்களிலே அவர்கள் அந்த உதவித் தொகையைப் பெறுவது என்பது மிகவும் சிரமமான ஒன்று. மேலும் அவர்கள் தனியே செல்ல முடியாமல், இன்னொரு நபரை துணைக்கு அழைத்துக் கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலையெல்லாம் ஏற்படுகின்ற காரணத்தினால் செலவு கூடுதலாகத்தான் ஆகும் என்று கருதுகின்றோம். எனவே, நேரடியாக மணியார்டர் மூலமாக அந்தப் பயனாளிகளுக்கு அந்தத் தொகை சேருகின்ற வகையில்தான் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. பூ. இராமஜெயம்.

**திரு. ந. பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைப் பெண்கள், திருமணம் செய்து கொண்டால் அந்த உதவித் தொகை நிறுத்தப்படுகிறது. விதவைப் பெண்களின் திருமணத்தை ஆதரிக்கின்ற நமது அரசு, உற்சாகப்படுத்துகின்ற நமது அரசு, திருமணம் செய்து கொண்டாலும் அந்த உதவித் தொகையைத் தொடர்ந்து வழங்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவனை இழந்த கைம்பெண்களுக்குத்தான் இந்த உதவித் தொகை வழங்கப்படுகின்றது. எனவே, புதிய திருமணத்தின் மூலம் கிடைத்த கணவன் அப்பெண்ணுக்கு அந்த உதவியையும் சேர்த்து செய்ய வேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை, அது போல விதவைகளுக்குத் தரக்கூடிய உதவித்தொகையினை கோருகிறவர்கள் விண்ணப்பித்து பல மாதங்கள் சென்ற பிறகுதான் அந்தத் தொகையைப் பெற முடிகிறது. எனவே, அரசு ஒரு காலக்கெடுவை வைத்து, விண்ணப்பித்து ஒரு மாதத்திற்குள்ளாகவோ அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாகவோ, ஒன்று உதவித் தொகையினை வழங்க வேண்டும் அல்லது அவர்களுக்கு வழங்குவதற்கு முடியவில்லை என்கின்ற பதிலினையாவது தரவேண்டும். எனவே, இதில் ஒரு காலக்கெடுவினை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காலதாமதம் அதிகபட்சமாக 60 நாட்களுக்கு மேலாக செல்லக்கூடாது என்று அரசுக் குறிப்பிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மூலமாக பல்வேறு உதவித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நிறைவேற்றுவதற்கு வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது. ஆனால், மக்கள் கொடுக்கக்

கூடிய அந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்து ஆய்வு நடத்தி அந்தத் தொகையைத் தருவதற்கு வருவாய்த் துறையைச் சார்ந்த வி.ஏ.ஓ-க்களும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இதைத் தவிர்க்கும்பொருட்டு தனியாக ஆய்வு களப்பணியாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் திட்டம் வருவாய்த் துறை மூலமாகத்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

*முற்பகல் 10-40*

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு மனுச் செய்தவர்களுடைய மனுக்கள், அவர்களுக்கு வீடு இருக்கிறது, கூலி வேலை செய்கிறார்கள் என்று காரணம்காட்டி தள்ளுபடி செய்யப்படுகிறது. இதுபோன்ற நிபந்தனைகளை—வீடு இல்லாமல் அவர்கள் இருக்க முடியாது. ஆதரவற்றவர்கள் கூலி வேலை செய்து வாழ வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, ஆதரவற்றவர்களுக்கு அந்த உதவித் தொகை கொடுப்பதில் உள்ள நிபந்தனைகளை—தளர்த்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற முதியோர்களுக்கு உண்மையிலேயே ஆதரவு இல்லை என்று சான்றிதழ் வழங்கப்படுமானால், அவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வங்கிகளின் மூலமாக உதவித் தொகை வழங்கும்போது அரசுக்குச் செலவினம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். கிராமங்களிலே



உள்ள வங்கிகளிலே அவர்கள் சேமிப்புக் கணக்குத் துவக்கலாம். அந்தக் கணக்கிலே அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகையை மெயில் டிரான்ஸ்பர் மூலம் அனுப்பி வைக்கலாம். மேலும், கிராமங்களில் பிராஞ்ச் போஸ்ட் ஆபிஸ்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு தபால் நிலையங்களிலே சேமிப்புக் கணக்கு இருந்தால், அதிலே அவர்களுக்குச் சேரவேண்டிய தொகை செலுத்தப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகின்றபோது, வங்கிகளில் அந்தத் தொகையைச் செலுத்துவதன் மூலம் அரசுக்குச் செலவினம் வரும் என்று சொல்லவில்லை. அவர்கள் வங்கிகளுக்குச் செல்லுகின்றபோது, அவர்களுக்குத் துணையாக ஆட்களை அழைத்துச்செல்ல வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அது சிரமமாக இருக்கும் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டினேன். எனவே, வங்கிக் கணக்குகளில் செலுத்தி அவர்களுக்குப் பணத்தைக் கொடுப்பதைக் காட்டிலும், நேரிடையாக அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று மணியார்டர் மூலம் அவர்கள் இருப்பிடத்திலேயே கொடுப்பதுதான் முறை என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1997 ஏப்ரல் 11

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஞானசேகரன் அவர்கள்......

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் கொஞ்சம் இருங்கள். அவர் ஏதோ பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்கிறார். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாத காலமாக திரிசூலம் பகுதி கல் உடைக்கும் தொழிலாளர்கள் திடீரென்று வேலையிழந்து தவிக்கக்கூடிய பிரச்சினை பற்றி இந்த அவையிலே விவாதிக்க நான் உட்பட ஏறக்குறைய 12 உறுப்பினர்களுக்கு மேல் அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். அதைத் தாங்கள் எப்போது அனுமதிப்பீர்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலே இடம் ஒதுக்கித் தருவது சம்பந்தமாகவும் ஏறக்குறைய 15 உறுப்பினர்களுக்கு மேலாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். அதையும் தாங்கள் எடுத்துக்கொள்ளாமல் காலம் தாழ்த்தி வருகிறீர்கள். அதேபோல், ஏறக்குறைய 10-க்கும் மேற்பட்ட அறிவிப்புகளைக் கொடுத்துட்கூட தாங்கள் அவற்றை எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறீர்கள். எனவே, அவைகள் எல்லாம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விதிகளைப் படித்துவிட்டுத்தான் இங்கே பேசவேண்டும். 50 உறுப்பினர்கள் கொடுத்தாலும் நான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. அப்படிக் கேட்கின்ற உரிமையும் யாருக்கும் கிடையாது. கொடுத்த தீர்மானம் என்ன ஆயிற்று என்பதை என்னுடைய அறையிலே வந்து கேட்க வேண்டும். அப்படி கேட்க விரும்பாவிட்டால், அந்த பதில் அவருக்கு அனுப்பப்படும். ஆகவே இதிலே ஒழுங்குப் பிரச்சினை இல்லை. திரு. ஞானசேகரன்.



1997 ஏப்ரல் 11]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே. ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இதற்குமேல் உங்களைப் பேசவிடமாட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். I don't give you permission. (interruption) I don't give you permission.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் அறையில் வந்து கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், கேட்டீர்கள். நான் என்ன சொன்னேன்?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முடியாது என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், அதுதான் பதில்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அது மக்களுடைய பிரச்சினை இல்லையா?

Mr. SPEAKER: No. No. You cannot insist that I must say `yes' to every question you put. (interruption) No. No. I don't give you permission. Whatever you say will not go on record. (interruption) I am not permitting you. (interruption) Whatever is talked by Dr. Krishnasamy will not go on the record. Thiru Gnanasckaran.

*முற்பகல் 10-45*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சென்னை அருகே நேமம் கிராமத்தில் உள்ள கல்கி ஆசிரமத்தில் முறைகேடுகள் நடப்பதாக வரும் செய்திகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஞானசேகரன் அவர்கள் சென்னையிலே உள்ள கல்கி ஆசிரமத்தில் சில முறைகேடுகள் நடப்பதாக வரும் செய்திகள் குறித்து அரசின் கவனத்திற்கு அந்தப் பிரச்சினையைக் கொண்டுவர என்னிடத்தில் அனுமதி கோரியிருக்கிறார். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் அனுமதித்து இருக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்து இருக்கிற, திருமழிசைக்கு அருகில் இருக்கக்கூடிய நேமம் என்ற பகுதியில் கல்கி ஆசிரமம் என்ற பெயரில் பல ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்து, ஆசிரமம் ஏற்படுத்தி, அங்கே பல மாணவர்கள் —அங்கே ஏதோ மந்திர தந்திரங்கள் நடைபெறுவதாகவும்—எல்லோருமே

அங்கே போனால் பாவம் செய்துவிடுவார்கள் என்றெல்லாம் தவறான அணுகுமுறையை ஏற்படுத்துகிறார்கள். மாணவர்களுக்கு மொட்டை அடிக்கப்பட்டு, மஞ்சள் ஆடை தரிக்கப்பட்டு அவர்கள் மீண்டும் கல்வி நிலையங்களுக்கோ அல்லது அவர்களுடைய வீடுகளுக்கோ திரும்பாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அது நேபத்தில் தொடங்கி, ரம்பத்தில் வேலூருக்கு வந்திருக்கிறது கோட்டப்பாளையம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரே இருக்கக்கூடிய ஒரு கட்டிடத்தில் கல்கி ஆலயம் என்கிற பெயரால் அங்கே உருவாக்கப்பட்டு, கல்கி தாமம் என்கிற பத்திரிகையை மாணவர்களுக்கு எல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி நின்று கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் ஒருவரை நான் அழைத்து, அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, இன்னொரு உறுப்பினர் எழுந்து நிற்கக் கூடாது. திரு. கிருஷ்ணசாமி, நீங்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தால், அவையை விட்டு வெளியேற உத்திரவிட வேண்டி இருக்கும். தொடர்ந்து நின்று கொண்டிருந்தால் அவையை விட்டு வெளியேற வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி நின்று கொண்டு பேசினார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணசாமி அவர்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி நின்று கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்ந்து நின்று கொண்டேயிருந்து. அவையை அவமதிக்கின்றீர்கள். அவையை விட்டு வெளியேற வேண்டும்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி உட்கார்ந்து கொண்டார்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்கி தாமம் என்ற பத்திரிகைகள் எல்லாம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு, மாணவர்கள் ஈர்க்கப்பட்டு, அதனால் மாணவர்கள் பல பேர் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய விளைவாக, அண்ணா நகரில் மூத்த வழக்கறிஞருடைய பெண் இது போன்ற பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பெண் வீட்டுக்கே திரும்பாத காரணத்தால், ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த அந்த மூத்த வழக்கறிஞர் தூக்குப் போட்டு இறந்த கதையெல்லாம் நடந்திருக்கிறது. இப்போதுகூட தமிழ்நாட்டிலிருந்து, ஆந்திரப்பிரதேசம், மராட்டியம் போன்ற இடங்களில் அது பரவியிருக்கிறது. நாகபுரியில் 4 சீடர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் போதை மருந்து தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பல பேர் இதுபோன்ற நிலைக்கு ஆளாகியிருக்கின்ற காரணத்தாலும், சன் டி.வி.யில் இதுபற்றி சொல்லப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும். இதை பக்தர்களைப் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை; மாணவர்களைப் பண்படுத்துவதற்காகச் சொல்கிறேன். இது போன்ற முறைகேடுகள், கல்கி ஆலயத்தில் நடந்திருக்குமானால், உண்மையைக் கண்டறிந்து, தவறு இருக்குமானால், கடுமையான நடவடிக்கை எடுத்து மாணவர்களைப் பண்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கல்கி ஆசிரமத்தில் மாணவர்கள் மொட்டை அடிக்கப்படுவது, அவர்களுக்கு மஞ்சள் ஆடை அணிவிக்கப்படுவது இன்னும் சில காரியங்கள் நடைபெறுவது குறித்து, அரசுக்கு சில புகார்கள் வந்திருக்கின்றன. அரசு அது பற்றிப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்; தேவனாம்பட்டினம் மீனவர் மீது பாண்டிச்சேரி காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியமை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு, கடலூர் அருகே தேவனாம்பட்டினம் மீனவர் குடியிருப்பில் வியாழன் அன்று போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியது குறித்து அவையில் எழுப்ப மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. ரங்கநாதன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. டி. மணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் 12-ஆம் தேதி புதுவை, கீரப்பாளையம் கிராமத்தை

ஒட்டியுள்ள வீராணம்பட்டினம் மீனவர் குடியிருப்புப் பகுதியில் உள்ள
மீனவர்கள். கடலூர் வள்ளலார் மாவட்டம், தேவனாம்பட்டினம் மீனவர்
குடியிருப்புப் பகுதியிலிருந்து புதுவை எல்லைக்குச் சென்று மீன்
பிடிக்கச் சென்ற நேரத்தில் வீராணம்பட்டினம் மீனவர்களைத்
தாக்கியுள்ளார்கள். ஏழு பேர் காயம் அடைந்துள்ளார்கள். அதற்கு
அடுத்து, கடந்த 7-ஆம் தேதி அதேபோன்று நமது மீனவர்கள்
மீன்பிடிக்கச் சென்ற நேரத்தில் தேவனாம்பட்டினம் பகுதியைச் சேர்ந்த
மீனவர்கள் 12 விசைப் படகுகளில் சென்றார்கள். தேவனாம்பட்டினம்
மீனவர்களின் மூன்று விசைப் படகுகளையும், 15 கட்டுமரங்களையும், 3
வலைகளையும் அவர்கள் தாக்கியுள்ளனர். அதிலே 12 கட்டு
மரங்களையும், மூன்று மீன்பிடி வலைகளையும் எடுத்துச்
சென்றுள்ளார்கள். இதை நாங்கள் வாங்கித் தருகிறோம் என்று புதுவை
மாநில அரியாங்குப்பம் காவல் துறை கண்காணிப்பாளர் நேற்றைக்கு
முன்தினம் கடலூர் துணைக் கண்காணிப்பாளர் கண்ணாயிரத்தை
அணுகி, எங்கள் பகுதிக்கு உங்களுடைய மீனவர்கள் வந்தால், நாங்கள்
அதைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம் என்று கூறியதன் பேரில்
தேவனாம்பட்டினம் மீனவர்கள் புதுவை மாநிலத்திற்கு, அதாவது
வீராணம்பட்டினம் கிராமத்திற்கு கடலிலே விசைப் படகுகள் மூலமாகச்
சென்று இருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்கள் வலைகளை வாங்கிக்
கொடுக்கிறோம் என்று அழைத்துச் சென்று அங்கே துப்பாக்கிச்சூடு
நடத்தி, நமது தேவனாம்பட்டின மீனவர் பரமானந்தம் அவர்கள்
அங்கே துப்பாக்கிச் சூட்டிலே குண்டடிபட்டு இறந்துள்ள சூழ்நிலை
உருவாகி உள்ளது. அவரோடு 9 மீனவர்களுக்கும் காயம் ஏற்பட்டு,
பிறகு கடலூர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, அவர்கள்
உள்நோயாளிகளாக அங்கே கவலைக்கு இடமான ஒரு சூழ்நிலையில்
அனுமதிக்கப்பட்டு உள்ளார்கள்.

முற்பகல் 10-50

இந்தச் சூழ்நிலை குறித்து நேற்றைக்கு புதுவை சட்டமன்றத்திலே
கேள்வி எழுந்தபோது, அவர்கள் நமது பகுதி மீனவர்களை குற்றம்
சுமத்தி, அங்கே அவர்கள் தவறே செய்யவில்லை; நமது
தேவனாம்பட்டினம் மீனவர்கள்தான் ஊடுருவினார்கள், தவறு
செய்தார்கள் என்று கூறி உள்ளார்கள். இதிலே உண்மை நிலை
என்னவென்றால், கடலூர் பகுதியிலே இருக்கின்ற தேவனாம்பட்டினம்
மீனவர்கள் சாதாரண மீனவர்கள்; கட்டுமரங்களில் சென்று மீன்
பிடிப்பவர்கள். ஆனால், புதுவை ஈரப்பாளையம் பகுதி
வீராணம்பட்டினம் மீனவர்கள் வசதி படைத்தவர்கள்; விசைப் படகு





வைத்து உள்ளவர்கள்; அவர்கள்தான் அத்துமீறி நமது பகுதி
மீனவர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி, 12 கட்டுமரங்களையும்
மீன்பிடி வலைகளையும் ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** அவர்கள் பறித்து சென்று உள்ளார்கள்.
ஆகவே, இதுகுறித்து ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகி உள்ளது.
அதேநேரத்தில் வீராணம்பட்டினம் மீனவர்கள் பறித்து சென்று
இருக்கின்ற அந்த 12 கட்டுமரங்களையும் மீன்பிடி வலைகளையும்
திருப்பி வாங்கிக் கொடுப்பதோடு, அந்த இறந்த மீனவரின் குடும்பத்திற்கு
நிவாரண உதவியும் அளிக்க வேண்டும்; குண்டடிபட்டு
மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கும் நமது
அரசு நிதி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு இத்தோடு
முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, புதுவை யூனியன் பிரதேசத்தை சேர்ந்த வீராணம்பட்டினம்
கிராமத்திற்கும் தமிழகத்தைச் சேர்ந்த கடலூர் அருகில் உள்ள
தேவனாம்பட்டினம் மீனவர்களுக்கும் மீன் பிடிப்பதிலே எல்லைத்
தகராறு இருந்து இருப்பதாக தகவல் கூறப்படுகிறது. கடந்த 7 ஆம்
தேதி இரு கிராம மீனவர்களுக்கும் இடையே நடந்த மோதலில்
தேவனாம்பட்டினம் மீனவர்கள் தாக்கப்பட்டு இருக்கிறார்கள்; கட்டு
மரங்கள், மீன்பிடி வலைகள் பறிக்கப்பட்டு இருக்கின்றன. நேற்றையதினம்
30 கட்டுமரங்களுடன் வீராணம்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள்
சென்றதாகவும், தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது. 18 பேர்கள்
காயம் அடைந்து இருக்கிறார்கள்; அதிலே 19 வயது நிறைந்த
பரமானந்தம் என்பவர் போலீஸ் துப்பாக்கிச் சூட்டினால் மரணமுற்று
இருக்கிறார். இதுபற்றி மீனவர்களின் தலைவர்கள் கூறுகிறபொழுது,
புதுவை மாநிலத்தைச் சேர்ந்த போலீஸ்காரர்கள், கட்டுமரம், வலைகளை
வாங்கித் தருவதாக அழைத்துச் சென்று எங்கள் மீது துப்பாக்கிச் சூடு
நடத்திவிட்டார்கள் என்று குற்றம் சுமத்தி இருக்கிறார்கள்.

இதற்கு முன்னதாகவே 64 கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கிடையே
6 ஆம் தேதி கடலூரிலே பேச்சுவார்த்தைகள் மூலமாக சமாதானம்
செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால், மீண்டும் மீண்டும் இந்தப் பிரச்சினை
எழுப்பப்பட்டு அங்கே மோதல் உருவாக்கப்பட்டு இருப்பது மிகவும்

[திரு. வை. சிவபுண்ணியம்] [1997 ஏப்ரல் 11]

வேதனைக்குரிய ஒன்றாகக் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக 2 கிராமங்களுக்கிடையேயான மோதல்களிலே 80 குண்டுகள் வீசப்பட்டதாக பத்திரிகைச் செய்தி வந்து இருக்கிறது. இப்படிப்பட்ட குண்டு வீச்சுகள் நடைபெற்று இருக்கின்றன. போலீசார் 100 ரவுண்டுகள் துப்பாக்கிச்சூடு நடத்தி இருப்பதாக இதுபற்றி தகவல் வந்து இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையை தவிர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல், இரண்டு கிராமத்திலும் பதட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது.

இதிலே புதுவை உள்துறை அமைச்சர், புதுவை முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களைப் பார்த்து இருப்பதாகக் கூறியிருந்தாலும்கூட, சட்டமன்றத்திலே போலீஸ் வானத்தை நோக்கிச் சுட்டதாகத்தான் தகவலாக பத்திரிகைச் செய்தி வந்து இருக்கிறது. ஆகவே, உயிரிழப்பு ஏற்பட்டு இருக்கிற நிலைமையைப் பற்றிய தகவல் அந்த சட்டமன்றத்தில் சொல்லப்படவில்லையோ என்ற அச்சம் தோன்றுகிறது. ஆகவே, இது குறித்து விசாரணை நடத்துவதோடு, இதிலே மரணமுற்று இருக்கிற பரமானந்தம் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்குவதோடு, மேலும் துப்பாக்கிச்சூட்டிலே காயமடைந்து இருக்கிற 17 பேர்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பேரவையில் மீனவர்களின் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறோம். நமது மீனவர்களுக்கும் இலங்கை கடற்படைக்கும் ஏற்படுகின்ற பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் நாம் இங்கே நீண்டநேரம் உரையாற்றிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், நமக்கு அருகாமையில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் தோன்றியிருப்பது மன வேதனையை அளிக்கிறது. இப்படிப்பட்ட மீன்பிடி எல்லைப் பிரச்சினைகளைப் பற்றி தீர்வு காண்பதற்குரிய முயற்சியில் நம் மாநில அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு அமருகிறேன். வணக்கம்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி அவர்களும் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். திரு. புகழேந்தி அவர்கள் சுருக்கமாகக் கேட்கவும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற தேவனாம்பட்டினம் கிராமத்திற்கும், அருகாமையில் இருக்கின்ற புதுவை மாநிலத்திற்குச் சொந்தமான வீராணம்பட்டினம் பகுதிக்கும் ஏற்பட்டிருக்கும் சில



1997 ஏப்ரல் 11] [திரு. இ. புகழேந்தி]

விரும்பத்தகாத நிலைமைகள் காரணமாக, புதுவைப் பகுதியில் நம்முடைய கடலூர் தேவனாம்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த பரமானந்தம் என்ற ஒரு இளைஞர், புதுவை மாநிலக் காவல்துறையினரால் சுடப்பட்டிருப்பதும், அதன் மூலமாக ஏற்பட்ட தாக்குதல்களில் நம்முடைய பகுதி மீனவர்களில் பல பேர் காயமடைந்திருப்பதும், புதுவை மாநில சட்டமன்றத்தில் அதனுடைய செய்திகளைக் குறிப்பிடுகிறபோது நம்முடைய மீனவர்கள்மீது தவறு இருப்பதைப் போல ஒரு நிலையை உருவாக்கியிருப்பதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. உயிரிழந்த நம்முடைய பகுதியைச் சார்ந்த தோழரின் குடும்பத்திற்கு நிவாரணமும், காயமடைந்தவர்களுக்கு உதவிகள் வழங்குமாறும், அதோடு புதுவை மாநில அரசு இதற்கு ஒரு நீதி விசாரணையையும் நடத்தவேண்டுமென்ற ஒரு நிலையை அந்த அரசுக்கு நம்முடைய அரசு எடுத்து வலியுறுத்த வேண்டுமென்பதையும் கேட்டு அமருகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அடுத்த மாநிலம் புதுவையைச் சேர்ந்த வீராணம்பட்டினம் கிராமத்தில் உள்ள மீனவர்களுக்கும், நம்முடைய தேவனாம்பட்டினம் கிராம மீனவர்களுக்கும், மீன் பிடிப்பில் ஏற்பட்ட, அந்த எல்லையில் ஏற்பட்ட விவகாரத்தின் மூலமாக, அவர்கள் இவர்களுடைய வலைகள், படகுகள் மற்றும் பொருட்களை எடுத்துக்கொண்டு போய், அதைத் திருப்பிக் கொடுப்பதாகக் கூறி, அதற்குப் பின்னாலே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டின் காரணமாக, ஒருவர் இறந்துள்ளார், 9 பேர் காயம்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். பல்வேறு கட்டுமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன, வலைகள் அழிக்கப்பட்டுள்ளன என்ற வகையில் நம்முடைய மீனவர்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக இறந்துபோன அந்தத் தொழிலாளருடைய குடும்பத்திற்குரிய நஷ்ட ஈடும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிற 9 பேருக்கு உரிய நஷ்ட ஈடும் பெற்றுத்தந்து, அந்தப் பொருட்களை மீண்டும் அவர்களுக்குப் பெற்றுத்தரவும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

53/117—6

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், தேவனாம்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள்மீது பாண்டிச்சேரி மாநிலக் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. ரங்கநாதன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. டி. மணி, திரு. இ. புகழேந்தி ஆகியோர் கொடுத்திருந்த இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது சில கருத்துக்களை எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவல்களின்படி, 8-4-1997 அன்று கடலூரை அடுத்துள்ள தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கும், புதுவை மாநிலம் வீராணம்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கும், வீராணம்பட்டினம் அருகில் கடலில் மீன்பிடித்துக் கொண்டு இருக்கும்போது வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. அதன் தொடர்பாக வீராணம்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள், தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்களின் 11 படகுகளையும், 3 மீன்பிடி வலைகளையும் பிடித்து வைத்துக்கொண்டனர். இது சம்பந்தமாக, 9-4-1997 அன்று அரியாங்குப்பத்தில் நடைபெற்ற ஒரு சமரசப் பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்து, வீராணம்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள், தாங்கள் பிடித்து வைத்திருந்த படகுகளையும், மீன்பிடி வலைகளையும் திருப்பிக் கொடுக்க ஒப்புக் கொண்டனர்.

10-4-1997 அன்று முற்பகல் தேவனாம்பட்டினத்தைச் சார்ந்த மீனவர்கள் தங்களுடைய படகுகளையும் மீன்பிடி வலைகளையும் பெற்றுக் கொள்வதற்காகச் சென்றனர். திடீரென்று நிலைமை மோசமாகி, இரண்டு பிரிவு மீனவர்களும் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்ளத் தொடங்கினர். தாக்குதலின்போது, நாட்டு வெடிகுண்டுகளையும் அவர்கள் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. கும்பலைக் கலைக்கவும், நிலைமையைச் சீர்படுத்தவும், பாண்டிச்சேரி காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டால் காயம் அடைந்ததாகச் சொல்லப்படும் தமிழ்நாடு மீனவர்களாகிய பரமானந்தம், செல்வராஜ் மற்றும் சத்தியசீலன் ஆகியோர் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும்போது பரமானந்தம் என்பவர் இறந்துவிட்டார். இவர்களைத் தவிர, தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த மேலும் 15 மீனவர்களை கடலூரிலுள்ள தனியார் மருத்துவமனையிலே சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர். இவர்களுள் குமார் என்பவர் மட்டும் காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டின்





காரணமாக காயம் அடைந்துள்ளார். மற்றவர்கள் ஒருவருக்கொருவர் ஏற்பட்ட தாக்குதலில் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(முற்பகல் 11-00)

இது சம்பந்தமாக, அரியாங்குப்பம் காவல் நிலைய குற்ற எண் 32/97 பிரிவு 147, 148, 307, 334, 436, 432, 427 இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் வெடிமருந்துத் தடுப்புச் சட்டம் பிரிவு 4-உடன் 149 இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேவனாம்பட்டினம் மீனவர்களுக்கு எதிராக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. வீராணம்பட்டினத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் வெட்டுக் காயம் அடைந்துள்ளனர் என்றும், அவர்கள் நிலைமை சீராக உள்ளது என்றும் தெரிகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் படகுகளும், வலைகளும் நமது காவல் துறையினரால் மீட்டு வரப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், நேற்றையதினம் புதுவை மாநிலத்தைச் சேர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஆர்.வி. ஜானகிராமன் அவர்களும், மாண்புமிகு, உள்துறை அமைச்சர் திரு. கண்ணன் அவர்களும் பகல் மூன்று மணியளவில் தொடர்பு கொண்டு புதுவை மாநிலத்திலே தேவையான போலீஸ் பாதுகாப்பு இல்லாத காரணத்தால் தமிழ்நாட்டிலிருந்து நான்கு பட்டாலியன் போலீஸ் அனுப்பி வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். டில்லியிலுள்ள நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களோடு தொடர்பு கொண்டு இந்தச் செய்தியைத் தெரிவித்தோம். துப்பாக்கிச் சூடு நடந்தது பற்றியும் அங்கே ஒரு மீனவர் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். உடனடியாக டி.ஜி.பி. அவர்களிடம் தெரிவித்து நான்கு பட்டாலியன் போலீஸ் புதுவைக்கு உடனடியாக அனுப்ப வேண்டும் என்று தெரிவித்தார்கள். உடனடியாக நான்கு பட்டாலியன் போலீஸ் புதுவை மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பகுதியான கடலூரிலேயும் மீனவர் மத்தியிலே பதட்ட நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக அங்கேயும் இரண்டு பட்டாலியன் போலீஸ் அனுப்பி வைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரையும் அழைத்து அவர்களோடு சமாதானப் பேச்சு நடத்த அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இதற்குப் பிறகு இப்போது அங்கே நிலைமைகள் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கின்றன. இன்றையதினம் காலையிலே புதுவை மாநில உள்துறை அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டபோது அங்கே அமைதி ஏற்படுத்த பாண்டிச்சேரி காவல் துறையினருடன் ஒருங்கிணைந்து பணிகள் நடைபெற்று வருவதாகவும், நிலைமை இப்போது

இரண்டு பகுதிகளிலேயும் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்களும், மற்ற உறுப்பினர்களும், இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு ஏதாவது நிதியுதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். காயம் அடைந்தவர்களுக்கும் நிதியுதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உடனடியாக முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து பணம் நிச்சயமாகத் தரப்படும் என்பதையும், காயம் அடைந்தவர்களுடைய விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து பெற்று நிச்சயமாக அந்தக் குடும்பங்களுக்கும் உரிய தொகை வழங்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்

## 4. கவன ஈர்ப்பு

### (அ) ஆலங்குடி தொகுதியில் சில பகுதிகளில் மின் அழுத்தக் குறைவினால் விவசாயிகள் பாதிக்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன் கீழ் திரு. அ. வெங்கடாசலம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆலங்குடி தொகுதி வடகாடு, மாங்காடு, புல்லான்விடுதி, வெட்டன்விடுதி ஆகிய பகுதிகளில் மின் அழுத்தக் குறைவினால் விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடியில் ஏற்கெனவே இருந்த 66/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 19-10-1996 முதல் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கறம்பக்குடியில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு பணிகள் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடிவடையவுள்ளன. இந்தத் துணை மின் நிலையம் செயல்படத் துவங்கியவுடன் ஆலங்குடி துணை மின் நிலையத்தின் மின் பளு





குறைந்து விடும். அதன் பிறகு ஆலங்குடி தொகுதியிலுள்ள வடகாடு, மாங்காடு, புல்லான்விடுதி, வெட்டன்விடுதி ஆகிய பகுதிகளில் மின் அழுத்தம் சீரடைந்து விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலங்குடியில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இருப்பதாகவும், கறம்பக்குடியில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் விரைவில் அமைக்கப்பட இருப்பதாகவும் இங்கே பதில் தந்தார்கள். உண்மையிலேயே, கறம்பக் குடியிலும், ஆலங்குடியிலும் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஆரம்பித்தபோதிலும், இங்கே குறிப்பிட்டிருக்கிற வடகாடு, மாங்காடு, புல்லானவிடுதி, வெட்டன்விடுதி, ஆனைவயல், நெடுவாசல் போன்ற பகுதிகளில் தொடர்ந்து மின்சாரப் பற்றாக்குறை, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மிக மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தாலும், அதிகமான விவசாயிகள் அங்கே ஆழ்குழாய் போர்களை இறக்கி விவசாயம் செய்யக்கூடிய நிலையிருக்கிற காரணத்தாலும், இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடியில் அதிகமான விவசாயப் பம்புசெட்டுகள் இயங்கக்கூடிய சூழ்நிலையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது.....

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகப் பேச வேண்டும், படிக்கக் கூடாது. நீங்கள் நல்ல பேச்சாளர், இதைப் போய் படித்துக் கொண்டிருக்கிறீர்களே, சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, இப்படி வடகாடு, மாங்காடு, புல்லான்விடுதி பகுதியில் 110 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று அமைப்பதற்கு அந்தப் பகுதி மக்கள் இடத்தை நன்கொடையாக வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக இன்றைக்கு மின் அழுத்தம் மிகக் கம்மியாக இருக்கிற காரணத்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் பொது மக்கள் இடமும் தருவதற்கு, தயாராக இருக்கக்கூடிய நிலையில் வடகாட்டில் 110 கி.வோ. துணை மின்நிலையம் ஒன்று அமைப்பதற்குரிய ஆணையை வழங்குவதற்கு உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கொடுத்துவிடுகிற காரணத்தால் மட்டும்

ஒரு துணை மின் நிலையம் அமைத்து விட முடியாது. 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் குறைந்தது 3 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆலங்குடியில் இப்போது ஏற்கனவே 66/11 கி.வோ. துணை மின் நிலையம் இருக்கிறது. கறம்பக்குடியில் இப்போது புதியதாக 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க இருக்கிறோம். ஆகவே, இந்தப் பகுதியில் மின் பளு குறையும் என்ற காரணத்தால், இந்தத் துணை மின் நிலையம் அமைத்ததற்கு பின்னால் ஆலங்குடியில் விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட பிரச்சினை நிச்சயமாக வராது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகும் அந்தக் குறைபாடுகள் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை இந்த அரசு பரிசீலிக்கும்.

## (ஆ) தேனாம்பேட்டை அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி மற்றும் ஆலையம்மன் திருக்கோயில்கள் நிலத்தில் கட்டப்பட்டுள்ள அங்காடிகளை, முன்னர் காய்கறி வியாபாரம் செய்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, விதி 55-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். உறுப்பினர் அவர்கள் தீர்மானத்தை மட்டும் படிக்க வேண்டும். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையை அளிப்பார்கள். அதற்குப் பிறகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தேனாம்பேட்டை அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி மற்றும் ஆலையம்மன் திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள அங்காடிகளை பல ஆண்டுகளாக அந்த இடத்தில் வியாபாரம் செய்து வந்த காய்கறி வியாபாரிகளுக்கு ஒதுக்கீடு செய்வது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





## அறிக்கை

சென்னை-18, தேனாம்பேட்டை, எல்டாம் சாலை அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி மற்றும் ஆலையம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 46 (II)-இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட திருக்கோயில்களாகும். இதன் ஆண்டு வருமானம் ரூ.5.80 லட்சம் ஆகும். இத்திருக்கோயில் இரண்டாவது நிலை செயல் அலுவலரால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு உரிமையாக பெரியார் சாலையில் டி.எஸ்.என்.1513/2-ல் 10 கிரவுண்டு 1020 சதுர அடி நிலம் உள்ளது. இதில் காய்கறி அங்காடிகள் மற்றும் அசைவப் பொருட்கள் விற்பனை அங்காடிகள் உள்ளன. இதில் 2 கிரவுண்டு 1118 சதுர அடி நிலத்தில் மட்டும் காய்கறி அங்காடிகள் அமைத்துத் தருமாறு வியாபாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்ததோடு உண்ணாவிரதமும் இருந்தனர். இந்தக் கோரிக்கைக்கு ஏற்ப காய்கறி அங்காடி வளாகம் அமைக்க ரூ.9,00,000-க்கு அனுமதியளித்து அறநிலையத் துறை ஆணையரால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லாததால், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகியவற்றிலிருந்து பணம் கடனாகப் பெற்று ரூ.8,25,000/செலவில் காய்கறி அங்காடி வளாகம் (கடைகள்-53) கட்டி முடிக்கப்பட்டது.

2. மேற்படி கடைகளை தங்களுக்கே ஒதுக்கீடு செய்து தருமாறு கோரி தேனாம்பேட்டை பாலசுப்பிரமணிய சுவாமி வியாபாரிகள் சங்கம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கின் முடிவில் "தினசரி செய்தித்தாளில் விளம்பரம் செய்து பொது ஏலம் மூலமாகத்தான் கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்" என்று 9-12-1993-இல் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை எதிர்த்து மேற்படி சங்கத்தினர் உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்த வழக்குகள் 15-3-1994-இல் தள்ளுபடி செய்யப்பட்டது.

3. மேற்படி அங்காடிகள் 7-4-1994-இல் புதிய ஏலத்தில் வாடகைக்கு விடப்பட்டதில், 9 கடைகள் மட்டும் வாடகைக்கு விடப்பட்டது. மற்ற கடைகளை வாடகைக்கு கேட்டு யாரும் முன்வராததால் ஏலம் நடத்தப்படவில்லை. மேற்படி தேனாம்பேட்டை பாலசுப்பிரமணிய சுவாமி வியாபாரிகள் சங்கத்தினர் டெல்லி உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு (S.L.P.) செய்தனர். இந்த முறையீடு 29-9-1995-இல் உச்சநீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி அங்காடிகள் 2-11-1995-இல்

மீண்டும் பொது ஏலம் வைக்கப்பட்டதில் மேற்படி வியாபாரிகள் சங்கத்தினர் மற்றும் மக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று கட்ட வேண்டிய முன்பணத் தொகை ரூ.10,000/-த்திலிருந்து ரூ.5,000/-ஆகவும், வைப்புத் தொகை ரூ.5,000/-த்திற்குப் பதிலாக ரூ.3,000/-ஆகவும் மாற்றம் செய்யப்பட்டது. இந்த நிலையில் 21-1-1996 அன்று நடத்தப்பட்ட ஏல தினத்தன்று வியாபாரிகள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் மற்றவர்கள் எவரையும் வைப்புத் தொகை கட்ட விடாமல் பிரச்சினை செய்ததால் ஏலம் நடத்த முடியாமல் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் 28-2-1997 அன்று ஏலம் விடப்பட்டதில் ஒரு கடை மட்டும் ரூ.430/-க்குக் கேட்கப்பட்டு கடை வாடகைக்கு விடப்பட்டது. மேற்கொண்டு ஏலத்தை தொடர்ந்து நடத்த முடியாமல் மேற்படி வியாபாரிகள் சங்கத்தினர் கலாட்டா செய்ததால் ஏலம் நடத்த முடியாமல் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.

4. மேற்படி அங்காடிகள் பொது ஏலம் மூலம்தான் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வெளியாகி உள்ளதாலும், இதை எதிர்த்து செய்யப்பட்ட மேல் முறையீட்டை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்ததாலும், திருவேற்காடு மற்றும் பழனி திருக்கோயில்களிலிருந்து கடனாகப் பெற்ற தொகையைக் கொண்டு இந்த அங்காடிகள் கட்டப்பட்டு ஏலம் விடப்படாததால் கடனை அடைக்க இயலவில்லை என்பதாலும், மேற்படி ஏலத்தினை நடத்தி அங்காடிகளை வாடகைக்கு விட்டு இதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டுதான் கடனை அடைக்க இயலும் என்பதாலும், இந்த ஏலத்தினை நடத்துவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏலத்தில் விடப்பட்டது போக மீதமுள்ள 43 கடைகள் விஷயத்தில் 27-3-1997 அன்று டெண்டருடன் இணைந்த பொது ஏலம் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பலமுறை ஏலம் விடப்பட்டும் உள்ளூர்ப் பிரச்சினைகளால் தீர்வு காணப்படாமல் இருப்பதால் பொது நலன் கருதியும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுமா என்பது பற்றி ஆராயும் பொருட்டும் 27-3-1997-இல் நடைபெற இருந்த பொது ஏலம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்தேன். ஏற்கெனவே பல ஆண்டு காலமாக அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி மற்றும் ஆலையம்மன் திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் காய்கறி வியாபாரம்





செய்து வந்தவர்கள் தொடர்ந்து அந்தக் கோயில் நிர்வாகத்திடம் அந்த
இடத்திலே தங்களுக்கு கட்டிடம் கட்டித் தரவேண்டுமென்று பல்வேறு
மனுக்களை அளித்து, இயக்கங்கள் நடத்தி, போராட்டம் நடத்தி,
உண்ணாவிரதம் நடத்தி, அதற்குப் பின்னால் கோயில் நிர்வாகம் அந்த
இடத்தில் 53 கடைகளைக் கட்டி இருக்கிறார்கள். கடைகள் கட்டிய
பிறகு அவர்களுக்குப் வழங்காமல் பொது ஏலம் என்ற முறையில்
வழங்கப்படுமென்று இன்றையதினம் அறிவித்திருப்பதன் மூலம்
அவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் பல
ஆண்டுகளாக வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களுக்குப் பாதகமான
முறையில் இன்றையதினம் ஏலம் விடுவதன் மூலம், பலபேர்கள்
ஏலத்தை எடுப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏலம்
விடுகிறபோது அதைத் தடுப்பதற்கான முயற்சியில் வியாபாரிகள் சங்கம்
நடவடிக்கை எடுத்ததால் அதற்காக அன்றைக்கு அங்கேயிருக்கிற கோயில்
நிர்வாகம் ஏலம் விடுவதைத் தவிர்த்துள்ளது. அந்த வியாபாரிகள்
உடனடியாக கோர்ட்டுகளுக்கு எல்லாம் சென்று இருக்கிறார்கள். அந்த
53 கடைகளையும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்தால் அரசாங்கம்
நிர்ணயிக்கிற கட்டணத்தைக் கட்ட அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.
கோர்ட் வழக்கை எல்லாம் திரும்பப் பெறுவதற்கு அவர்கள் தயாராக
இருக்கிறார்கள். அந்தக் கடைகள் அவர்களுக்கு உடனடியாக வழங்கப்பட
வேண்டும். இல்லையென்றால் இது ஏதோ கரையான் புற்றெடுக்க
கருநாகம் குடிபுகுந்ததைப் போல, பரம்பரையாக அந்த இடத்தில்
வியாபாரம் செய்து கொண்டிருந்த சிறு வியாபாரிகளுக்கு விரோதமான
முறையில், குத்தகை என்ற முறையில் பலபேர் ஏலம் எடுத்து,
தனியார்களுக்குக் கொடுத்துவிடுகிற வாய்ப்பு இன்றையதினம் இருக்கிறது.
(மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். இது முக்கியமான
பிரச்சினை. எனவே இதில் ஒரு குழப்பத்தை உருவாக்காத அளவுக்கு
நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் ஹைகோர்ட்,
சுப்ரீம் கோர்ட் வரை இந்தப் பிரச்சினை போய் வந்திருக்கிறது.
அதனால் உடனடியாக அந்தக் கோயில் நிர்வாகம் வியாபாரிகளை
அழைத்துப் பேசி, அரசாங்கம் நிர்ணயிக்கிற கட்டணத்தைக் கட்டினால்
அவர்களுக்கு அந்தக் கடைகளை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி
எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேனாம்பேட்டை அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலைச் சேர்ந்த 53 கடைகள் கட்டப்பட்டு 7-4-1994-ல் புதிய

[புலவர் பூ. ம. செங்குட்டுவன்] [1997 ஏப்ரல் 11

ஏலத்தில் வாடகைக்கு விடப்படுமென்று விளம்பரம் செய்யப்பட்டது. அப்படி விளம்பரம் செய்யப்பட்டதை எதிர்த்து - நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நீண்ட காலமாக அங்கே குடியிருந்து பயன்படுத்தி வருகிறோம். எங்களுக்குத்தான் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அவர்கள்தான் உயர்நீதிமன்றத்தில் வழக்கிற்காக 1993-ஆம் ஆண்டு சென்றார்கள். அப்படி 1993-ஆம் ஆண்டு சென்ற அந்த வழக்கை உயர்நீதிமன்றம் விசாரணை செய்து 9-12-1993-இல் ஒரு தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்பு என்னவென்றால் தினசரி செய்தித்தாள்களில் விளம்பரம் செய்து பொது ஏலம் மூலமாகத்தான் அந்தக் கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதுதான். அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்கள். அந்த மேல் முறையீடும் 15-3-1994-ல் தள்ளுபடி செய்யப்பட்டதால் அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் நிலைநாட்டி, உறுதிப்படுத்தி, 25-9-1995-ல் மேல்முறையீட்டினைத் தள்ளுபடி செய்து அந்தப் பழைய நிலையை உறுதிப்பாடு செய்து தீர்ப்பு அளித்தார்கள். அதற்குப் பின்பு இந்தக் கடைகள் 7-4-1994, 9-5-1994, 2-11-1995, 21-1-1996, 28-2-1997 ஆகிய 5 தடவைகள் ஏலம் வைக்கப்பட்டு அந்த ஏலங்களை வேறு நபர்கள் வந்து ஏலம் எடுக்கவிடாமல் காய்கறி வியாபார சங்கத்தினர் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அதற்குப் பின்பு 27-3-1997-ல் ஏலம் நடைபெறுவதாக செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்பு அந்தப் பகுதியிலே இருக்கிற வியாபார சங்கத்தினர், முக்கியமான பிரமுகர்கள் எல்லாம் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். அதற்குப் பின்பு. சட்டம்-ஒழுங்கு, பொது நலன் கருதி அதை ஒத்திவைக்க அரசு இப்போது முடிவு எடுத்திருக்கிறது. இந்த நிலையைப் பொறுத்தவரையில், அரசு எந்த முடிவும் எடுக்க இயலாது. ஏனென்றால் உச்சநீதிமன்றம், மற்றும் உயர்நீதிமன்றம் இதிலே தெளிவாகத் தீர்ப்பு வழங்கி இருக்கிற காரணத்தால், அந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னால் நீதிமன்றங்கள்தான் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லி, இதில் உடனடியாக எந்த முடிவும் எடுக்க இயலாது. அப்படி எடுக்கவேண்டும் என்று சொன்னால் சட்ட வல்லுநர்களைக் கலந்து பரிசீலிக்கலாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 11]

## 5. உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேற வேண்டுமென தாம் ஆணையிட்டதைப் பேரவைத் தலைவர் திரும்பப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சற்று நேரத்திற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களை. அவையில் இருந்து வெளியேற வேண்டுமென்று ஒருமுறை அல்ல. இரண்டு முறை உத்தரவு போட்டேன். ஆனால் அவர்கள் தொடர்ந்து அவையிலே உட்கார்ந்து இருந்தார்கள். இதிலே எனக்கு ஒன்றும் மரியாதைப் பிரச்சினை கிடையாது. அது இல்லை என்பதைக் காண்பிப்பதற்காக இப்போது அந்த உத்தரவை நான் ரத்துச் செய்யப் போகின்றேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகின்றேன். ஒத்திவைப்புத் தீர்மானம், சிறப்புக் கவன ஈர்ப்பு, கவன ஈர்ப்பு எதுவாக இருந்தாலும் அனுமதி கொடுப்பது, கொடுக்காதது என்பது என்னுடைய உரிமை. அதை அறையிலேதான் கேட்க வேண்டும். அந்தத் தீர்மானம் அல்லது பொருள் என்ன ஆயிற்று என்று பேரவையிலே எந்த உறுப்பினரும் எழுந்து கேட்கக்கூடாது. அந்த முறையில்தான் சில நாட்களுக்கு முன்னால் என்னுடைய அறையிலே வந்து திரிசூலம் பிரச்சினையைப் பற்றிக் கேட்டார்கள். உச்சநீதிமன்றம் தடை விதித்து இருக்கின்றது, ஆகவே அதை ஆராய்ந்துத் பார்த்துத் தான் முடிவு எடுக்க வேண்டும் என்று சொன்னேன். இதிலே நான் சொல்வது உண்மையா அல்லது அவர் சொன்னது உண்மையா என்ற பிரச்சினைக்கு இடம் இல்லை. ஏனென்றால், 10 சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே இருந்தார்கள். குறிப்பாக இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள்கூட எனக்கு எதிரே உட்கார்ந்து இருந்தார்கள். இதிலே உச்சநீதிமன்றத்திற்கு அப்பாற்பட்ட பிரச்சினைகளை எல்லாம் பேச முடியும் என்றெல்லாம் சொல்லிவிட்டு, அன்றாடம் பட்டினிச் சாவு நடக்கின்றது, பட்டினிச் சாவு நடப்பது பற்றி உங்களுக்கோ, அரசுக்கோ கவலையில்லையா என்றெல்லாம்கூடக் கேட்டார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது —எந்த முடிவையும் என்னைப் பொறுத்தவரையில் நான் மறுபரிசீலனை செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் என்னிடம் அறையிலே பேசினாலும் சரி, அல்லது எங்கே பேசினாலும் சரி, முறையாகப் பேச வேண்டும். அந்த

டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேற வேண்டுமென தாம் ஆணையிட்டதைப் பேரவைத் தலைவர் திரும்பப் பெறுதல்



முறை இல்லாமல் பேசினால் அவருக்கு எவ்வளவு சக்தி இருந்தாலும் நான் விட மாட்டேன். அதை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காலையில் 8-1/2 மணி, 8-3/4 மணிக்கு முன்னால் தீர்மானங்களை/அறிவிப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று விதியிலே இருக்கிறது. 9.28-க்கு நான் அவையிலே நுழைகின்ற நேரத்திலே இங்கே என்னுடைய செயலாளரைப் பார்த்து, இங்கே தீர்மானங்களைக் கொடுக்கிறார். அதை நான் கவனிக்கக்கூடத் தேவையில்லை. ஆனால் இதை எல்லாம் நான் பெரிதுபடுத்தவில்லை. இவ்வளவு நடந்த பிறகு, ஏதோ வேறுவிதமாக நடந்ததாகப் பத்திரிகையிலே எல்லாம்கூடச் செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் நான் மறுபரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால் என்னிடம் அணுகுமுறை முறையாக இருக்கவேண்டும். எனக்காக இல்லா விட்டாலும், இந்த நாற்காலிக்காக மரியாதை இருக்கவேண்டும் என்று கண்டிப்பாக இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்

முற்பகல் 11-15

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, பேரவைத் தலைவர் என்ற முறையிலே, இரண்டு முறை அவர் வெளியேற வேண்டும் என்று நான் சொன்ன பிறகும், அவர் அவையிலே உட்கார்ந்திருந்தது தவறு. இருந்தாலும், அவருக்கு அது தவறு என்று தெரியாவிட்டாலும் நான் அப்போது அவர் வெளியேறவேண்டும் என்று சொன்ன உத்தரவைத் திரும்பப் பெறுகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே நீங்கள் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. நான் உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் உட்காரலாம். நான் வெளியேற வேண்டும் என்று சொன்ன பிறகும் நீங்கள் உட்கார்ந்து இருந்ததே தவறு. ஆகவே நீங்கள் இப்போது உட்காரலாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடு) நான் அப்படித்தான் சொல்வேன், நீங்கள் உட்காருங்கள். இதற்கு 10 சாட்சிகள் இருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.



## 6. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. ஞானசேகரன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராகிய நான், 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (பதினோராவது சட்டமன்றப் பேரவை) அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.85,68,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1159, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலூரை' அடுத்த சத்துவாச்சாரியில் நீதிமன்ற வளாகம் அமைந்துள்ள இடத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தை நீதிமன்றத்திற்கு ஒதுக்கித் தரவேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,68,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1936, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,68,81,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1950, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுகாவில் வழக்குகள் நீதிமன்றத்தில் அதிகமாக நிலுவையில் உள்ளதால், தாலுகா பகுதியாகவும் தாலுக்கா தலைநகராகவும் உள்ள எடப்பாடியில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,68,81,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1959, திரு. ஜி. நிஜாமுதீன்

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'அனைத்து நீதிமன்றங்களிலும் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்கள் மற்றும் அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,68,81,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1932, திரு. பி. வெங்கடசாமி.





**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஓய்வு பெற்ற நீதிபதிகளை மறுபடியும் எந்த வேலையிலும், குழுக்களிலும் நியமிக்கக்கூடாது என்று வலியுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,68,81,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.42,26,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1984, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலூரில் உள்ள ஆண்கள் மத்திய சிறைச்சாலை மற்றும் பெண்கள் சிறைச்சாலைகளில் போதிய மின் விசிறிகள் பொருத்தி சிறைவாசிகளுக்கு வசதி செய்து தரவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,26,99,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1992, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,26,99,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1974, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுகா, எடப்பாடி நகரில் கிளைச் சிறைச்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,26,99,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2877, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூராட்சியில் கிளைச் சிறைச்சாலை ஒன்று துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,26,99,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1969, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகை கிளைச் சிறைச்சாலையில் பெண் கைதிகளுக்கென தனியே கிளைச் சிறைச்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,26,99,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1993, திரு. டி. மணி.





**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கிளைச் சிறைச்சாலையைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,26,99,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1976, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் மேலும் பல தொழில்கள் கற்றுக் கொள்ள வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,26,99,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1973, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஆங்கிலேயர் காலத்திலிருந்து செயல்பட்ட, ஏடி. பன்னீர் செல்வம் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள மன்னார்குடி கிளைச் சிறைச்சாலையை மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,26,99,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள

கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதில் உரையில் அவர்களுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (அ) கோரிக்கை எண் 21 - மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மானியக் கோரிக்கை எண் 21-மீனளம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.26,80,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2172, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலூரில் உள்ள மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,80,57,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

@ 171-255 ஆம் பக்கங்களில் இணைப்பு I மற்றும் II-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2164, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் *கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,80,57,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2189, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் ஒரு மீன் விற்பனை நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,80,57,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2149, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகூர் பட்டிணச்சேரி, நாகப்பட்டினம், சேர்துரர் போன்ற மீனவக் கிராமங்களில் மீனவர்களுக்காக குடியிருப்புகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,80,57,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2167, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழக மீனவர்கள் பிற மாநிலங்களில் மீன்பிடிக்கச் செல்லும்போது ஏற்படும் இடர்பாடுகளைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[ திரு. டி. மணி ] [1997 ஏப்ரல் 11

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,80,57,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2188, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir,

'To discuss the need to provide deep fishing facilities to fishermen in Tamil Nadu so that the fishing industry may thrive well in Tamil Nadu' I move—

"That the allocation of Rs.26,80,57,000/-under Demand No.21 - Fisheries, be reduced by Rs.100/-.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவர்களுக்கு விளக்கம் அளிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் இந்த விவாதத்திலே பேச இருக்கின்றார்கள். அதைக் கருத்திலே கொண்டு, ஒவ்வொரு உறுப்பினரும் தன்னுடைய பேச்சை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விவாதத்தைத் துவக்கிவைக்குமாறு திரு. டி. அமரமூர்த்தி அவர்களை அழைக்கின்றேன்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள், மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எங்களது தமிழ் மாநில காங்கிரசின் சார்பாக

@ 257-276 ஆம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1997 ஏப்ரல் 11] [ திரு. டி. அமரமூர்த்தி ]

ஒரு சில கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு அனுமதி அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

ஏழை எளிய மக்களுக்கு விரைவாக நியாயம் கிடைத்திட உச்ச நீதிமன்றக் கிளை ஒன்றைத் தென்னகத்திலே நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த உச்சநீதிமன்றக் கிளையைத் தென்னகத்திலே நிறுவிடவேண்டுமென்று தென் மாநிலங்களிலுள்ள 'பார் கவுன்சில்' அனைத்தும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், கேரளச் சட்டமன்றமும், தென் மாநிலங்களிலும் உச்சநீதிமன்றக் கிளையைத் துவக்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அதேபோல் தமிழகச் சட்டமன்றமும் தீர்மானம் இயற்றி, தென் மாநிலங்களில் உச்சநீதிமன்றக் கிளை ஒன்றை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்த உச்ச நீதிமன்றக் கிளையை குறிப்பாகத் தமிழகத்தில், சென்னையிலே நிறுவிட இந்த அரசு முழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல உயர்நீதிமன்றக்கிளையை மதுரையிலே துவக்கப்போவதாக அரசு அறிவித்திருக்கிறது. இன்னும் அந்த உயர்நீதிமன்றக்கிளை துவக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக தமிழக அரசு வாடகைக் கட்டிடத்திலோ, அல்லது ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற மாவட்டக் கோர்ட்டிலோ இந்த உயர்நீதிமன்றக் கிளையை விரைவாக மதுரையில் துவக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 11/96 முதல் கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்கு மேலாக அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த வழக்கறிஞர்கள் கோர்ட்டைப் புறக்கணித்து வருகிறார்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட வழக்கறிஞர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து. அவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் கோர்ட்டுகளைப் புறக்கணிப்பதை உடனடியாகத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாகத் துவக்கப்பட உள்ள மாவட்டங்களில் விரைவாக மாவட்ட நீதிமன்றத்தையும் மற்ற நீதிமன்றங்களையும் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாகத் திருவள்ளுவர் மாவட்டத்தில் துவங்கப்பட இருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்தையும், மற்ற நீதிமன்றங்களையும் அரியலூரிலே துவக்கிட வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். ஏனென்றால பொதுமக்களுக்கு மிகவும் வசதியாக அரியலூர் நகரம் இருக்கிறது. அங்கு கிட்டத்தட்ட 20, 30 ஆண்டுகளாக சப்-கோர்ட் இயங்கி வருகிறது. அதோடு மட்டும் அல்லாமல், பல நீதிமன்றங்களும் அரியலூரிலே ஏற்கெனவே இயங்கி வருகின்றன. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், சட்டத் துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக அரியலூரில் மாவட்ட நீதிமன்றமும், மற்ற நீதிமன்றங்களும் அமைத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

1982-க்குப் பிறகு, சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குப் போதுமான அளவுக்கு தமிழில் புத்தகங்கள் அச்சடித்துத் தர இயலவில்லை. ஆகவே, விரைவாக தமிழில் புத்தகத்தை அச்சடித்து அந்த மாணவர்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர் நீதிமன்றங்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை. கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்தில் கடந்த 6 மாதங்களாக நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. கடலூர்-வள்ளலார். விழுப்புரம்-இராமசாமி, தஞ்சை, ஏ.டி. பன்னீர்செல்வம். நாகை ஆகிய மாவட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளாகி உள்ளார்கள். முதல்வர் பிறந்த மாவட்டத்திற்கே இந்த நிலை என்றால் மற்ற மாவட்டங்களின் நிலை எவ்வாறு இருக்கும்? மேலும், தொழிலாளர்களின் துயரைப் போக்கிட அனைத்து மாவட்டங்களிலும் தொழிலாளர் நீதிமன்றம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருசில இடங்களில் தேவைக்கு அதிகமான குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும், முன்சீப் நீதிமன்றங்களும் உள்ளன. அதேநேரத்தில் தேவையான ஊர்களில் குற்றவியல் நீதிமன்றங்களும், முன்சீப் நீதிமன்றங்களும் போதுமான எண்ணிக்கையில் இல்லை. தமிழகத்திலுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கையை. தேவைக்கு ஏற்றாற்போல் முறைப்படுத்திட ஒரு குழுவை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இந்த ஆண்டு சுதந்திர தின பொன் விழா ஆண்டு. இந்த சுதந்திர தின பொன்விழா ஆண்டினையொட்டி சிறைச்சாலையில் 65 வயதிற்கு மேல் உள்ள ஆயுட் கைதிகளுக்கும், மற்ற கைதிகளுக்கும் மன்னிப்பு அளித்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நீதிமன்றங்களில் புதியதாகத் தேர்வு செய்யப்படும் நகல் எழுத்தர்கள் சொந்தமாக தட்டச்சு இயந்திரம் வாங்கிவர வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் புதியதாக தேர்வு செய்யப்படுபவர்கள் அவ்வாறு செலவு செய்து தட்டச்சு இயந்திரங்களை வாங்க இயலாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து அரசு மறுபரிசீலனை செய்து, சட்டத்தை மாற்றியமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள் தற்போது 30,000 பேர் தமிழகத்தில் உள்ளார்கள். ஆனால், வழக்கறிஞர்களுக்குப் போதுமான கட்டிட வசதிகள், மேஜை, நாற்காலிகள் இல்லை. ஆகவே, அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும், போதுமான வக்கீல் சங்கக் கட்டிடங்களையும் கட்டித்தர இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரியலூரில் உள்ள சப்-கோர்ட் அலுவலகத்திற்கு இதுவரை கட்டிடம் கட்டித் தரப்படவில்லை. அது வக்கீல்கள் சங்கக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, புதியதாக சப்-கோர்ட்டுக்கு கட்டிடம் கட்டித்தரப்படுவதோடு, அங்கு வழக்கறிஞர்கள் தங்குவதற்கும் கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுத் தரப்பில் ஆஜராகும் அரசு வக்கீல்களுக்கு ஆங்கிலேயர் காலத்தில் கொடுக்கப்பட்டதுபோல்தான் இப்போதும் ஃபீஸ் கட்டண முறை இருந்து கொண்டு வருகிறது. அவர்களுக்கு அதுவும் மாதந்தோறும் முறையாக வழங்கப்படவில்லை. அவர்கள் பதவிக்காலம் முடிந்தபின் ஃபீஸ் பாக்கிக்காக நீதிமன்றத்தில் வழக்காடும் நிலை ஏற்படுகிறது. ஆகவே, அரசு அவர்களுக்குப் போதுமான ஃபீஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பை நல்கிய பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

***திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறை மானியக் கோரிக்கையிலும், சட்டத் துறை மானியக் கோரிக்கையிலும் பேச வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தூத்துக்குடி எனது தொகுதிக்குட்பட்ட மீன்பிடித் துறைமுகம். 1973-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட துறைமுகம். அங்கு மிகப் பெரிய அளவுக்கு விசைப்படகுகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால் இட நெருக்கடி அதிகமாகிக் கொண்டு இருக்கிறது. அதற்கு இன்னொரு இடமான தருவகுளத்தில் இதுபோன்ற மீன்பிடித்

துறைமுகம் அமைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தூத்துக்குடியில், படகுகளை சீரமைக்க ஒர்க்ஷாப் ஒன்றை அமைத்திட வேண்டும். அங்கு படகுகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால், அடிக்கடி அந்தப் படகுகள் ரிப்பேர் ஆகிக்கொண்டு இருக்கின்றன. அதற்கென்று ரிப்பேர் செய்ய ஒர்க் ஷாப் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அதை அரசாங்கமே நடத்தினால் தாமதம் ஆகும். அதைத் தனியாரிடம் கொடுத்து அந்த ஒர்க்ஷாப்பை நடத்த ஏற்பாடு செய்தால் அந்தப் படகுகளை ரிப்பேர் பார்த்து உடனடியாக அந்தத் தொழிலுக்குப் போவதற்கு எளிதாக இருக்கும். அதையும் செய்து தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

மீனவர்களுக்கு என்று மத்திய அரசு, மாநில அரசால் 35 பைசா ஒரு லிட்டருக்கு தள்ளுபடி செய்து அந்த டீசல் விநியோகிக்கப்படுகிறது. அந்த 35 பைசாவை ஒரு ரூபாயாக ஆக்கித்தர வேண்டும் என்றும் அதே நேரத்தில் அந்த ஒரு ரூபாயை - குறைக்கக்கூடிய அந்த ஒரு ரூபாயை-அப்போதைக்கப்போது டீசல் பிடிக்கும்போது கொடுக்கக் கூடிய பில்லிலேயே குறைந்து உடனடியாக அந்தத் தொழிலாளிக்கு கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். எதற்காக என்று சொன்னால் பில்லைப் போட்டு விட்டு என்றைக்காவது ஒருநாள் மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும், தருகின்ற போது தருவோம் என்று சொல்லிவிடுவார்கள். மீனவர்கள் டீசலைப் பிடித்துவிட்டு பில்லை பெரும்பாலும் வைத்துக்கொள்வது இல்லை. ஆகையால், அவர்களுக்கு அந்த பில் பணம் வாங்குவதற்கும் முடியவில்லை. அரசாங்கத்தால் உதவி கிடைக்கவும் இல்லை. ஆகையால் அந்த உதவி அந்த டீசல் போடும் நேரத்திலேயே உடனடியாகக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டுப் படகு மீனவர்களுக்கு, தலைவர் கலைஞர் அவர்கள், விசைப்படகு போல் அதிலேயும் என்ஜின்கள் வைத்துப் போகக்கூடிய வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தார்கள். அந்த நாட்டுப் படகு மீனவர்களுக்கும் ரேஷன் முறையில் மண்ணெண்ணெய் கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அதையும் நீங்கள் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.





60 வயது வரைக்கும் மீன்பிடித் தொழில் செய்துவிட்டு அதற்குப் பின்னால் அவர்களுக்கு எந்த வேலையும் செய்ய முடியாத நேரத்தில், அவர்களுக்கும் மற்றவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பது போல உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே உதவித் தொகை கொடுத்துக்கொண்டு இருப்பவர்களோடு சேர்த்துக் கொடுத்தால் நிச்சயமாக அவர்களுக்கு அதிகமாக கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்காது. எனவே தனியாக 60 வயது முடிந்த மீனவர்களுக்கு உதவித்தொகை வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடியில் மிகப் பெரிய அளவுக்கு மீன்பிடித் தொழில் நடந்துகொண்டிருக்கிறது. வாக்கி டாக்கி கடந்த ஆட்சிக் காலத்தில் கொடுத்தாகிவிட்டது என்று கடந்த ஆட்சியாளர்கள் அறிவித்தார்கள். ஆனால் கொடுக்கவில்லை. அறிவிப்போடு நின்றுவிட்டது. ஆனால் இப்போது நமது ஆட்சிக் காலத்தில் அறிவித்திருக்கிறீர்கள். கடலூருக்கும், முட்டத்திற்கும் வாக்கி டாக்கி கொடுக்கப்படும் என்று அறிவித்திருக் கிறீர்கள். அதைத் தூத்துக்குடிக்கும் கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் மீனவர்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் 4,000 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஒரு வீட்டிற்கு 32,000 ரூபாய் ஒதுக்கி கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல நீண்ட நாட்களாக உள்நாட்டு மீனவர்களும் மீன்பிடித் தொழிலைச் செய்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உள்நாட்டு மீன்பிடித் தொழிலாளிக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டில் மீனவர்களுக்காகப் பல திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மீனவர்கள் பகுதியில் ஒரு பெரிய கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. வி.வி. மினரல் என்ற நிறுவனம், நெல்லை மாவட்டத்தில் ராதாபுரம் தாலுக்காவில் அமையப்பெற்றுள்ள ஒரு நிறுவனம். வி.வி. மினரல் என்ற நிறுவனத்திடம் முந்தைய ஆட்சிக் காலத்தில் பணத்தைப் பெற்றுக்கொண்டு கடற்கரையிலே மண் எடுக்க வேண்டும் என்று ஒரு ஆர்டர் போட்டுவிட்டார்கள். ஆர்டரைப் பெற்றுவிட்ட காரணத்தால் அந்த நிறுவனம் இப்போது அங்கு கடற்கரையையே தோண்டி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஊர் பாதிக்கப்படுகிறது என்று அங்கே உள்ள

மீனவ மக்கள் போய்க் கேட்டால் அவர்கள் ஆள் வைத்து அடிக்கிறார்கள். சமீபத்தில் 2 மாதத்திற்கு முன்னால்கூட இங்கே எல்லோரும் சட்டமன்றத்திலே பேசினார்கள். அந்த மினால் கம்பெனிக்கு, முன்னால் இருந்த அரசால் முறைதவறிக் கொடுத்த அந்த ஆர்டரை ரத்து செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ரத்து செய்யாவிட்டால் நிச்சயமாக மேலும் மேலும் அந்தக் கடற்கரை பாதிக்கப்பட்டு அங்கு மீனவர்கள் வாழமுடியாது என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பழையகாயல் ஆற்றுத்துவாரத்தில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கின்ற நேரத்தில் ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டால் அந்தத்துவாரம் அடைபட்டு விடுகிறது. அதை உடனடியாகத் தூர் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சின்னக்காயலில் ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. பாலம் அமைக்க ரூபாய் ஒதுக்கியாகி விட்டது. துரிதமாக அந்த வேலையை நீங்கள் செய்து தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. அடுத்து திரு. மு. பன்னீர்செல்வம்.

**திரு மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நீதி நிருவாகம், சிறைத் துறை மற்றும் மீன் வளத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு என் வணக்கத்தைச் சொல்லி என்னுடைய கருத்துக்களை எடுத்து முன் வைக்க விரும்புகிறேன்.

மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை நிறுவ முடிவு எடுத்து நிதி ஒதுக்கியுள்ளதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பொதுமக்களும், வழக்கறிஞர்களும் தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்த வண்ணம் இருக்கிறார்கள்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்குக் கூடுதலாக அறைகள் கட்ட 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வழக்கறிஞர்களும், பொதுமக்களும் பெரிதும் பாராட்டுகிறார்கள்.



அதோடு என்னுடைய சீர்காழித் தொகுதியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் தட்டச்சு இயந்திரங்கள், நாற்காலிகள், மேஜைகள் போன்ற பர்னிச்சர் தேவைப்படுகின்றன. அவைகளை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நீதிமன்றங்களில் பல்வேறு அரசு அலுவலர்கள் பணியிடங்கள் காலியாக இருப்பதை உடனடியாக நிரப்ப வேண்டுகிறேன்.

என்னுடைய சீர்காழித் தொகுதியில் குற்றவியல் நீதிமன்றத்திற்குத் தனியாக கட்டிடம் இதுவரை இல்லாமல் இருக்கிறது. சென்ற முறையும் கேட்டேன். இந்த முறையும் கேட்கிறேன். எப்படியாவது தனியாக ஒரு கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டத் துறை மாணவர்களைப் பொறுத்தவரையில் மாணவர்கள் சட்டப் படிப்பு முடித்தவுடன் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு, ஒரு ஆண்டு காலம் சீனியர் வழக்கறிஞர்களிடம் பயிற்சி எடுத்துக்கொண்டு அதற்குப் பின்னாலே தமிழ்நாடு பார் கவுன்சிலிலே பதிவு செய்ய வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலையை ரத்து செய்வதற்குத் தமிழக அரசு முன்வரவேண்டும். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த வழக்கு முடிந்தவுடன் அதை ரத்து செய்வதற்குத் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீன் வளத் துறையில் என்னுடைய சீர்காழித் தொகுதியில் ஏறக்குறைய 15 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அடிப்படை வசதி களான குடியிருப்பு மனைப் பட்டா, குடிநீர், மின் விளக்கு இவைகள் இன்னும் சரியாக சீராக செய்து கொடுக்கப்படவில்லை. நமது அரசு ஒருங்கிணைந்த மீனவ மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மீன் பிடி களங்களும், பல்வேறு விதமான மீன் பிடி வலைகளும் 16 ஆயிரத்து 350 மீனவர்களுக்கு வழங்கப்படும் என்பதும் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும் காலங்களில் தொடர்புகொள்வதற்கு மானிய விலையில் வாக்கி டாக்கி வழங்கப்படும் எனவும் நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதை மீனவ மக்கள் நன்றி உணர்வோடு பெரிதும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

ஏற்கெனவே அரசு மூலம் கட்டப்பட்ட மீனவக் குடியிருப்புகள் பழுதடைந்ததால் பராமரிக்க ஒரு வீட்டிற்கு 5,000 ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதற்கு மாண்புமிகு முதல்வரவர்களை மீனவ மக்கள் நன்றியுணர்வோடு பாராட்டுகிறார்கள்.

எனது தொகுதியில் நன்னீர் இறால் வளர்ப்புக்கு-ஃப்ரெஷ் வாட்டர் அக்வாகல்சர் - அரசு மானியம் வழங்கினால், சுற்றுப் புறச் சூழல் கெடாமல், பாரம்பரிய முறையில் இறால் பண்ணை ஏற்படுத்தினால் வேலை வாய்ப்பு பெருகும். குடும்ப வருமானமும் பெருகும். எனவே, இந்த ஆண்டிலேயே நன்னீர் இறால் வளர்ப்புக்கு என்னுடைய தொகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து, 5 நபர்களுக்காவது உதவியினைச் செய்திட வேண்டுகின்றேன்.

எனது தொகுதியில், பழையாறு பகுதியில் வன இலாகாவிற்குச் சொந்தமான இடத்தில் மீனவர்கள் குடியிருந்து வருகின்றார்கள். 1989 முதல் 1991-ஆம் ஆண்டு வரையுள்ள நமது கழக ஆட்சியில், குடியிருக்கும் வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி மனுச் செய்தார்கள். ஆனால், பரிந்துரை செய்யப்பட்டும், இதுவரை மின் இணைப்பு கிடைக்கப் பெறவில்லை. எனவே, மீனளத் துறை அமைச்சரவர்கள், வருவாய்த் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி, மின் இணைப்பு கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

மீன் வளம் கொள்கைக் குறிப்பேட்டில், என்னுடைய சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தின் முகத்துவாரத்தில் மணலை வெளியேற்றவும், ஆழப்படுத்தவும் சுமார் 8 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதற்கு நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று, திருமுல்லை வாசல் மீன்பிடி முகத்துவாரமும் மண் அடைந்து இருப்பதால், ஆழப் படுத்தவும் நிதி ஒதுக்கிக் கொடுக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், பழையாற்றில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும், வடவாமேடு, கொட்டாயமேடு மீனவ கிராம மக்கள் செல்லும் வண்ணம்-பக்கிங்ஹாம் கால்வாய் மீது கட்டப்பட்டிருக்கின்ற பாலம் மிக மோசமான நிலையிலே பழுதடைந்து, இன்றைக்கு விழுந்து விடுமோ அல்லது நாளை விழுந்து விடுமோ



என்ற சூழ்நிலை இருப்பதால்-உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மேலும், கொடுவாய், கூழையூர், திருமுல்லைவாசல், கீழ மூவர் கரை, மேல மூவர் கரை, சாவடிக் குப்பம், நாயக்கர் குப்பம், மடத்துக் குப்பம் ஆகிய பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளான சாலைகள் இதுவரை சரியாகச் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே, அவற்றை உடனடியாகச் செய்து கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

எனது சீர்காழித் தொகுதியில், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் பிடிக்கப்படுகின்ற பல்வேறு வகையான மீன்கள் கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதை நிறுத்தி, தமிழகம் வருவாய் பெற்றிட பழையாற்றில் உலர் மீன் கிடங்கு ஒன்று - கருவாட்டுக் கிடங்கு ஒன்று-ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, நீதி வழுவாத அரசர்கள் ஆண்டு வந்த பூமி இது. சோழ மண்டலத்திலே மனுநீதிச் சோழனும், பாண்டிய மண்டலத்திலே பாண்டியன் நெடுஞ்செழியன் போன்றவர்களெல்லாம் வாழ்ந்த பூமியில், "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி" என்ற வள்ளுவனுடைய வாக்கிற்கிணங்க, நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இப்பொழுது அனைத்து மக்களுக்கும் சிறப்பானதொரு நீதியையும், நிர்வாகத்தையும் அளித்து வருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே.

பொதுவான முறையிலே, நீதியைப் பொறுத்த அளவிலே, மக்கள் இன்று நேற்று அல்ல, மனிதன் தன்னைத் தானே உணர்ந்து கொண்ட காலத்திலிருந்து, பொதுவாக ஒரு மனிதனை எப்படிப்பட்டவன் என்று கேட்கும்பொழுது, கிராமங்களிலே சாதாரணமாகச் சொல்வார்கள், அப்படி நீதிக்கு அவன் ஒரு நீதிமான் என்று சொல்வார்கள்.

[திரு. வ. வேலுசாமி] [1997 ஏப்ரல் 11

அதிகமான மதிப்பு கொடுத்துவந்த இந்தத் தமிழகத்திலே. சென்ற ஆட்சியிலே இந்த நீதிமன்றங்கள், நீதியரசர்கள் எல்லாம் பட்டபாடுகளையெல்லாம் இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். நமது தமிழக மக்கள் மாத்திரமல்ல அனைவருக்குமே தெரிந்த ஒன்றுதான் இது. ஆனாலும், நம்முடைய அரசு அவைகளையெல்லாம் போக்கி, நீதிமன்றங்களுக்கும், நீதிபதிகளுக்கும் அதிகமான உரிமைகளையும், அதைப் போலவே மரியாதைகளையும் கொடுக்க எந்த நேரத்திலும் தவறியதில்லை.

(முற்பகல் 11-45

இப்போது, நம்முடைய தமிழகத்திலே பல்வேறு நீதிமன்றங்கள் இருந்தாலும், பல பிரிவுகள் இருந்தாலும், வழக்குகளில் எல்லாம் தேக்கம் ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான வழக்குகள் ஒவ்வொரு நீதிமன்றத்திலும் தேங்கியிருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கின்றோம். இவைகளைப் போக்குவதற்காகத்தான் சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற நம்முடைய ஒப்பற்ற தலைவர் அவர்களுடைய வாக்கிற்கிணங்க 1996-97-ஆம் ஆண்டில் மாத்திரம் புதியதாக 9 உரிமையியல் நீதிமன்றங்களையும், 4 குற்றவியல் நீதிமன்றங்களையும், 15 குற்றவியல் நீதிமன்றங்களை மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களாகவும், முன்னோடித் திட்டம் பகுதி 2-ன் கீழ் 21 கூடுதல் சார்பு நீதிமன்றங்களையும், 34 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களையும் அனுமதித்தது உண்மையிலேயே பாராட்டுக்குரியதாகும். அப்படிப்பட்ட நீதிமன்றங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய தமிழக அரசிடம் வேண்டுகோளாக ஒன்றை நான் வைக்க விரும்புகிறேன்.

நீதிமன்றங்களிலே எங்கு பார்த்தாலும் வழக்கறிஞர்கள் மாத்திரமல்ல, நம்முடைய மேஜிஸ்திரேட்டுகள் உட்காரக்கூடிய இருக்கைகள்கூட ஒழுங்காக இருப்பதில்லை. அவைகளைச் சரி செய்வதற்காக, ஏதாவது சேர் வேண்டும். பெஞ்ச் வேண்டும், ஃபேன் வேண்டும் என்று கேட்டால்கூட, அவைகள் உயர்நீதிமன்றத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டு, பின்பு அங்கிருந்து ஒரு புரப்போசல் இங்கே நம்முடைய அமைச்சகத்திற்கு வந்து, அது செல்வதற்குள்ளாக அங்கே அமர்வதற்கு ஒரு காலோடுகூட ஒரு நாற்காலி இருப்பதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட காலதாமதத்தை நீக்குவதற்காக வழி செய்ய வேண்டும். எந்தவகையிலும் அரசுதான் அதை வழங்குகிறது. ஆகவே, அப்படிப்பட்ட தேவைகளை உடனுக்குடன் செய்வதற்காக, நேரடியாக ஒவ்வொரு கோர்ட்டிலும் வழக்கறிஞர்கள்



1997 ஏப்ரல் 11] [திரு. வ. வேலுசாமி]

சங்கம் இருக்கிறது. அதன் வாயிலாகப் பரிந்துரை செய்யப்பட்டால், தயவுசெய்து, நம்முடைய அரசு அவற்றைக் கவனத்திலே கொண்டு, அவைகளை நேரடியாக வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையிலேயே நம்முடைய அரசு சொன்னதைப்போல, திருநெல்வேலியில் ஒரு சட்டக் கல்லூரியை ஆரம்பித்தது பாராட்டுவதற்குரியதாகும். அதைப் போலவே சென்னையிலே உயர்நீதிமன்றத்திலே கணினி முறை அறிமுகப்படுத்தப்பட்டது பாராட்டுவதற்குரிய செயலாகும்.

இந்தியாவிலே அம்பேத்கருடைய நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, சட்ட மேதை அம்பேத்கருடைய பெயரிலே ஒரு சட்டப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்காக இப்போது எடுத்திருக்கக்கூடிய முயற்சிகள் உண்மையிலேயே இந்திய நாட்டிற்கு வழிகாட்டுதலாக அமைந்திருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

அதைப் போலவே இங்கே பல்வேறு காரியங்களைச் செய்திருக்கக்கூடிய நம்முடைய தமிழக அரசு 1996-97-லே பல புதிய தட்டச்சர்களை அளித்திருக்கிறது என்பதை நினைக்கும்போது பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையைப் பொறுத்த அளவிலே உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு கிளையைப் பிரித்து மதுரையிலே அமைத்திட வேண்டுமென்ற கோரிக்கை தென் மாவட்ட வழக்கறிஞர்களிடையே இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அப்படி ஏற்படும்போது, சென்னையிலே உச்சநீதி மன்றத்தினுடைய ஆயத்தினை நிச்சயமான முறையிலே ஏற்படுத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையை ஆரம்பிப்பதற்கு 1972-ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட அந்தக் கோரிக்கைக்கு, நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1972-ஆம் ஆண்டிலேயே எங்கெங்கேயோ கிடந்த நீதிமன்றங்களையெல்லாம், பல்வேறு இடங்களிலேயிருந்ததையெல்லாம் ஒன்று சேர்த்து ஓரிடத்திலே மிகப் பிரம்மாண்டமான ஒரு கட்டிடத்தை எழுப்பியிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய கட்டிடங்கள், இங்கே இருக்கக்கூடிய உயர்நீதிமன்ற கட்டிட வளாகத்தைப் போன்று மிகப் பெரிய அறைகளாக இருப்பதால் எந்த நேரத்திலும், எந்தக் கோர்ட்டையும் ஆரம்பிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. வேண்டுமென்றால் குளிர்சாதன வசதிகளை

ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஏனென்றால் அவை இன்று உயர்நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய அறைகளைப் போலவேதான் பெரிய அறைகளாக இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை, பெரிய போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. தயவு செய்து கொஞ்சம் நேரம் கூடக் கொடுக்க வேண்டும்.

(முற்பகல் 11-50)

இந்த நேரத்திலே பலர் இதை அரசியலாக்க நினைக்கிறார்கள். அங்கே, 1973-ஆம் ஆண்டிலேயிருந்து நடந்து கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையில், சென்ற ஆட்சியிலே 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னது, பேப்பரிலே சீனி என்று தாளில் எழுதித் * தடவிக்கொண்டு என்று சொன்ன மாதிரி, ஒரு பைசாகூட ஒதுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்களின் ஆட்சியின்கீழ் இருக்கக்கூடிய இந்த அரசு நிச்சயம் சொல்வதைச் செய்யும் என்ற முறையில், சொன்னதைப் போலவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது உலகநேரியிலே நீதியரசர்கள் சென்று பார்த்த இடத்தைக் கையகப்படுத்துவதற்காக அரசாணையைப் பிறப்பித்ததற்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே தருணத்திலே, நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக சுமார் 4 ½ கோடி ரூபாய் ஆகும் என்பதைக் கருத்திற்கொண்டு, அதற்காகவும் பணத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பதை நினைக்கும்போது, நான் மேலும் என்னுடைய நன்றியை, எங்களுடைய தென்மாவட்ட வழக்கறிஞர்கள் சார்பாகச் சொல்லிக் கொள்கிறேன். ஆனால், அதே சமயத்திலே இப்படித்தான் சொல்வார்கள், கட்டடங்களைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படமாட்டாது என்ற எண்ணத்திலே அங்கே இருக்கக்கூடிய மாவட்ட வழக்கறிஞர்களும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தப் போராட்டத்தை வைத்து பல கட்சியினர் இதை இப்போது அரசியலாக்கி, ஏதோ, 'அவர்கள் காலத்திலே செய்யாததை இப்போது நாங்கள்தான் போராடிப் பெற்றோம்' என்ற எண்ணத்தை உருவாக்கிட, தவறான எண்ணத்திலே அங்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



அமைச்சர் அவர்கள், அங்கு கட்டடங்களைக் கட்டுவதற்காகவும் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதனைத் தயவுசெய்து இப்போது அறிவிக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அத்துடன், இப்போது அங்கு இருக்கக்கூடிய கோர்ட் வளாகமே மிகச் சிறந்த அறைகளைக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே, நீதியரசர்கள் எல்லாம் அங்கே செல்ல முடியாது என்று சொன்னதை, தயவுசெய்து மீண்டும் திரும்பப் பெற்று, அங்கிருக்கக்கூடிய கட்டடத்திலேயே அந்த நீதிமன்றக் கிளையை ஆரம்பிப்பதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையைப் பொறுத்த அளவிலே பல நாள் கோரிக்கை என்னவென்றால், அங்கே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் இருக்கின்றார்கள். ஆனால், அங்கே அவர்களுக்கு என்று ஒரு அறைகூட தனிப்பட்ட முறையிலே கிடையாது. இப்போது நான் டிமாண்டிலே பார்த்தேன். தனிப்பட்ட முறையிலே அதற்குத் தொகைகள் ஒதுக்கப்படாத காரணத்தால், தயவு செய்து அதற்காக நீங்கள் தொகையை ஒதுக்கிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். புதிதாக இப்போது ஆரம்பிக்கப்படக்கூடிய தாலுகாக்களிலேயும் நீங்கள் புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அன்புச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. தளபதி அவர்கள்கூட பேரையூரிலே புதிதாக நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மதுரை மாநகரத்தைப் பொறுத்தவரையில், ரெண்ட் கன்ட்ரோல் வழக்குகள் என்று சொல்லக்கூடிய அந்த வழக்குகள் எல்லாம் 6, 7 ஆண்டுகாலமாகத் தேங்கிக் கிடக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வ. வேலுசாமி:** Sir, only one minute.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. வ. வேலுசாமி:** ஆகவே, அதனால் காலதாமதம் ஏற்படக்கூடிய காரணத்தால் அந்த வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. இவற்றை சிவில் வழக்குகள் என்று பாராமல், கிரிமினல் வழக்குகளுக்கு வாய்ப்பாக அமையக்கூடிய காரணத்தால், தாங்கள் எப்படியாவது

மேலும் இரண்டு ரெண்ட் கன்ட்ரோல் கோர்ட்டுகளை ஆரம்பித்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. வேலுசாமி அவர்கள் உரையாற்றுகின்றபோது, 'சீனி என்று எழுதி' என்ற வகையில் ஒரு சொல்லைப் பயன்படுத்தினார். அதை 'சீனி என்று தாளில் எழுதித் தடவிக்கொண்டு' என்று மாற்றிக்கொள்ளவும். அடுத்து, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதித் துறை மற்றும் மீன் வளத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நல்ல ஆட்சி என்றால் 'துஷ்ட நிக்ரஹ தர்ம பரிபாலன' என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "இஷ்ட பரிபாலனம்" என்றும் சொல்வார்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** இரண்டுக்குமே ஒரே பொருள்தான். அந்த அடிப்படையில் ஒரு நல்ல ஆட்சிக்கு அதிகமாக உதவுவது நீதித் துறை. எனவே நீதித் துறைக்கு அதிக அளவில் இன்னும் மானியங்களை, நிதியை ஒதுக்கித் தமிழகத்திலுள்ள நீதித் துறை சிறந்த முறையில் செயல்பட அரசு என்னென்ன செய்ய வேண்டுமோ அவை அத்தனையையும் செய்ய வேண்டும் என்று இந்த வேளையில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், தமிழகத்தை ஆண்ட பல அரசர்கள் நீதி நெறி தவறாமல் ஆண்டு வழிகாட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கேரளாவோடு இணைந்து இருந்தபோது, எந்த அளவுக்கு நீதி நெறி தவறாமல் ஒரு அதிகாரி இருந்தார் என்பதற்கு வேலுத்தம்பி தளவாய் ஒரு மிகப் பெரிய உதாரணம். அந்தக் காலத்தில் காய்க்கக் கூடிய தென்னைக்கு வரி என்ற நிலை ஏற்பட்டபோது, ஒரு அதிகாரி வேலுத்தம்பி தளவாய் வீட்டிலிருந்த காய்க்கக் கூடிய தென்னைகளை



காய்க்காத தென்னைகளோடு சேர்த்துக் கணக்கிட்டு வேலுத்தம்பி தளவாய் அவர்களிடம் பாராட்டைப் பெறலாம் என்று சென்றபோது, அந்த அதிகாரி நியாயத்திற்கு விரோதமாக, நேர்மைக்கு விரோதமாக நடந்து கொண்டார் என்றும், அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானத்தைக் கெடுத்துள்ளார் என்றும் குற்றம் சாட்டப்பட்டு அவருடைய விரலை வெட்டியதாக வரலாறு சொல்கின்றது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்த அளவுக்கு நம்முடைய நாடு நீதி நெறி தவறாமல் விளங்கியிருக்கிறது.

அடுத்து, தமிழகத்தில் பல நீதிமன்றங்களுக்குப் போதிய வசதிகள் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அதேபோன்று நீதிபதிகளை நியமிக்கும்போது, பல ஆண்டுகளாக வழக்கறிஞர்களாகப் பணிபுரிந்து அதிக அனுபவம் வாய்ந்தவர்களையே நீதிபதிகளாக நியமிக்க வேண்டுமென்று வழக்கறிஞர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாக, இப்போது சட்டப் படிப்பு முடித்தவுடனேயே பலர் நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறார்கள் என்ற குறைபாடு வழக்கறிஞர்கள் மத்தியில் இருந்து வருகின்றது. இதை அரசு கவனத்தில் கொண்டு இந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பல நீதிமன்றங்களில் வழக்கறிஞர்களுக்கும், குமாஸ்தாக் களுக்கும் அவர்கள் ஓய்வு எடுக்கத் தனியே அறைகள் இல்லை என்ற குறைபாடும் உள்ளது. எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், இரணியல், தக்கலை மற்றம் குழித்துறை போன்ற இடங்களில் நீதிமன்றங்கள் இருக்கின்றன.

தக்கலையைப் பொறுத்தமட்டில், காவல் நிலையத்திற்கு மிக அருகிலேயே குற்றவியல் நீதிமன்றம் இருக்கிறது. இதனால் காவல் நிலையத்திற்குச் சற்று இடையூறு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவை இரண்டும் அடுத்தடுத்து இருப்பதால், இடவசதிப் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது. எனவே, அங்கே உரிமையியல் நீதிமன்ற வளாகத்திற்குள் போதுமான இடவசதி இருப்பதால், கட்டிடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பும் உள்ளது. மேற்சொன்ன இரண்டு நீதிமன்றங்களும் கேரள அரசோடு இணைந்திருந்த காலத்தில் கட்டப்பட்டவையாகும். அந்த நீதிமன்றங்கள் மழைக் காலங்களில் ஒழுகக்கூடிய நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் பல இடங்களில் சேதம் ஏற்பட்டிருக் கின்றது. எனவே, தக்கலையில் இருக்கக்கூடிய குற்றவியல் நீதிமன்றத்தை மாற்றி உரிமையியல் நீதிமன்ற வளாகத்திற்குள் உள்ள காலியிடத்தில் கட்டிடம் கட்டி அங்கு செயல்படுமாறு மாற்றியமைக்க வேண்டுமென்று

[திரு. சி. வேலாயுதன்] [1997 ஏப்ரல் 11]

கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னது போன்று, தக்கலையிலுள்ள நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் போதுமான ஓய்வு அறைகள் இல்லை. எனவே, ஓய்வு அறைகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரணியல் நீதிமன்றத்திலும் போதுமான இடவசதி இல்லை. அந்த நீதிமன்றம் சமீபத்தில்தான் திறக்கப்பட்டது. அது ஒரு சிறிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றது. அங்கே குற்றவியல் நீதிமன்ற வளாகத்திற்குள் இடவசதி உள்ளது. எனவே, குற்றவியல் நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே உரிமையியல் நீதிமன்றமும் செயல்படும் வகையில் கட்டிடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரணியல் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்காக இருக்கக்கூடிய 'பார்' என்று சொல்லக்கூடிய அறையில் இரண்டு பேர்களுக்கு மேல் அமர முடியாது. மேற்கொண்டு இருவர் வந்துவிட்டால், ஏற்கெனவே உள்ளே இருக்கும் இருவர் வெளியே வந்தால்தான் அடுத்த இருவர் உள்ளே உட்கார முடியும். அந்த அளவுக்கு மிகச் சிறியதாக இருக்கிறது. எனவே, அங்கே ஒரு அறையைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 20, 30 ஆண்டுகள் வழக்கறிஞர்களாகப் பணியாற்றி விட்டு மேற்கொண்டு அவர்களால் பணியாற்ற முடியாத சூழ்நிலை ஏற்படும்போது, அவர்களால் வாழ்க்கையை நடத்துவது என்பது மிகச் சிரமமாக உள்ளது. எனவே, பல ஆண்டுகள் வழக்கறிஞர்களாகப் பணியாற்றிவிட்டு அவர்கள் ஓய்வு பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும்போது, அவர்களுக்கு மட்டுமாவது நிதியுதவி அளித்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில், பல குற்றவாளிகள் மீண்டும் குற்றவாளிகளாக மாறக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. எனவே, அவர்களின் மனநிலையைப் பக்குவப்படுத்தி, நல்லமுறையில் வாழ அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மீனவர்கள் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், மீன்வலைக்கான வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அகில பாரத அளவிலே தேவைப்படுகின்ற வலையிலே 65 சதவீதத்தைத் தமிழகத்திலே உற்பத்தி செய்கிறார்கள். தமிழகத்திலே கன்னியாகுமரி



1997 ஏப்ரல் 11] [திரு. சி. வேலாயுதன்]

மாவட்டத்திலே 65 சதவீதத்திற்கு மேல் மீன்வலை உற்பத்தி செய்கின்ற நிலையிருக்கிறது. இதிலே பணியாற்றக்கூடிய பணியாளர்களில் 60 சதவீதம் மகளிர். ஆகவே இந்த மீன் வலைக்கான வரியை இல்லாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கு வங்கம், ஆந்திரா, கர்நாடகம், கோவா மற்றும் பாண்டிச்சேரி போன்ற பகுதிகளில் மீன்வலைக்கு வரி கிடையாது. அகில பாரத அளவில் மீன்வலை பின்னி விற்கக்கூடிய முறை எங்குமே கிடையாது. அதற்குத் தேவையான பிளாஸ்டிக் கயிறு, பிளாஸ்டிக் நூல், பிளாஸ்டிக் மிதவை இவைகளையெல்லாம் தனித்தனியாக விலைக்கு வாங்கி வலை பின்னுகிறார்கள். அப்படி இருக்கும்போது மீன்வலைக்கு என்று வரி தேவையில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதுவரை மீன் வலைக்கு வரி இருந்தது கிடையாது. தனித்தனியாக பிளாஸ்டிக் பொருள்களை வாங்கி மீன் வலையைப் பின்னுவதால், இதற்கான வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிளாஸ்டிக் பொருட்களை அமைச்சரிடத்தில் நேரடியாகக் காட்டி, விளக்குகிறேன். சென்னையிலுள்ள அரசு மீன் நிறுவனம்கூட வரி செலுத்தியதாக வரலாறு கிடையாது. எனவே இந்த வரியை விலக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையை முடித்துக் கொள்கிறேன். வாழிய செந்தமிழ், வாழிய நற்றமிழ், வாழிய பாரத மணித்திருநாடு, வந்தே மாதரம், வந்தே மாதரம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வேலாயுதன் அவர்கள் பேசுகிறபோது, அரசு மீன் வலைக்கு இருந்த 11 சதவீத வரியை 4 சதவீதமாகக் குறைத்ததாகத் தெரிவித்தார்கள். ஆனால் தமிழகத்தில் இதுநாள் வரை மீன் வலைக்கு என்று விற்பனை வரி ஒரு பைசாகூட வசூல் செய்யப்படவில்லை என்றுதான் எல்லா மீனவர்களும் தெரிவிக்கிறார்கள். பொதுவாக மீனவர்கள் எல்லாம் வைத்திருப்பது இதுபோன்ற வலைதான். (ஒரு வலையைக் காண்பித்தார்.) இதை 'மால்' என்று சொல்வார்கள். இந்த 'மாலை' வாங்கிக்கொண்டு, 'புளோட்' போன்றவைகளையெல்லாம் வைத்து, அவர்களாகவே இணைத்து மீன்வலையை செய்துகொள்கிறார்கள். இதுவரை அரசு நடத்துகிற நிறுவனம் ஏதாவது வரி செலுத்தியிருக்கிறதா? அல்லது வரிவிலக்கு ஏதாவது அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 11

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரி இல்லை என்றுதான் சொன்னேன். ஏற்கெனவே இருந்த 11 சதவீத வரியை 4 சதவீதமாகக் குறைத்திருப்பதாகச் சொல்கிறீர்கள். இதுவரை அதற்கு வரியே கிடையாது. மற்ற மாநிலங்களிலும் கிடையாது இதற்கு முன்னால் இருந்ததைப் போன்று செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THIRU C. GNANASEKARAN:** Already the Government have got Tamil Nadu Fisheries Development Corporation. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையின்போது விளக்கம் அளிக்கலாம். இப்போது திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்திலே நீதி, சிறைச்சாலை மற்றும் மீன் வளத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் கூறிக்கொண்டு, உரையைத் துவங்குகிறேன்.

ஒரு நாட்டில அரசு நல்லமுறையில் செயல்பட வேண்டுமென்றால் மூன்று தூண்களான நீதி, நிர்வாகம் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட துறைகள் செம்மையாகச் செயல்பட்டால்தான், நாட்டிற்கு நல்லாட்சியைத் தரமுடியும். இதற்கேற்றவாறு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல நிதிநிலை அறிக்கையைத் தந்து, நிதித் துறையை செம்மைப்படுத்தியுள்ளார்கள்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)**

நிர்வாகத்தினைத் தன் கையில் வைத்துக்கொண்டு நல்ல சீர்திருத்தங்களைச் செய்து, நிர்வாகம் சீராக, செம்மையாக நடைபெற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, நீதித் துறையும் சிறப்பாக, அச்சுறுத்தலின்றி, பயமின்றி, தன்னிச்சையாகச் செயல்பட நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1997 ஏப்ரல் 11] [திரு. பா. துரைசாமி] பிற்பகல் 12-05

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே, உயர்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள், சார்பு நீதிமன்றங்கள், வட்ட நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் என்று அடுக்குகளாக நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அந்த நீதிமன்றங்களிலே உள்ளவர்கள் எல்லாம் கடந்த ஆட்சியாளர்களின் கையகப்பட்டு, அல்லோலகல்லோலப்பட்டார்கள். இன்றைக்கு அந்த நீதிமன்றங்களெல்லாம் தன்னிச்சையாகச் செயல்பட்டு வருகின்றன. தன்னிச்சையாக அந்த நீதிமன்றங்கள் இயங்க நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு 5 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் புதிய மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்களும், சார்நிலை நீதிமன்றங்களும் உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, மதுரையிலே உயர்நீதிமன்றக் கிளையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்மாவட்டங்களுக்கெல்லாம் ஒரு வரப் பிரசாதமாக விளங்குபவர் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள். எனவே, மதுரையிலே அந்த நீதிமன்றத்தினை அமைத்துத் தர நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அதற்கு, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும் உறுதுணையாக இருந்து, அந்த நீதிமன்றத்தினை அங்கே அமைத்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் மாவட்ட நீதிமன்றங்களிலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் ஏராளமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அவ்வழக்குகளை முடிப்பதற்கு இந்த அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமாய், இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, மாவட்ட நீதிமன்றங்களிலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் தேங்கிக் கிடக்கின்ற மோட்டார் வாகன விபத்து சம்பந்தமாக வழக்குகளை உடனடியாக முடிவிற்குக் கொண்டு வந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையினை உடனடியாக வழங்கிட ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, நீதிமன்றங்களிலே தேங்கிக் கிடக்கின்ற வாகன விபத்து சம்பந்தமான வழக்குகளும், இன்னும் ஏராளமான வழக்குகளும் இலவச சட்ட உதவி மூலம் தீர்க்கப்படுகின்றன. இருந்தாலும், இன்றைக்கு நீங்கள் பார்த்தீர்களானால், மோட்டார் வாகன விபத்து குறித்த வழக்குகளானாலும் சரி, மற்ற வழக்குகளானாலும் சரி, அவ்வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படுவதில்லை. தன்னுடைய கணவனையோ, தங்களுடைய உறவினரையோ இழந்து தவிக்கின்ற அந்த மனுதாரர்கள், அந்தப் பெற்றோர்கள், வழக்குகள் முடிக்கப்பட்டு, அவர்கள் நிவாரணத் தொகை பெறுவதற்கு நீண்ட காலம் ஆகின்றது. முன்பெல்லாம், இலவச சட்ட உதவி அளிக்கப்படுவதுடன், வழக்குகளிலே விரைவில் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை உடனடியாகக் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படும். ஆனால், இப்பொழுது அந்த இழப்பீட்டுத் தொகை, வங்கிகளிலே வைப்பீட்டுத் தொகையாகச் செலுத்தி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பாதிக்கப் பட்டவர்கள் தங்களுடைய கணவரையோ, பிள்ளைகளையோ இழந்துவிட்டு நிவாரணத்திற்காக வருகிறார்கள். இதனால், அவர்கள் மீண்டும் நீதிமன்றங்களிலே ஐ.ஏ. பெட்டிஷன் தாக்கல் செய்கின்றார்கள். இந்த வைப்பீட்டுத் தொகை வங்கிகளுக்குத்தான் இலாபம் ஈட்டித் தருகின்றதே தவிர, பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அந்த நிதி உடனடியாகக் கிடைப்பதில்லை. எனவே, அந்த இழப்பீட்டுத் தொகை உடனடியாகக் கிடைப்பதற்கு ஆவன செய்ய நான் சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, ஆதிதிராவிடர்களுக்கு வழங்குவதற்கான நிலம் கையகப்படுத்துவது குறித்த வழக்குகள் ஏராளமாக நீதிமன்றங்களிலே தாக்கல் செய்யப்படுகின்றன. அந்த வழக்குகளெல்லாம், 10 ஆண்டு காலமாக, 15 ஆண்டு காலமாகத் தேங்கிக் கிடக்கின்றன. இந்த நிலையை மாற்றுவதற்கு எப்படி இலவச சட்ட உதவிகள் மூலமாகவும், 'லோக் அதாலத்' என்ற மக்கள் நீதிமன்றத்தின் மூலமாகவும் வழக்குகள் தீர்க்கப்படுகின்றதோ அதேபோன்று ஆதிதிராவிடர்களுக்கு வழங்குகின்ற நிலத்தினைக் கையகப்படுத்துவது தொடர்பான வழக்குகளையும் 'லோக் அதாலத்' என்ற மக்கள் மன்றத்தின் மூலம் தீர்ப்பதற்கு, சமரசத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, மாவட்டந்தோறும் உரிமையியல் நீதிமன்றங்கள், தொழிலாளர் நீதிமன்றங்கள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்க





வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் மிகவும் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். அதேபோன்று மாவட்ட நீதிமன்ற வளாகங்களில் வழக்கறிஞர்களுக்குப் போதிய கட்டிட வசதி இல்லை. அவர்களுக்குக் கழிப்பிட வசதி இல்லை. வழக்கறிஞர்கள் சங்கக் கட்டிடங்கள் இல்லை. இக் குறைபாடுகள் எல்லாம் களையப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், அருமை அண்ணன் அன்பில் பொய்யாமொழிகூட, கடந்த ஆண்டுகளிலே பேசும்போது திருச்சிராப்பள்ளியிலே நீதிமன்றத்தில் ஒரு சேம்பர் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இதுபோன்று, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, வழக்கறிஞர்களிடத்தில் சேமநலநிதிக்காக ரூ.5 வசூல் செய்யப்படுகின்றது. அப்படி ரூ.5 வசூல் செய்யப்பட்டாலும், அவர்கள் ஓய்வு பெறும்போது, அல்லது இறக்க நேரிட்டாலோ அவர்களுக்கு ரூ.5 இலட்சம் வழங்க வேண்டும் என்றும், அப்பொழுதுதான், அவர்களது குடும்பங்களுக்கு உதவியாக இருக்கும் என்றும நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, அமர்வு நீதிமன்றங்களிலும், சார்நிலை நீதிமன்றங்களிலும், குற்றவியல் நீதிமன்றங்களிலும் பெஞ்ச் கிளார்க்குகள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவியாக ஒரு பெஞ்ச் கிளார்க்கை அமர்த்தினால்தான். அந்த வழக்குகள் துரிதமாக நடைபெறும். எனவே. இதை உயர்நீதிமன்றத்திலே கோரி, அந்த உதவி பெஞ்ச் கிளார்க்குகளை உடனடியாக நியமிக்க வேண்டுமாய் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மேலும், என்னுடைய பெரம்பலூர் மாவட்டத்திற்கு உடனே மாவட்ட நீதிமன்றமும் . மற்றும் அதற்குக் கட்டிடம் கட்டித் தரவும், சார்பு நீதிமன்றம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாயும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், புதிதாகத் தொடங்கப்பட்ட என்னுடைய வரகூர் தொகுதி, குன்னம் தாலுகாவுக்கு ஒரு குற்றவியல் நீதிமன்றத்தையும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தையும் உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சிறைத் துறையைப் பொறுத்தவரையில மகளிர் காப்பகத்தை சீர்திருத்த வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகள் காப்பகத்தையும், இளைஞர்களுக்கு அங்கே தொழிற் கூடத்தையும் சிறைத் துறையில ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலையிலே, ஜெயலலிதாவுக்கு ஒரு நீதி, அதாவது முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஒரு நீதி, சாதாரண மக்களுக்கு ஒரு நீதி என்று இல்லாமல், குற்றவாளிகளாகச் சொல்லப்பட்ட அனைவருக்கும் ஒரே நீதி என்று அறிவிக்கப்பட வேண்டும். உதாரணமாகச் சொல்லப்போனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அன்றைய எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, சிறைச்சாலைக்குச் சென்றிருந்தபோது, அவர்களுக்குக் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டு, அங்கே அவர்களுக்கு சிறைத் துறையினுடைய உடையும் வழங்கப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு நிலையை அந்த அரசாங்கம் ஏற்படுத்தியது. ஆனால், இன்றைக்குப் பார்த்தால், பெருங்குற்றங்களைச் செய்து, நாட்டுக்கே ஒரு பெருங் குற்றம் செய்த, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும், அவருடைய தோழியான சசிகலாவுக்கும், அதுபோன்ற தண்டனை கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இங்கே, மீனளத் துறையைப் பற்றிப் பேசும்போது...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. பா. துரைசாமி:** மீனளத் துறையைப் பொறுத்தவரை, கடற்கரைப் பகுதிகளுக்கு மட்டும்தான், மீனளத் துறை மூலமாக ஏகப்பட்ட நன்மைகள் கிடைக்கின்றன. கிராமங்களிலோ, சிறுசிறு மீனவர்களுக்கான அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில்லை. உதாரணமாகச் சொல்லப்போனால், உள்நாட்டு மீனவர்களுக்குப் பல நல்ல சலுகைகளை வழங்க வேண்டுமாய் நம்முடைய மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்நாட்டு மீனவர்களுக்கு, அரசுத் திட்டத்தின் மூலமாக, வீடுகள் கட்டி வழங்க வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்வதோடு உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டி வழங்கும் திட்டம், இத்துறையில் இல்லை



என்பதால், இதை அரசு உடனே பரிந்துரைக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏரி, குளம், ஆறு, குட்டை ஆகிய இடங்களில், மீன் வளர்க்கும் உரிமையையும், மீன் பிடிக்கும் உரிமையையும் உள்நாட்டு மீனவர்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** நீங்கள் பேசியது போதும்; அடுத்து, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், சில கோரிக்கைகளையும், கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டிலே, சிறை நடைமுறைச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு, சுமார் 102 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆகவே, இந்த நடைமுறைச் சட்டத்தை மாற்றுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கைதிகளைச் சீர்திருத்தவும், நோயுற்றவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கவும், குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடாமல் தடுக்க, மாற்று வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான வகையிலேயும் சட்டம் இயற்றப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை மத்திய அரசாங்கம் முடிவு செய்து, மாநிலங்களிலுள்ள சட்ட நிபுணர்களையெல்லாம் ஒரு குழுவாக அமைத்து, அதன் மூலமாகக் கருத்துக்களை அறிந்து, அதற்கான சட்டத்தை, புதிய சட்டத்தை இயற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கருத்தை, தேசிய மனிதவள உரிமைக் கமிஷன் தலைவர் திரு. எம்.என். வெங்கடாசலய்யா அவர்களும், நம்முடைய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா அவர்களுக்குக் கடிதத்தின் மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

அதேபோல, சிறைத் துறைச் சட்டங்களைச் சீர்திருத்த முயற்சி செய்வதற்கான வகையிலே, ஆலோசனைகளைக் கூறுவதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதி என்.டி. முல்லா கமிஷனும், 1980-83-ஆம் ஆண்டுகளிலே இதே பரிந்துரைகளை எடுத்துக் கூறியிருக்கிறது. ஆகவே,

[திரு. வை. சிவபுண்ணியம்] [1997 ஏப்ரல் 11

அனைத்து மாநிலங்களும் இதைச் சட்டமாக இயற்ற வேண்டுமென்ற என்னுடைய கருத்தை வலியுறுத்துவதோடு, நமது தமிழக சட்டமன்றத்திலேயும், இப்போது புதிய சட்டம் அதற்காக உருவாக்க வேண்டுமென்றும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மாநிலம் முழுவதிலேயும் இயற்றப்பட்ட சட்டத்தை நாடாளுமன்றத்திலே சட்டமாக இயற்றி, ஒப்புதல் பெற்று, அதிலே மாறுதல் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, புதிய சட்டங்களை அமல்படுத்துகிறபோது, வழிமுறைகளை வேண்டுமானால், அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்றாற்போல அரசே வகுத்துக்கொள்ளலாம்; அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மக்கள் தொகை அதிகரிப்பு, வறுமை அதிகரிப்பு, இதனால் குற்றச் செயல்களும் அதிகரிக்கிறது. அதுபோல, தண்டனை பெற்றவர்கள், மீண்டும் மீண்டும் சிறைச்சாலைக்கு வருகிற நிகழ்ச்சி நடைபெறுகிறது. அவர்களைக் கேட்கிறபோது, பிழைப்புக்கு வேறு வழி இல்லை என்ற காரணங்களும் சொல்லப்படுகிறது.

பிற்பகல் 12-15

ஆகவே இப்படிப்பட்ட குற்றவாளிகள் மாற்றுத் தொழில் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வதற்கான வகையிலே சிறைச்சாலையிலேயே அவர்களுக்கு அப்படிப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும். வழக்குகள் விசாரணையிலே காலதாமதம் செய்யப்படுவதாலே விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கையும் சிறைச்சாலையிலே அதிகமாகி வருகிறது. ஆகவே இவற்றைத் தவிர்ப்பதற்கான வகையிலே விசாரணையில் விரைவான முறையிலே நடவடிக்கை எடுத்து நீதிமன்றங்களில் அந்த வழக்குகளை எல்லாம் பைசல் செய்வதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உலகம் தழுவிய முறையில், குற்றம் புரிந்தவர்கள்மீது அன்பு செலுத்துகிற முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்படுகிறது. இப்போதுகூட நம்முடைய தமிழகத்திலே விசேட சலுகையாக ஆயுள் கைதிகள் சலுகையின் அடிப்படையிலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுபோல மேலும் விடுதலை செய்யப்பட வேண்டிய ஆயுள் கைதிகளின் எண்ணிக்கை சுமார் 200-க்கு உட்பட்டுதான் இருக்கும் என்று கருதுகிறேன். இனிமேல் வரக்கூடிய சுதந்திர தின பொன்விழா ஆண்டிலே அரசு சலுகையாக அறிவித்து அவர்களை



1997 ஏப்ரல் 11] [திரு. வை. சிவபுண்ணியம்]

விடுதலை செய்வதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும். போவை வைவா விழா, நேதாஜி நூற்றாண்டு விழா இப்படிப்பட்ட தினங்களிலே இந்த ஆயுள் தண்டனைக் கைதிகளை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும்.

அதிலும் குறிப்பாக அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலே ஆயுள் கைதிகளாக 8 ஆண்டுகளாக இருப்பவர்களை எல்லாம் விடுதலை செய்து அந்த அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நடைமுறையை நம்முடைய தமிழகத்திலேயும் கொண்டு வர வேண்டும். 14 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று ஆயுள் கைதிகள் சிறைச்சாலையில் மிகவும் கஷ்ட நிலைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். அப்படித் தண்டனை பெற்றவர்கள் மனம் திருந்தி நல்வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்கான வகையிலே ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளாக இருந்தால் 8 ஆண்டுகளில் அவர்கள் விடுதலை செய்யப்படலாம் என்ற கேரள அரசாங்கத்தினுடைய அந்த நடவடிக்கையை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு தமிழகத்திலே அப்படி 8 ஆண்டுகளாக ஆயுள் தண்டனைபெற்ற கைதிகளாக இருப்பவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலையில் இருக்கும் கைதிகளைச் சந்தித்துக் குறைகளைக் கேட்பதற்கான முயற்சியிலே - அந்தந்த மாவட்டங்களில் அல்ல - சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு அமைத்து சிறைச்சாலைக் கைதிகளிடத்தில் இருக்கும் குறைபாடுகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சூழ்நிலையை அரசு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளில் அரசு கொடுக்கும் சலுகைகளில் பலவிதமான ஊழல் முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உணவிலே, மற்றவிதமானப் பொருட்களிலே ஊழல்கள் நடக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலவேறு சந்தர்ப்பங்களில் சொல்கிறபோது அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நம்முடைய ஆட்சியிலே களைந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள் என்று சொன்னால்கூட நம்முடைய கண்ணுக்குத் தெரியாத வகையிலே அந்த நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளை அவர்கள் செய்வார்கள். பழைய புள்ளிகள் அங்கே இருக்கின்றன. ஆகவே அவர்களைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சிறைச்சாலையில் சுத்தமில்லாத நிலைமை இருக்கிற காரணத்தினால் பல்வேறு தொல்லைகளுக்கு கைதிகள் ஆளாக்கப்படுகிற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட ஆயுள் கைதிகள், நீண்ட காலமாக இருக்கக்கூடியவர்களுக்கு கொசுவலை கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை கைதிகளின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சிறைச்சாலையில் நீண்டகாலமாக கைதிகளாக இருக்கக்கூடியவர்களுக்கு கொசுவலை வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சிறை வார்டன்களுக்கு 8 மணி நேர வேலையை உத்திரவாதப்படுத்த வேண்டும். அவர்கள் 18 மணி நேரம் வேலை பார்க்கக்கூடிய சூழ்நிலை...(குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** He is not yielding. திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆகவே அவர்களுக்கு 8 மணி நேர வேலையை உத்திரவாதப்படுத்தத் தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பல்வேறு முறை நான் கோரிக்கையாக வைத்திருப்பது மன்னார்குடி கிளைச் சிறைச்சாலை, புதுக்கோட்டை 'Borstal' நிர்வாகத்தில் இயங்கக்கூடியவர்கள் மூலமாக மூடப்பட்டிருக்கிறது. அதனாலே 100-க்கு மேற்பட்ட கி.மீட்டர் தூரம் சென்று அதாவது திருச்சி வரை சென்று கைதிகளைப் பார்க்கச் செல்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகிற காரணத்தினாலே மன்னார்குடி சிறைச்சாலையை திறக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நீதி நிருவாகத்தைப் பொறுத்தவரையிலே ஒரு கருத்தை நான் வலியுறுத்திச் சொல்வது நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறபடி மதுரை உயர்நீதிமன்றக் கிளை அமைப்பதிலே இடப் பிரச்சினையை மட்டும் காரணமாகக் கொள்ளாமல் உடனடியாக அதைத் தவிர்த்து நம்முடைய மாநில அரசு மதுரையிலே இருக்கிற நீதிமன்ற வளாகத்திலேயே உயர்நீதிமன்றக் கிளையை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மாநிலம் முழுவதும் காலியாக இருககக்கூடிய நீதிபதி...(மணியடிக்கப்பெற்றது) எங்களுடைய கட்சி சார்பில் நான் மட்டும் தான் பேசுகிறேன். நீங்கள் என்னை



அதிக நேரம் பேச அனுமதியுங்கள். ஆகவே காலியாக உள்ள இடங்களைப் பூர்த்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மன்னார்குடியில் சப்-கோர்ட் அமைக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டபோது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே நல்ல செய்தியைச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிற பெயர்ப் பட்டியலில் மன்னார்குடி சப்-கோர்ட் பெயர் வரவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மன்னார்குடி கோட்ட வருவாய் நகரத்தை உள்ளடக்கிய மிகப் பழமையான நகரம். அங்கே எல்லாவிதமான வாய்ப்புகளும் இருக்கிற காரணத்தினாலே சப்-கோர்ட் இந்த நிதியாண்டில் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மீன் வளத் துறையிலே ஒருசில கருத்துக்களைச் சொல்லி நான் உரையை முடித்துக்கொள்கிறேன். இன்றையதினம் மீன் வளத் துறையின் சார்பில் மதிய உணவோடு மீன் வழங்குவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இல்லை என்று நினைக்கிறேன். மீன் இல்லையென்றாலும் கருவாடு வழங்கப்பட்டிருக்கிறது. மிக்க மகிழ்ச்சி. இருந்தாலும் நேற்றையதினம் பால் வழங்கு துறை சார்பிலே தயிர் சாதமும் வழங்கப்பட்டது. இன்றைக்கு மீன்வளத் துறையின் சார்பிலே மீனோடு மதிய உணவு வழங்கியிருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். இருந்தாலும் கருவாடாவது வழங்கியதற்கு நன்றி. மீனவர் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், குறிப்பாக கச்சத்தீவு பிரச்சினை ஒரு தொடர் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இதிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியான முடிவை சொல்லியிருக்கிறார்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. மீனவர்கள் கச்சத்தீவிலே ஓய்வு எடுப்பதற்கும், வலைகளை உலர்த்துவதற்கும், அங்கே உள்ள அந்தோணியார் கோயில் திருவிழாவிலே பங்குகொள்வதற்கும் உண்டான உரிமையைப் பெற்றுத் தரவேண்டும். மத்திய அரசின் மூலமாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது விரைவாக மேற்கொள்ளப்படவேண்டும்.

பிற்பகல் 12-20

அடுத்து, இறால் பண்ணகளை அகற்ற வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அந்தப் பணி எந்த அளவில் இருக்கிறது

என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. அவற்றை உடனடியாக அகற்றுவதற்கான முயற்சிகளை எடுத்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும். அவற்றைத் தடுக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது வழக்குகள் போட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை வாபஸ் பெறுவதற்கு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீன் வளத் துறையின் மூலமாக வீடு கட்டித் தருவதற்கான முயற்சிகள் சொல்லப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். 1997-98-ஆம் ஆண்டில் 4 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று பட்ஜெட் அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்த்தால் அந்த வீடுகள் கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வீடு கட்டுவதற்கு 32 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று சொல்லும்போது 13 கோடி ரூபாய் தேவைப்படும்பட்சத்தில், கொள்கை விளக்கக் குறிப்பில் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது குறைவாக இருக்கிறது. எனவே முழு நிதியையும் பெற்று வீடுகள் கட்டுவதற்கு ஆவன செய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஊழியர்களைப் பற்றி ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் தமிழ்நாட்டில் 13 இயங்குகின்றன. அவை சிறப்பான முறையிலே இயங்குகின்றன. அதிலே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. நடப்பு நிதியாண்டில் சம்பள செலவினங்களிலே சில பிரச்சினைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகவை சிறப்பான முறையில் மீன் வளர்ப்போர்களுக்கு உதவிகள் செய்கிறது. நாம் அதை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அடுத்து, தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம் என்ற ஒரு அமைப்பு 3 வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே மாநில மீன் துறை பணியாளர்களும், வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக தேர்வு செய்யப்பட்ட தற்காலிகப் பணியாளர்களும் பணியாற்றுவதாகச் சொல்லப்படுகிறது. அங்கே தற்காலிகப் பணியாளர்களுக்கும் நிரந்தரப் பணியாளர்களுக்கும் இடையே சம்பள வித்தியாசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலும் 15 பேர்களுக்குத்தான் சம ஊதியம் வழங்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு சம ஊதியம் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடல் மீன் புள்ளிவிவர சேகரிப்பாளர்கள் 24 பேர், 25 ஆண்டுகளாக பகுதி நேரப் பணியாளர்களாக பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு வயதாகிவிட்டது. அவர்களால் இனி பணியாற்ற முடியாது. எனவே, அவர்களை முழுநேர ஊழியர்களாக அறிவித்து காலமுறை சம்பளத்தையும் அவர்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இங்கே உரையாற்றுவதற்கான வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், அம்பாசமுத்திரம் வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, நீதித் துறையில் பல நல்ல திட்டங்களை அறிவித்து, ஜனநாயகத்தினுடைய முக்கிய தூணாக விளங்குகின்ற நீதித் துறையைப் புனரமைப்பு செய்ததற்காகவும், நெல்லை மாவட்ட மக்களின் தேவையை அறிந்து அங்கே சட்டக் கல்லூரியைப் தந்த தமிழக முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, எனது உரையை இங்கே துவங்குகிறேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரையில், மாவட்ட நீதிபதியாக இருப்பவர், இன்றையதினம் சிவில், கிரிமினல் என்ற இரண்டு வகையான வழக்குகளையும் ஒரே நீதிபதியாக இருந்து நடத்துகிறார். 10 ஆண்டுகள், 8 ஆண்டுகள், 7 ஆண்டுகள் என்று சொல்லக்கூடிய அளவில் கிரிமினல் வழக்குகள் ஆனாலும் சரி, சிவில் வழக்குகள் ஆனாலும் சரி, அப்பீல் வழக்குகள் பெண்டிங்கில் இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தால் வழக்குகள் அதிகமாக தேங்கிப்போய், நீதிமன்றங்களில் வழக்குகளுக்காக வரக்கூடிய 'லிட்டிகன்ட்' பப்ளிக் அதிகமாக வந்து செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதை நீக்குவதற்கான வேண்டுகோளாக நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதற்கு என்று ஒரு மாவட்ட நீதிபதியைத் தனியாகவும், சிவில் வழக்குகளை விசாரிப்பதற்கு என்று ஒரு மாவட்ட நீதிபதியைத் தனியாகவும், ஆக இரண்டு மாவட்ட நீதிபதிகளைக் கொண்டு கிரிமினல் வழக்குகளையும், சிவில் வழக்குகளையும் விசாரிக்கும் வகையில் நாம் ஏற்பாடு செய்தால் நிச்சயமாக கிரிமினல் வழக்குகளும், சிவில் வழக்குகளும் பெண்டிங் இல்லாமல் விரைவில் முடிவடைந்து, அவைகளுக்கு ஒரு முடிவு ஏற்படும் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



26829
600 008

அதேபோன்று மாவட்ட பிரின்சிபல் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் என்றும், அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் என்றும், சப்-ஜட்ஜ் என்றும் நீதிபதிகள் நீதிமன்றத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பிரின்சிபல் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாக இருக்கக்கூடியவர் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஹெட்டாக இருக்கின்ற காரணத்தால் அவருக்கு கார் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாக இருக்கக்கூடியவர்களுக்கும், சப்-ஜட்ஜாக இருக்கக்கூடியவர்களுக்கும் கார் வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையில் இன்றையதினம் இருக்கிறது. தாலுகா அளவில் இருக்கக்கூடிய தாசில்தார்களுக்கே வாகன வசதி இன்றையதினம் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் நீதித் துறையில், நீதியைச் செலுத்துகின்ற அந்த நீதிபதிகளுக்கு வாகன வசதி செய்துகொடுக்கப்பட வேண்டியது முதல் கடமை என்ற உணர்வோடு அவர்களுக்கு வாகன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதை நான் எதற்காகக் கூறுகிறேன் என்றால், நீதிமன்றத்திற்கு அருகிலேயே அவர்களுடைய குடியிருப்புகள் இருக்குமானால் அவர்களுக்கு அந்த வாகன வசதி கூடத் தேவையில்லை. ஆனால், நீதிமன்றத்திலிருந்து கிட்டத்தட்ட நான்கு கிலோ மீட்டர், ஐந்து கிலோ மீட்டர் தள்ளி அவர்களுடைய குடியிருப்புகள் அமையப்பெற்றிருக்கின்றன. நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரிக்கக்கூடிய அந்த நீதிபதிகள் பின்பு அவர்களுடைய குடியிருப்பிற்குச் செல்லும் நேரத்தில், எதிரிகளோடு சேர்ந்து உட்கார்ந்து பஸ்சில் ஒன்றாகச் செல்லக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுக்கு எவ்வளவு தூரத்திற்கு ஆபத்து இருக்கின்றது என்பதனையும் நாம் பார்க்க வேண்டும். அந்த மாதிரி நிலையைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்கு, ஒன்று நீதிமன்றத்திற்கு அருகிலேயே குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும். அல்லது நீதிமன்றத்திலிருந்து அவர்களது இல்லங்களுக்குச் செல்வதற்கு உள்ள அந்த தூரத்திற்கு அவர்களுக்கு வாகன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதை நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மாவட்ட அளவில் இருக்கக்கூடிய நீதிமன்றங்களில் இன்றையதினம் வழக்குரைஞர்களுக்கு என்று தனியாக ஓய்வு அறையோ அல்லது அவர்களுக்கு நூலக வசதிகளோ செய்து கொடுக்கப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. நீதித் துறையில் வழக்குரைஞர்களுடைய சங்கமும் ஒரு அங்கம் என்ற நிலையில் அவர்களுக்கு ஓய்வு அறை, அதேபோல நூலக அறை போன்றவை களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்கள் சிறப்பாகப் பணியாற்றினால்தான்



நிச்சயமாக வழக்குகள் விரைவிலே தீர்க்கப்படும் சூழ்நிலை உருவாகும். ஆகவே, அவர்களுக்கு நூலகக் கட்டிடமும் ஓய்வு அறையும், தமிழக அரசு கட்டித் தரவேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது)

இப்போது இருக்கின்ற காலக்கட்டதில் குற்ற வழக்குகளைப் பொறுத்தமட்டில் 10 ஆண்டுகள் வரை சிறு வழக்குகள் கூட நிலுவையில் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. சம்மன்ஸ் கேஸ்களைப் பொறுத்தவரையில் 6 மாதத்திற்குள் புலன் விசாரணையை முடிவு செய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாவிட்டால் அந்த வழக்குகளினுடைய புலன் விசாரணையை, மனு தாக்கல் செய்தால், நிறுத்தப்பட வேண்டுமென்று சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், வாரண்ட் கேஸ்களாக இருக்கக்கூடிய வழக்குகளில் எவ்வளவு காலத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டுமென்ற நிலை சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. சில வழக்குகளில் ஐந்து ஆண்டுகள், ஆறு ஆண்டுகள் கழித்தாலும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாத நிலையில் அந்த வழக்கில் இருக்கக்கூடிய எதிரிகள் நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கின்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதற்காக நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வதெல்லாம், வாரன்ட் வழக்குகளிலும் இவ்வளவு காலத்திற்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும், அப்படி தாக்கல் செய்யாவிட்டால் அந்த எதிரிகளுக்கு அரசுப் படி கொடுக்க வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். அந்தப் படியைக் கொடுப்பதும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கொடுக்க வேண்டும், அதற்குப் பின்பும் காவல்துறையால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாத நிலையில் அந்த வழக்கிலிருந்து 'அக்யூஸ்ட்' ஆக இருக்கக்கூடிய எதிரிகளை விடுவிக்கவேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல இன்றையதினம் சாட்சிகளுக்கு படி கொடுப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. அதே போன்று எதிரிகளுக்கும் படி கொடுக்க சட்டத்தில் இடம் இருக்கின்றது. சாட்சிகள் வராத நிலையில் வழக்குகள் அதிக காலம் நீதிமன்றத்தில் நிலுவையாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால் சாட்சிகள் வராத நிலையில் எதிரிகள் நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கின்றார்கள். சாட்சி வந்த தினத்தன்று சாட்சிக்கு படி கொடுப்பதற்கு நீதிபதிகள் உத்தரவிடு கிறார்கள். ஆனால், ஒழுங்காக நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக் கின்ற எதிரிகளுக்கு படி கொடுப்பதில்லை. ஆனால் சட்டத்தில் அவர்களுக்கும் படி கொடுக்கலாம் என்ற நிலை இருக்கிறது. ஆனால், அதை அமல்படுத்துவதில்லை. ஆகவே.

சாட்சிகள் ஆஜராகாத வழக்குகளில், ஆஜர் ஆகிக் கொண்டிருக்கின்ற எதிரிகளுக்கு சாட்சி ஆஜராகவில்லை என்ற காரணத்தினால் கொடுக்கப்படாமல் இருக்கும் படியைக் கொடுப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அதேபோல, General Law Awareness. அதாவது, பள்ளிக் கல்வியிலேயே மாணவர்கள் மத்தியில் சட்டம் பற்றிய அறிவு வளரக் கூடிய வகையில் அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கக்கூடிய நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், பொதுச் சுகாதாரம், பொது அறிவியல் போன்ற பாடங்களைச் சொல்லித் தருகின்றோம். அதுமாதிரி, எது தவறு, எது சரி. என்று மாணவப் பருவத்திலேயே அவர்கள் உணரக்கூடிய வகையிலே சட்டக் கல்வியையும் ஒரு சப்ஜெக்ட்டாக வைக்கவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டக் கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில், 5 ஆண்டு காலம், 3 ஆண்டு காலம் என்ற அளவில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்படி ஐந்தாண்டு, மூன்றாண்டு காலம் சட்டக் கல்வி கற்றுக்கொடுக்கப்படுகின்ற நேரத்தில், அங்கு படிக்கின்றவர்கள் காலையில ஒரு மணி நேரமோ, அல்லது மாலையில் ஒரு மணி நேரமோதான் கல்லூரிக்குச் செல்லுகின்றார்கள். மற்ற நேரம் அனைத்தும் வீணாகிறது. எனவே, கல்லூரியில் படிக்கின்ற காலத்தைக் குறைத்து, அவர்கள் பட்டம் பெற்ற பின்பு அதிகமாக Practical knowledge அதாவது, வழக்கறிஞர்களுடன் நீதிமன்றங்களுக்குச் சென்று அனுபவம் பெறுகின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவே. அந்த ஐந்தாண்டுக் காலம் என்பதைக் குறைத்து, மூன்று ஆண்டுகளாகவோ, அல்லது இரண்டு ஆண்டுகளாகவோ குறைத்து, அதன் பின்பு இருக்கக்கூடிய காலத்தை Practical knowledge என்று சொல்லக்கூடிய வகையில் நீதிமன்றங்களிலே சென்று அவர்கள் அனுபவம் பெறுகின்ற வகையில் நிலைமையினை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

திருநெல்வேலி இப்போது கார்ப்பரேஷன் ஆகிவிட்டது அங்கே மொபைல் கோர்ட் இல்லை. எனவே, மொபைல் கோர்ட்டை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Offences Against Human Body என்று இருக்கக்கூடிய



அந்தச் சட்டத்தின் கீழ் வரக்கூடிய வழக்குகளை—ஐ.பி.சி. வழக்குகளை—மாவட்ட நீதிமன்றமோ அல்லது அதன் அந்தஸ்தில் உள்ள நீதிமன்றமோ விசாரிக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்பதோடு. மற்ற பொருளாதாரம் சம்பந்தப்பட்ட வழக்குகள், ஆதிதிராவிடர்களுக்கு விரோதமாகச் செயல்படுகின்ற வழக்குகள், விஷச் சாராய வழக்குகள், இப்படிப்பட்ட வழக்குகளை ஒரு நீதிபதி தனியாக விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே நீங்கள் பேசியது போதும். அடுத்து, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம். மீன் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல், சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்றை மதுரையில் துவக்க இருப்பதாகவும், ஆனால் அதற்காக இடம் தேர்வு செய்வதிலே சிக்கல்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக அந்தத் திட்டம் தள்ளி வைக்கப்படுமோ என்ற எண்ணம் தென் மாவட்டங்களில் இருக்கின்ற மக்களுக்கு இருக்கிறது. இதை அரசு உடனடியாகப் பரிசீலித்து, உரிய இடம் ஒதுக்கித் தருவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சென்னையிலே உச்ச நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்றை அமைப்பதற்கு மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தற்போது மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றிலே நுழைவுத் தேர்வுகள் நடத்தப்பட்டு, அதன் மூலமாக மருத்துவம் மற்றும் பொறியியல் பட்டப்படிப்பிற்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதேபோல, சட்டக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது அந்த மாதிரி நுழைவுத் தேர்வை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. ஜி. நிஜாமுதீன்.

*திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டு சட்டக் கல்லூரிப் படிப்புக்குச் செல்லும் மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

*பிற்பகல் 12-35*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேலம் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தனியார் சட்டக் கல்லூரியில் அதிகமாகப் பணம் வசூலிக்கிறார்கள் என்ற ஒரு பிரச்சினை இருக்கிறது. அந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தத் தொகை அதிகமாக இருக்கும்பட்சத்தில், நீங்கள் இதில் தலையிட்டுத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராசிபுரத்தில் இயங்கும் முன்சிப் கோர்ட்டில் இடப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால், புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டித் தருவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறைத் துறையைப் பொறுத்தவரையில், சிறைக் காவலர்கள் மிகக் குறைவாக இருக்கின்றார்கள். கைதிகளுக்கு ஏற்ப காவலர்களின் எண்ணிக்கை இல்லை என்பது என் கருத்து. அதற்காகச் சிறைக் காவலர்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் ஜெயில் சூப்பரின்டெண்டன்ட் பதவிக்கு ஐ.பி.எஸ். அதிகாரிகளை நியமிக்க வேண்டும். அப்போதுதான் அங்கு நேர்மையான நிர்வாகம் நடக்கும் என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அதேபோல, ஜெயில் சூப்பரின்டெண்ட்கள், அங்கு இருக்கின்ற கைதிகளையெல்லாம், அவர்களுடைய வீடுகளில் வேலைக் காரர்களாக வைத்திருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ் நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கைதிகளைச் சிறைகளில் சந்திக்க, பார்வையாளர்கள் உறவினர்கள், நண்பர்கள் வரும்போது, அவர்களுக்கு முன்பாக ஒரு ஸ்கிரீன் போடப்பட்டிருக்கிறது. ஒரு தடுப்புச் சுவர் போல இருக்கின்ற காரணத்தால் அந்தக் கைதிகளும் பார்வையாளர்களும் நேருக்குநேர் பார்த்துப்



பேசமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் கண்ணாடித் தடுப்பை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தற்போது இருக்கின்ற சிறைச்சாலையானது ஆளுங்கட்சிக்கு எவ்வளவு சாதகமாக இருக்கிறது என்பதை, சிறைச்சாலை அதிகாரிகள் எல்லாம் எப்படி சாதகமாக இருக்கிறார்கள் என்பதை, ஒரே உதாரணத்தின் மூலம் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய பொதுச் செயலாளர் கைது செய்யப்பட்டு, சென்னை மத்திய சிறையிலே அடைக்கப்பட்டபோது, நாங்கள் எல்லாம் உள்ளேகூட சென்று பார்க்க முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள், துணைப் பொதுச் செயலாளர்கள் எல்லாம் வந்திருக்கிறோம் என்று எடுத்துக்கூறியும் கூட, உள்ளே செல்ல எங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைச் சொல்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் 28 நாட்கள் சிறையில் இருந்தார்கள். அந்த நாட்களில் 250 பேரைப் பார்த்திருககிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சமயத்தில் நான் சென்றேன். நான் சென்று அங்கு நின்றபொழுது, அவர்கள் என்னை சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லியும், அனுமதிக்கவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, உள்ளே இருக்கக்கூடிய கைதியைப் பார்க்க வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தால், உள்ளே இருப்பவர்களிடத்திலே கொண்டுபோய் விண்ணப்பத்தைக் காட்டி, இவர் வந்திருக்கிறார், தங்களைப் பார்ப்பதற்கு, இவரைச் சந்திக்கிறீர்களா என்று கேட்பார்கள். உள்ளே இருக்கின்றவர்கள், வந்திருப்பவர்களைச் சந்திக்க விருப்பம் இல்லை என்று சொல்லி விட்டால், சிறை அதிகாரி ஒன்றும் செய்ய முடியாது. இதுதான் உண்மையே தவிர, சிறை அதிகாரிகள்,

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களை உள்ளே அனுப்பக்கூடாது என்று எப்போதும் தடை விதிக்கமாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்ல நினைத்ததை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். திரு. பி.ஆர். சுந்தரம், தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கவனத்தை வேறு திசைக்குத் திருப்பக்கூடாது. நான் எழுதிக்கொடுத்து, எங்களுடைய புரட்சித் தலைவி கையொப்பமிட்டு, அதற்குப் பின்புதான் என்னை கேட்டிலேயே நில்லுங்கள், ½ மணி நேரம் கழித்துத்தான் அனுப்புவோம் என்று சிறை அதிகாரிகள் கூறினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்காக இன்னொரு செய்தியைச் சொல்கிறேன் முன்னாள் நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், அவர்களைப் பார்க்கப் போனபோது அதற்கான மனு எழுதிக்கொடுத்த பிறகு, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பார்க்கமுடியாது என்று அவர்களைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அதாவது உள்ளே இருப்பவர்கள் விருப்பப்பட்டால்தான், வெளியிலே இருப்பவர்களை அதிகாரிகள் கூப்பிடுவார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூற வேண்டிய பதிலைத் தாங்கள் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது. நான் சொல்ல வந்தது, உள்ளே இருப்பவர்கள் விருப்பப்பட்டால்தான், விருப்பப்பட்டுப் பார்க்கலாம் என்று சொன்னால்தான், அதிகாரிகள் வெளியிலே இருப்பவர்களை உள்ளே அழைத்து வருவார்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டிய பதிலை மற்ற அமைச்சர் அவர்களும் துணைத் தலைவரும் சொன்னார்கள். நான் இறுதியிலே சொல்லலாம் என்று இருந்தேன். ஒவ்வொரு நாளும் யார் யார் முன்னாள் முதலமைச்சரைப் பார்க்க விரும்புகிறார்கள் என்ற பட்டியலைக் கொடுத்தபோது, அந்த



அம்மையாரே பலரைப் பார்க்க முடியாது என்று மறுத்துவிட்டார்கள். இதையெல்லாம் எங்களிடத்திலே ஆதாரப்பூர்வமாகக் கையிலே வைத்து இருக்கிறோம். இதற்காக நீங்கள் உங்கள் தலைவியிடத்திலே வருத்தப்படவேண்டுமே தவிர, இந்த அவையிலே வருத்தப்படுவதிலே பொருளும் இல்லை; பொருத்தமும் இல்லை.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** அதேபோல, சிறைச்சாலை அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அன்று நாங்கள் எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டோம் இராசிபுரத்திலே எங்களை எல்லாம் கைது செய்தார்கள். இராசிபுரத்திலே எங்களைக் கைது செய்து, அருகாமையில் இருக்கின்ற சேலம் மத்திய சிறைச்சாலைக்கு கொண்டு வந்தார்கள். அங்கு இடம் இருந்தும், எங்களுக்கெல்லாம் அங்கு இடம் இல்லை என்று அன்று நள்ளிரவு 12 மணிக்கு மேலாக கோவை மத்திய சிறைக்கு அனுப்பினார்கள். கோவை மத்திய சிறையிலே ஒருசிலரை மட்டும் வைத்துக்கொண்டு, மீதி உள்ளவர்களை திருச்சிக்கு அனுப்பினார்கள். பக்கத்தில் இருக்கிற சேலத்தை விட்டுவிட்டு எங்களை எல்லாம் அலைக்கழிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக எங்களை எல்லாம் அங்கே மாற்றி மாற்றி... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ சிறை அதிகாரிகள்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொல்வது தவறு. மாண்புமிகு உறுப்பினரின் கட்சி ஆளும் கட்சியாக இருந்தபோது, ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டம் நடத்தி, சுமார் 25 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டார்கள். நான் மதுரையிலே கைது செய்யப்பட்டேன். மதுரை சிறைச்சாலைக்கு என்னை அழைத்துக்கொண்டு போனார்கள்; அங்கு இடம் இல்லை என்று சொல்லி மறுபடியும் கோயம்புத்தூருக்கு மாற்றினார்கள்; பாதி வழியிலே போகும்போது, கோயம்புத்தூரிலும் இடம் இல்லை; எனவே திருச்சிக்குச் செல்லுங்கள் என்று காவல்துறையிடம் தெரிவித்தார்கள். இப்படி ஒரு கட்சி போராட்டம் நடத்துகின்ற நேரத்திலே, சிறையிலே எவ்வளவு இடம் இருக்கிறதோ அதற்கு ஏற்றாற்போல்தான் அவர்களை உள்ளே வைக்க முடியுமே தவிர, ஆயிரக்கணக்கில் சிறைக்கு வந்தால், இடம் இல்லாத நேரத்திலே, அவர்களை வேறு வழியில்லாமல் வேறு சிறைகளுக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. அங்கு இடம் இருக்கிறது. சேலத்தில் இடம் இருக்கிறது. சேலத்தில் இடம் இருந்ததற்குப் பின்பும். அவர்கள் வேறு இடத்திற்கு மாற்றினார்கள். கோவை மத்திய சிறையில நாங்கள் எல்லாம் அடைக்கப்பட்டோம். நாங்கள் அடைக்கப்பட்டதற்குப் பின்பும் எங்களுக்குரிய உணவுப் பொருள்கள், தங்குவதற்கு இடம் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. அதுவும், அங்கு இருக்கின்ற கைதிகளை எல்லாம் நாங்கள் பார்த்துக் கேட்டபோது, அவர்கள் வேதனையான சம்பவத்தைக் குறிப்பிட்டார்கள். நான், இந்த அரசைக் குற்றம் சொல்ல வேண்டும், இந்த அமைச்சரைக் குற்றம் சொல்ல வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள், கோவை மத்திய சிறைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களை, தோழமைக் கட்சி உறுப்பினர்களை அனுப்பிப் பார்ப்பார்களேயானால், அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும் என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஊழலின் ஊற்றுக்கண். அது ஊழலின் ஊற்றுக்கண் என்பது எனக்குத் தெரிந்தவரையில், கோவை மத்திய சிறையில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்: பக்கம் 13-லே எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைவாசி ஒவ்வொருவருக்கும் மாதமொருமுறை 30 கிராம் நல்லெண்ணெய், பேப்பர், உடை-இவையெல்லாம் வாசிப்பதற்கு எழுதுவதற்கு அழகாக இருக்கிறது; ஆனால் நடைமுறையில் ஒன்றுமே அங்கே இல்லை. ஏனென்றால், இதை நான் அங்கே கண்கூடாகப் பார்த்தேன். எங்களுக்கே கூட அங்கே நாங்கள் இருந்தபோது அவர்கள் கிட்டத்தட்ட அந்த 15 நாட்கள் எண்ணெய் கொடுக்கவில்லை; சோப்பு கொடுக்கவில்லை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனை தடவை சிறைக்குச் சென்று வந்து இருக்கிறார் என்பதைச் சொல்லுவார்களா?

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-ல் நான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முன்னால் கட்சியில் சேர்ந்தேன். கிட்டத்தட்ட 7, 8 முறை சிறைக்குச் சென்று இருக்கிறேன். ஆனால் எப்போது எந்தக் கட்சி ஆளும் கட்சி என்று வருகிறதோ, அந்தக் கட்சியின் பக்கம் சேர்ந்து கொண்டு இருப்பதனால், தாங்கள் எல்லாம் சிறைக்குச் சென்று இருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்போதெல்லாம் நீங்கள் தண்டனை பெற்றுப் போனீர்கள் என்று சொல்ல முடியுமா? எந்தெந்தச் சிறையிலே தங்கி இருந்தீர்கள் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இன்னும் ஒன்று, நானும் அ.தி.மு.க.-வில் இருந்திருக்கிறேன். பெருமதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு போராட்டக் குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவிலே என்னைக்கூட மெம்பராகப் போட்டார்கள். ஆனால், ஒரு போராட்டத்தையும் நடத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. திருப்ப மானியத்திற்கு வாருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மானியத்திற்கு வருகிறேன். அதிலே எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், வேதனையாக இருக்கின்றது. நாங்கள் கேட்டும்கூட அவர்கள் கொடுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாங்கள் கைது செய்யப்பட்ட சமயத்தில் அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற தலைமை ஜெயில்களில் எத்தனை பேர்கள் இருந்தார்கள்...(குறுக்கீடு)

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பி. வெங்கிடு.

**திரு. ஜி. பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே கொடுக்கப்படவேண்டிய எண்ணெய், சீயக்காய் போன்ற பொருட்கள் எல்லாம் கைதிகளுக்குக் கொடுக்கப்படவில்லை என்று உறுப்பினர் அவர்கள் குற்றம் சாட்டினார். நானும் ஏறக்குறைய 16 முறைகளுக்கு மேலாகச் சிறைக்குச் சென்றிருக்கிறேன். ஒரு முறை 3 மாதம் தண்டனைக் கைதியாக மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டபோது சென்றிருக்கிறேன். தண்டனைக் கைதிகளுக்குத்தான் அப்படிப்பட்ட பொருட்கள் சிறைகளில் வழங்கப்படுகிறதே தவிர, ரிமாண்ட் கைதிகளுக்கு வழங்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதும் அதுதான். நாங்கள் அங்கே சென்றிருந்தபோது நாங்கள் கேட்டோம். அதைக் கொடுக்கவில்லை. அதேபோல, சிறையில் இருப்பவர்களுக்கும் கொடுக்கிறார்கள் என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களும் கூறினார்கள். எங்களுக்கு எதுவும் கொடுப்பதில்லை என்று. அதைத்தான் நான் சொன்னேன். அதேபோல சிறையில் இருக்கும்போது அங்கே இருக்கின்ற கைதிகள் நெசவுத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். துணிகள் நெய்யவேண்டும். இதில் வேதனையான ஒரு சம்பவத்தைச் சொல்லவேண்டும். 6 மணிக்கு மேல் சிறைக் கைதிகள் அனைவரையும் ஜெயிலுக்குள்ளே அடைத்துவிடுவார்கள். ஆனால் அந்தச் சிறையிலே இரவு 10 மணி வரையில் இரவு ஷிப்டு போட்டு வேலை வாங்குகிறார்கள். அந்தக் கைதிகள் எதற்காக நெய்கிறார்கள் என்றால், எனக்குக் கிடைத்த தகவல், அந்தத் துணியை நெய்து, அந்தத் துணிகளை வேறு தொழிற்சாலைகளுக்கு அங்கே உள்ளவர்கள் விற்கிறார்கள் என்பதுதான். ஒரு வேளை சோற்றுக்கு, அந்தக் கூலிக்கு, அந்த வேலையை நான்கு மணி நேரம் அந்தக் கைதிகள் செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இந்த மாதிரி குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தால் அதைப்பற்றி விசாரிக்க உடனடியாக அரசாங்கம் தயாராக இருக்கிறது. யாருக்கு விற்கப்படுகிறது, எந்த அதிகாரி விற்கிறார், அதை யார் வாங்குகிறார்கள், இதற்கெல்லாம் ஆதாரத்தைக் கையில் வைத்துப் பேசுங்கள். தேவையில்லாமல் சேற்றை வாரி அதிகாரிகள் மீது வீசவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** தேவையில்லாமல் நான் பேசவில்லை. நான் கண்கூடாகப் பார்த்தேன். நீங்கள் எதற்கெடுத்தாலும் ஆதாரம், ஆதாரம், ஆதாரம் என்று கேட்டுக்கொண்டேயிருந்தால் இதற்கெல்லாம் ஆதாரம் கொடுக்க முடியாது. நீங்கள் வேண்டுமானால் . . .

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** ஆதாரம் இல்லையென்றால் நீங்கள் ஆலோசனை சொல்லலாம். ஆனால் குற்றச்சாட்டு என்று சொல்லும்போது, ஆதாரத்தைச் சொல்லியாக வேண்டும்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனையாகவும் கூறினேன். ஒரு சட்டமன்றக் குழுவை ஏற்படுத்துங்கள்.



அல்லது நீங்கள் சென்று பாருங்கள். ஏனென்றால், அந்த ஜெயிலில் இருக்கிற சூப்பரின்டெண்டெண்ட் ஆளுங்கட்சிக்கு வேண்டியவர் என்று சொல்கிறார்கள். அதிலே உங்களுக்கு நான் சொல்வது, நீங்கள் ஒரு குழுவை அமைத்து என்ன நடக்கிறது என்று பாருங்கள். அப்படிப் பார்த்தால்தான் அங்கே என்னென்ன தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று உங்களுக்குக் கண்கூடாகத் தெரியும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீன் வளத்தைப் பற்றி ஒன்றே ஒன்று. தற்போது இராமேஸ்வரம் மீனவர்கள் எல்லாம் கச்சத்தீவுக்கு அருகில் செல்லும்போது அங்கே மீன் பிடிப்பவர்களுக்குச் சில பிரச்சினைகள் ஏற்பட்டு, மீனவர்கள் எல்லாம் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள். நம்முடைய முதலமைச்சரும் டெல்லியில் பேசுகிறார், வெளியுறவுத் துறை அமைச்சரும் பேசுகிறார். ஆனால் இறுதியில் எந்த முடிவும் எடுக்கப்படுவதில்லை என்று இப்படியே பிரச்சினை வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமானால், கச்சத்தீவை மீண்டும் தமிழகத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் ஒரு தீர்மானம் போட்டு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறால் பண்ணைகளைப் பொறுத்தவரையில், இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. இறால் பண்ணைகளை அமைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அன்னியச் செலாவணி கிடைக்கிறது என்ற கருத்தும், ஆனால் சுற்றுச் சூழல் பாதிக்கிறது என்ற இன்னொரு கருத்தும் இருக்கிறது. ஆகவே இதிலே இரண்டு தரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்தி இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதிலேயுள்ள தொழில்நுட்பங்களைப் பற்றிக் கூறியிருக் கிறார்கள். தொழில்நுட்பங்களைப் பொறுத்தவரையில், தொழில் நுட்பம் வளர்ந்து வருகிற இந்தக் காலக்கட்டத்தில், அந்தப் பயிற்சி பெறுபவர்களுக்கு நவீன முறையில் பயிற்சிகள் அளித்து அவர்களுக்கு நல்லமுறையில் அதை எடுத்துக்கூற வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமருகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

[1997 ஏப்ரல் 11

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நீதி நிருவாகம் மற்றும் மீன்வளத்துறை ஆகிய மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்த, தங்களுக்கு நன்றி கூறி நான் ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

மீனவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட சில முக்கியமான அவசரமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக நான் இந்தக் கருத்துக்களை பட்ஜெட் மீதான விவாதத்திலேயே வைத்திருக்கிறேன். தமிழகத்திலிருந்து செல்கின்ற மீனவர்களுக்கு கச்சத்தீவில் முன்பு இருந்த மீன் பிடிக்கக்கூடிய உரிமையை மீட்பதற்கு, அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய நமது மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-50* .

அதேபோல கடலோரப் பகுதிகளிலே குறிப்பாக பெருமணல், காட்டான்குழி போன்ற கிராமப் பகுதிகளில் 'கார்னெட் மணல்' என்று சொல்லக்கூடிய ஒரு மணல் வெகுவாக எடுக்கப்பட்டு அது ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே மீனவர்கள் மீன் பிடிப்புத் தொழிலிலே பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே பல நேரங்களிலே சுட்டிக்காட்டியிருக்கின்றேன். எனவே, பெருமணல், காட்டான்குழி போன்ற பகுதிகளில் கார்னெட் மணல் எடுக்கக்கூடிய அந்த நிலையை உடனடியாக நிறுத்திட நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல உச்சநீதிமன்ற உத்தரவினுடைய அடிப்படையில், உயர் அலை தாண்டி 500 மீட்டருக்கு அப்பால்தான் கட்டிடங்கள் கட்டவோ, அல்லது சுற்றுலாத் தலங்கள் அமைக்கவோ வேண்டும் என்று ஒரு உத்தரவு இருக்கிறது. ஆனால் அது மீறப்பட்டு உயர் அலை எல்லை தாண்டி 500 மீட்டருக்கு உள்ளாகவே பல கட்டிடங்களும், சுற்றுலாத் தலங்களும் உருவாக்கப்பட்டு, மீனவர்களுடைய நலன் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மேலும், தமிழக அரசும் அந்த 500 மீட்டர் என்பதை 200 மீட்டராகக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிகிறது. எனவே 200 மீட்டர் என்று கொண்டுவராமல் உச்சநீதிமன்றத் தினுடைய ஆணையின்படி 500 மீட்டர் என்ற அந்த நிலையைக் கடைப்பிடித்து, கடற்கரையிலிருந்து, 500 மீட்டருக்கு அப்பால்தான் கட்டிடங்கள் எழுப்பப்பட வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே



சொல்லிக்கொண்டு மீனவர்களுடைய நலன் பாதுகாக்கப்பட அந்த இரண்டு நடவடிக்கைகள் மிக முக்கியமானவை என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நீதி நிருவாகத்திலே சொல்லுகின்றபோது, வழக்கமாகச் சிறைச்சாலைக்கு அனுப்பப்படக்கூடியவர்கள், தண்டிக்கப்படக்கூடிய சிறைச்சாலையிலே சென்று திருந்தி நல்லவர்களாக வெளியே வரவேண்டும் என்பதற்காகத்தான் அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். ஆனால் இப்போது நடப்பது என்னவோ, Habitual offenders என்ற அளவுக்கு, சிறைச் சாலைக்குச் சென்ற பிறகுதான் ஒரு கைதி பல தவறுகளைக் கற்றுக்கொண்டு மீண்டும் வெளியே வருகின்றபோது, சிறிய குற்றவாளி, பெரிய குற்றவாளியாக வரக்கூடிய ஒரு அவலநிலையைக் காண்கின்றோம். எனவே, எப்படி டில்லியிலே ஒரு கிரண் பேடி, சிறைச்சாலையைச் சீர்திருத்தச் சாலையாக மாற்றினார்களோ, அதேபோல தமிழகத்திலே இருக்கக்கூடிய சிறைச் சாலைகளும் சீர்திருத்தச்சாலைகளாக மாறவேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். சிறைச்சாலையிலேகூட வெளியே நிலவுகின்ற ஜாதி வேறுபாடுகள், மத வேறுபாடுகள், ஊழல்கள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. இதை மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். சிறைச்சாலைகளில் அதிகாரிகள் செய்யக் கூடிய தவறு, எல்லா அரசியல்வாதிகளுக்கும், நம்மைப் போன்றவர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம்தான். ஏனென்றால் சிறைச்சாலைகளிலே அதிகாரிகள் செய்கின்ற தவறுகளின் காரணமாகத்தான், அங்கே கைதிகளாக இருக்கக்கூடியவர்கள்கூட பல நேரங்களிலே ஆத்திரப்பட்டு எதிர்ப்புக் குரல் கொடுக்கிறார்கள். சமீபத்திலே ஓராண்டு காலத்திற்கு முன்பு மதுரைச் சிறையிலேகூட கைதிகளெல்லாம் போராட்டம் நடத்தியதை எல்லாம் பார்த்திருக்கிறோம்.

சமீபத்திலே பாளையங்கோட்டை சிறையில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி, அவர்கள் மதுரை சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அங்கே ஜாதி உணர்வோடு செயல்படக்கூடிய அதிகாரிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே மேஜர் கருணாகரன் என்பவர் பாளையங்கோட்டைச் சிறையிலே ஜெயிலராக இருக்கக்கூடியவர் முற்றிலுமாக ஜாதி உணர்வோடு செயல்பட்டு வந்துகொண்டு இருக்கிறார் என்ற தகவலை இந்த நேரத்திலே சுட்டிகாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் காரணமாக

ஏறக்குறைய 20 பேர்களுக்கும் மேற்பட்டவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு அவர்கள் பாளையங்கோட்டை சிறையிலேயிருந்து மதுரை சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். கை, கால்கள் எல்லாம் உடைந்து மருத்துவமனையிலே சிகிச்சை பெற வேண்டிய நிலைமைக்கெல்லாம் தள்ளப் பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், இதுபோன்ற அதிகாரிகளின் நடவடிக் கைகளால்தான் சமீபத்திலேகூட பாளையங்கோட்டை சிறை வளாகத் துக்குள்ளேயே கொலை நடக்கக்கூடிய அளவுக்கெல்லாம் சூழ்நிலை வளர்ந்திருக்கிறது. எனவே, இதுபோன்ற உணர்வுள்ளவர்கள்மீது, இதுபோன்ற கிரிமினல் மனப்பான்மை படைத்த அதிகாரிகள் மீது, முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-55

மேலும் தனி நீதிமன்றத்தைப் பற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய அரசு, கடந்த ஆட்சிக்காலத்தில் நடந்த ஊழல்களை எல்லாம் விசாரிப்பதற்கு (மணியடிக்கப்பெற்றது) தனி நீதிமன்றம் அமைப்பதாக உத்தரவாதம் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் இன்னும் தனி நீதிமன்றத்திற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. தனி நீதிமன்றம் அமைக்கப்படாமல் விட்டால்- ஏற்கெனவே இந்த ஆட்சியில் வாக்குறுதி கொடுத்து வந்திருக்கிறோம்; ஏறக்குறைய 5,000 கோடிக்கு மேல் ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கையெடுத்து தண்டிக்கப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறோம்- ஒருவேளை தனிநீதிமன்றம் காலந்தாழ்த்திக் கொண்டே போனால் அவர்கள் எல்லாம் வெளிநாடுகள் போய் விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, கடந்த ஆட்சிக்காலத்தில், அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றால் தனி நீதிமன்றம் உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மத்திய சிறையில் பார்வையாளர்களைப் பார்ப்பதற்கு 'ஃபைபர் கிளாஸ்' தடுப்பைக் கட்டி இருக்கிறார்கள். தமிழகத்தில் எந்தச் சிறையிலும் அப்படிப்பட்டத் தடுப்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அது மனிதாபிமானமற்ற செயல். எனவே அதை உடனடியாக நீக்குவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



மேலும் உள்ளே விசாரணைக் கைதிகளை வேலை வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. இருந்தாலும்கூட விசாரணைக் கைதிகளிடம் தான் அதிகமாக வேலை வாங்குகிறார்கள். அதை நிறுத்துவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்

***திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சிறைச்சாலை வளாகத்திற்குள்ளேயே ஒரு கொலை பாளையங்கோட்டையில் நடந்ததாகச் சொன்னார். அது அந்த வளாகத்திற்குள் நடைபெறவில்லை. வளாகத்திற்கு வெளியே நடந்தது. எனவே தவறாகக் குறிப்பிலே ஏறிவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இதில் என்ன சொல்கிறார்கள் என்றால், சிறைக் காவலர் உள்ளே போய் விட்டு வெளியே வந்தார்; தகவல் கொடுத்தது அவர்தான்; அவர்தான் இன்டிமேட் பண்ணினார் என்று செய்தித் தாள்களில் எல்லாம் வந்திருக்கிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** சிறைக் காவலர் அதிலே குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருக்கிறார். அதிலே அவர் உடந்தையாக இருந்திருக்கலாம். ஆனால் சிறைச்சாலை வளாகத்திற்குள் கொலை எதுவும் நடக்கவில்லை. அப்படிச் சொன்னது தவறு. அதைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 2,000-க்கும் மேற்பட்ட பப்ளிக் பிராசிகியூட்டர், அசிஸ்டென்ட் பப்ளிக் பிராசிகியூட்டர், அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர் என்ற பதவிகள் சென்னை உள்பட எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. அதிலே வேதனைப்படக்கூடிய ஒரு விஷயம், தாழ்த்தப்பட்ட சமுதாய, பழங் குடியின சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிக மிகக் குறைவானவர்களே இருக்கிறார்கள். ஒரு சதவீதம்கூட இல்லையென்ற நிலையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு உதாரணமாகச் சென்னையிலே அட்வகேட் ஜெனரல் பதவி ஓ.சி. அண்ட் பி.சி.க்கு ஒன்று இருக்கிறது. எஸ்.சி./எஸ்.டி. க்கு 'நில்'. பப்ளிக் பிராசிகியூட்டர் ஓ.சி. அண்ட் பி.சி.யிலே ஒன்று இருக்கிறது. எஸ்.சி./ எஸ்.டி.யிலே ஒன்றுமே இல்லை.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 2,000 பதவி என்று சொல்கிறார்கள். மொத்தமே சுமார் 220 பதவிகள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சென்னை வழக்கறிஞர்கள் சங்கத்திலே கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது தவறு. திருநெல்வேலியில் இப்போது 4 டிஸ்ட்ரிக்ட் கோர்ட், அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் கோர்ட், சப்-கோர்ட் இதெல்லாம் போட்டிருக்கிறோம். 4 பேர் நியமனம் செய்யப்படக்கூடிய அந்த பப்ளிக் பிராசிகியூட்டர்களில் 2 பேர் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள், மீன் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது அரசியலமைப்புச் சட்டத்தின்படி அதிகாரங்கள் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நிருவாகத்துறை, நீதித் துறை, சட்டம் இயற்றும் துறை என்று மூன்று பிரிவுகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருந்தாலும், ஒன்று மற்றொன்றின் நிர்வாகத்தில் குறுக்கிடக் கூடாது என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு, இயங்கி வருகிற நிலையில், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதைப்போல, நீதித் துறை அரசின் ஏனைய அங்கங்களான நிர்வாகப் பிரிவு மற்றும் சட்டமியற்றும் பிரிவு ஆகியவற்றின் குறுக்கீடின்றிச் சுதந்திரமாகச் செயல்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதைப்போல தற்போதுள்ள சூழ்நிலையில் நீதிமன்றங்கள் காட்டும் அக்கறை, அரசு தூய்மையான நிருவாகத்தைப் பேணி வருவதற்குப் பெரிதும் உதவுகிறது என்ற கருத்தும் நம்மால் மறுக்க முடியாத ஒன்றாகும்.



அதேநேரத்தில் மற்ற நிருவாகங்கள் இரண்டில் நீதித் துறையின் குறுக்கீடு அளவோடும் முறையாகவும் இருக்க வேண்டும். இதை ஏன் சொல்கிறேன் என்றால், சட்டமியற்றும் அதிகாரம் சட்டப் பிரிவுக்கு மட்டுமே உள்ளது என்பதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். சில நேரங்களில் நீதிமன்றங்கள் சட்டத்திற்கு மாறாகத் தீர்ப்புகளை வழங்குகிறபோது, அந்தத் தீர்ப்பே சட்டமாக மாறுகிறது. இந்த நிலையை நாம் கவனத்தில் கொண்டு பார்த்தால் சட்டத்தையும் நீதித் துறையே இயற்றுகின்ற ஒரு கருத்து உருவாகின்றது. ஆகவே இந்த வழிமுறை ஆரோக்கியமான வழிமுறை அல்ல. ஏனென்றால் சட்டம் இயற்றும் அதிகாரம் சட்டத் துறைக்கே உள்ளது. எப்படி நீதிமன்றத் தீர்ப்பை நீதிமன்றம்தான் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது மரபோ, அதேபோல சட்டமியற்றும் துறை இயற்றும் சட்டத்தையும், சட்டம் இயற்றும் பிரிவே மறுபரிசீலனை செய்து மாற்ற வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

பிற்பகல் 1-00

சில சமயங்களில் சட்டத்திற்கு மாறாகத் தீர்ப்புகள் வழங்கப்படுகின்ற நிலை வரும்போது நீதிமன்றங்கள் அதுகுறித்த ஆலோசனையை சட்டமியற்றும் பிரிவிற்குத் தெரிவித்து, அதன் முடிவைப் பெற்ற பின்பு, அதுபற்றிய தீர்ப்புகள் வழங்க வேண்டும் என்பதைக் கவனத்திற்கொண்டு சட்டம் இயற்றும் துறையின் நிர்வாகத்தில் நீதிமன்றங்கள் குறுக்கிடாத வண்ணம் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகப்பிரிவின் அன்றாட அலுவல்களிலும் அதிகமாக நீதிமன்றக் குறுக்கீடுகள் இருப்பதால் பல பணிகள் தேங்கி, முன்னேற்றம் தடைபடுகின்றது. ஆகவே அவற்றையும் கணக்கிற்கொண்டு, நிர்வாகத் துறையிலும் குறுக்கீடுகள் அளவோடும், முறையோடும் இருந்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகள் தேங்கி இருக்கிற காரணத்தால் பல பணிகள் தற்போது தடைபட்டு, பல முக்கியமான ஆக்கபூர்வமான பணிகள் நடைபெறா வண்ணம் அரசு ஸ்தம்பித்துப் போகக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதுபோன்ற தேக்கங்களைக் குறைப்பதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோர்ட் கட்டணங்கள், Action ஃபீஸ் Advocate ஃபீஸ் போன்ற பல கட்டணங்கள், 75 பைசா, 50 பைசா என்று பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. இது கோர்ட்டை செயல்படுத்துவதற்குப் போதுமான கட்டணமாக அமையாது. ஆகவே இந்தக் கட்டணங்களை எல்லாம் முறையாக, காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு உயர்த்த வேண்டும். அப்போதுதான், நீதிமன்ற நிருவாகம் செம்மையாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) இன்னும் சிறிது நேரம் கொடுங்கள். இப்போதுதான் பேச ஆரம்பித்தேன்.

சட்டக் கல்வியின் தரம் வெகுவாகக் குறைந்துகொண்டே வருகிறது. உலக அளவிலான தரத்தை ஒப்பிடும்போது நம்முடைய சட்டக் கல்லூரிகளில் உருவாகும் வழக்கறிஞர்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. நமது சட்டக் கல்லூரிகளில் இருந்து வருபவர்கள், லெக் அட்வகேட்-ஆக இருக்கிறார்களே ஒழிய கேபின் அட்வகேட்டுகளாக உருவாக்கப்படவில்லை. மாறாக பெங்களூரில் 'நேஷனல் லா ஸ்கூல்' போன்ற முறையான சட்டக் கல்வி அமைப்புகளை ஏற்படுத்தி திறமையான சட்ட மாணவர்களை உருவாக்குகின்றார்கள். அதுபோல் நாமும் சட்டம் பயிலும் மாணவர்களுக்கும் உதவி செய்து, நவீன காலத் தேவைகளுக்கேற்ப, திறம்பட்ட வழக்கறிஞர்களாக அவர்களை உருவாக்க வேண்டும். சட்டக் கல்லூரிகளில் முறையான, தரமான கல்வியைப் போதித்திட வழிவகை செய்திட வேண்டும். சட்டக் கல்லூரிகளில் 3 ஆண்டு, 5 ஆண்டு என்ற இரண்டு வகையான பட்டப் படிப்பை வைத்திருக்கிறார்கள். ஆகவே இதை மாற்றி அமைத்து- 3 ஆண்டு, அல்லது 5 ஆண்டு இதில் ஏதாவது ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைய காலகட்டத்தில் இந்த நிருவாகம் செம்மையாக நடைபெறுவதற்கு நீதிபதிகள் முக்கியமான ஒரு அம்சமாக இருப்பதால் அவர்களுக்குப் போதிய சம்பளம், வசதிகளை ஏற்படுத்தி, ஜனநாயகம் செழிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்டங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள நீதிமன்றங்களில் பயனுள்ள நூலகங்கள் இல்லை. நாள்தோறும் தேவைப்படும் சட்ட நூல்கள் நீதிபதிகளுக்குக் கிடைப்பது இல்லை. ஆகவே இதுகுறித்து அரசு கவனம் செலுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)



நுகர்வோர் நீதிமன்றங்களில் நியமிக்கப்படுகின்ற நீதிபதிகள் பெரும்பாலும் ஓய்வுபெற்ற நீதிபதிகளாக இருக்கிறார்கள். அவர்களை நியமிப்பதை விடுத்து, மற்ற நீதிபதிகளை நியமிப்பதுபோல தேர்வு செய்து நியமித்தால் சட்டம் பயின்ற மாணவர்களுக்கு, நீதிபதிகளாக ஆகக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே அரசு இதைக் கவனத்திற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. தமிழகத்தின் வரலாறு, மொழி, அரசியல், கலாச்சாரம், இலக்கியம், பண்பாடு, நாகரிகம், பொருளாதாரம், சமூக நீதி இவற்றின் வளர்ச்சிக்காக உழைத்த பெரியோர்களை நினைவுபடுத்தும் புதை பொருள் ஆராய்ச்சி நிபுணராக நம்முடைய தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள். எதிர்காலச் சந்ததிகள் தெரிந்துகொள்கிற வகையில் உலகப் பொதுமறை தந்த வள்ளுவருக்குக் கோட்டம்-வள்ளுவர் பெயராலும். சேர, சோழ, பாண்டிய, பல்லவர்கள் பெயராலும், நாட்டிற்கு உழைத்த சான்றோர்களின் பெயராலும் போக்குவரத்துக் கழகங்களை அமைத்து, திருவள்ளுவருடைய படத்தையும், திருக்குறளையும் அதில் அமைத்த பெருமை கலைஞரையே சாரும்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கி இருக்கிற நேரம் ரொம்பக் குறைவு. எனவே நேரடியாக மானியத்திற்கு வாருங்கள்.

**திரு. இரா. பொன்னார்டு:** வருகிறேன். 'தண்ணீரில் பிழைக்க வைத்தான், எங்களைக் கண்ணீரில் மிதக்க வைத்தான்' என்ற சமுதாயத்தில் தோன்றிய சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரை கலைஞர் அவர்கள் அடையாளம் கண்டு, மீனவர்களுக்கே அவர் யார் என்று தெரியாத நிலையில், மீனவர்களுக்கு அவர்களை அடையாளம் காட்டி அவர் பெயரால் வீட்டு வசதித் திட்டமும், மணி மண்டபமும் அமைத்து சிறப்பித்த கலைஞர் அவர்கள் மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்துச் சிறப்பித்து இருப்பதை மனப்பூர்வமாகப் பாராட்டி, இந்த மீன் வள மானியத்தின் மீது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புப் பெற்றமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

1947-லே கேட்கப்பட்ட மணக்குடி பாலம் 50 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, 1997-லே மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சியிலேதான் கிடைத்திருக்கிறது. அதற்கு அமைச்சர் பெருமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை மக்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குளச்சல் துறைமுகம் அமைக்கவும், தூண்டில் வளைவு அமைக்கவும் அரசு எடுத்திருக்கிற பெருமுயற்சியை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். மீன் வளத்தைப் பெருக்குவதற்கும், அன்னியச் செலாவணியை உருவாக்குவதற்கும், துறைமுகங்களை மேம்பாடு செய்வதற்கும், பல சமூகத் திட்டங்கள் வகுத்து இருப்பதை மகிழ்ச்சியாகப் பாராட்டுகிறேன்.

முக்கியமான ஒரு பிரச்சினை. மீனவர்கள் நலன் கருதி, இன்று மீனவர்கள் உபயோகப்படுத்துகின்ற வலைக்கு 4 சதவீதம் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இந்த வரி விதிக்கப்படவில்லை என்பதைப் பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். மீனவர்கள் வலைவீசி மீன்களைப் பிடிக்கிறார்கள். இந்தச் சிறிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீனவர்களுக்கு வலைவீசி அவர்களைப் பிடிக்கலாம் என்று சிலர் எத்தனிக்கிறார்கள். மீனவர்கள் மீது நிலையான அன்பும் பாசமும் கொண்ட, கலைஞர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, மீனவர்களுடைய கருத்துக்கு ஏற்ப அந்த வரியை முழுமையாக ரத்து செய்யவேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடலில் தவறுபவர்களைத் தேட அதிவேக விசைப்படகுகளை ஏற்பாடு செய்தமைக்கும், தவறியவர் குடும்பத்திற்கு 1 லட்சம் ரூபாய் நிதி கொடுக்க முன்வந்திருப்பதையும் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன். கன்று காளைகளுக்கு இழப்புத் தொகை வழங்குவதைப்போல, கடல் கொந்தளிப்பு, புயல் காற்று ஏற்படுகிறபோது, மீனவர்கள் பயன்படுத்தும் கட்டுமரம், வள்ளம், வலைகள் ஆகியவற்றுக்கும் இழப்புத் தொகையை வழங்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

கடலோரப் பகுதிகளில் வழக்கம்போல் முந்தைய சர்க்கார் கார்னெட் மணலை எடுப்பதற்கு உரியவர்களுக்கு உரிமம் வழங்காமல் போலி உரிமங்களை வழங்கி, அதனால் கடலோரக் கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலையில் கடல் நீர் உள்ளே வரவும், குடிநீர் கெட்டுப் போகவும், வீடுகள் இடிந்து பழுதாகின்ற சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதைத் தட்டிக் கேட்கச் சென்ற பொதுமக்களும், மத



குருக்களும், கன்னிகாஸ்திரிகளும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, நீதியோடு நடக்கின்ற இந்த ஆட்சியில் நல்லதொரு முடிவு எடுத்திட, உரிமம் பெற்றவர்களுடைய உரிமத்தை ரத்து செய்து, நீதி வழங்கிட வேண்டும் என்று இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. பொன்னார்டு:** தூத்துக்குடியில் உள்நாட்டு வெளிநாட்டு கப்பல்களில் பயிற்சி செய்கின்ற நிலையம் அமைக்க முன் வந்திருப்பதை பாராட்டுவதோடு இதில் அங்கே உள்ள மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான மண்ணெண்ணெய் கேரள மாநிலத்தைப் போல, மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலமாக மானிய விலையில் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் மற்றும் மீன் வளத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு வழங்கியமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'Justice delayed is justice denied' என்பார்கள். நீதி வழங்குவதில் தாமதம் ஏற்படுவது என்பது நீதி மறுப்பதற்கு ஒப்பாகும் என்பதற்கு ஏற்ப, இன்றைய தினம் லட்சக்கணக்கான வழக்குகள் உயர்நீதிமன்றத்திலும், பல்வேறு கீழ்நிலை நீதிமன்றங்களிலும் தேங்கி இருக்கின்றன. அவற்றை எல்லாம் விரைவாக முடிக்கின்ற வகையிலே நீதிபதிகள் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்படவேண்டும். அதோடு புதிய நீதிபதிகள் பதவிகள் எல்லாம் ஏற்படுத்தி, வழக்குகளை விரைவில் பைசல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு சார்பு நீதிமன்றங்களை எல்லாம் இன்றைய தினம் அறிவித்திருக்கிறார்கள். பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, வால்பாறை, உடுமலைப்பேட்டை ஆகிய தொகுதிகளுக்கு சேர்ந்து உடுமலைப் பேட்டையில்

ஒரு சார்நிலை நீதிமன்றம் இருக்கிறது. உடுமலைப்பேட்டையிலே பதிவாகின்ற வழக்குகளில் கிட்டத்தட்ட 60 விழுக்காடு வழக்குகள், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு பகுதிகளிலேயிருந்து தான் பதிவாகின்றது.

ஆகவே அந்த வகையிலே பொள்ளாச்சியிலே ஒரு சார்நிலை நீதிமன்றம் அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் தெரிந்த நீதிபதிகள் உயர்நீதிமன்றத்தில் நியமிக்கப்பட வேண்டும். தமிழ் தெரிந்தவர்கள் மட்டுமே நியமிக்கப்படவேண்டுமென்ற கருத்து, தமிழ் ஆட்சி மொழிக்கென்று ஒரு அமைச்சர் நியமித்த நேரத்திலே தமிழ் தெரிந்த நீதிபதிகள் அமைப்பதிலே எந்தவிதக் கருத்து வேறுபாடும் இருக்கமுடியாது என்று நான் கருதுகின்றேன். தமிழ் தெரிந்த நீதிபதிகள் இருந்தால் வழக்குகளைத் தமிழிலே நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அத்தோடு ஆவணங்களை எல்லாம் ஆங்கிலத்திலே மொழிபெயர்ப்பதிலே ஏற்படும் பொருட் செலவையும் நிருவாகச் செலவையும் நாம் குறைக்கமுடியும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே அந்த வகையில் தமிழ் தெரிந்த நீதிபதிகளை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலையுண்ட நேரத்திலே. அதேபோல 1993-94-லே வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்ச்சியினாலே போடப்பட்ட வழக்குகள் எல்லாம் இன்னும் திரும்பப் பெறப்படாமல் இருக்கின்றன. ஆகவே சட்ட அமைச்சரவர்கள் முதலமைச்சரோடு கலந்து அந்த வழக்குகளை ரத்து செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல 'டைரக்டர் ஆப் ப்ராசிகியூஷன்' என்ற பதவிக்கு இன்றையதினம் காவல் துறையிலிருந்து நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி நீதித் துறையிலிருந்து அந்தப் பணியிடத்தை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கூட அதற்குச் சாதகமாக உள்ளது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல தேசிய அளவிலே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் சற்று அமைதி காக்க வேண்டுகிறேன். திரு. ம. சண்முகம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**திரு. ம. சண்முகம்:** ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதி அரசர் தலைமையின்கீழ் தேசிய மனித உரிமை பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் மாநிலத்திலும் மாநில மனித உரிமை பாதுகாப்பு ஆணையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மகாராஷ்டிர மாநிலத்திலே மும்பையிலே உயர்நீதிமன்றம் இருந்தாலும் 4 இடங்களிலே கிளைகள் இருக்கின்றன. ஆகவே மதுரையிலே உயர்நீதிமன்றக் கிளை அமைப்பதற்கு கொள்கைக் குறிப்பிலே இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

அதேபோல் கோவையிலே ஒரு உயர்நீதிமன்றக் கிளை அமைக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைத் துறையிலே பணிபுரியும் அதிகாரிகள், பணியாளர்களுடைய பதவி உயர்வுகள் எல்லாம் மிகவும் தாமதமாக வந்துகொண்டிருக்கின்றன. அவர்களையும் ஊக்குவிக்கின்ற வகையிலே ஊதியத்தை சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய பணி நிலைமையைக் கருதி, தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளோடு இருந்து பணியாற்றுகிறார்கள். என்பதால் அவர்களுக்கு 'ரிஸ்க் அலவன்ஸ்' தரப்பட வேண்டும். அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அதேபோல சிறைச்சாலைகளிலே வாழ்பவர்களுக்காக வழங்கப் படுகின்ற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதையெல்லாம் இன்றையதினம் இருக்கின்ற விலைவாசியைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உணவாகவும், மற்ற வசதிகளுக்காகவும் வழங்கப்படுகின்ற தினப்படி அதிகரிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவற்றையெல்லாம் வழங்குவதற்கு தனியாரிடத்திலே டெண்டர் மூலம் ஒப்படைக்காமல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சப்ளை செய்ய வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன் வளத் துறையைப் பொறுத்தமட்டில் நல்ல பல செயல் திட்டங்கள் எல்லாம் இன்றையதினம் அறிவிக்கப்பட்டது வரவேற்கத்தக்க அம்சமாகும். உள்நாட்டு மீன்பிடி நிலையங்களை மேம்படுத்தவேண்டும். இன்றையதினம் மீன்பிடிப்பவர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. ஆனால் ஓட்டல்களிலே பார்த்தீர்களேயானால், மீன் விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே அதிகமாக மீன் விலை

கொடுப்பதோடு, மீன்பிடிக்கும் தொழிலாளர்களுக்கும் அந்தப் பயன் கிடைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் நீதி நிருவாகம் சிறப்பாக இருந்தால்தான் அந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் நிம்மதியாக வாழமுடியும். அந்தவகையில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் டாக்டர் கலைஞருடைய அரசில் நீதி நிருவாகம் சிறப்பாக நடைபெறுகின்ற காரணத்தால் தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ்கின்ற ஒரு சூழ்நிலை இருப்பதைக் கண்டு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை அமைக்க வேண்டுமென்று தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் உறுதியான எண்ணத்தோடு இருக்கின்றார்கள். அதன் காரணமாகத்தான் மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையை வைப்பதற்காக ரூ. 4½ கோடிக்கு அங்கே நிலத்தை கையகப்படுத்துவதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இடையிலே கடந்த கால ஆட்சியில், அ.தி.மு.க. ஆட்சியில் மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையை வைப்பதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல், ஒரு சிறு துரும்பைக் கூட எடுத்துப் போட்டார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவிற்கு இருக்கின்றவர்கள், இன்றையதினம் அரசியல் ஆதாயம் தேடுவதற்கு மதுரையில் உயர்நீதிமன்றம் அமைக்கவேண்டுமென்று, ஒரு அரசியல் ஆதாயத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றையதினம் ரூ. 4½ கோடி நிதியை ஒதுக்கி, நிச்சயமாக மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையை அமைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தை, போராடிக் கொண்டிருக்கிற வழக்கறிஞர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

எனவே, தென்னகத்திலே இன்றையதினம் போராடிக் கொண்டிருக்கிற வழக்கறிஞர்கள் தங்களுடைய போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற வேளையில், கலைஞர் அவர்கள் ரூ. 4½ கோடி நிதி ஒதுக்கிவிட்ட காரணத்தினால், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





டாக்டர் கலைஞர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மதுரையிலே இந்த ஆண்டே உயர்நீதிமன்றக் கிளையைத் தொடங்க வேண்டும். அதிலும், குறிப்பாக மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தை சிறப்பாக நவீனப்படுத்தி, மதுரை மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்திலே தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன். டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, டெல்லியிலே இருக்கிற உச்சநீதிமன்றத்தினுடைய ஒரு கிளையை சென்னையிலே அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், தென்னாட்டில் இருக்கிற மக்கள் அனைவரும் இதை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அத்தகைய ஒரு புரட்சியை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம், தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளை பைசல் செய்வதற்கு மாற்று வழி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள், அவரவர் இடத்திற்குச் சென்று அமர வேண்டும். எல்லோருக்கும்தான் சொல்கிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** வெளிநாடுகளில் இரவு நேரக் கோர் இருப்பதைப்போல் இந்தியாவில், தமிழகத்தில் இரவு நேரக் கோர் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இலட்சக்கணக்கான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றதால், அவற்றை பைசல் செய்வதற்கு மாற்று வழிகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 100 மாஜிஸ்டிரேட் பதவிகள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இன்றையதினம் சிறைச்சாலையில், உறவினர்கள் சிறைவாசிகளைக் காண்கின்றபோது, கண்ணாடித் திரைப் போடப்படுகிறது. அந்தக் கண்ணாடித் திரையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறைச்சாலையிலே பணிபுரிகிற காவலர்கள், அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வரிசையாகப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள், படித்தது போதும். அடுத்தது திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை, சிறை, சட்டம் சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின் மீது

சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவது என்ற அடிப்படையில் மீன் உற்பத்தியை பெருக்குவது என்பது என்னுடைய முக்கியமான கோரிக்கையாகும். எப்படி அரிசி, கோதுமை மற்ற உணவுப் பொருட்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அந்த அடிப்படையிலே மீன் வளத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்தாகும். அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற இறால் ஆனாலும் சரி, சுறா ஆனாலும் சரி, வெளிநாடுகளுக்கு நாம் மீனை ஏற்றுமதி செய்வதன் மூலமாக அன்னியச் செலாவணியை அதிகமாகப் பெருக்குகின்றோம். அந்த வகையிலே இந்த மீன் வளத்தை இன்னும் அதிகமாகப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று, உள் நாட்டிலே இருக்கின்ற குளம், குட்டைகளிலே, நீர்த்தேக்கங்களிலே மீனை வளர்த்து, குறிப்பாக 3 ஆண்டுகாலம் தண்ணீர் இருக்கின்ற பகுதிகளிலே, நாம் உள்நாட்டிலே மீனை வளர்ப்போமேயானால், அது இன்னும் சிறப்பாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற 4 நீர்த்தேக்கங்களில், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு 1, சிற்றாறு 2, இந்தப் பகுதியிலே அதிகமாக மீனை வளர்க்கின்றார்கள். ஆனால், அங்கு சற்று திருட்டுப் போகிறது. இதைக் கண்டுபிடிப்பதற்காக விசைப் படகுகள் அவர்களுக்கு தேவைப்படுகிறது. குறிப்பாக அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவைப் பற்றி இந்திய தேசம், பாரத தேசம் என்றெல்லாம் சொல்கின்றோம். ஆனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் பிற மாநிலங்களுக்குச் சென்றால், அவர்களை மீன் பிடிக்க அனுமதிப்பது இல்லை. கர்நாடகம் ஆனாலும் சரி, கேரளா ஆனாலும் சரி, கோவா ஆனாலும் சரி. இங்கே மீன் இல்லாத காலங்களிலே, பிற மாநிலங்களுக்குச் சென்றால், அங்கே அவர்களைத் துன்பப்படுத்துகின்றார்கள். வலைகள், வள்ளங்கள், படகுகள் எல்லாம் அழிக்கப்படுகின்ற மிகக் கேடான நிலை ஏற்படுகின்றது. அதை மாற்றுவதற்கு நாம் மத்திய அரசாங்கத்தோடு பேசி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, படகு, கட்டுமரம், வலை ஆகியவற்றை வாங்குவதற்கு மானியமும், கடனும் கொடுக்கப்படுகின்றன. ஆனால், படகு என்று சொல்லும்போது கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் ஒரு ஆள் ஒரு படகு வைத்து இருப்பான், இல்லை என்று சொன்னால் 2 படகுகள் வைத்திருப்பான். அதற்கு மேலே இருக்காது. அவர்களை ஒரு முதலாளி என்ற பார்வையிலே பார்க்காமல், அவர்களுக்கும்



வலைகளை வாங்குவதற்கும், படகுகளை வாங்குவதற்கும் மானியமும், கடனும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்று வீடுகளை தாராளமாகக் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். அதை வரவேற்கின்றேன். ஆனால், மாநிலம் பூராவிலும் பரவலாகக் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதுபோன்று ஏற்கெனவே கட்டித்தரப்பட்ட வீடுகள் பழுதடைந்திருக்கின்றன. அதைப் பழுதுபார்க்க உதவி செய்ய வேண்டும். அதுபோன்று மின்சார இணைப்புகளே கிடைக்காத பகுதிகள் இருக்கின்றன. அங்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றபோது அந்தப் பகுதியிலே புதிய சாலைகள் வருகின்றன. அங்கு தெரு விளக்குகளை இலவசமாகக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கடலோரச் சாலைகள் என்று சொல்கின்றபோது, தாங்கள் பிடித்து வருகின்ற மீன்களை வேகமாக ஏற்றிச் செல்வதற்காக கடலோரச் சாலைகளை அமைக்க வேண்டும். கடலோரச் சாலைகள் என்று சொல்கின்றபோது, அந்தப் பகுதியிலே வருகின்ற கால்வாய்கள், ஏரியில் கால்வாய், இவற்றைத் தாண்டுகின்றபோது வருகின்ற பாலங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று, மீன் பிடித் துறைமுகங்கள், சிறிய துறைமுகங்களை நாம் பார்க்கின்றோம். குளச்சல் துறைமுகத்தைப் பொறுத்தமட்டிலே, அது ஒரு மீன்பிடித் துறைமுகம் மட்டுமல்ல. அந்தப் பகுதியிலிருந்து தும்பையும், மணலையும், மற்ற பொருட்களையும் ஏற்றிச் செல்கின்ற துறைமுகமாக அதை அபிவிருத்தி பண்ணுவதோடு, பக்கத்திலே அதை இணைத்து மீன்பிடித் துறைமுகமாகவும் கட்டித்தர வேண்டும். அதுபோன்று கடல் அலையிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு தூண்டில் வளைவு—ஏற்கெனவே மார்த்தாண்டம் துறையிலே ஒன்று வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கை வைத்து இருக்கின்றோம்—அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதுபோன்று கடலோரத் தகவல் தொடர்பு நிலையம், மார்த்தாண்டம் துறையிலே ஒன்று வருவது சௌகரியமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து சிறை சம்பந்தமாக நேரம் அதிகமாக இல்லாத காரணத்தினாலே இரண்டு வரியிலே சொல்லிவிடுகிறேன்.

[திரு. டி. மணி] [1997 ஏப்ரல் 11

பிற்பகல் 1-20

சிறையைப் பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். லாக்-அப் என்று சொல்வார்கள். எங்கள் ஊரிலே அந்த லாக்-அப்பினுடைய அகலம் என்பது 8 அடி, நீளம் என்பது 20 அடி. 16 மாதம் அதிலே படுத்து தூங்கி வெளியிலே வருகின்றபோது கண் தெரியாது. இந்தச் சிறையைப் பற்றி வேறுவிதமாக நாம் சொல்கின்றோம். ஆனால் இந்தச் சிறையை விஸ்தரிக்க வேண்டும். இடையிலே ஒரு குறுக்குச் சுவர் இருக்கிறது. அதை உடைத்தால் கொஞ்சம் சௌகரியமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அதுபோன்று சிறையிலே இருக்கக்கூடிய கைதிகளுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் இருக்கின்றதே அதைச் சற்று உயர்த்த வேண்டும். அவர்களுக்கு உணவுக்காக நாம் கொடுக்கின்ற செலவு போதுமானதாக இல்லை. சற்று உயர்த்த வேண்டும்.

பத்திரிகை என்பது 20 கைதிகளுக்கு ஒரு பத்திரிகை வீதமாக நாம் கொடுக்க வேண்டும். அதுபோன்று வெளியிலே வருகின்றபோது தொழிலைக் கற்றுக்கொண்டு வருவதற்கான ஏற்பாடு என்ற முறையிலே சிறைக்குள்ளே பல்வேறுவிதமான தொழில்களைக் கற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுபோன்று இன்னொரு விசேஷமான நிகழ்ச்சி. அதாவது நன்னடத்தை ஜாமீன் பிரிவு என்று ஒன்று இருக்கிறது. அது அந்தச் சிறையோடு இருக்காமல் அதற்கென்று ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்துவதன் மூலமாக பின்னால் வருகின்ற காலத்திலே அவர்களுடைய நடத்தை என்ன என்பதைச் சரிவர தெரிந்து கொள்ள முடியும். அந்த வகையிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இன்று நாகர்கோயிலில் ஒரு சப்-ஜெயில் இருக்கிறது. அது போதுமானதல்ல. அதைக் கொஞ்சம் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டை சிறையிலே இருக்கக் கூடிய கழிப்பறைகள் போதுமானதாக இல்லை. (மணியடிக்கப்பெற்றது) கழிப்பறைகளையாவது நாம் சரியாக-சீராக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து நம்முடைய நிர்வாகம். நீதி நிர்வாகத்தை பொறுத்தமட்டிலே அதிகப்படியான வழக்குகள் இன்றைக்குத் தேங்கி இருக்கின்றன. 15 வருடம் 16 வருடம் அரசாங்கத்தினுடைய வழக்குகள், நகராட்சிகளுடைய வழக்குகள், பஞ்சாயத்துக்களுடைய வழக்குகள் தேங்கி இருக்கின்றன. இந்த வழக்குகளையெல்லாம் அவசரமாக முடிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதுபோன்று உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு கிளை மதுரையிலே ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கையைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. சி. ஞானசேகரன். உங்கள் உரையில் எந்த குறுக்கீடும் மாண்புமிகு அமைச்சர்கள் செய்ய மாட்டார்கள். 5 நிமிடத்திலே உங்கள் பேச்சை முடிக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள், மீன் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் மீன் வளத்தைப் பற்றிப் பேசுகின்றேன். ஏற்கனவே நம்முடைய அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விற்பனை வரி சம்பந்தமாக ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே 11%-ஆக இருந்த மீன் வலைக்கான வரி விதிப்பு 4%-ஆகக் குறைய இருக்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அதிலே இந்த மீன் வலை....

(உறுப்பினர் ஒரு வலையை அவையில் காண்பித்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் காண்பிக்கக் கூடாது. கீழே வையுங்கள். நீங்கள் 4 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். இதென்ன உங்கள் இஷ்டத்திற்கு வந்து நடுவிலே எதையோ தூக்கிக் காண்பித்துக்கொண்டிருப்பதா? இந்த வேலையெல்லாம் வைத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் அறையிலே வந்து சொல்ல வேண்டும். இல்லையென்றால் அமைச்சரிடம் கொண்டுபோய் தனியாகக் காண்பிக்க வேண்டும். பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடம் காண்பித்துவிட்டேன். இதை 'மால்' என்று சொல்வார்கள். 'மாலு'-க்கு தமிழக வரலாற்றிலேயே இதுவரை எப்போதுமே வரியே விதிக்கப்பட்டது கிடையாது. ஆனால் இப்போது மீன் வலைக்கு 4% என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்த பின்னால் மீனவர்களிடையே ஒரு பதட்டம் நிலவுகிறது. இதிலே புளோட் அல்லது இரும்பு அல்லது சில இணைப்புகளோ போடாமல் இருந்தால் அதற்குப் பெயர் 'மால்'. இந்த மாலுக்கு இதுவரை வரி விதிப்பே கிடையாது. இதுவும் வலைதான். உண்மையிலேயே இதுவும் வலை. ஆனால் 'மால்' என்று சொல்வார்கள். ஆகவே இதற்கு வரி இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரு அறிவிப்பை - விற்பனை வரி அதிகாரிகள் அங்கே சென்று இதற்கு வரி விதிப்பு கூடாது என்ற நிலையை - அறிவிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கச்சத் தீவிலே மீன் பிடிக்கின்ற உரிமையை நாம் எப்படியாவது பெற்று அங்கே நம்முடைய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். தப்பித் தவறி அந்த எல்லை தெரியாமல் போய்விட்டால் - இப்போதுகூட நம்முடைய தமிழகத்து மீனவர்கள் 34 பேர் இலங்கை கடற்படையினால் பிடிக்கப்பட்டு இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விடுதலை செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு 4,000 வீடுகள்தான் கட்டுவதாக இப்போது அறிவித்திருக்கிறீர்கள். 4,000 வீடுகள் என்பது போதாது. குறைந்தபட்சம் 20,000 வீடுகளையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் போராடிப் பெற்று மீனவர்களுக்குக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை இராயபுரம், மைலாப்பூர், ஆர்.கே. நகர் போன்ற இடங்களில் மீனவர்கள் வசிக்கக்கூடிய வீடுகள் எல்லாம் அடிக்கடி தீக்கிரையாகி விடுகின்றன. ஆகவே, தீப்பற்றாத வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதேபோல் தென் மாவட்டங்களில் கடற்கரை ஓரங்களில் இருக்கக்கூடிய மீனவர்களுக்கும் தீப்பற்றாத வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீதி நிருவாகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு உரிய இடமான அந்த மதுரை மாநகரிலே உடனடியாக நாம் உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு கிளையைக் கொண்டு போய் அந்த இடத்திலே வைக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலும் அதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நீதித் துறைக்கும் நம்முடைய நிர்வாகத்திற்கும் இடையே ஒரு இடைவெளி இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பு செய்கிறார், மதுரையில் உடனடியாகக் கிளை துவக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நீதித் துறையைச் சார்ந்து இருக்கக்கூடிய நீதி அரசர்கள் அங்கு நாங்கள் போக மாட்டோம், அந்த இடத்திலே இப்போது இருக்கக்கூடிய



கட்டிடத்தில் எங்களுக்குப் போதிய வசதிகள் இல்லை என்று எல்லாம் சொல்லி அங்கே போகாத காரணத்தினால், இங்கே இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் மற்றவர்கள் எல்லாம் ஒரு போராட்டத்திலே குதித்து பல நாட்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதிலே என்ன சிரமம் என்பதை நீங்களும். இந்த அரசும் நீதித் துறையைச் சார்ந்து இருக்கக்கூடிய நீதி அரசர்களோடு பேசி உடனடியாக ஒரு காலக் கெடுவை வைத்து அந்த இடத்திலே மதுரைக்கு உடனடியாக உயர்நீதிமன்றத்தினுடைய கிளை சென்று ஆக வேண்டும்.

இன்றைக்கு நீதி நிருவாகத்திற்கும் அதேபோல் இங்கே இருக்கக்கூடிய நிருவாகத்திற்கும் இருக்கக்கூடிய இடைவெளியை யார் தான் இந்த 'கேப்பை ஃபில் அப்' செய்யப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. நீதித் துறை என்பது நம்மோடு தொடர்பு இல்லாத ஒரு துறையாகவே இருந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை தமிழகத்திலே இருக்கிறதோ என்ற அச்சம் தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிறது. ஆகவே நாம் பணத்தை எல்லாம் கொடுத்து இருக்கிறோம். நீதித் துறை என்பது நம்முடைய ஒரு அங்கம். நீதி நமக்கு வேண்டும்தான். நாம் கூறக்கூடிய, மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத நீதித் துறையால் நிச்சயமாக எந்த வகையிலும் பலன் இருக்க முடியாது. அந்தப் பகுதியினுடைய மக்கள் உடனடியாக அந்த இடத்திலே உயர்நீதி மன்றத்தினுடைய கிளை வரவேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கின்ற நிலையில் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடங்கள் ஆகி விட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்குத்தான் நான் இப்போது கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டு மதுரைக்கு அது வந்தால், அதிலே எங்களுக்கு ஒன்றும் பெருமை இல்லை. இப்போது உங்களுடைய உரையை முடியுங்கள். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடிக்கு ஒரு சப்-கோர்ட் உடனடியாக வேண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தத்தில் ஒரு சப்-கோர்ட் வேண்டும். அதேபோல் பேராவூரணியில் உடனடியாக ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும், அதேபோல் முனிசிப் கோர்ட்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரிப்பதற்காக ஒரு நீதி மன்றத்தை ஸ்பெஷல் கோர்ட்டை வைத்திருக்கிறோம். அந்த ஸ்பெஷல் கோர்ட்டில் இன்னும் கைதிகளும் சரியாக வந்து கூறவில்லை. அதேபோல் சாட்சிகளும் அந்த கோர்ட்டில் வந்து கூறவில்லை. ஆகவே அந்த விசாரணையில் ஒரு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. கொலைக் குற்றவாளிகள் இன்னும் பிடிபடாமல் ஆங்காங்கே இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலையில் உடனடியாக நீதி கொடுக்க முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, ராஜீவ் காந்தி வழக்கில் ஈடுபட்டிருக்கக்கூடிய குற்றவாளிகளை உடனடியாகப் பிடித்து வந்து சாட்சிகளையும் நீதிமன்றத்திலே ஒப்படைத்து அந்த விசாரணையில் உடனடியாக தீர்ப்புக் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

சந்தன மர வழக்குகளை எல்லாம் விசாரிப்பதற்கு என்று ஒரு தனி நீதிமன்றம் இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தன மரம் எல்லாம் இந்த இலாகாவிலே வராது, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. வெங்கடேசன் அவர்கள் 3 நிமிடங்கள் பேசலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து ஆகிவிட்டது, உட்காருங்கள். சந்தன மரம் பற்றி எல்லாம் நீங்கள் கேட்டு, நீதி விசாரணை எல்லாம் வைத்தாகி விட்டது. அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா, நான் உட்காரச் சொன்னால் உட்கார்ந்து விடுவேன் என்று. ஆகவே உட்காருங்கள். திரு. பே.வே. **ஸ்ரீ.** வெங்கடேசன்.



**திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நீதி நிருவாகம், சிறைத் துறை மற்றும் மீன்வளத் துறையில் பேச அனுமதித்ததற்காக நன்றி கூறி, என்னுடைய உரையை நான் துவக்குகிறேன்.

கடந்த 135 ஆண்டுக் காலமாக தொன்மை வாய்ந்த சென்னை உயர்நீதிமன்றத்தினைத் தன்னகத்தே கொண்டு பெருமைப்பட்ட இந்த தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இன்னும் சீரான முறையில் நீதிமன்றங்கள் எல்லாம் சரியான பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற நீதிமன்றங்களில் மேஜை, நாற்காலிகள் கூட இல்லாமல் அங்கே இருக்கின்ற வழக்கறிஞர்களுக்குத் தனி அறை கூட ஒதுக்கப்படாமல் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே இருக்கின்ற வழக்கறிஞர்களுக்குச் சரியான முறையில் நூலகங்கள் அமைத்துக் கொடுக்காமல் அங்கே பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது.

அதேநேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமர்வு நீதிமன்றம் ஒன்று இருக்கிறது. எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் அமர்வு நீதி மன்றம் ஒன்று கிருஷ்ணகிரி பகுதியில் மட்டும் இருக்கிறது. எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தை இரண்டு நீதி மாவட்டங்களாகப் பிரித்து அரூர், பெண்ணாகரம், பாலக்கோடு, தர்மபுரி ஆகியவற்றை ஒரு பகுதியாகப் பிரித்து அங்கே ஒரு அமர்வு நீதிமன்றத்தை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பே.வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** அதேபோல, கிருஷ்ணகிரியிலே, கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு, தேன்கனிக்கோட்டை, ஒசூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி ஆகிய 4 வட்டங்களைப் பிரித்து கிருஷ்ணகிரியிலே ஒரு அமர்வு நீதிமன்றத்தைத் துவக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே கடந்த கால ஆட்சியிலே நவம்பர் மாதத்திலே, 1994-இல் ஆர்.ஓ.சி. 1/37 ஏ/94-ஜி, ஜூடிஷியல், நாள் 19-9-94 அன்று அமர்வு நீதிமன்றம் தர்மபுரியிலே அமைக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தும் இன்னும் அது அமைக்கப்படாமல் இருக்கிறது.

[திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்] [1997 ஏப்ரல் 11

ஆகவே, உடனடியாக அங்கே அமர்வு நீதிமன்றத்தை அமைக்கப் பாடுபட வேண்டும். கடந்த 5-3-1997-இல்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலே எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் எல்லாம் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே. அதைக் கருத்திற்கொண்டு ஒரு அமர்வு நீதிமன்றத்தை உடனடியாக அங்கே அமைக்க வேண்டும்.

பெண்ணாகரத்திலே நீதிமன்றம் இல்லை. பாலக்கோட்டிலே இருக்கின்ற நீதிபதிதான் அங்கே வாரத்திற்கு இரண்டு நாட்கள் போய் விசாரிக்கின்றார்கள். ஆகவே, பெண்ணாகரம் வட்டத்திலே தனியாக நீதிமன்றத்தை அமைத்துத் தர வேண்டும்.

பாலக்கோட்டிலே கட்டிட வசதி இல்லை. பாலக்கோட்டிலே இருக்கின்ற நீதிமன்றத்திற்குக் கட்டிட வசதிகள் அமைத்துக் கொடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

சிறைத் துறையிலே 135 ஆண்டுகள் நாம் அனுபவம் பெற்றிருந்தாலும் கூட இன்னும் வசதிகள் அங்கே செய்து கொடுக்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, சிறைக் காவலர்கள் இன்னும் ஏழ்மை நிலைமையிலே இருக்கின்றார்கள். அவர்களுக்கு நல்லமுறையிலே வீடுகள் கட்டிக் கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீன் வளத் துறையிலே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்வது, நம்முடைய அரசாங்கம் மீன் வளத் துறையைப் பாதுகாப்பதற்காக கிராமங்களிலே ஃபார்ம்ஸ்-ஐ நாம் உருவாக்கியிருக்கின்றோம். அந்த ஃபார்ம்ஸ் மூலமாக ஏரிகளிலே மீன் வளர்த்துப் பாடுபடுகின்றோம். ஆனால், இப்பொழுது கிராமத்திலே இருக்கின்றவர்கள் ஒன்றுகூடி அந்த ஃபார்ம்ஸ் மூலமாக மீன் வளர்க்க ஆசைப்பட்டாலும்கூட அங்கே மீன் பிடிப்பதற்கு உண்டான வசதியை அவர்கள் செய்து கொடுப்பது இல்லை. ஊர் கூடி அந்த மீன்களை நாங்கள்தான் விற்பனை செய்வோம், உங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று ஊர்க்காரர்களெல்லாம் போராடுகின்றார்கள். ஆகவே, அதைக் கவனத்திற்கொண்டு, அந்த ஃபார்ம்ஸ்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை நல்கிய தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.



1997 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என்னை இரண்டாவது முறையாக பேச வாய்ப்பளித்த மீனவர்களின் கலங்கரை விளக்காக விளங்குகின்ற நமது மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், எனது திருச்செந்தூர் தொகுதி மக்களுக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்களுக்காக நல்ல பல திட்டங்களை நமது மாண்புமிகு முதல்வரவர்கள் அளித்து, அவற்றைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டியும், சிலர் சில கோரிக்கைகளை வைத்தும் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்கின்ற மீனவர்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, குடிநீர் வசதி, சாலை வசதி, மின்வசதி, மருத்துவ வசதி போன்றவற்றைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, 1997-98-ஆம் ஆண்டுக்காக 26.62 கோடி ரூபாய் நிதியை நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள். அதற்காக எனது நெஞ்சார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மீன் வளத் துறையானது பழம்பெரும் துறையாகும். 1907-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துறை 2007-ஆம் ஆண்டு, நூற்றாண்டைக் கொண்டாடவிருக்கின்றது. அத்தருணத்திலும் நமது மாண்புமிகு முதல்வரவர்கள் முதல்வராக இருந்து மீனவர்களுக்காக இன்னும் சரித்திரம் படைக்கக்கூடிய அளவிற்குத் திட்டங்களைத் தீட்டித் தர வேண்டும் என்று என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மீனவர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தைத் தந்தது நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். கடற்கரையோரத்தில் குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்த மீனவர்களுக்கு 1975-76-ஆம் ஆண்டில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் நமது மாண்புமிகு முதல்வரவர்கள்.

அந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், நெய்தல் நில நாயகன் அவர்களின் பெயரைச் சூட்டி

இங்கே மீனவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறார்கள். அது சென்ற நிதியாண்டிலிருந்து ம. சிங்காரவேலர் நினைவு இலவச வீட்டு வசதித் திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த ஆண்டும் 4,000 வீடுகள்—ஒரு விளக்குடன் கூடிய 4,000 வீடுகள் கட்டித் தர அரசு முன் வந்துள்ளது; நிதிகள் ஒதுக்கப்பட்டு உள்ளன.

கடல் மீனவர்களுக்கு மட்டும் வீடுகள் கட்டிக் கொண்டிருந்தார்கள். எந்த அரசுமே, யாருமே உள்நாட்டு மீனவர்களைப் பற்றி சிந்திக்க வில்லை. ஆனால், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், நீண்டநாள் கோரிக்கையான உள்நாட்டு மீனவர்களின் கோரிக்கையைக் கருணையோடு கண்ணோக்கி இந்த ஆண்டே 500 வீடுகள் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டித்தர முன்வந்திருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

பெரும்பாலான மீனவ கிராமங்கள் ஊராட்சியை விட்டு ஒதுங்கியே உள்ளன. ஆகவே, அங்கு மின்சார வசதி இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், சென்ற 1996-97-ஆம் ஆண்டு 158 மீனவ கிராமங்களுக்கு 1,205 விளக்குகள் அமைக்க ரூ.50 இலட்சத்தை அளித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் இந்த ஆண்டும் தொடரப்படும்.

மீனவர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு மீன் பிடிக்கச் செல்லும்போது அல்லது விபத்தின் காரணமாக இறந்தாலும், முழு ஊனமுற்றாலும் 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. அரை ஊனம் அடைந்தால் 12,500 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. 25-3-1997 அன்று மத்திய அரசு அந்த நிதியை, காப்புறுதித் திட்டத்தை 35 ஆயிரமாக உயர்த்தியது. அப்படியென்றால் அரை ஊனம் அடைந்தவர்களுக்கு 17,500 ரூபாய். மீனவர்களின் நீண்டநாள் கோரிக்கையான இந்தக் காப்புறுதித் திட்டத்தில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் 15 ஆயிரம ரூபாயை மாநில அரசு திட்டமாகவே சேர்த்து, மீனவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயாக வழங்க அறிவித்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தத் திட்டத்தைத் திறமையாகச் செயல்படுத்தி வந்தது இந்தியாவிலேயே தமிழகம்தான். இதைச் சிறந்த முறையில் செயல்படுத்தி வந்திருக்கிறது என்பதற்காகப் பீகார் மாநிலத்தில் பாட்னாவில் நடைபெற்ற நான்காவது தேசிய மீன்வளக் கூட்டுறவு காங்கிரசில்



தமிழக மீன்வளத் துறைக்கு முதல் பரிசை வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீடுகள் கட்டிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் 1976-ஆம் ஆண்டு நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள், மீனவர்களால் பழுது பார்க்க முடியாத சூழ்நிலை இருந்து வந்தது. அதையும் கண்ணுற்ற நமது முதல்வர் அவர்கள் இரண்டாயிரம் வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு, ஒரு நபருக்கு ரூ. 5 ஆயிரம் வீதம் நிதியளித்திருக்கிறார்கள். இதற்கு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான மேலமணக்குடி, கீழமணக்குடி பாலத்தைக் கட்டுவதற்காக 6 கோடி ரூபாய் நிதியை அறிவித்து, 1997-98-ஆம் ஆண்டிலேயே நமது முதல்வர் அவர்கள் தந்துள்ளார்கள். அதற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் காலத்தில், 4 மாதங்களுக்கு அவர்களால் மீன் பிடிக்கச் செல்ல இயலாத நிலைமை ஏற்படுகிறது. அப்போது அவர்களுக்கு சேமிப்பு நிவாரணமாக மீனவர்கள் 8 மாதங்களுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்கள் பங்காக 45 ரூபாயும், தமிழக அரசின் பங்காக 45 ரூபாயும், மத்திய அரசின் பங்காக 45 ரூபாயும் சேர்த்து 1,080 ரூபாயாக அளிக்கப்பட்டது. 1991-ஆம் ஆண்டிலேயிருந்து இந்தத் திட்டம் செயல்பட்டு வந்தது. இது 1997-ஆம் ஆண்டு வரைதான் செயல்பட்டு வர முடியும். இதில் மத்திய அரசு பங்கேற்காது என்று கூறிவிட்டதால், தமிழக அரசு மட்டும் தனது பங்கை மீனவர்களுக்கு தரும். ஆகவே, மீனவர்கள் பங்கான 360 ரூபாயும், தமிழக அரசின் பங்கான 360 ரூபாயும் சேர்த்து 720 ரூபாய் மட்டும்தான் மீனவர்களுக்கு சேமிப்பு நிவாரணமாக வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரம்பரிய மீனவர்கள் மீன் பிடித்து வரும் அண்மைக் கடல் பகுதியில் அவர்களுக்கு நிரந்தரமாக மீன்கள் கிடைக்கும் வகையில் மீன் வளத்தைப் பேணுவது குறித்து அவர்களுக்கு விளக்கவும், பாரம்பரிய மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்குமிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும் வங்காள விரிகுடா திட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அந்தத் திட்டத்திற்காக ரூபாய் 10 இலட்சத்தை ஒதுக்கியுள்ளார்கள். மேலும், பாரம்பரிய மீனவர்கள் மீன்

[ திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் ] [1997 ஏப்ரல் 11]

பிடிப்பினை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு அண்மைக் கடல் பகுதியில் இரண்டு இடங்களில் 8 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு மீன் உறைவிடங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உறைவிடங்களில் மீன்கள் அதிகமாகத் தங்குவதால் மீனவர்கள் அதிக அளவில் மீன் பிடிக்க ஏதுவாக அமையும்.

மீனவர்கள் அதிக தூரம் சென்று மீன் பிடித்து வர வேண்டும். பாரம்பரிய மீனவர்கள், கட்டுமரத்தில் செல்பவர்கள். ஆகவே, அவர்களுக்கு உட்பொருத்தும் இயந்திரம், வெளிப்பொருத்தும் இயந்திரங்களை அரசு வழங்கி வந்தது. இந்த உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களானது 50 விழுக்காட்டில், அதாவது அதிகபட்சமாக 12,000 ரூபாயும், 10,000 ரூபாயும் என்ற வீதத்தில் மீனவர்களுக்கு மானியமாக மத்திய, மாநில அரசுகள் வழங்கி வந்தன. இந்த இயந்திரங்களை வாங்குவதற்கு மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற சூழ்நிலையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துக்கூறியபோது, மத்திய மாநில அரசுகள் தரும் ரூபாய் 12,000 மற்றும் ரூபாய் 10,000-த்துடன், நமது மாநில அரசு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு வெளிநாட்டு இயந்திரங்களுக்கு ரூ 3,000-யும், உள்நாட்டு இயந்திரங்களுக்கு ரூ. 2,000-யும் மீனவர்களுக்கு மானியமாக வழங்க முன்வந்துள்ளது என்பதைப் பெருமையுடன் கூறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 45 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-40

மேலும், மீனவர்கள் நாள்தோறும் சென்று மீன், இறால் போன்றவற்றைப் பிடித்து வரும்போது. மீன்களும், இறால்களும் கெடாமல் இருப்பதற்குக் குளிர்பதனப் பெட்டியை 25 விழுக்காடு மானிய விலையில் அவர்களுக்கு வழங்க இந்த அரசு முன்வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் மீன்பிடி தங்கு தளங்கள் அமைப்பதற்காக ஆய்வுகள் நடத்தப்பட்டு விரிவான தொழில் நுட்ப, பொருளாதார ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகத்தில் அதிகரித்து வரும் விசைப் படகுகளில் கூடுதலாகப் பிடிக்கப்பட்டு வரும் மீன்களை ஏலம் விடுவதற்காக ஒரு



1997 ஏப்ரல் 11] [ திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் ]

மீன் ஏலக்கூடம் கட்டுவதற்காக ரூ. 13.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மல்லிப்பட்டினம் ஆர்.சி.சி. மீன் இறங்கும் தளங்களில் சிறப்புப் பழுதுகளைப் பார்ப்பதற்காக ரூ. 13.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் பழையாறு மீன்பிடி துறைமுகத்தில் தூர் வாரும் பணி, பராமரிப்பு, ஏலக்கூடம், சாலைவசதி, மின்சார வசதி போன்ற சிறப்புப் பழுது பார்ப்பு வேலைகளை நடத்துவதற்காக ரூபாய் 8 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

ஆற்று முகத்துவாரங்களில் தூர் வாருவதற்காக எந்த அரசும் இதுவரையில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், 1996-97-ல் இதற்காக நமது அரசு 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது. மீனவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பனை மையங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக அவர்களுக்குச் சாலை வசதி இல்லாததால் 1996-97ஆம் ஆண்டு இதற்காக ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார்கள். 36 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க நமது அரசு முன்வந்துள்ளது.

நாகப்பட்டினம் மீனவர் பயிற்சி நிலையத்தில் கட்ட சிறப்புப் பழுது வேலைகளை மேற்கொள்வதற்காக 1997-98-ஆம் ஆண்டு 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் 128 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. கடலில் பிடிக்கப்பட்டு வரும் மீன்களை வேறு ஒரு இடத்திற்கு உடனடியாகக் கொண்டு சென்று விற்பதற்கு, அவர்களுக்கு மூன்று சக்கர வாகனங்கள் 100 சதவிகித மானியத்தில் 50 மீனவ மகளிர் சங்கத்திற்கு தருவதற்காக சென்ற நிதியாண்டில் 10 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டது. ஆனால், அதன் விலை அதிகரித்துவிட்டது. இப்போது நாம் அதை மானியத்தில் வழங்க முடியாது என்ற நிலை நமக்கு ஏற்பட்டபோது. நாங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை அணுகினோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'இல்லை, அது எவ்வளவு விலையானாலும் சரி, அதை மீனவ மகளிருக்கு இலவசமாகவே வழங்க வேண்டும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி அதிகமாக 17.50 சதவிகிதம் நிதியை ஒதுக்கித் தந்தார்கள்.

மீன் பிடிக்கப்படும் இடங்களிலிருந்து, மீன்களை விற்பனை செய்யும் இடங்களுக்கு, மீனவ மகளிர் சுமந்து செல்வதற்காக அலுமினியப்

பாத்திரங்களை 1997-98-ஆம் ஆண்டில் 50 விழுக்காடு மானியத்தில் 7,500 மீனவர்களுக்கு வழங்குவதற்காக 8.25 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

மீனவ மகளிர் கடற்கரையில் மீன்களை உலர்த்துவதற்கு இடம் இல்லாத காரணத்தினால் உலர்த்தும் அடுக்கு, ஒவ்வொரு மீனவ மகளிருக்கும் 25 சதவீத மானியத்தில் 100 கிலோ நெத்திலி கருவாடு காய வைப்பதற்காக 5 அலகுகள் வழங்கப்படுவதற்கான 1.25 இலட்சம் ரூபாய இந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த கடல் மீன் வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மீனவக் கிராமங்களிலுள்ள மீனவக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மீன்பிடிச் சாதனங்களை வழங்குவதற்காக 1993-94-ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டு காலத்திற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் ரூபாய் 15.88 கோடி ஒப்பளிக்கப் பட்டது. இரண்டாவது கட்டமாக அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 48 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. இதனால் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடி கலன்களும் எல்லா வகையான மீன்பிடி வலைகளும் 16,350 மீனவர்களுக்கு வழங்கப்படும்.

பிற்பகல் 1-45

1996-ஆம் ஆண்டு ஜ ன் திங்களில் வீசிய கடும் புயலின் காரணமாக சென்னை மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடி விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் 60 மீனவர்கள் கரை திரும்பவில்லையென்று கருதி, ஒவ்வொரு மீனவர் குடும்பத்திற்கும் ரூ. 5,000 வீதம் 60 குடும்பங்களுக்கும் நிவாரணமாக ரூ. 3.00 இலட்சத்தை இந்த அரசு வழங்கியது.

வங்காள தேசக் கடற்கரையில் ஒதுங்கி அங்கே சிறை வைக்கப் பட்டிருந்த 16 மீனவர்கள் தமிழக அரசால் மீன்துறை அலுவலர்கள் மூலம் சென்னை[illegible] அழைத்து [illegible]ப்பட்டனர். [illegible]ருசியுள்ள 17 மீனவர்கள் மற்றும் இறந்து போனதாகக் கருதப்படும் 9 மீனவர்களின் குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 50,000 வீதம் 26 குடும்பங்களுக்கும் ரூ. 13.00 இலட்சத்தை பாரதப் பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

புயல் காலங்களில் விசைப்படகில் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு





கடல் மீன் பிடிப்பு ஒழுங்குமுறை சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் உயிர்காக்கும் சாதனங்கள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் ஆகியவற்றை மீன்பிடி விசைப்படகுகளில் கட்டாயமாக எடுத்துச்செல்ல வேண்டும். மேலும் இச்சாதனங்களை எடுத்துச் செல்லாத மீன்பிடி விசைப்படகுகளின் உரிமங்கள் இரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

1997-98 ஆம் ஆண்டில் சென்னை மீன்பிடி துறைமுகத்திலிருந்து இயங்கும் மீனவர்களுக்கு 850 தகவல் தொடர்பு சாதனங்களும், கடலூர் பகுதி மீனவர்களுக்கு 450 தகவல் தொடர்பு சாதனங்களும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து இயங்கும் மீன்பிடி விசைப்படகு மீனவர்களுக்கு 200 தகவல் தொடர்பு சாதனங்களும் வாங்க 25 விழுக்காடு மானியம் அளிக்க ரூ. 75.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கடலூர் மற்றும் சின்னமுட்டத்தில் இரு கரையோரத் தகவல் தொடர்பு நிலையங்கள் அமைத்திட ரூ. 8.65 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. பாக் ஜலசந்தி பகுதியில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து தமிழ்நாட்டு மீனவர்களிடையே பெரும் பாதிப்பையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தி வருகின்றது. இலங்கை கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது நடத்தி வரும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் குறித்த நிகழ்வுகள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இவ்வாறான நிகழ்வுகள் வருங்காலத்தில் தடுத்து நிறுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இந்தப் பேரவையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மீன்குஞ்சு உற்பத்திக்குத் தேவைப்படும் இடப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மிதவைக் கூடுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு முறையே பிரபலமானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, நடப்பு நிதியாண்டில் மீன்குஞ்சு வளர்ப்பிற்காக 50 மிதவைக் கூடுகள் வாங்க ரூ. 2.50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், தென்னாற்காடு-வள்ளலார் மற்றும் வடஆற்காடு-அம்பேத்கர் ஆகிய மாவட்டங்களில் மீன்குஞ்சு தேவையினைப் பூர்த்தி செய்திட நடப்பு நிதியாண்டில் தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்திலுள்ள லால்பேட்டை மீன்பண்ணையில் 2

சினைமீன் குளங்கள், 8 மீன்குஞ்சு வளர்ப்புக் குளங்கள் மற்றும் தேவையான நீர் வசதி செய்திட ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நன்னீர் இறால் பண்ணை வைக்க விழைவோர்களுக்கு தமிழக மானிய உதவியாக அதிகபட்சமாக ஒருவருக்கு ஒரு ஹெக்டேருக்கு மட்டும் ரூ. 30,000 வழங்கத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. இப்பண்ணை அனைவருக்கும் எடுத்துக்காட்டாக மாதிரிப் பண்ணையாக விளங்கும். அரசு தேவையான தொழில்நுட்பம் வழங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பு நிதியாண்டில் ரூ.15.00 இலட்சம் மானிய செலவில் சுமார் 50 ஹெக்டேர் நீர்பாப்பு நன்னீர் இறால் வளர்ப்பின்கீழ் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடலோரப் பகுதியில் நான்கு மண்டலங்கள் உள்ளன. இவற்றில் ஏற்கெனவே, இரண்டு மண்டலங்களில் இணை இயக்குநர் பதவிகள் உள்ளன. கடலோர மீனவர்களுக்காக இரவும் பகலும் அயராது பாடுபட்டு வரும் மண்டல அலுவலகத்தினை மேலும் சிறப்பாகச் செயல்படும் வகையில் நாகப்பட்டினத்திலுள்ள மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்) பதவியினை இணை இயக்குநர் பதவியாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஆணை விரைவில் வெளியிடப்படும்.

மேலும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணையில் மீன்குஞ்சு உற்பத்தி செய்திட இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவலை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தூத்துக்குடியில் சைக்கிள் நிறுத்துமிடம் அமைத்தால், அரசுக்கு வருவாய் வரும் என்று கூறினார்கள். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். விசைப்படகுகளைப் பழுதுபார்க்கும் பொறுட்டு, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், இதுகுறித்து கொள்கை அளவில் முடிவு எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மீன்வலைக்கு வரி ரத்து செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர்





அவர்களிடமும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களிடமும் இதுகுறித்து கலந்தாலோசித்து, இந்த மாத இறுதிக்குள் நல்லதொரு முடிவு இங்கே அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நலிவுற்ற மீனவர்களின் வாழ்வைச் செம்மையாக்க. மேலும் பல சீரிய திட்டங்களை அமல்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, வருங்காலங்களில் வரலாற்றில் இடம்பெறத் தக்க அளவில், மீனவர்களுக்கான நலத் திட்டங்கள் பலவற்றை இந்த அரசு நிறைவேற்றும்; அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இதுவரை நான் தந்த பதிலின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக் கொண்டு, மீன் வள மானியக் கோரிக்கையை ஏற்று, குறிப்பிட்ட தொகையை அரசுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கிலாந்து பிரதமராக இருந்த ஹெரால்டு வில்சன் அவர்கள் ஒருமுறை, ஓர் அரிய கருத்தைச் சொன்னார்கள். இங்கிலாந்திலே பிரதமராக இருப்பதற்கு ஆயிரம் பேர்களுக்குத் தகுதியிருக்கிறது; ஆனால் பதவி ஒன்றுதான் இருக்கிறது என்று சொன்னார். அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத்தில் சட்டப் பேரவைக்குப் போட்டியிட வாய்ப்பு இல்லாதவர்களானாலும் சரி, போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களானாலும் சரி, அமைச்சர்களாக வருவதற்கு நூற்றுக்கணக்கானவர்களுக்கு தகுதியும், திறமையும், அறிவும், அனுபவமும் இருக்கிறது. ஆனால் சில குறிப்பிட்ட இடத்தை மட்டும்தான், எங்களையெல்லாம் அண்ணாவிற்குப் பின் வழி நடத்திச் செல்கிற டாக்டர் கலைஞர் அவர்களால் அளிக்க முடியும். அப்படிக் குறிப்பிட்ட சிலரில் என்னையும் ஒரு பொருட்டாகக் கருதி, இந்த அரிய வாய்ப்பைத் தந்த தமிழினத் தலைவர், ஒரே தலைவர், ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதலில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைக்கு என்னுடைய பதிலை அளிக்க ஆசைப்படுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கை மீது 18 மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி,

[திரு. ஆலடி அருணா] [1997 ஏப்ரல் 11

மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன், மாண்புமிகு உறுப்பினர் திரு சிவபுண்ணியம், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆவுடையப்பன், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னார்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம், மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் ஆகியோர்கள் அரிய கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள். இவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் மிகுந்த அனுபவத்தின் அடிப்படையிலும், நியாயத்தின் அடிப்படையிலும், மக்களின் தேவைகளின் அடிப்படையிலும் சொல்லப்பட்ட கருத்துக்கள் என்பதை நான் இதயசுத்தியோடு ஏற்றுக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை நேர்மையாக, உண்மையாக வரவேற்று அரசு நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறது என்பதில் இரண்டுபட்ட கருத்து இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தத் துறையிலே நல்ல மாற்றத்தைச் செய்ய வேண்டும்; நல்ல வளர்ச்சியைச் செய்ய வேண்டும்; நல்ல முறையில் இதிலிருந்து பயனைப் பெற வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு, நீதித் துறையைப் பொறுத்தமட்டில் 22 வெட்டுத் தீர்மானங்களையும், சிறைச்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில் 45 வெட்டுத் தீர்மானங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். அத்தனை தீர்மானங்களையும் ஒழுங்காகப் படித்தேன். அந்த உணர்வுகளையெல்லாம் என் இதயத்திலே பதித்து வைத்திருக்கிறேன் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டத்துறை மற்றும் சிறைத்துறை மானியம் கடந்த ஆண்டு 12-8-1996-ல் இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த மாமன்றம், இந்த மானியக் கோரிக்கைகளை விவாதித்த நேரத்தில் பல கோரிக்கைகளை எழுப்பினீர்கள்; சில திட்டங்களைச் சொன்னீர்கள்; சில ஆலோசனைகளை வழங்கினீர்கள்; சில அரிய கருத்துக்களை வழங்கினீர்கள். அவற்றின் அடிப்படையில் இந்த அரசு உங்களுக்கு சில உறுதிகளை, சில திட்டங்களை, சில நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தது. உங்களுடைய கோரிக்கைகளுக்கு எதிர்காலத்தில்,



1997 ஏப்ரல் 11] [திரு. ஆலடி அருணா]

வருகிற 12 மாத காலத்தில் உங்களுக்கு என்னென்ன செய்வோம் என்று கடந்த மானியக் கோரிக்கையின்போது சொன்னோம் என்றால், புதிதாக நீதிமன்றங்கள் துவங்கப்படும்; புதிதாக நீதிபதிகள், அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள்; திருநெல்வேலியில் சட்டக் கல்லூரி அமைக்கப்படும்; தமிழ்நாட்டில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் துவக்கப்படும்; மதுரையிலே சென்னை உயர்நீதிமன்றக் கிளை அமைக்கப்படும்.

பிற்பகல் 1-55

ஊழல் செய்த முன்னாள் முதலமைச்சர் மற்றும் சக அமைச்சர்கள் மீது தீவிரமான, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்; சிறைச்சாலைகள் நவீனப்படுத்தப்படும்; கைதிகள் நல்லமுறையில் நடத்தப்படுவார்கள்; 8 மணி நேர வேலைத் திட்டம் ஒழுங்காக, கட்டங் கட்டமாக அமல் செய்யப்படும்; மறுவாழ்வு இல்லங்கள் சீர்திருத்தப்படும் போன்ற வாக்குறுதிகளையெல்லாம் இந்த மாமன்றத்திலே என்னுடைய மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது உங்களிடத்திலே சொன்னேன். இந்தக் கோரிக்கைகளையெல்லாம், இந்தத் திட்டங்களையெல்லாம் நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோமா அல்லது இவைகளெல்லாம் ஏட்டளவிலேதான் இருக்கிறதா; எந்த அளவிற்கு இவற்றை நிறைவேற்றியிருக்கின்றோம்; இதிலே எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறோம்; எந்த அளவிற்கு நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது என்பதையும் மாமன்றத்திற்குச் சுட்டிக் காட்ட வேண்டியது என்னுடைய தலையாய கடமையாகும்.

நான் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்களெல்லாம் நீதிமன்றங்களிலே வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன; தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளிலே நமக்கு நீதி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள். இந்தக் குற்றச்சாட்டுக்கள் புதிதானவை என்று நான் கருதவில்லை. அதற்காக, இவை கூறக்கூடாத குற்றச்சாட்டுகள் என்றும் நான் வாதிடவும் இல்லை. ஆனால், இந்த அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாகவும், புதிதாக நீதிமன்றங்கள் தொடங்கியதன் காரணமாகவும், உரிய நேரத்தில் நீதிபதிகளை நியமித்ததன் காரணமாகவும், வழக்குரைஞர்களை நியமித்ததன் காரணமாகவும், ஏறத்தாழ 1,91,522 வழக்குகள் இந்த ஆண்டு குறைந்திருக்கின்றன என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஆலடி அருணா] [1997 ஏப்ரல் 11

இன்னொரு வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையையும் உங்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய தலையாய கடமை ஆகும். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், கலைஞர் அவர்களுக்கும், மற்ற முன்னாள் முதலமைச்சர்களுக்கும் இருக்கின்ற ஒரே வித்தியாசம் என்னவென்றால்,—எந்த அரசாங்கமாக இருந்தாலும் நல்ல அரிய பணிகளைச் செய்வது இயற்கை; தவிர்க்க முடியாதது. 10, 12 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது. அதிலே ஒரு பகுதியைச் செலவு செய்வது என்பது இயற்கை, அது வாடிக்கையாக, வழக்கமாகச் செய்கின்ற பணி. இதற்கு மட்டும் கலைஞர் அவர்கள் பெயர் பெற்றவர் அல்ல—மற்ற முதலமைச்சர்களால், 'இது என்னால் முடியாது. இது என்னால் இயலாது, இதைச் செய்யவே முடியாது, இதைச் செய்வதற்குரிய சாத்தியக்கூறுகளே கிடையாது' என்று சொல்கின்ற காரியங்களைச் சாதித்துக் காட்டுகின்ற சரித்திர நாயகன்தான், டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெப்போலியன் ஒருமுறை சொன்னார்: 'Nothing is impossible in my life' என்று சொன்னார். என்னுடைய வாழ்விலே நடக்க முடியாத காரியம் என்ற வாலாறே கிடையாது என்று சொன்னார். அந்த வரலாற்றை ஜனநாயகத்திலே வடித்துக் காட்டுகின்ற தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஒரேயொரு உதாரணத்தை மட்டும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதற்கு முன்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எத்தனை நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டன என்பதைக் கவனித்தால், கலைஞர் அவர்கள் எவ்வளவு பெரிய சாதனையைச் செய்திருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். 1991-92-இல் 3 நீதிமன்றங்களையும், 1992-93-இல் 5 நீதிமன்றங்களையும், 1993-94-இல் 8 நீதிமன்றங்களையும், 1994-95-இல் 9 நீதிமன்றங்களையும், 1995-96-இல் 16 நீதிமன்றங்களையும் திறப்பதற்கு, முன்னால் இருந்த ஆட்சி உத்தரவிட்டது. ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள், ஒரே ஆண்டில் மட்டும் 55 நீதிமன்றங்களைத் திறப்பதற்கு, உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது கடந்த ஆண்டுகளில் மட்டுமல்ல; சுதந்திரம் பெற்றதிலிருந்தே, ஒரே ஆண்டில் 55 நீதிமன்றங்கள் திறப்பதற்கு ஆணை பிறப்பித்த ஒரே தலைவர் டாக்டர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பெருமிதத்தோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1997 ஏப்ரல் 11] [திரு. ஆலடி அருணா]

இவற்றையெல்லாம் நான் நினைவுபடுத்துவதற்குக் காரணம், உங்களிடத்தில் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில், நிறைவேற்றுவதில் இந்த அரசு எந்த அளவிற்கு முனைப்போடு செயல்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்வதற்காகத்தான் இவற்றையெல்லாம் நான் உங்களிடத்திலே சொன்னேன்.

கடந்த முறை பேசும்போது நான் சொன்னேன்: நீதிமன்றங்களிலே நீதிபதிகள் சாட்சியங்களைக் கையால் எழுதுகிறார்கள். அவர்களே எழுதுகின்ற காரணத்தால், கையெழுத்தும் சரியாக இருப்பதில்லை. அதனால் சிலருடைய தலையெழுத்துக்கூட மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட விபரீத நிலைகளெல்லாம் வருகின்றது என்று. எனவே, அந்த நீதிபதிகளுக்கெல்லாம் எழுத்தர்கள், தட்டச்சர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும், தட்டச்சர்களுக்குத் தட்டச்சு இயந்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும் சொன்னேன். உயர்நீதிமன்றத்திலேயிருந்துகூட, என்னிடத்திலே, எத்தனை பேர் வேண்டுமென்று கேட்டார்கள் தெரியுமா, மொத்தம் 98 பேரை எங்களுக்குக் கொடுங்கள் என்றுதான் கேட்டார்கள். நான்தான் சொன்னேன்; எதைச் செய்தாலும் ஒரு 'ரேடிக்கல் சேன்ஞ்', ஒரு தீவிர மாற்றம் தேவை, மாற்றம் இருந்தால்தான் மக்களுக்கும் நாட்டிற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று. அதற்கு முதலமைச்சர் அவர்கள், 'என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற எந்த மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாக இருந்தாலும் சரி, முன்சீப் கோர்ட்டாக இருந்தாலும் சரி, அங்கே நீதிபதிகள், நடுவர்கள் சாட்சியங்களைக் கையால் எழுதக்கூடிய நிலை இருக்கக்கூடாது; அவர்கள் எல்லோருக்கும் தட்டச்சு இயந்திரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்றும், அதற்கான அலுவலர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்றும் சொன்னேன். அப்படிச் சொன்னதன் அடிப்படையில் கடந்த ஆண்டு மட்டும் 568 பேரை நாங்கள் நியமனம் செய்திருக்கின்றோம். 824 தட்டச்சு இயந்திரங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இதுபோன்ற அனைத்துத் தீவிர நடவடிக்கைகளையும், இந்த அரசுதான் செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய தலையாய கடமையாகும். இதுபோன்ற ஒவ்வொரு துறையிலும் தீவிரமாகச் செயல்படுகிறோம்; அந்த அடிப்படைகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

பிற்பகல் 2-00

டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய திருப்பெயரால், ஒரு பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு ஒரு மசோதாவைக் கொண்டு வந்தோம். அது ஒரு அரிய பணி; உயர்ந்த பணி; சிறந்த பணி;

நாட்டுக்குத் தேவையான பணி என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த மசோதா, இந்த மாமன்றத்திலே, 29-8-1996-இல் நிறைவேற்றப்பட்டு, ஆளுநருக்கு அனுப்பப்பட்டு, ஆளுநரிடத்திலிருந்து, குடியரசுத் தலைவருக்கு, அதாவது மத்திய அரசுக்கு, 13-9-1996-இல் அனுப்பப்பட்டது. 13-9-1996-இல் அனுப்பப்பட்ட நம்முடைய சட்டமுன்வடிவுக்கு இந்த நிமிடம் வரை assent to the Bill ஒப்புதல் கிடைக்கவில்லை. உண்மையிலேயே நான் வருந்துகிறேன். கலைஞர் அவர்கள், என்னை இரண்டு முறை டெல்லிக்கு அனுப்பி வைத்து, நேரடியாகவே சம்பந்தப்பட்ட அமைச்சரைச் சந்தித்து, அவரிடத்திலே பேசுமாறு சொன்னார். நான் சென்றேன்; பேசினேன்; விளக்கமும் சொன்னேன். அப்போது, மாண்புமிகு அமைச்சர் திரு. பொம்மை அவர்கள், என்னிடத்திலே கேட்டார்: "சட்டத்திற்கு எதற்கு தனியாக ஒரு பல்கலைக்கழகம்" என்று கேட்டார். நான் அப்போது அவரிடத்திலே பணிவாகச் சொன்னேன்; "What is Maths ? What is Chemistry ?, What is Physics என்பதற்கு இருக்கிற நூல்களைவிட, What is Law என்பதற்கு இருக்கிற நூல்கள்தான் அதிகம் தெரியுமா ?" என்று கேட்டேன். "வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆள்வதற்கு 500 சட்டங்களைத்தான் நிறைவேற்றியிருக்கிறான். ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு, ஐயாயிரம் சட்டங்களை, மத்திய அரசு மட்டும் நிறைவேற்றியிருக்கிறது; இதற்குப் போய் பல்கலைக்கழகம் தேவையில்லை என்று சொல்கிறீர்களே !" என்று சொன்னேன். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. "ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டோம்" என்று அவராகவே உணர்ந்து கொண்டார். "அது மற்ற இடங்களிலே இருக்கிறதா ?" என்று கேட்டார். "வெளிநாடுகளிலே இருக்கிறது; மற்ற இடங்களில் இல்லையென்றால், நாம் ஏன் முன்மாதிரியாக இருக்கக்கூடாது? எனவே, இதற்கு நீங்கள் அங்கீகாரம் உடனடியாக, காலதாமதம் இல்லாமல் தரவேண்டும்" என்று சொன்னேன். அதற்குப் பிறகுகூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திரு. பொம்மை அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதினார். அந்தக் கடிதத்தில், ஏன் இந்தக் காலதாமதம்; இதற்கு என்ன அடிப்படை என்பதைக் கொஞ்சம் மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திரு. பொம்மை அவர்களுக்கு—மத்திய அமைச்சருக்கு—ஒரு கடிதத்தை எழுதினார். அந்தக் கடிதத்தில், "Since a policy decision had been taken by the State Government for the establishment of a separate Law University and passed a bill unanimously thereon, this policy decision cannot be questioned by Government of India, unless there is



any repugnancy in the proposed State Law. In the absence of such repugnancy to any central Law, there is no impediment for getting the assent of the President to the Tamil Nadu Dr. Ambedhkar Law University Bill, 1996" என்று மிகத் தெளிவாக, ஒரு மாற்றமில்லா, எதிரில்லா கருத்து இருக்கும்போது, 'ரிபக்னன்ஸி'—முரண்பாடு—இல்லாமல் இருக்கும்போது, நீங்கள் அதை நிறுத்திவைக்கக்கூடாது; உங்களுக்கு அந்த உரிமை கிடையாது என்று போர்க்குரல் கொடுப்பதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசுக்கு எழுதினார். இத்தனைக்குப் பிறகும், இன்னும் அனுமதி வரவில்லை. இதனைச் சொல்வதற்கு நான் வருந்துகிறேன்.

ஆனால், நான் இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், இந்தப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வருவதில், இந்த அரசு எவ்வளவு முனைப்போடு செயல்பட்டது என்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, அவர்கள் மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக இதைச் சொல்வதாக யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. உண்மையிலேயே, இதுபோன்ற ஒரு மாநில அரசு நிறைவேற்றுகிற சட்டத்தை, மத்திய அரசுக்கு அனுப்புவது என்பது, அதற்கு அவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற நிலை என்பதே ஒரு கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது; தவறானது, இதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்னும் சொல்லப்போனால், சில நாடுகளில், கூட்டாட்சி நாடுகளில், ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டால், ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தாக வேண்டும். நம்முடைய அமெரிக்கத் திருநாட்டை எடுத்துக் கொண்டால், ஒரு சட்டம் அதன் காங்கிரஸ் அவையிலே நிறைவேற்றப்பட்டால், குடியரசுத் தலைவராக இருப்பவர், பத்தே தினங்களுக்குள், 'இன்குளூடிங் சண்டே' அதற்கு ஒப்புதல் அளித்தாக வேண்டும். இல்லாவிட்டால், அந்தச் சட்டமுன்வடிவைத் திருப்பி அனுப்புவார்கள். இதுதான் அங்கே இருக்கிற நிலைமை.

அயர்லாந்தை எடுத்துக் கொண்டால், ஏழே நாட்களுக்குள் முடிவு சொல்ல வேண்டும். 5 நாட்களுக்கு முன்பு இல்லாமலும், 7 நாட்களைக் கடத்தாமலும், அதற்குள்ளாக ஒப்புதல் கொடுக்க வேண்டும்; இது அயர்லாந்திலே இருக்கிற நிலைமை. ஜப்பானைப் பொறுத்தவரையில் ஒரு சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டு வந்தால், உடனே அது சட்டமாகிவிடுகிறது. ஏனென்றால் அங்கு 'பார்லியமென்ட் சுப்ரீம்'.

இதற்கு யாரும்போய், உத்தரவு கேட்க வேண்டிய அவசியம் இல்லை. 'பார்லியமெண்ட் சுப்ரீம்' என்று அங்கு இருப்பதால் அங்கே மன்னர் இருந்தாலும்கூட அங்கு சட்ட முன்வடிவு நிறைவேற்றிய உடனேயே அது சட்டமாகிறது என்று ஜப்பான் அரசியல் சட்டம் சொல்கிறது.

*பிற்பகல் 2-05*

ஆனால், இங்கிலாந்து நாட்டிலே மன்னர் இருக்கிறார். மசோதாக்கள் எல்லாம் மன்னருக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் இந்த நிமிடம் வரை 1807-லேயிருந்து, குயின் அனி இருந்த காலத்திலேயிருந்து ஒரு மசோதாவைக்கூட இங்கிலாந்து மன்னர்கள் திருப்பி அனுப்பியதில்லை. நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்கள் அத்தனைக்கும் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

நம் நாட்டினுடைய பரிதாப நிலையைப் பாருங்கள். இது ஒரு சுப்ரீம் பாடி, சாவரின் பாடி, இதற்கென்று ஒரு தனி அதிகாரம் இருக்கிறது. ஆனால் இங்கு கூட ஒப்புதல் கேட்க வேண்டிய ஒரு அரசியல் ஊனம் இருக்கிறது. கொள்கை ரீதியாக ஒரு ஊனம் இருக்கிறது என்பதைச் சொல்கிறேன். அதனாலேதான் நம்முடைய கொள்கைக் குறிப்பிலேகூட ஒரு 'பெடரல் விங்' ஒரு கூட்டாட்சிப் பிரிவை நாங்கள் அமைக்கவிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறோம். ஏனென்றால் இனி இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமானால் கூட்டாட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சியாலும் காப்பாற்ற முடியாது. மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கொள்கை நிலைநாட்டப்பட்டுவிட்டது. அதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள், அரிய கருத்துக்கள் இவைகளைத் தருவதற்கு ஒரு பிரிவு வேண்டுமென்பதற்காகத்தான் எங்களுடைய கொள்கைக் குறிப்பிலேகூட அதையெல்லாம் உங்களிடத்திலே நாங்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறோம்.

எனவே பல்கலைக்கழகத்தைப் பொறுத்த அளவில் இதுபோன்ற நடவடிக்கைகளை எல்லாம் நாங்கள் தீவிரமாக எடுத்தோம் என்பதை இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மதுரையிலே சென்னை உயர்நீதிமன்றக் கிளையை அமைப்பது பற்றித் தீவிரமாக நாங்கள் முயற்சிக்கிறோம். இந்தக் கொள்கை என்ன, நேற்று சொல்லப்பட்ட கொள்கையா? நேற்று எழுப்பப்பட்ட குரலா? கோரிக்கையா? அல்ல; 1973-லிருந்து இது சொல்லப்பட்டு வருகிறது. இதை மற்றவர்களால் சாதிக்க முடியவில்லை.



அதைத்தான் நான் கலைஞர் அவர்களிடத்திலே சொன்னேன். மற்ற முதல்வர்களால் சாதிக்கமுடியவில்லை, நீங்கள்தானே இதைச் சாதிக்க வேண்டும், இந்தச் சரித்திரத்தைப் படைக்க வேண்டும் என்று சொன்னேன். அப்படியானால் அதற்கான எல்லா முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபடு என்று அவர் என்னைப் பணித்தார். அப்படிப் பணித்ததின் அடிப்படையில் தான் தீவிர நடவடிக்கை எடுக்க நாங்கள் எல்லாம் உட்பட்டோம். ஆனால் நாங்கள் தீவிரமாகச் செயல்படுகிறோம் என்பதைக் கொஞ்சம் சாமர்த்தியமாகத் தெரிந்து கொண்டு சிலர் இப்போது களத்திலே இருப்பதைப்போல காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே எங்கே இருந்தார்கள் என்று நான் கேட்கிறேன்.

1973-க்குப் பிறகு எத்தனை பேர் போராட்டம் நடத்தினார்கள்? எத்தனை பேர் உண்ணாவிரதம் இருந்தார்கள்? எத்தனை பேர் நீதிமன்றங்களைப் புறக்கணித்தார்கள்? உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள், கண்டனக் குரல் எழுப்பினார்கள்? இல்லையே, இந்தப் பிரச்சினையிலேயே தீவிரம் காட்டவில்லை. ஆனால், இந்த அரசு செய்யப் போகிறது என்று சொன்னவுடன் ஏதோ அவர்களுக்குப் பயந்து, அவர்களுக்குப் பணிந்து இதை நாம் செய்ததாக நினைக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். உங்களுக்குப் பயந்து நாங்கள் இந்தக் காரியத்திலே ஈடுபடவில்லை. கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதைச் செய்வோம், செய்வதைதான் சொல்வோம் என்ற இலட்சியத்தில் உறுதியாகச் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் செயல்படுகிறோமே தவிர, இவர்கள் உண்ணாவிரதத்தைப் பார்த்தோ, நீதிமன்றத்தைப் புறக்கணிப்பதைப் பார்த்தோ இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம் என்று அவர்கள் நினைப்பார்களேயானால் அது தவறான கணிப்பு என்பதைப் பணிவன்போடு நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் எங்களுடைய தலைவரை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் அவர்களுக்கு நான் விளக்க ஆசைப்படுகிறேன்.

மதுரையிலே நீதிமன்றம் அமைப்பது குறித்து அதாவது உயர்நீதிமன்றக் கிளை அமைப்பது குறித்து இடம் உலகனேரியிலே எடுப்பதற்கு ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டுவிட்டன. 75 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவிருக்கிறது. அதை உடனடியாக எடுப்பதற்கு தீவிர பிரிவின்கீழ் கொண்டு வரமுடியுமா என்றால் அதற்குப் பிரிவு

இடம் கொடுக்கவில்லை. முறையாக படிப்படியாகத்தான் நோட்டீஸ் கொடுத்துத்தான் எடுக்க வேண்டியிருக்கிறது. எனவே அதற்கான பணமும் 4 ¼ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுவிட்டது. அந்தப் பணி தீவிரமாக நடைபெறவிருக்கிறது. இதற்கிடையில் தற்போதிருக்கிற மாவட்ட நீதிமன்றம் இருக்கிற கட்டிடம் ஒரு கம்பீரமான தோற்றமுள்ள ஒரு நல்ல கட்டிடம். அதிலே நடத்த வேண்டும் என்று கெஞ்சினோம், மன்றாடினோம், வேண்டினோம், எவ்வளவோ சொன்னோம். உயர்நீதிமன்றம் கேட்கவில்லை. இந்த நீதித் துறையில் நம்முடைய திரு. ஞானசேகரன் சொன்னதைப்போல ஒரு பெரிய இடைவெளியே அதுதான். உயர்நீதிமன்றத்தினுடைய ஒப்புதல் இல்லாமல் உத்தரவைப் போட்டுவிட முடியாது. அவர்களை ஒப்புதல் அளிக்க வைத்தாக வேண்டும், அவர்களை இசைய வைத்தாக வேண்டும். அவர்களோடு பேசி முடிவெடுத்தாக வேண்டும். நாங்கள் மதுரையிலே ஒரு நீதிமன்றம் திறக்கிறோம், நீங்கள் அங்கே போய் நீதிமன்றத்தை நடத்துங்கள் என்று நாங்கள் ஆணையிட்டுவிட முடியாது. அதுதான் இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்தின் நிலைமை. எனவே அதற்கேற்ப அவர்களோடு பேசி முடிவெடுக்க வேண்டும்.

ஒரு மகிழ்ச்சியான செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது புதிதாக நம்முடைய தலைமை நீதிபதியாக இருக்கிற திரு. தணிகாசலம் அவர்களை நான் இரண்டுமுறை சந்தித்து உங்களுடைய காலத்திலாவது இந்தப் பணி முடியட்டும், பொற்காலம் துவங்கட்டும், இதை நாங்கள் விரும்புகிறோம், இதற்கு நீங்கள் ஒத்துழையுங்கள் என்று சொன்னேன். இதற்காக நீங்கள் உங்கள் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள், மற்றவர்களுடைய ஒப்புதலைப் பெற்று தற்காலிகமாக அதிலே நீதிமன்றம் அமைப்பதற்கு, எங்களுக்கு மக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழையுங்கள் என்று நான் கேட்டேன்.

*பிற்பகல் 2-10*

மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் பெருந்தன்மையோடு நீங்கள் மற்ற ஏற்பாடுகளை எல்லாம் செய்யுங்கள், நிரந்தரமாக நீதிமன்றம் வருவதற்கு, பர்மனென்ட் பெஞ்ச் வருவதற்கு 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆகலாம், ஏனென்றால் அதற்குத் தேவையான வசதிகள், கட்டிடங்கள் போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யவேண்டியிருப்பதால் சர்க்யூட் பெஞ்சை உடனடியாக ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் அதற்கு நான் ஒத்துழைக்கிறேன், அதற்கு முன்னால் சக நீதிபதிகளோடு



பேசி ஒரு நல்ல முடிவை விரைவில் தருகிறேன் என்ற ஒரு இனிப்பான செய்தியைத் தலைமை நீதிபதி அவர்கள் தந்திருக்கிறார்கள். இனிப்பான செய்தியை விரைவில் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு நம்முடைய வழக்கறிஞர்கள் தங்களுடைய போராட்டங்களை எல்லாம் திரும்பப்பெற்று, கலைஞர் அவர்களது அரசு சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதற்காகத் தீவிரமாக செயல்படும் என்பதை மனதில் வைத்து அவர்கள் இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

எனவே, நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் முதலில் சர்க்யூட் பெஞ்சை நாம் ஆரம்பிக்க இருக்கிறோம். அதற்காக உயர்நீதிமன்றத்தின் ஒப்புதல் விரைவில் கிடைக்கும். அவர்களுக்கு எந்த அளவுக்கு நிதி தேவையோ, அதற்கு நாங்கள் ஒப்புதல் தருகிறோம் என்று சொன்னோம். அந்த நீதிமன்றத்தில் மாற்றங்கள் செய்வதற்கு, ரினவேஷன் செய்வதற்கு, சீர்திருத்தம் செய்வதற்கு, நிவாரணப் பணிகள் செய்வதற்கு, புதிய பணிகள் செய்வதற்கு எவ்வளவு பணம் தேவை என்றாலும் அதைக் கொடுக்க இந்த அரசு தயாராக இருப்பதாகக் கலைஞர் அவர்கள் சொல்லச் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள் சொல்லச் சொன்னார்கள், என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லி விடுகிறேன். எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை. தற்போது இருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்திலேயே தற்காலிகமாக சர்க்யூட் பெஞ்சை அமைப்பதற்கு இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த அரசினுடைய கொள்கையை நீதிமன்றம் கொள்கை அளவில் ஒத்துக் கொண்டு விரைவிலே சர்க்யூட் பெஞ்ச் அமைப்பதற்குத் தங்களுடைய பரிந்துரையைத் தருவதாக உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்கள் எனக்கு வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்திற்கு இன்று நான் வருவதற்கு முன்பாக, இரவு 8 மணி அளவில் அவர்களிடத்திலே பேசி. அவர்களிடத்திலிருந்து ஒரு நல்ல முடிவைத் தெரிந்து கொண்டு வந்துதான் இந்த மாமன்றத்தில் பேசுகிறேன் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் அதிகப்படியான நீதிமன்றங்கள் திறக்க வேண்டும். நல்லமுறையில் நீதிமன்றங்களை அதிகமாகத் திறப்பதன் மூலமாகத்தான் வழக்குகளின் தேக்க நிலையைப் போக்க முடியும் என்ற ஒரு நிலை இருக்கிறது. ஆனால் நீங்கள் இந்தப் பட்டியலைப் படித்துக் கொண்டே வந்தால்

வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருப்பதும், சில பகுதிகளில் குறைந்து இருப்பதும், மாறி மாறி நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிய முடியும். இதைப்பற்றி பல்வேறு குழுக்கள், சட்டத் துறை அமைச்சர்கள் மாநாடுகள், நீதிபதிகள் மாநாடுகள் எல்லாம் பரிசீலித்து இருக்கின்றன.

நான் ஒன்றை மட்டும் இங்கே தெளிவாகச் சொல்லுகிறேன். எனக்குத் தெரிந்த அறிவின் அடிப்படையில் சொல்லுகிறேன். மற்ற கூட்டாட்சி நாடுகளில் எல்லாம் உச்ச நீதிமன்றங்கள் Constitutional Matters, அரசியல் சட்ட ரீதியான பிரச்சினைகளை மட்டும்தான் பரிசீலிக்கின்றன. மற்ற எந்த வழக்குகளையும் அந்த உச்ச நீதிமன்றங்கள் பரிசீலிப்பது இல்லை. மற்ற கூட்டாட்சி நாடுகளானாலும், அமெரிக்காவாக இருந்தாலும் சரி, ஜெர்மனியாக இருந்தாலும் சரி, ஆஸ்திரேலியாவாக இருந்தாலும் சரி, சுவிச்சர்லாந்தாக இருந்தாலும் சரி, அங்கே இருக்கும் நீதிபதிகள் கோடை விடுமுறைக்காக செல்லுகின்ற நேரத்தில் No Pending எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்று சொல்லி பெருமைப்படுகிறார்கள். ஆனால் நம்முடைய நிலைமை அதுவல்ல. இங்கே ஜாமீனுக்காக சுப்ரீம் கோர்ட் வரை போய்க்கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு நம்முடைய சட்டத்தில் இடம் இருக்கிறது. சில வழக்குகளைப் பொறுத்தவரையில், உதாரணமாக ஐ.பி.சி. கிரிமினல் வழக்கை எடுத்துக் கொண்டால் மாநிலத்தில் இருக்கிற ஹைகோர்ட்டே சுப்ரீம் கோர்ட்டாக இருக்க வேண்டும். அந்த நிலை வர வேண்டும். அமெரிக்காவிலே உள்ள பல மாநிலங்களில் அதை மாநிலத்தில் ஹைகோர்ட் என்று சொல்லுவது இல்லை. Supreme Court of the State என்றுதான் சொல்லுகிறார்கள். அதைப்போன்று சொல்லுகின்ற நிலை இங்கு ஏற்பட வேண்டும். அதேபோன்று மாவட்ட அளவிலே இருக்கின்ற நீதிமன்றங்களுக்கும் அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். அதைப்போன்று வட்டங்களில் இருக்கின்ற நீதிமன்றங்களுக்கும் அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். இந்தத் தீவிர மாற்றங்களைச் செய்யாமெலுழிய, ஆலோசனைகள் சொல்லிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் வந்து விடாது. இந்தத் தீவிர மாற்றத்திற்கு அரசியல் ரீதியாக, அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் செய்யாமல் எந்தத் தீவிரத்தையும் செய்ய முடியாது. நமக்கு இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை என்ன, அதை வைத்து என்ன செய்வது, இருப்பதை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்பதன் அடிப்படையில்—நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்—முன்னோடி திட்டத்தின்கீழ் டாக்டர் கலைஞர் அவர்கள் 55 நீதிமன்றங்களை இந்த ஆண்டு கொடுத்தார்கள்.



ஆனால் உயர்நீதிமன்றத்தால் அந்த 55 நீதிமன்றங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. பதிவாளர் என்னைப் பார்த்த போது நேரடியாகவே சொன்னார். எங்களால் அத்தனை நீதிமன்றங்களையும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. 19 சப்-கோர்ட் மற்றும் 19 மாவட்ட முன்சீப் கோர்ட்டுகளை எங்களால் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

பிற்பகல் 2-15

எனவே, நீங்கள் வேண்டுமானால், ரெகுலர் கோர்ட்ஸ், முறையாக இருக்கின்ற நீதிமன்றங்களுக்கு பயன்படுத்திக்கொள்ள எங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்று முதலிலே சொன்னார். பிறகு நான் இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக, மீண்டும் அதிகாரிகள் மூலம் அவரைப் பார்த்து, என்ன சொல்கிறார், அறிவித்துவிடலாமா என்று கேட்ட நேரத்தில், நாங்கள் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்று மறுபடியும் ஒரு தடைக்கல்லைப் போட்டார். எனவே அறிவிக்க முடியாத ஒரு பரிதாப நிலை ஏற்பட்டது. மீண்டும் நான் தலைமை நீதிபதியிடத்திலே இந்த விவரத்தைச் சொன்னேன். உங்களை நம்பி எதிர்க் கட்சித் தலைவரிடத்திலும் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் சொல்லிவிட்டேன். மற்றவர்களுக்கெல்லாம் தெரிவித்து விட்டோம் என்று சொல்லி, எங்களால் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாமல் இருக்கிறதே என்று சொன்னேன். ஆனால், தலைமை நீதிபதி அவர்கள், பெருமதிப்பிற்குரிய திரு. தணிகாசலம் அவர்கள், பெருந்தன்மையோடு, நாங்கள் எந்த எந்த நீதிமன்றத்தையெல்லாம் பரிந்துரைத்திருக்கிறோமோ, அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே, அடுத்த ஆண்டில், அந்த இடத்திலே நீங்கள் முறையான, ரெகுலர் கோர்ட் அமைப்பதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை என்ற வாக்குறுதியைத் தந்தார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அடிப்படையிலேதான் நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொன்னேன், பரமக்குடியில் உறுதியாகக் கிடைக்கும் என்று சொன்னேன். ஆனால் அதற்கான பரிந்துரை இன்னும் வரவில்லை. பரிந்துரை வந்தவுடன் நிச்சயமாக பரிசீலிக்கப்படும். பரமக்குடி, உசிலம்பட்டி, பொள்ளாச்சி இந்த மூன்று இடங்களும் முக்கியமான இடங்கள் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை இந்த மூன்று நகரங்களுக்கும் இல்லை என்பதை நான்

சொல்லிக் கொள்கிறேன். ஆனால், இந்தப் பரிந்துரையை அடுத்த ஆண்டு பெறுவோம் என்று உங்களுக்கு உறுதி அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பரிந்துரைத்த அமர்வு நீதிமன்றம், அவற்றின் அடிப்படையிலே இப்போது நான் அறிவிக்கிற நீதிமன்றமெல்லாம்-அதாவது குடியாத்தம், பொன்னேரி, செய்யாறு, மன்னார்குடி, திருவாரூர், சிவகாசி இந்த ஆறு நகரங்களில் சப்-கோர்ட் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று முன்சீப் கோர்ட் சிலவற்றை நாங்கள் அவர்களிடத்திலே கேட்டோம். அந்த அடிப்படையில் டிஸ்ட்ரிக்ட்-கம்-ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வருகிற ஆண்டு முதல் காட்டுமன்னார்கோவில், பெண்ணாகரம், இராமேஸ்வரம், போச்சம்பள்ளி, பாப்பிரெட்டிபட்டி, வேதாரண்யம், சங்கராபுரம் ஆகிய ஊர்களில் திறக்கப்படுகிறது.

அதேபோன்று டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் உத்திரமேரூர், பள்ளிப்பட்டு, இராஜபாளையம், தரங்கம்பாடி ஆகிய நான்கு ஊர்களிலும் திறக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற நீதிமன்றங்கள் எல்லாம் விரைவிலே திறக்கப்படும். அதற்கான உத்தரவுகள் எல்லாம் போடப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அருமை நண்பர்கள் எல்லாம் சிறைத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையெல்லாம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். சிறைத் துறை மிகச் சீராக இருக்கிறது. செம்மையாக இருக்கிறது. ஒழுங்காக இருக்கிறது. அப்படி, யாருக்காவது ஏதாவது தவறு நடந்திருக்குமேயானால் அவர்கள் என்னிடத்திலே சொல்லலாம். ஒரே ஒரு உதாரணம், அதிகமாகச் சொல்ல வேண்டாம். முன்னாள் முதலமைச்சர் 28 நாள் எங்கள் சாப்பாட்டைச் சாப்பிட்டார். எந்த நோயும் கிடையாது. Hale and Healthy—யாக, நன்றாக இருந்தார்கள். ஆனால், நம்முடைய சாப்பாட்டை விட்டு, * நம்முடைய சாப்பாட்டிலே வரவேயில்லை. அந்த அளவிற்கு ஒழுங்காக, நல்ல முறையில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நம்முடைய சிறைத் துறையின் சிறப்பைச் சொல்லட்டும், அடுத்ததை அவரே திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு அமைச்சர் திரும்பப் பெற்றதால் அகற்றப்பெற்றன.





**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அந்தச் சாப்பாட்டைப் பற்றித் தெரியாது. * நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையற்ற பேச்சு, * மரபோடு பேச வேண்டுமென்று நான் சொல்கிறேன். நீங்கள் திரும்பப் பெறாவிட்டால் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். அதைப்பற்றி ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் பேசும்போது எங்களுக்கு பேட்டி அளிக்க வாய்ப்பு கொடுக்கப் படவில்லை என்பதையெல்லாம் சொன்னார், அதனாலேதான் இந்தப் பிரச்சினை. நான் கூட இது பற்றி பேசக்கூடாது, பேசுவது மரபல்ல, நல்லதல்ல என்று நினைத்தேன். அவர் இந்தப் பிரச்சினையை எழுப்பிய காரணத்தினால்தான் சொல்கிறேன். முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சிறையிலே 28 நாட்கள் இருந்தபோது 250 பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர் ரொம்ப சாமர்த்தியசாலி, நரகத்தைக் கூட சொர்க்கமாக மாற்றிக் கொள்ளக்கூடிய திறமை அவருக்கு உண்டு. ஏனென்றால், நமக்கே கூட ஆடம்பரம் என்றால் என்ன, அதை எப்படிப் பயன்படுத்துவது என்பது தெரியாது. உங்களுடைய கையிலே இன்றைக்கு லட்சம் ரூபாயைக் கொடுத்து, இதைச் செலவழி என்றால் எல்லோருக்கும் செலவழிக்கத் தெரியாது. ஆடம்பரத்திலே திளைத்தவர் களுக்குத்தான் அதைச் செலவழிக்கத் தெரியும். அதுமாதிரி, ஆடம்பரத் திலே வாழ்ந்து பழக்கப்பட்ட அவர்களுக்குத்தான் சிறைச்சாலையிலேகூட எப்படி ஆடம்பரமாக, சிறைச்சாலை விதிகளுக்குட்பட்டு நடக்க முடிகிறது என்பது தெரிகிறது. உதாரணத்திற்காக நான் சொல்கிறேன். அந்த அம்மையார், பெரிய டவல் ......

பிற்பகல் 2-20

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதி காக்க வேண்டும். திரு. சுந்தரம், நீங்கள் ஏதாவது விளக்கம் கேட்க

*மாண்புமிகு அமைச்சர் திரும்பப் பெற்றதால் அகற்றப்பெற்றன.

வேண்டுமென்றால், அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு கேளுங்கள். அப்போது நான் அனுமதிக்கிறேன். இப்போது உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அளவுக்கு சிறையிலே அவர் பொருட்களைப் பயன்படுத்தினார் என்பதற்காகச் சொல்கிறேன். அதெல்லாம் அவருடைய பொருட்கள்தான். அதை நான் குற்றம் சொல்லவில்லை, குறை சொல்லவில்லை. ஆனால், அதையெல்லாம் எப்படிப் பயன்படுத்த முடிகிறது என்பதுதான் எனக்கிருக்கிற சந்தேகம். அப்படிப் பயன்படுத்துவதற்கேகூட ஒரு சாமர்த்தியம் தேவை என்பதுதான் என்னுடைய கருத்து.

பெரிய டவல் 119; சின்ன டவல் 122; நாப்கின் 80; நைட்டி 64; 28 நாட்களில் இவ்வளவு துணிகளையும் பயன்படுத்த முடியுமா என்பது நமக்கே புரியவில்லை.

ஒரு தடவை அண்ணல் காந்தியார் ராஷ்டிரபதி பவனுக்குப் போனார். அது பெரிய மாளிகை. அங்கே மவுண்ட்பேட்டன் இருந்தார். காந்தி அவர்கள் ஒவ்வொரு அறையையும் பார்த்து வியப்புற்றார். அதைப் பார்த்துவிட்டு காந்தியடிகள் உடனே இதை ஆஸ்பத்திரியாக ஆக்கிவிடலாமே என்று சொன்னார். ஏன் அப்படி காந்தியடிகள் சொன்னார் ? காரணம், அவர் எளிமையின் சின்னம். அதை எப்படிப் பயன்படுத்துவது என்பது தெரியாது. பிறகு மவுண்ட்பேட்டன் அவர்களைச் சந்தித்த பிறகு, அவர் காந்தியடிகளிடம் நாங்கள் ஒவ்வொரு அறையையும் இப்படி இப்படி எல்லாம் பயன்படுத்துவோம் என்று சொன்னார். எனவே, ஆடம்பரத்தைப் பயன்படுத்துவதற்குக்கூட ஒரு சாமர்த்தியம் தேவைப்படுகிறது. அதைத்தான் நான் சொல்ல வந்தேனே தவிர, வேறொன்றும் இல்லை. அப்படி பொருட்களைப் பயன்படுத்துவதற்குக்கூட நாங்கள் அவரை அனுமதித்திருக்கிறோம் என்பதைத்தான் நான் உறுப்பினருக்கு நினைவுபடுத்துகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எல்லாவற்றையும் வாங்கி விட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இல்லை, இல்லை, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களிடம் வாங்கியதற்கு கையெழுத்து வாங்கி வைத்திருக்கிறேன். விஷயம் தெரியாமல் திரு. சுந்தரம் அவர்கள் பிரச்சினையை எழுப்பக்கூடாது. நாளை வேண்டுமானாலும் அவையிலே கொடுக்கத் தயாராக இருக்கிறேன்



ஒவ்வொரு நாளும் என்னென்ன பொருட்கள் வாங்கப்பட்டன என்று கையெழுத்துப் போட்டு வாங்கியிருக்கிறோம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதெல்லாம் உண்மையில்லை என்று சொல்லுகிறேன். நீங்கள் எது வேண்டுமானாலும் பேசலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரும், நீங்களும் வாதம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்களா ? திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். கையெழுத்து உங்களுக்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள். கையெழுத்து வாங்கியதைக் காண்பிக்கிறேன் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார், எது வேண்டுமானாலும் பேசலாமா என்று நீங்கள் உட்காருங்கள். எது வேண்டுமானாலும் பேசலாமா என்று நீங்கள் எப்படிக் கேட்கலாம்? அவர் முறையில்லாது பேசியதை நான் அவைக்குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். நீங்கள் ஏற்கெனவே உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்களும், மற்றவர்களும் சிறைச்சாலையில் எட்டு மணி நேரம் வேலை என்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். இது தொடர்பாக, ஏற்கெனவே வெகுநாட்களாக சேலம் சிறையில் 8 மணி நேர வேலை அமல்படுத்தப்பட்டு, நடைமுறையில் உள்ளது. அடுத்த கட்டமாக முதலிலே இரண்டு சிறைச்சாலைகள் பரிட்சார்த்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. அதற்கு 303 காவலர்கள் எடுக்கப் போவதாகச் சொன்னோம். அதற்கான தேர்வுகள் எல்லாம் இப்போது நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டும் இரண்டு சிறைச்சாலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்ன நேரத்தில், அதற்கும் ஒப்புதல் அளித்து, முதல் கட்டத்தில் சென்னை, மதுரை, இரண்டாவது கட்டத்தில் வேலூர், கோவை சிறைச்சாலைகளை எடுத்துக்கொண்டு அதற்கு 303 இரண்டாவது நிலை வார்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள். அதற்கான தேர்வுகளும் இப்போது நடைபெற்று வருகின்றன என்பதும் உங்களுக்குத் தெரியும். இப்போது மூன்றாவது கட்டமாக கடலூர், திருச்சி ஆகிய இரண்டு சிறைச்சாலைகளும் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. அதற்காக 236 காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள். அதேநேரத்தில், பெரிய பரண்— செக்யூரிட்டி டவர்—இவற்றிற்கு 196 காவலர்கள், இவற்றையெல்லாம் சேர்த்து இந்த ஆண்டு 735 இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக்

[ திரு. ஆலடி அருணா ] [1997 ஏப்ரல் 11

கடமைப்பட்டிருக்கிறேன். இவர்களெல்லாம் முறையாக, நியாயமாக, அரசு விதிமுறைகளுக்குட்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கடந்த முறை பேசும்போது, ஊழல் செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்; நீதிமன்றம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்டார்கள். இன்றையதினமும், மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இதைக் குறிப்பிட்டுக் கேட்டார். நான் அவருக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். மிக்க மகிழ்ச்சியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் மீதும், மற்ற அமைச்சர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதில் காலம் தாழ்த்தக்கூடாது, சாட்சியங்கள் கெட்டுவிடும், குறுகிய காலத்தில் விசாரணை நடத்தாவிட்டால் நாம் எதிர்பார்த்த நியாயமான தீர்ப்பைப் பெறமுடியாது என்று உயர்நீதி மன்றத்திடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள்கூட இதைப்பற்றியெல்லாம் நினைவுபடுத்தினார்கள். இதையெல்லாம் உயர்நீதிமன்றத்திற்கு நினைவுபடுத்துகிறோம். தனி நீதிமன்றம் அமைப்பதற்கு ஒரு பெரிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதற்கு முன்பாக, தனியாக நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டுமென்று சொன்னோம். அவர்கள் மூன்று நீதிபதிகளை நியமிப்பதற்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே யார் யார் மீது நாங்கள் குற்றச்சாட்டுகள் சாட்டியிருக்கிறோமோ அந்தக் குற்றச்சாட்டுக்கள் முறைப்படி, சட்டப்படி, நீதிமன்றத்திலே, இந்த அரசால் நிரூபித்துக்காட்டப்படும் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 2-25

பல பேர் வருத்தத்தோடு சொன்னார்கள். கோர்ட்டுகளில் வசதிகள் இல்லை; பல இடங்களில் மேசை, நாற்காலிகள் இல்லை; கோர்ட் கட்டிடங்கள் ஒழுகுகின்றன, நீதிமன்றக் கட்டிடங்கள் சரியான முறையில் இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். இந்தக் குறைகள் அனைத்தும் உண்மையானது; இந்த நிலைமைகள் இல்லை என்று நான் வாதிடுபவன் அல்ல. இன்னும் சொல்லப்போனால், 90 நீதிமன்றங்கள் வாடகைக் கட்டிடங்களில்தான் இருக்கின்றன. மாதம் ஒன்றிற்கு நம்முடைய அரசு 2 ½ லட்ச ரூபாய் வாடகை கட்டிக் கொண்டிருக்கிறது. இவைகளுக்கு



1997 ஏப்ரல் 11] [ திரு. ஆலடி அருணா ]

எல்லாம் நல்ல கட்டிடங்கள் கட்ட வேண்டும்; நீதிபதிகளுக்கு எல்லாம் நல்ல கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும்; வழக்கறிஞர்களுக்கு நல்ல `லா சேம்பர்` இருக்க வேண்டும்; இவற்றையெல்லாம், இந்த அரசு முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதற்கட்டமாக, எல்லா மாநகராட்சிப் பகுதிகளுக்கும் `லா சேம்பர்' இருக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, அப்படி இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த ஆண்டு, கோவைக்கும் மதுரைக்கும் `லா சேம்பர்` கட்டுவதற்குப் பணம் ஒதுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிலர் தவறான கருத்தைச் சொல்கிறார்கள். வழக்கறிஞர்கள் கூட தவறாகச் சொல்கிறார்கள். நீதிமன்றத்திலே நிறைய வருமானம் வருகிறது. அதைச் செலவழித்தாலேபோதும் என்று நினைக்கிறார்கள். அது தவறான கருத்து. நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவில் 50 சதவிகிதம்தான் முத்திரைத்தாள் போன்றவற்றில் வருமானமாகக் கிடைக்கிறது. மீதி 50 சதவிகிதம் அரசு தன்னுடைய பொறுப்பிலிருந்து செலவு செய்கிறது. இந்தச் சூழ்நிலையில் நமது வழக்கறிஞர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் போன்றவர்கள் விரும்புவதைப்போல நீதிமன்றங்களில் நல்ல கட்டிடங்களை, நல்ல மேசை நாற்காலிகளை, நல்ல பல வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், கொஞ்சம் கோர்ட் கட்டணங்களையெல்லாம் உயர்த்த வேண்டும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் அற்புதமான கட்-மோஷனைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் செலுத்துகிற கட்டணம், இதற்கான சட்டம் 1870-லே கொண்டுவரப்பட்டது. The Court Fee Act, 1870 and The Suit Valuation Act, 1887. இந்த ஆக்ட் 1922-லே திருத்தம் செய்யப்பட்டது. இந்தத் திருத்தத்தின் அடிப்படையில் பார்த்தால், 1870-லே Court fee 8 அணா அதாவது 50 காசுகள் என்று இருந்தது திருத்தம் செய்யப்பட்ட பிறகு 12 அணாவாக அதாவது 75 காசுகளாக உயர்த்தப்பட்டது. அந்த 75 காசுகள்தான் இன்றைக்கும் இருக்கிறது. ஏறத்தாழ 70 வருடத்திற்கு மேலாக, இன்னும் சொல்லப்போனால் 125 வருடத்தில் நாம் உயர்த்தி இருக்கிற பணம் எவ்வளவு என்றால் 25 காசுகள்தான்.

அடுத்து ரெவிஷன் பெட்டிஷன். உயர்நீதிமன்றத்திலே தொடுக்கிறார்களே அந்த ரெவிஷன் பெட்டிஷன் போடுவதற்கு 1870-லே

[திரு. ஆலடி அருணா] [1997 ஏப்ரல் 11

நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் 10 ரூபாய்தான். அதே 10 ரூபாய்தான் இப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. எப்படி நாம் முன்னேற்றம் செய்ய முடியும் நீதிபதிகளுடைய சம்பளத்தை நாம் உயர்த்தவில்லையா? அந்த அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவில்லையா? வழக்கறிஞர்களுடைய வருமானம் உயரவில்லையா? வழக்கறிஞர்களுக்கு அதிக வருமானம் வருவதைப் பார்த்துப் பூரிப்பவனும், பெருமைப்படுகிறவனும் நான்தான். ஆகவே 125 வருட காலமாக ஒரே கட்டணம், 75 காசுகள், 1 ரூபாய், 2 ரூபாய் என்று வைத்திருக்கிறோம். இதில் மாற்றம் செய்வதற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். அது இந்த அரசுக்குச் செய்கின்ற ஒத்துழைப்பு அல்ல; நீதிமன்றத்தினுடைய மறுமலர்ச்சிக்குத் தருகின்ற ஒத்துழைப்பு என்று இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இவற்றிற்கெல்லாம் நீங்கள் ஒத்துழைத்தால்தான், எங்கு பார்த்தாலும் 'லா சேம்பர்', எங்கு பார்த்தாலும் புதிய கட்டிடம், எங்கு பார்த்தாலும் புதிய சுற்றுச் சுவர் கட்டிடங்கள் என்று நீதிமன்றங்கள் கம்பீரமாகத் தோற்றமளிக்கின்ற அளவுக்கு, இன்னும் அடுத்த 3 ஆண்டுகளுக்குள் செய்து கொடுக்க முடியும். அதற்கு நீங்கள் ஒத்துழைப்பு தர வேண்டும். அப்படி ஒத்துழைப்பு தருகின்ற வகையில், இந்த மசோதாவில், நீங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை-வெட்டுத் தீர்மானங்களை விவாதிப்பதற்காகத் தந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்—திரும்பப் பெற்று, முழுமையாக ஒருமனதாக இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *16 பேர் கையை உயர்த்துகிறார்கள். ஒருவருக்கு வாய்ப்புக் கொடுத்து, மற்றொருவருக்கு கொடுக்காவிட்டால், தவறாகிவிடும்.*

*பிற்பகல் 2-30*

## (அ) கோரிக்கை எண் 13 நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 13-நீதி நிருவாகம். வெட்டு தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.



1997 ஏப்ரல் 11]

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.85,68,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.



**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சிறைச்சாலைகள் பற்றிய 14-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.42,26,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 21—மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 21—மீனளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.26,80,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 8. உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் செவ்வாய்க்கிழமை (15-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

145. கடம்பாடி, திருவாளர்கள் கடம்பாடி கனி எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்தினரால் செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 31-05-1996-ஆம் நாளிட்ட 202-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

146. சென்னை-69, திருவாளர்கள் கொல்லச்சேரி அரிசன ஒப்பந்தத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினரால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி, மேல்வரி, கூடுதல் மேல்வரி மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 05-09-1996-ஆம் நாளிட்ட 325-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

147. 1986-87 முதல் 1987-88 வரைக்கான கால அளவில் செல்லோபேஃன் தாள்களின் விற்பனைக்காக சென்னை, திருவாளர்கள் ரேயான் டிரேடர்ஸ் (பிரைவேட்) நிறுவனத்தினரால் செலுத்தப்பட வேண்டிய வரி, மேல் வரி மற்றும் கூடுதல் மேல்வரி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 31-10-1996-ஆம் நாளிட்ட 395-ஆம் எண்

[1997 ஏப்ரல் 11

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

129. மானியக் கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

130. மானியக் கோரிக்கை எண் 14 - தமிழ்நாட்டில் சிறைகள், அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் மேல்பாக்கம் அரசு காப்பு முகாமின் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

131. மானியக் கோரிக்கை எண் 21 - மீன் வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

132. மீன் வளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1997-98 (தமிழ்).

133. மீன் வளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1997-98 (ஆங்கிலம்).

134. அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1996-97.





இணைப்பு I

*(70 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காணவும்)*

**மானியக் கோரிக்கை எண் 13**

## நீதி நிருவாகம்

**1997-98**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

## I. தமிழ்நாட்டில் நீதித்துறையின் சிறப்பு அம்சங்கள்

**1. முன்னுரை:**

"சமுதாயத்தின் முதற்பெருங் கடமை நீதியே" என அலெக்சாண்டர் ஹாமில்டன் கூறுகிறார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வகுத்தளித்துள்ள விதிமுறைகளின்படி அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்துவதே தமிழக அரசின் கொள்கையாகும். நீதி நிருவாகம் நீதிமன்றங்களின் பொறுப்பாகும். நீதித் துறை அரசின் ஏனைய அங்கங்களான நிருவாகப் பிரிவு மற்றும் சட்டமியற்றுப் பிரிவு ஆகியவற்றின் குறுக்கீடின்றிச் சுதந்திரமாகச் செயல்படுகின்றது.

"உண்மை செயல்படும் நிலையே நீதி" என்று பெஞ்சமின் டிஸ்ரேலி கூறியுள்ளதற்கிணங்க, வழக்காடும் மக்களுக்கு நீதி வழங்குவதிலும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதிலும் நீதித் துறை முக்கியப் பங்காற்றுகிறது. தற்போதுள்ள சூழலில், "நீதிமன்றங்கள் காட்டும் அக்கறை", அரசு தூய்மையான நிருவாகத்தைப் பேணி வருவதற்குப் பெரிதும் உதவுகிறது. இம்மாநிலத்தில் உள்ள நீதித் துறை சுதந்திரமாகச் செயல்பட்டு வருவதன் காரணமாக அரசியலமைப்புச் சட்ட வாசகங்களில் இடம் பெற்றுள்ள உணர்வு பெரிதும் பேணிக் காக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் நீதியை நிலைநாட்டுவதற்கு எப்போதும் உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட்டு வந்துள்ளது. சுதந்திரமான நீதித் துறை செம்மையாகச் செயல்பட உகந்த சூழ்நிலையை உறுதிப்படுத்துவதில் அரசு பயனுள்ள வகையில் பணியாற்றுகிறது.

[1997 ஏப்ரல் 11

## 2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு:

**நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு வருமாறு:**

புதுடில்லியிலுள்ள உச்சநீதிமன்றம் நமது நாட்டின் உச்சநிலை நீதிமன்றமாகும். அது மாநிலங்களிலுள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களையும் அதன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுள்ளது.

**நமது மாநில நீதித் துறையின் படிநிலை அமைப்பு வருமாறு:**

**உயர்நீதிமன்றம், சென்னை**

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | மாவட்டங்கள் | சென்னை மாநகர் | மாவட்டங்கள் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | செஷன்ஸ் நீதிமன்றங்கள் |
| சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | சார்நிலை நீதிமன்றங்கள் | -- | நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் |
| -- | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | -- | நீதித் துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் |
| -- | மாவட்ட உரிமையியல் குற்றவியல் நீதிமன்றங்கள் | -- | -- |

மேலே குறிப்பிட்ட நீதிமன்றங்களுடன், பல்வேறு சட்டங்களின் கீழ் பின்வரும் நீதிமன்றங்களும்/அலுவலகங்களும் இயங்கி வருகின்றன:

1. நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை.
2. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.



1997 ஏப்ரல் 11]

3. தொழிலாளர் நல நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர்.
4. தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை.
5. குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம்.
6. பொருளாதாரக் குற்றங்கள் குறித்த தனி நீதிமன்றங்கள், சென்னை மற்றும் மதுரை.
7. மனித உரிமைகள் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்.
8. தடா சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள்.

## 3. தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்கள் எண்ணிக்கை விவரங்கள்:

தமிழ்நாட்டில் தற்போதுள்ள நீதிமன்றங்கள் எண்ணிக்கைகள் பற்றிய விவரம் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4. செலவின வகைப்பாடு:

நீதித் துறைக்கான செலவினங்கள் "சாட்டியவை", "அனுமதிக்கப் பட்டவை" என்ற இரு கூறுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

**சாட்டிய செலவினங்கள் (Charged):**

1. உயர்நீதிமன்றம் (உயர்நீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்றப் பதிவாளர், அசல் மேல் முறையீட்டுப் பிரிவுகள், மொழிபெயர்ப்பு அச்சிடுதல் துறை, சட்ட நிருபர்கள் பணியாளரமைப்பு, பாண்டிச்சேரி அதிகார வரம்பில் வரும் வழக்குகளை கவனிக்கும் உதவிப் பதிவாளர் மற்றும் பணியாளர்கள்).
2. நொடித்தவர் சொத்தாட்சியரும், அவரின் பணியாளரமைப்பும்.

**அனுமதிக்கப்பட்ட செலவினங்கள் (Voted):**

1. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் உள்பட உரிமையியல், செஷன்ஸ் நீதிமன்றங்கள்.
2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.
3. மாநகரக் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை.

4. சார்நிலைக் குற்றவியல் நீதிமன்றங்கள்.
5. சார்நிலை உரிமையியல் நீதிமன்றங்கள்.
6. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.
7. அரசு சட்ட அறிவுரையாளர்களும், ஆலோசகர்களும்.
8. தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் தொழில் தீர்ப்பாயம், சென்னை.
9. ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் தமிழ் சட்டப் பத்திரிகைகள் பதிப்பகம், சென்னை.
10. குடும்ப விவகார நீதிமன்றங்கள்.

## 5. உயர்நீதிமன்றம், சென்னை:

மாநிலத்தில் உச்சநிலை நீதிமன்றமாக உயர்நீதிமன்றம், அமையப் பெற்றுள்ளது. இது மாண்புமிகு தலைமை நீதிபதி உள்ளிட்ட 30 நீதிபதிகளுடன் இயங்கி வருகிறது.

உயர்நீதிமன்றம், நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் விவகார அசல் வழக்கு விசாரணை அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல் முறையீட்டு விசாரணை அதிகாரமும் பெற்றுள்ளது. உரிமையியல் விவகார அசல் வழக்குகளைப் பொறுத்தவரை, சென்னை மாநகரத்திற்குள் எழும் ரூ. 10,00,000-க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகின்றது.

உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவராகப் பதிவாளர் விளங்குகிறார். அவருக்கு உதவ, கூடுதல் பதிவாளர்கள், மாஸ்டர், துணை பதிவாளர்கள், அலுவலக நடுவர், வழக்குகளை பகுக்கும் தனி அலுவலர், உதவிப் பதிவாளர்கள், சார் உதவிப் பதிவாளர்கள், முதுநிலைக் கணக்கு அலுவலர் எனப் பல அலுவலர்களும் உள்ளனர். உயர்நீதிமன்றம், பல கிளைகளை உள்ளடக்கி உள்ளது. இதில் நிருவாகத் துறை, நூலகம், அசல் தாப்புப் பிரிவு, மேல்முறையீட்டுப் பிரிவு, நொடிப்பு வழக்குகள் பிரிவு, நீதிபதிகளுக்கான தனி உதவியாளர்கள் பிரிவு, உச்சநீதிமன்றப் பிரிவு, குற்றவியல் பிரிவு, பாண்டிச்சேரிப் பிரிவு,





நீதிமன்ற அலுவலர் பிரிவு, மேல்முறையீட்டு ஆய்வாளர் பிரிவு, ரிட் பிரிவு, மொழி பெயர்ப்பு அச்சிடுதல் துறை, நகலெடுப்போர் பிரிவு, நடப்புப் பிரிவு, வரவு-செலவு கணக்குப் பிரிவு, பதிவுருக்கள் பிரிவு ஆகியவை அடங்கும். உயர்நீதிமன்றம், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி நீதிமன்றங்கள் தொடர்பாகவும் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. பாண்டிச்சேரி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு பின்னர் அச்செலவுத் தொகை பாண்டிச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

நீதி வழங்குவதுடன், மாநிலத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

## 6. தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு:

### 1. சென்னைப் பெருநகர்

#### அ. மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை

18 சார்நிலை நீதிபதிகள், 8 மாவட்ட நீதிபதிகள் என மொத்தம் 26 நீதிபதிகள் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் பணியாற்றுகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர் தரத்திலான ஒரு தனிப் பதிவாளர், மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியாகச் சென்னை மாநகர் முழுவதும் விளங்குகிறது. மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு பணவகையிலான வழக்குகளில் ரூ. 10,00,000 ஆகவும், மேல்முறையீடு வழக்குகளில் ரூ. 1,00,000 ஆகவும் உள்ளது. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் பணவகையிலான மேல்முறையீட்டு அதிகார வரம்பை, மாவட்ட நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குச் சரிநிகராக இருக்கின்ற வகையில் ரூ. 1,00,000-லிருந்து ரூ. 3,00,000-க்கு உயர்த்த வகை செய்யும் 1997-ஆம் ஆண்டுச் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றதும், இந்த மசோதா சட்டமாக பிரசுரிக்கப்பட்டு 1 டிசம்பர், 1995-ல் இருந்து செயல்பாட்டிற்கு வரும்.

[1997 ஏப்ரல் 11

மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை, குற்றவியல் பிரிவிற்கான குற்றவியல் செசன்சு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர நீதிமன்றத்தின் மாவட்ட நீதிபதி தரத்திலான சில நீதிபதிகட்கு குற்றவியல் (திருத்த) சட்டத்திருத்தத்தின் கீழ் நடப்பு வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்குரிய அதிகாரங்களும் அளிக்கப் பட்டுள்ளன.

1997-98 ஆம் ஆண்டில் மாநகர உரிமையியல் நீதிமன்றங்களுக்கான மொத்த செலவு ரூ. 2,58,79,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

**ஆ. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை**

இந்நீதிமன்றத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலான நீதிபதி தலைமை வகிக்கிறார். மேலும் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும் (உரிமையியல் நீதிபதி - பணிமூப்பு நிலை), மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர் பதவித் தரத்தில் (உரிமையியல் நீதிபதி - இளநிலை) ஏழு நீதிபதிகளும் உள்ளனர். நிருவாகப் பொறுப்பிற்கெனத் தனியே ஒரு பதிவாளரும் உள்ளார். இவர், நீதிமன்றத் தீர்ப்பாணைகளை நிறைவேற்றக் கோரும் குறிப்பிட்ட சில மனுக்களில் தீர்வு காணல் போன்ற சில நீதி நிருவாகப் பணிகளையும் கவனிக்கிறார். தலைமை நீதிபதியும் இதர நீதிபதிகளும் 1892 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ்வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைச் செலுத்துவர்.

V-ஆம், VI-ஆம் நீதிபதிகள், மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் தனிப்பட்ட தீர்ப்பாயங்களாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதிக்கும், II, III, IV ஆம் நீதிபதிகளுக்கும் மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. X முதல் XVI வரை உள்ள நீதிபதிகள் சென்னை மாநகருக்கான வாடகைக் கட்டுப்பாட்டு நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகள் II முதல் IV, VII மற்றும் VIII ஆகியோருக்கு வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், சிறு வழக்குள் நீதிமன்றத்திற்கான செலவினம் ரூ. 1,28,36,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 11]

**2. மாவட்டங்கள்**

**அ. மாவட்ட நீதிமன்றங்கள்:**

மாநிலத்தில் 22 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. புதிதாகப் பிரிக்கப்பட்ட வருவாய் மாவட்டங்களுக்குப் புதிய நீதிமன்றங்கள் இன்னும் அமைக்கப்படவில்லை. மாவட்ட நீதிபதிகள், அவரவர் பகுதிகளுக்கான குற்றவியல் அமர்வு நீதிபதிகளுமாவர். தொழிலாளர் மாநிலக் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகனங்கள் சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்களின் கீழ் தனித் தீர்ப்பாயங்களாகவும் அவரவர்கள் பணியாற்றுகின்றனர். மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளிலுள்ள சார்நிலை, உரிமையியல் நீதிமன்றங்களையும், தலைமை நீதித்துறைக் குற்றவியல் நீதிமன்றங்களையும் ஆய்வு செய்து வருகின்றனர். இம்மாவட்ட நீதிமன்றங்கள் ரூ. 3,00,000 வரையில் உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பினைக் கொண்டுள்ளன. மாவட்ட மற்றும் செசன்சு நீதிபதி தரத்தில் இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிப்பதற்காக சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் ஒவ்வோரிடத்திற்கு ஒன்று வீதம் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் உள்ளன.

**ஆ. சார் நீதிபதி நீதிமன்றங்கள்:**

சார் நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அசல் வழக்கில் பண வகையில் வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். அவர்களின் அதிகார வரம்பு, உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. சார் நீதிபதிகள் அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராகத் தொடரப்படும், ரூ. 30,000 மதிப்பிற்கு உட்பட்ட மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். இவர்கள், உதவி குற்றவியல் செசன்சு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும் சார் நீதிமன்றங்கள், மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களாக ஏற்படுத்தப்பட்டு, அவற்றுக்கு சார் நீதிபதிகளே நடுவர்களாக இருக்கிறார்கள்.

**இ. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்:**

மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் தற்பொழுது உரிமையியல் நீதிபதிகள் (இளநிலைப் பிரிவு) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் ரூ. 30,000 வரையில் மதிப்புள்ள வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், வரையறுத்த அதிகார வரம்பினைக் கொண்டிருக்கிறது. இவை ரூ. 5,000 வரையிலான மதிப்புள்ள சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரமும் பெற்றுள்ளன. அவர்கள், அவரவர் பகுதிகளுக்கான வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளுமாவர்.

**ஈ. மாவட்ட உரிமையியல் - குற்றவியல் நீதிமன்றங்கள்:**

மாநிலத்தில் சில பகுதிகளைச் சேர்ந்த வழக்காடும் மக்கள் அவரவருடைய பகுதிகளில் உரிய உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாமையால் தங்களுடைய உரிமையியல் வழக்குகளுக்குத் தீர்வுகாண அவர்தம் பகுதிகளுக்கு அப்பாலுள்ள உரிமையிலுள்ள நீதிமன்றங்களை நாடுவதில் சில இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவர்களுடைய குறைபாடுகளை நீக்கும் பொருட்டு, அரசு உயர்நீதிமன்றத்தின் இசைவுடன் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத 43 இடங்களில் அமைந்துள்ள நீதித்துறை குற்றவியல் நீதிமன்றங்களை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களாக மாற்றியமைத்துள்ளது.

மாவட்டங்களில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள், சார் நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள், நகலெடுக்கும் பணியாளர் மற்றும் ஆணை சார்வு செய்யும் பணியாளர் அமைப்பு ஆகியவற்றிற்கு 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 39,56,49,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**7. குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு முறை:**

**1. சென்னை மாநகரம்**

சென்னை மாநகரில், பெருநகரத் தலைமை மாஜிஸ்டிரேட், பெருநகரக் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் மற்றும் இரு இயலூர்தி நீதிமன்றங்களின் (Mobile Courts) மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோர் உட்பட 23 பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன. பெருநகரத் தலைமை மாஜிஸ்டிரேட், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர் ஆவார். பெருநகரக் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட், சார் நீதிபதிகளின் பதவித் தரத்தைச் சேர்ந்தவர் ஆவார். சென்னையில் பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்க, பெருநகரக் கூடுதல் தலைமை



மாஜிஸ்டிரேட்டுகள் இருவர் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது மற்றும் பதினொன்றாவது பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள், சார் நீதிபதிகள் பதவி நிலையைச் சேர்ந்தவர்கள். மற்ற அனைத்து பெருநகர மாஜிஸ்டிரேட்டுகளும் மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள், சென்னை மாநகரில் அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட காவல் நிலைய வழக்குகள் குறித்து விசாரிக்கும் அதிகாரம் பெற்றவராவர்.

1997-98 ஆம் ஆண்டில், இம்மாநகரிலுள்ள பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களுக்கு ரூ. 2,10,89,000/- செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

**2. மாவட்டங்கள்**

**அ. நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்:**

தமிழகம் முழுதும் உள்ள 21 நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களின் நிலை உயர்த்தப்பட்டு கூடுதல் மாவட்ட நீதிபதி-நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் என்று பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. கூடுதல் மாவட்ட நீதிபதி - நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் அவரவர் மாவட்டத்திலுள்ள, சார் குற்றவியல் நீதிமன்றங்களை ஆய்வு செய்வர். இவர்கள், தங்கள் நிருவாகப் பணிகளுடன் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் கீழ் மாவட்ட மற்றும் செசன்சு நீதிபதியால் மாற்றப்படும் மேல் முறையீடுகளையும் விசாரணை செய்ய மேற்சொன்ன விதிக்கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள், கூடுதல் குற்றவியல் செசன்சு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர்.

**ஆ. நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்:**

மாநில அரசின் கொள்கைக்கிணங்க, பெரும்பாலும், அனைத்து வட்டங்களிலும் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில், 194 நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன.

1997-98 ஆம் ஆண்டு மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நீதிமன்றங் களுக்காக ரூ. 18,93,34,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 11

**8. தமிழ்நாட்டில் செயல்படும் சிறப்பு நீதிமன்றங்கள்:**

**அ. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்:**

அரசு, மாவட்டங்களில் உள்ள அனைத்து செஷன்சு நீதிமன்றங்களையும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றங்களாகக் குறிப்பிட்டுள்ளது. இத்துடன், 1955 ஆம் ஆண்டு குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் வரம்பிற்குள் வரும் குற்றங்களை விசாரிப்பதற்காகவென்றே மதுரை, திருச்சிராப்பள்ளி, கும்பகோணம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று என்ற வீதத்தில் நான்கு தனி நீதிமன்றங்களை, மைய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன் அரசு அமைத்துள்ளது.

இந்நீதிமன்றங்களுக்காக, 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 29,51,000 செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆ. பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்:**

இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிபதி பதவித் தரத்தில் உள்ளவர்களை நீதிபதிகளாகக் கொண்ட ஆறு தனி நீதிமன்றங்கள் தற்போது உள்ளன. பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்கச் சென்னையில் இரண்டும் மதுரையில் ஒன்றுமாக மூன்று தனி நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. இந்நீதிமன்றங்களுக்காக, 1997-98 ஆம் ஆண்டில், ரூ. 26,84,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**இ. சந்தன மரம் தொடர்பான குற்றங்களை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்:**

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலும், சேலத்திலும், சந்தன மரம் தொடர்பான குற்றங்களை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள் உள்ளன.

**ஈ. இரயில்வே நீதிமன்றங்கள்:**

பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்யும் குற்றங்களை இந்தியன் ரயில்வே சட்டத்தின் கீழ் விசாரிப்பதற்காக, வட ஆற்காடு அம்பேத்கர், தென்னாற்காடு வள்ளலார், கோயமுத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சென்னையில் எழும்பூர் மற்றும் சென்ட்ரல் ஆகிய இரயில் நிலையங்களிலும் நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவை நீதித்துறை செய்து வருகிறது. இந்நீதிமன்றங்கள் மூலம் வசூலிக்கப்படும் அபராதத் தொகை, நீதித்துறை கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.





**உ. நடமாடும் நீதிமன்றங்கள்:**

மாநிலத்தில் சாலைப் போக்குவரத்துத் தொடர்பான குற்றங்களை விசாரிக்க சென்னையில் இரண்டும், கோயமுத்தூரில் ஒன்றும், மதுரையில் மற்றொன்றுமாக நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**ஊ. குடும்ப விவகாரங்களுக்கான நீதிமன்றங்கள்:**

இந்தியச் சமுதாயம் என்னும் பெருமாளிகைக்குக் குடும்பமே அடித்தளமாக உள்ளது. எனவே, குடும்பத்தில் ஏற்படும் பிணக்குகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன், சென்னையில் மூன்றும், மதுரை, கோயமுத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் முறையே ஒன்றுமாக மொத்தம் ஆறு குடும்ப நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், குடும்ப நீதிமன்றங்களுக்காகும் செலவு ரூ. 81,38,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

**எ. 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டத்தின் கீழ் தனி நீதிமன்றங்கள்:**

நம்நாட்டில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க, 1987 ஆம் ஆண்டுத் "தடா" சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தமிழக அரசு, உயர்நீதிமன்றத்தின் ஒப்புதலுடன், சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களையும், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தனி நீதிமன்றத்தையும் அமைத்துள்ளது. சென்னையில் உள்ள முதலாம தனி நீதிமன்றம் மறைந்த திரு. ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான வழக்கினை விசாரிப்பதற்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஏ. மத்தியப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றங்கள்:**

மத்திய புலனாய்வு வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென சென்னையில் இரண்டு நீதிமன்றங்கள் மற்றும் மதுரை, கோயமுத்தூர்

[1997 ஏப்ரல் 11

ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு நீதிமன்றம், என மொத்தம் 4 சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க அரசு ஒப்புதலளித்துள்ளது.

**ஐ. போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றங்கள்:**

போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு கூடுதல் சிறப்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**ஒ. தொழிலாளர் நல நீதிமன்றங்கள்:**

சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் 10 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் அனைத்துப் பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் தீர்ப்பாயம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் தீர்ப்பாயம் ஆகியவற்றின் நடுவர்கள் மாவட்ட நீதிபதி தரத்தில் உள்ளனர். தொழிலாளர் நல நீதிமன்றங்களில் தொழில் தகராறுகள் குறித்தும் அரசு மற்றும் வழக்காடுபவரால் அனுப்பப்படும் வழக்குகள் மற்றும் உரிமைக் கோரிக்கை மனுக்கள் மீதும் தீர்ப்பு வழங்கப்படும்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயம் ஆகியவற்றின் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் சென்று, முகாம் நீதிமன்றம் நடத்தித் தொழிலாளர் வழக்குகள் மற்றும் உரிமைக் கோரிக்கை மனுக்கள் மீது விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர்.

சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றம் மற்றும் தொழில் தீர்ப்பாயம் ஆகியவற்றிற்கு 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 1,02,00,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**ஓ. சென்னை, அரசுத் தலைமைச் சொத்தாட்சியர்—பொறுப்புச் சொத்தாட்சியர்:**

சென்னையில் உள்ள அரசுத் தலைமைச் சொத்தாட்சியர் - பொறுப்புச் சொத்தாட்சியர், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள



1997 ஏப்ரல் 11]

ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாக துணைத் தலைமைச் சொத்தாட்சியர் - பொறுப்புச் சொத்தாட்சியர் உள்ளார். உரிய வயதடையாதவர்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துரிமைக்கும், மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள் அரசுத் தலைமைச் சொத்தாட்சியர் சட்டம் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டத்தில் உள்ள விதித்துறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிப் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றனர்.

1997-98 ஆம் ஆண்டுக்கு இப்பணியாளரமைப்பு தொடர்பான செலவு ரூ. 24,28,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

**9. தமிழ்நாட்டில் சட்ட அலுவலர்களின் அமைப்பு:**

நீதிமன்றங்களில் அரசுக்கு எதிராகத் தொடரப்படும் வழக்குகளைச் செம்மையாக நடத்தி, அரசின் நலங்களைப் பாதுகாப்பதற்கெனச் சட்ட அலுவலர்கள் குறிப்பிட்ட கால அடிப்படையிலும், கால முறை ஏற்றச் சம்பளம் பெறும் அரசுப் பணி அடிப்படையிலும் நியமிக்கப்படுகின்றனர். தமிழகத்தில் உள்ள சட்ட அலுவலர்களின் பதவித் தரங்கள் குறித்த விவரம் வருமாறு:

**சட்ட அலுவலர்கள்**

| சென்னை மாநகரம் | மாவட்டங்கள் |
|---|---|
| அரசுத் தலைமை வழக்கறிஞர் | |
| உரிமையியல் | உரிமையியல் |
| 1. அரசு உரிமையியல் வழக்குரைஞர் | 1. அரசு உரிமையியல் வழக்குரைஞர் |
| 2. அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | 2. அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. அரசு உரிமையியல் தனி வழக்குரைஞர்கள் | 3. அரசுப் பணிகளை ஆற்றும் அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள் |
| 4. அரசு வழக்குரைஞர்கள் | |

[1997 ஏப்ரல் 11

| குற்றவியல் | குற்றவியல் |
|---|---|
| 1. அரசு குற்றவியல் வழக்குரைஞர் | 1. அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் |
| 2. அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | 2. அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. அரசு வழக்குரைஞர்கள் | 3. அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்கள் |
| 4. மாநகரக் குற்றவியல் வழக்குரைஞர்கள் | 4. அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள். நிலை-I நிலை-II |
| 5. அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்கள் | |
| 6. அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள். நிலை-I நிலை-II | |

வழக்குகளுக்குத் தீர்வு காண்பதில் வழக்கறிஞர்களின் பணி இன்றியமையாதது. இதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட இயலாது.

சட்ட அலுவலர்கள் குறிப்பிட்ட கால அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். ஆனால், உதவி குற்றவியல் வழக்குரைஞர்கள் நிரந்தர அரசுப் பணியாளர் ஆவர்.

இத்தகைய வழக்குரைஞர்கள் நீதிமன்றத்திற்கு ஒருவர் என்ற அளவில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது மனநிறைவளிப்பதாகும். குற்றவியல் நீதிமன்றங்களில் பணியாற்றும் குற்றவியல் உதவி வழக்குரைஞர், நிலை-I (நிருவாகம்), மாவட்ட அளவில் குற்றவியல் உதவி வழக்குரைஞர்களின் முதுநிலை அதிகாரி ஆவார். இவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சட்ட ஆலோசனை நல்கி வருகிறார்கள்.

புது டில்லி, உச்ச நீதிமன்றத்திலுள்ள நமது வழக்குகளைப் பொறுத்த மட்டில் நான்கு வழக்குரைஞர்கள் உள்ளனர்.



1997 ஏப்ரல் 11]

**10. தமிழில் வெளிவரும் சட்ட இதழ்:**

"தீர்ப்புத் திரட்டு" எனும் பெயரில் தமிழில் வெளிவரும் சட்ட மாத இதழ் அரசால் வெளியிடப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவு ரூ. 13,94,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இதழின் படி ஒன்று ரூ. 32 என்னும் விலையில் வழக்கறிஞர்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

**11 நிதி ஒதுக்கீடு:**

நீதித்துறையானது தனது அடிப்படை வசதிகளின் வளர்ச்சியில் மட்டுமின்றி நிதி ஒதுக்கீட்டிலும் பெரும் ஏற்றம் கண்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் நீதித் துறைக்கு ரூ. 19.38 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 82.77 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதி ஒதுக்கீடு உயர்ந்து வந்துள்ளது குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | செலவு | வரவு |
|---|---|---|
| | ரூபாய் கோடியில் | |
| 1989-90 | 29.70 | 28.57 |
| 1990-91 | 37.25 | 26.16 |
| 1991-92 | 40.19 | 25.65 |
| 1992-93 | 45.25 | 28.07 |
| 1993-94 | 56.05 | 32.62 |
| 1994-95 | 64.95 | 38.34 |
| 1995-96 | 73.14 | 43.04 |
| 1996-97 (திருத்திய மதிப்பீடு) | 85.90 | 39.53 |
| 1997-98 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு) | 96.43 | 42.52 |

**III. சென்னை உயர்நீதிமன்றத்தில் கணினி முறையை அறிமுகப்படுத்துதல்:**

தேசிய தகவல் தொகுப்பு மையம், சென்னை உயர்நீதிமன்றத்தில் 1995 பிப்ரவரி திங்களில் தேவையான எண்ணிக்கையிலான முனையங்களுடன் கணினித் தொடர்பு ஏற்பாட்டை நிறுவியுள்ளது.

எல்லா மாவட்ட நீதிமன்றங்களையும் கணினி முனையங்கள் மூலம் உயர்நீதிமன்றத்துடன் தொடர்புபடுத்தத் தேசியத் தகவல் தொகுப்பு மையம் முடிவு செய்துள்ளது. உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் கணினி வசதி ஏற்படுத்துவது நீதித்துறை நிருவாகம் செவ்வனே செயல்படுவதற்கு வழிகோலும்.

**IV. சார்நிலை நீதிமன்றங்களைப் பல்வேறு இடங்களில் அமைத்தல்:**

குறிப்பிட்ட ஒரே இடத்தில் பல்வேறு நீதிமன்றங்கள் செயல்படுவதைத் தவிர்க்கும் பொருட்டும், வழக்காடும் பொது மக்கள் தற்போது அமைந்திருக்கும் நீதிமன்றங்களுக்கு செல்லும் சிரமத்திலிருந்து அவர்களை விடுவிக்கவும் மாவட்டங்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்களைப் பல்வேறு இடங்களில் அமைக்கக் கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, 1873 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதுபோல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, 1892 ஆம் ஆண்டுச் சென்னை மாநகர உரிமையியல் சட்டத்தின் கீழும், சிறு வழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, 1882 ஆம் ஆண்டு மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட முனிசீப் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் சார்நிலை நீதிமன்றங்களின அதிகார வரயபு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முனிசீப் நீதிமன்றங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மற்றும் செஷன்சு நீதிமன்றங்களைப் பொறுத்தவரை அதன் வரம்பு வருவாய் மாவட்டம் முழுமைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், அதன் அதிகார வரம்பு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.



புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக வழக்குரைஞர் சங்கத்திடமிருந்து அல்லது வழக்காடும் பொதுமக்களிடமிருந்து வரும் முறையீடுகளை அரசு உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்துத் தீவிரப் பரிசீலனைக்குப் பிறகு புதிய நீதிமன்றங்களை அமைக்கிறது.

உரிமையியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், புதிய இடங்களில் புதிய நீதிமன்றங்கள் அமைப்பதோடு அல்லாமல், வழக்குகளின் நிலுவை அதிகமாக இருக்கும்போது, வழக்காடும் பொது மக்களின் நலனைக் கருதி, வழக்குகளின் நிலுவையைக் குறைப்பதற்காக உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையுடன் கூடுதல் உரிமையியல் நீதிமன்றங்கள் அவ்வப்போது அரசால் அமைக்கப்படுகின்றன.

**V. முன்னோடித் திட்டம்:**

சார்நிலை நீதிமன்றங்களிலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் நிலுவை மிகப் பெரும் அளவிற்கு அதாவது 7,50,000 ஆக இருப்பதால், நிலுவைகளை குறைப்பதற்கும் அவ்வழக்குகளைப் போர்க்கால அடிப்படையில் தீர்வு காண்பதற்காகவும் "முன்னோடித் திட்டம்" என்ற சிறப்புத் திட்டத்தினை உயர்நீதிமன்றம் 17-10-1994 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் ஒரே சமயத்தில் செயலாக்க இயலாது என்பதால், இதனைப் படிப்படியாகச் செயலாக்க முடிவு செய்துள்ளது.

இத்திட்டக் காலம் முடிவடையும்போது அத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டத்தில் உயர்நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தினால் நிறுத்தி வைக்கப்பட்ட வழக்குகளைத் தவிர இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட வழக்கு ஏதும் நிலுவையில் இல்லாமல் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னோடித் திட்டத்தின் நிறைவு காலம் அது அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுக் காலமாகும்.

முதறபடியாக இந்த முன்னோடித் திட்டம் 17-10-1994 அன்று கீழ்க்கண்ட மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது:—

1. தருமபுரி,
2. நாகை காயிதே மில்லத்,

3. சிதம்பரனார்.

4. காமராஜர்.

5. புதுக்கோட்டை.

6. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்.

7. நீலகிரி.

8. இராமநாதபுரம்.

இரண்டாவதுபடியாக இத்திட்டம் 17-10-1995 அன்று கீழ்க்கண்ட மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது:—

1. விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார்.

2. கன்னியாகுமரி.

3. திருநெல்வேலி-கட்டபொம்மன்.

4. தென்னாற்காடு-வள்ளலார்.

5. பெரியார்.

6. திருவண்ணாமலை-சம்புவராயர்.

7. தஞ்சாவூர்.

8. திண்டுக்கல்-மன்னர் திருமலை.

மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முன்னோடித் திட்டம் தவிர, பதினான்கு மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும், தேர்வு செய்யப்பட்ட இரண்டு வட்டங்களில், 2½ ஆண்டுக்காலம் நீடிக்கக் கூடிய வழக்கே இல்லாத வட்டம் (Litigation Free Taluk) என்ற திட்டத்தையும் சென்னை உயர்நீதிமன்றம் 3-7-1995 முதல் நடை முறைப்படுத்தியுள்ளது. இத்திட்டம் முடிவுறும்போது, ஆறு மாதத்திற்கும் மேலான வழக்கு ஏதும் குறிப்பிடப்பட்டுள்ள வட்டத்தில் நிலுவையில் இருக்கக் கூடாது என்பதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

முன்னோடித் திட்டத்தின் முதல் கட்டத்தில் 11 கூடுதல் நீதிமன்றங்கள் ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில், இந்த அரசு இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின்கீழ் 55 கூடுதல் நீதிமன்றங்கள் ஏற்படுத்த ஒப்புதல் அளித்தது. இந்த எண்ணிக்கை முதலில் ஒப்புதல் அளிக்கப்பட்டதைவிட ஐந்து மடங்கு கூடுதலாகும் நீதிமன்றங்களின் விவரங்கள் இணைப்பு 2-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.



## VI. திட்டத் துறையில் நீதித்துறைக்கான உள்கட்டமைப்பு வசதிகள்:

நீதித்துறைக்கு உள்கட்டமைப்பு வசதிகளை அளித்தல் என்பது வளர்ச்சி நிலையில் குறிப்பிடத்தக்க இன்னொரு கட்டம் ஆகும். நீதித்துறை சிறப்பாகவும், செம்மையாகவும் இயங்கும் வகையில் மாநில அரசு அத்துறைக்குத் தேவையான எல்லா வசதிகளையும் அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டிடங்கள், நீதித்துறை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் மற்றும் வழக்கறிஞர்களுக்கான அறைகள் ஆகியவற்றைக் கட்டும் திட்டம், 1993 ஆம் ஆண்டிலிருந்து திட்டப் பணியின் கீழ் சேர்க்கப்பட்டது. இந்த இனத்தின் கீழ் செய்யப்படும் செலவை மைய-மாநில அரசுகள் 50:50 என சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளும். 1995-96 ஆம் ஆண்டு வரை, மொத்தம் ரூ. 35.00 கோடி மூலதனச் செலவில், 80 திட்டங்களுக்கு மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 14 திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, நீதித்துறையிடம் கட்டிடங்கள் ஒப்படைக்கப்பட்டன. எஞ்சிய பணிகள் நடந்தேறி வருகின்றன. இதுவரை ரூ. 24.21 கோடி இத்திட்டப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு, தனது பங்காக இதுவரை, ரூ. 12.69 கோடி அளித்துள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் மட்டும் இந்த அரசு ரூ. 28.32 கோடி செலவில் எட்டு திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் இனிமேல் தான் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த எட்டு திட்டப் பணிகளின் விவரங்கள் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல், நீதித்துறை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் போன்ற நீதித்துறையின் எல்லாத் தேவைகளையும் எதிர் கொள்ளவும், அதிக நிதியைப் பெற வேண்டி மைய அரசை அணுகவும், உயர்நீதிமன்றத்தைக் கலந்து ஆலோசித்து நீதித்துறையின் முழுத் தேவைகளுக்கான ஒரு "பெருந்திட்டம்" (Master Plan) தயாரிக்கப்பட்டு வருகிறது.

## VII. தமிழ்நாடு அரசு சட்ட உதவி ஆலோசனைக் குழு:

தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவின் பணிகள் வருமாறு:

(1) அனைவருக்கும் இலவச சட்ட உதவி:

[1997 ஏப்ரல் 11

(2) அரசின் பல்வேறு ஆணைகள் மூலம் வழங்கப்படும் உரிமைகளை ஏழை மக்களுக்கும் கிடைக்கச் செய்வதில் உதவுதல் (அரசு நிறைவேற்றியுள்ள பல்வேறு சமூகப் பொருளாதார சட்டங்களின் மூலம் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் குறித்து, பல சூழ்நிலைகளில் ஏழை எளிய படிப்பறிவில்லாத மக்கள் அறியாமல் இருப்பதையும் அந்தச் சலுகைகளை அடைவதற்கு உரிய அலுவலர்களிடம் சென்று முறையிட்டு அனுகூலங்களைப் பெறத் தேவையான வசதிகள் இல்லாததையும் கருத்திற்கொண்டு இத்திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது).

(3) உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் மன்றங்களில் வழக்குத் தொடர அல்லது வழக்கில் எதிர்வாதாட ஏழை எளியவர்களுக்கு உதவுதல்;

(4) விவாகரத்து, கணவனிடம் திரும்பவும் சேர்த்தல், குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பு, ஜீவனாம்சம், ஏனைய தொடர்புடைய சொத்துப் பிரச்சனைகளில் பெண்களுக்கு உதவுதல்;

(5) விபத்துக் கோரிக்கை நடுவர் மன்றங்களில், விபத்துக்குள்ளானவர்களுக்கு விபத்து இழப்பீட்டுக் கோரிக்கைத் தொகை கிடைக்க உதவுதல்;

(6) தொழிலாளர்களுக்குச் சட்ட உதவி அளித்தல்;

(7) சிறைக் கைதிகள், கைதானதிலிருந்து, வழக்கு நடத்துதல் மேல் முறையீடு செய்வது வரை அவர்களுக்கு உதவுதல், சிறைகளிலுள்ள தண்டனை பெற்றக் கைதிகளுக்கு குடும்பச் சொத்து தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்க உதவுதல்;

(8) இராணுவத்தினர், முன்னாள் இராணுவத்தினருக்குச் சட்ட உதவி அளித்தல்.

தமிழ்நாடு சட்ட உதவி ஆலோசனைக் குழு, மாநில அரசால் தோற்றுவிக்கப்பட்டு, சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 39ன்—ஏவின் கீழ், மாநில அரசு தனது கடப்பாடுகளைச் செயல்படுத்தும் மாநில அரசின் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பாக உள்ளது. இக்குழு, சட்ட உதவிப் பணிகளை மாவட்டக் குழுக்கள், வட்டக் குழுக்கள், சட்ட உதவி



1997 ஏப்ரல் 11]

மையங்கள், ஆலோசனை மையங்கள், சமரச மையங்கள், பெண் ஆலோசனை மையங்கள் முதலானவற்றின் மூலம் செயலாற்றுகிறது.

இக்குழுவின் ஆலோசனைக்கேற்ப மாவட்டக் குழுக்களும், வட்டக் குழுக்களும் "லோக் அதாலத்" என்கிற 'மக்கள் நீதிமன்ற' முறையைச் செயல்படுத்துகின்றன. இதன்மூலம் இக்குழு நீதிமன்றங்களுக்கு வெளியே இரு தரப்பினருக்கிடையே சமரசம் செய்து வைப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது.

சட்ட உதவிக் குழு, தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு 1996-97 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.40 கோடி மானியமாக அளித்துள்ளது.

இச்சட்ட உதவித் திட்டங்களுக்கு சட்டப்படியான அடிப்படையை அமைக்க, மைய அரசு, 1987 ஆம் ஆண்டுச் சட்டப் பணிகள் அதிகார மன்றங்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 39/1987) இயற்றியது. இது, பின்னர் 1994 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகார மன்றங்கள் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளது. சட்டப் பணிகள் அதிகார மன்றங்கள் சட்டத்தின் மூன்றாவது அதிகாரத்தின் கீழ் உள்ள விதிமுறைகளை தற்போது மைய அரசு தமிழ்நாடு மாநிலத்திற்கு நீட்டித்துள்ளது. மாநிலச் சட்டப் பணிகள் அதிகார மன்றம், மாவட்டச் சட்டப் பணிகள் அதிகார மன்றம், வட்டச் சட்டப் பணிக்குழுக்கள் ஆகியவற்றிற்குத் தேவையான விதிகள், 1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகாரமன்றச் சட்டத்தின் மூன்றாவது அதிகாரத்தின் கீழ், அரசால் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மாநிலச் சட்டப் பணிகள் அதிகார மன்றம் மற்றும் மாவட்டச் சட்டப் பணிகள் அதிகார மன்றங்கள் ஆகியவை சென்னை உயர்நீதிமன்றத்தைக் கலந்து ஆலோசித்து நிறுவப்படவுள்ளன.

## VIII. சட்டக் கல்வி:

தமிழ்நாட்டில், சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும நோக்கத்துடன், சட்டக்கல்வித் துறை 1953 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. தற்போதுள்ள, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயமுத்தூர் ஆகிய நான்கு சட்டக் கல்லூரிகளுடன், 1996-97 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளதற்கிணங்க, 1996-97 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் புதிதாக ஒரு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 11

1983-84 ஆம் ஆண்டில் இந்திய வழக்கறிஞர் மன்றம் வகுத்துள்ள கொள்கைக்கிணங்க, சட்டப்படிப்பிற்கான கால அளவு, மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. பிளஸ் 2 தேறிய மாணவர்கள் நேரடியாக இந்தப் படிப்பில் சேர அனுமதிக்கப் படுகின்றனர்.

திருநெல்வேலி சட்டக் கல்லூரியைத் தவிர, நான்கு அரசு சட்டக் கல்லூரிகளிலும் மூன்றாண்டு (முழுநேரம்), மூன்றாண்டு (மாலை வகுப்பு) மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. திருநெல்வேலி சட்டக் கல்லூரியில், மூன்றாண்டு சட்டப்படிப்பு மட்டும் 80 மாணவர்களுக்கு நடத்தப்படுகிறது. சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசுச் சட்டக் கல்லூரியில் முதுநிலைச் சட்டப் படிப்பில், கீழ்வரும் நான்கு பாடப் பிரிவுகளில் வகுப்பு நடைபெற்று வருகிறது. அவை:

(1) குற்றவியல் மற்றும் தீங்கியல்

(2) வணிகவியல் சட்டம் உட்பட ஒப்பந்தச் சட்டம்

(3) சொத்துரிமைச் சட்டம்

(4) நிருவாகச் சட்டம் மற்றும் தொழிலாளர் சட்டம்

மதுரை சட்டக் கல்லூரியில் "சொத்துரிமைச் சட்டம்" என்னும் பிரிவிலும், திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரியில் "நிருவாகச் சட்டம் மற்றும் தொழிலாளர் சட்டம்" என்னும் பிரிவிலும் முதுநிலைச் சட்டப்படிப்பு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

1968-69 ஆம் கல்வி ஆண்டு முதல், சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் சட்ட முதுநிலை பட்டப்படிப்பு (முழுநேரம்) தொடங்கப்பட்டது. மதுரை சட்டக் கல்லூரியிலும், திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரியிலும் சட்ட முதுநிலைப் பட்டப்படிப்பு முறையே 1980-81 ஆம் ஆண்டிலும் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டது.

1987-88 ஆம் கல்வியாண்டிலிருந்து சட்டக் கல்வித்துறை நடத்துகின்ற நுழைவுத் தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெறுகின்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படுகிறார்கள். நுழைவுத் தேர்வு விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணியும் தேர்வுப் பட்டியல் அச்சடிக்கும் பணியும் கணிப்பொறி மயமாக்கப்பட்டு, இப்பணி அரசு புள்ளிவிவரத் தொகுப்பு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தகுதிவாய்ந்த மாணவர்களைத் தேர்வு செய்து அதன்மூலம் சட்டக் கல்வித் தரத்தினை உயர்த்திடும்



1997 ஏப்ரல் 11]

நோக்கத்தோடு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது எதிர்பார்த்த பலனை அளித்துள்ளது.

சட்டப்படிப்பில் சேர்வதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருவதைக் கருத்திற்கொண்டு கடந்த காலத்தில் சட்டப்படிப்பில் இடங்களின் எண்ணிக்கையை அரசு அதிகரித்துள்ளது. தற்பொழுது சட்டக் கல்லூரிகளில், முதுநிலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் உட்பட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 6,837. மூன்றாண்டுச் சட்டப்படிப்பு (முழுநேரம்) மற்றும் ஐந்தாண்டுச் சட்டப்படிப்பு ஆகிய பிரிவுகளில் திருநெல்வேலி சட்டக் கல்லூரி நீங்கலாக, ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு இடம் சிறந்த விளையாட்டு வீரர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும், இந்த எண்ணிக்கை சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் மூன்று இடங்களாகவும் (மாலை நேர வகுப்பு), மதுரை சட்டக் கல்லூரியில் இரண்டு இடங்களாகவும் (மாலை நேர வகுப்பு) சிறந்த விளையாட்டு வீரர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு அரசுச் சட்டக் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி மற்ற துறைகளிலும் தனிச் சிறப்புடன் விளங்கி வருகின்றனர். சட்ட மாணவர் பயிற்சி வழக்கு வாதப் (Moot Court Competition) போட்டிகளில் மாணவர்களின் செயலாக்கம் குறிப்பிடத்தக்கது. டாக்டர் அம்பேத்கர் அரசுச் சட்டக் கல்லூரி மாணவர்கள், இந்தியாவின் சார்பில் சட்ட மாணவர் பயிற்சி வழக்கு வாத சர்வதேசப் போட்டியில் கலந்து கொள்வதற்கு அடுத்தடுத்துப் பல ஆண்டுகளாகத் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். இப்படிப்பட்ட மாணவர்களின் தகுதியைக் கருத்திற்கொண்டு பயிற்சி வழக்கு வாதத்திறனறி போட்டியில் கலந்து கொள்வதற்கு தமிழக அரசு இவர்களுக்கு நிதி உதவியினை வழங்கி உள்ளது.

இம்மாநிலத்தில் அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக ஆக்கவேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, 1973-74 ஆம் ஆண்டு முதல், சட்டப்படிப்பு தமிழ்மொழியிலும் கற்பிக்கப்பட்டுவருகிறது. மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப, தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சட்டம் பயில மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தமிழில் சட்டம் பயிலும் மாணவர்களுக்கு ஒரு திங்களுக்கு ரூ.180 ஊக்கத் தொகையும் அளிக்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 11

மாணவர்களின் நலனுக்காகச் சென்னை, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கித் திட்டம் செயல்படுகிறது. சட்ட ஆலோசனை தேவைப்படும் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சட்டக் கல்லூரிகளில் இலவசச் சட்ட உதவி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**கட்டிடங்கள்:**

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசுச் சட்டக் கல்லூரி உயர்நீதிமன்ற வளாகத்திலேயே அமைந்துள்ளது. இரண்டு மாணவர் இல்லங்கள் உள்ளன. இக்கல்லூரி மாணவர்களுக்கென ஒரு இல்லமும் மாணவிகளுக்கென ஒரு தனி இல்லமும் உள்ளன. இவ்வில்லங்களில் முறையே 225 மாணவர்களும் 60 மாணவியரும் தங்கிட வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்விரு இல்லங்களும் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

மதுரை சட்டக் கல்லூரி, மதுரையில் தல்லாக்குளம் பகுதியில் அரசுக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் தனித் தனியாக இரண்டு இல்லங்கள் அரசுக் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. ஆண்கள் இல்லத்தில் 30 மாணவர்களும் பெண்கள் இல்லத்தில் 20 மாணவியரும் தங்க வசதி உள்ளது.

கோயமுத்தூரில் சட்டக் கல்லூரி தொடக்கத்தில் வாடகைக் கட்டிடத்தில் தொடங்கப்பட்டது. கோயமுத்தூரில் மருதமலைப் பகுதியில் உள்ள பாரதியார் பல்கலைக் கழக வளாகத்தினுள் உள்ள தனது சொந்தக் கட்டிடத்திற்கு 21-1-1992 அன்று சட்டக் கல்லூரி மாற்றப்பட்டது. கல்லூரி வளாகத்தினுள் அமைந்துள்ள மாணவர்கள் இல்லத்தில் 40 மாணவர்கள் தங்க வசதியுள்ளது.

திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரி ஆரம்பத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கியது தற்போது ரூ. 1.27 கோடியில் கட்டப்பட்ட சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது.

திருநெல்வேலி சட்டக் கல்லூரி தற்போது மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள பொன்னுசாமி பங்களாவில் 14-11-1996 முதல் இயங்கி வருகிறது. இதற்கான சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1997 ஏப்ரல் 11]

**சட்டப் பல்கலைக்கழகம்**

1996-97-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு 1996-ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, தமிழ்நாடு சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஆளுநரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டதும் அந்தச் சட்ட முன்வடிவு சட்டமாக வெளியிடப்பட்டு, சட்டப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கும்.

**IX. மாநில ஆட்சி மொழி (சட்ட) பிரிவு**

சட்டச் சொற்களைக் கொண்ட சொற்களஞ்சியமொன்றைத் தொகுப்பதற்காக நெறிப்படுத்துக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டச் சொற்களஞ்சியத்திற்கு இறுதி வடிவங்கொடுத்து வெளியிடுவதற்காகவும், மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், மற்றும் அச்சட்டங்களின்கீழ் இயற்றப்படும் விதிகள் ஆகியவற்றைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும், மையச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், விதிகள், அறிவிக்கைகள் முதலியவற்றை மொழி பெயர்க்கின்ற பணியாவது மாநில அரசின் அமைப்பினிடம் ஒப்படைக்கப்படுமாயின், அதனை மேற்கொள்வதற்காகவும் மற்றும் அரசினால் அவ்வப்போது ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும், மாநில ஆட்சி மொழி (சட்ட) ஆணையமானது, முதன்முதலாக 1965-ஆம் ஆண்டில் நீதியரசர் திரு. மா. அனந்தநாராயணன் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டது. மேற்சொல்லப்பட்ட ஆணையமானது, அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டு வந்து, கடைசியாக 1989-ஆம் ஆண்டில், சட்டமன்றப் பேரவையின் (ஓய்வுபெற்ற) செயலாளர் திரு. மா. சண்முகசுப்பிரமணியன் அவர்களின் தலைமையின்கீழ் மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது.

பின்னர், 1992-ஆம் ஆண்டில் மாநில ஆட்சிமொழி (சட்ட) ஆணையமானது, சட்டத்துறையின் கூடுதல் அரசுச் செயலாளரின் தலைமையில் சட்டத்துறையில் ஒரு பிரிவாக அரசுத் துறையாக்கப்பட்டுள்ளது. இத்துறை, சட்டத்துறை அரசுச் செயலாளரின் ஒட்டுமொத்த நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் மேற்பார்வையின் கீழும் இயங்கி வருகிறது. பெருமளவில் மொழிபெயர்ப்புத் திறனை

வளர்ப்பதற்காகவும், அதிகமான அளவில் மொழிபெயர்ப்புப் பணிகளைச் செய்வதற்காகவும், மைய அரசு மற்றும் சில மாநில அரசுகள் பின்பற்றி வருகின்ற முறையில் இது செய்யப்பட்டுள்ளது.

ஆட்சி மொழி (சட்ட) பிரிவானது, மையச் சட்டங்களையும் மாநிலச் சட்டங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வருகின்றது. மையச் சட்டங்கள், மைய அரசிடமிருந்து வரப்பெற்ற முன்னுரிமைப் பட்டியல்களின் அடிப்படையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. ஆட்சி மொழி (சட்ட) பிரிவிற்கு இதுவரை ஐந்து முன்னுரிமைப் பட்டியல்கள் மைய அரசிடமிருந்து வந்துள்ளன. அப்பட்டியல்களில் உள்ள மையச் சட்டங்களில் பெரும்பாலானவை மொழி பெயர்க்கப்பட்டு, இறுதி வடிவம் அளிக்கப்பெற்று, ஏற்புப் பெறும் பல நிலைகளில் உள்ளன. மற்றும் முன்னுரிமைப் பட்டியல்களில் காணப்படும் சில மையச் சட்டங்கள், அவற்றில் கடைசியாகச் செய்யப்பட்டுள்ள திருத்தங்களையும் சேர்த்து, மறுமுறை மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு அரசு ஒப்புதளித்தது. அதே சமயம், பொது முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படும் ஒரு சில மாநிலச் சட்டங்களும்கூட, மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கின்றன.

குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்ட இருபத்து மூன்று மையச் சட்டங்களின் தமிழ்மொழி பெயர்ப்பில் எட்டு மையச் சட்டங்கள் புத்தக வடிவில் (இருமொழிப் பதிப்பு) (Diglot Edition) வெளியிடப்பட்டுள்ளன. மேலும், எட்டு மையச் சட்டங்களின் மொழிபெயர்ப்பு, இந்திய அரசிதழில் வெளியிடப்பட்ட பின்னர் புத்தக வடிவில் (இருமொழிப் பதிப்பு) (Diglot Edition) வெளியிடப்பட உள்ளன. எஞ்சிய ஏழு மையச் சட்டங்களின் மொழி பெயர்ப்பு, இந்திய அரசிதழில் வெளியிடப்படவேண்டி உள்ளது. இதுதவிர, நூற்றிநான்கு மையச் சட்டங்களின் தமிழ் மொழிபெயர்ப்புகள், குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக நீலத்தாளில் (Azure laid paper) அச்சடிக்கப்படுவதற்காக அரசு மைய அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் திருத்தி அமைக்கப்பட்ட தமிழாக்கமானது (ஆங்கிலத்திலும் தமிழிலும்) (Diglot Edition) 1991-ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டு விற்பனைக்கு வெளியிடப்பட்டது. தமிழ்நாடு அரசின் ஏற்பளிப்பைப் பெற்ற ஏனைய அறுபது மையச் சட்டங்களின் மொழிபெயர்ப்பின் படிகள் மைய அரசின் ஏற்பளிப்பைப் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டன. அவை, இந்திய அரசின் சட்டம், நீதி மற்றும் நிறுவன அலுவல்கள்





அமைச்சகத்தின் ஆட்சி மொழி (சட்ட) பிரிவில், புதுதில்லியில் 16-10-1996 அன்று நடைபெற்ற பணிக்குழு (Working Group) கூட்டத்தில் வைக்கப்பட்டு, ஏற்பளிப்பை பெற்றன. இச்சட்டங்களின் ஏற்பளிக்கப்பட்ட மொழி பெயர்ப்புகளுக்கான ஆணை, இம்மொழி பெயர்ப்புகளை வெளியிடுவதற்காக மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

## X. அரசு வழக்காடு இயக்ககம்

சென்னை, உயர்நீதிமன்ற அரசு தலைமை வழக்குரைஞர், அரசு உரிமையியல் வழக்குரைஞர், அரசுக் குற்றவியல் வழக்குரைஞர் ஆகிய சட்ட அலுவலர்களை நிருவாகப் பணிச் சுமையிலிருந்து விடுவித்து, அவர்கள் நீதிமன்றப் பணியில் மேலும் கவனம் செலுத்தும் வகையில், அரசுத் துறைகளுக்கும் உயர்நீதிமன்றத்தின் சட்ட அலுவலர்களுக்கும் இணைப்பினை உருவாக்கவும், சென்னை, உயர்நீதிமன்ற அரசுத் தலைமை வழக்குரைஞர், அரசு உரிமையியல் வழக்குரைஞர், அரசுக் குற்றவியல் வழக்குரைஞர் ஆகியோரின் அலுவலகங்களை ஒருங்கிணைத்து அரசு வழக்காடு இயக்ககம் 1995-ஆம் ஆண்டில் மீண்டும் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசுத் தலைமை வழக்குரைஞர் அவர்களின் பரிந்துரையின் பேரில், அரசு, வழக்காடு இயக்ககத்தின் செயல்பாடு பற்றி ஆய்வு செய்து, மேற்படி வழக்காடு இயக்ககத்தைக் கலைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு, தற்பொழுது, தமிழ்நாடு தலைமை வழக்குரைஞர் அவர்களைத் துறைத் தலைவராகக் கொண்ட, அரசு வழக்காடும் துறை ஒன்றை உருவாக்கத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

## XI. கூட்டாட்சிப் பிரிவு

தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் அமைந்த கூட்டாட்சிக் கொள்கைதான் இந்த அரசின் நிலையான சிறப்பம்சம் என்பதால், பல நாடுகளின் கூட்டாட்சி குறித்த அரசியல் அமைப்புச் சட்டங்கள் பற்றிய தகவல்களைப் பெற்று, கூட்டாட்சி குறித்த ஆலோசனைகளையும், கொள்கைகளையும் நமது அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். ஆகவே, தனியாக ஒரு கூட்டாட்சிப் பிரிவு அவசியம் என்று கருதப்படுகிறது. அதற்கிணங்க தேவையான பணியாளர்களுடனும், உள்கட்டமைப்பு வசதிகளுடனும் கூட்டாட்சிப் பிரிவு ஒன்று சட்டத்துறையில் ஏற்படுத்தப்படும்.

## XII. மாநிலச் சட்ட ஆணையம்

சட்டச் சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தையும், சட்ட விதிகளையும் பிற சட்டங்களையும் காலத்திற்கேற்ற வகையில் புதுப்பிக்க வேண்டிய சமுதாயத் தேவையையும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ஆம் பிரிவின் விதித்துறைகளின் பொருட்செறிவிற்குக் குறையேதும் ஏற்படாமல், மாநிலத்தின் பல்வேறு அங்கங்களுக்கு இடையேயான தொடர்பினையும் செயல் விளைவுகளையும் மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, தமிழ்நாடு அரசு 9-5-1994 அன்று மாநிலச் சட்ட ஆணையத்தை அமைத்தது.

மாநிலச் சட்ட ஆணையம் பின்வரும் நபர்களைக் கொண்டதாகும்.

1. தலைவர்
2. இரு பகுதிநேர உறுப்பினர்கள்
3. இரு பகுதிநேர உறுப்பினர்கள்
4. முழுநேர உறுப்பினர்-செயலர்

தமிழக அரசு, 28-1-97 அன்று மாநிலச் சட்ட ஆணையத்தை, உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதியான திரு. நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்களைத் தலைவராகவும், உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான திருமதி நீதியரசர் பத்மினி ஜேசுதுரை மற்றும் சட்டத்துறையில் ஓய்வு பெற்ற செயலாளரான திரு. மு. முனிராமன் ஆகியோரை முழுநேர உறுப்பினர்களாகவும், ஓய்வுபெற்ற மாவட்ட நிதிபதிகளான திரு. என். மோகன்தாஸ், மற்றும் திரு. சி. இராமகிருஷ்ணன் ஆகியோரைப் பகுதிநேர உறுப்பினர்களாகவும் மற்றும் சட்டத்துறையின் கூடுதல் செயலாளர் அவர்களை முழுநேர உறுப்பினர்-செயலாளராகவும் கொண்டு மாற்றி அமைத்துள்ளது. மாநிலச் சட்ட ஆணையத்தின் தலைவர் 29-1-97 அன்று முற்பகல் பணிப்பொறுப்பேற்றார்.

இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்வதும், அவை இன்றைய காலச் சூழ்நிலைக்கு ஏற்றவையாக இல்லையா என்பது குறித்துக் கருத்துத் தெரிவிப்பதும், தேவையானால், அந்தச் சட்டங்களில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைப்பதும், சட்ட ஆணையத்தின் பணிகளாகும். மேலும், சட்ட ஆணையம் மேற்சொன்ன சட்டங்கள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்தின் மற்றும் உயர்நீதிமன்றங்களின் பல்வேறு



முடிவுகளுக்கு இணங்க உள்ளனவா என்பது குறித்து ஆராய்ந்து, அந்தந்தச் சட்டங்களில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறும்.

1. தற்போது இருந்துவரும் சட்டங்களில் காணப்படும் குறைகளைக் களைவதற்குத் தக்க மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்குமாறும்;
2. பொருத்தமான, சமுதாய-பொருளாதாரச் சட்டமியற்றும் நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைக்குமாறும்;
3. பன்மாநில உறவுகளுக்கு, மைய-மாநில உறவுகளுக்குமான வழிவகைகளைக் கூறுமாறும்;
4. நீதி நிர்வாகச் சீர்திருத்தங்கள் குறித்து, செம்மையாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றி கருத்துரைகளையும் பரிந்துரைகளையும் வழங்குமாறும்;
5. மாநிலச் சட்டங்களுக்கு மட்டும் அல்லாமல், இந்த மாநிலத்திற்குப் பொருந்துகின்ற மையச் சட்டங்களுக்கும் கூட, மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் பற்றிக் கருத்துரைகளைத் தெரிவிக்குமாறும் சட்ட ஆணையமானது கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## XIII. குற்ற வழக்குத் தொடரும் பணி இயக்ககம்

இம்மாநிலத்தில் குற்ற வழக்கு தொடர்வதைக் கட்டுப்படுத்துவதற்கும், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்துடன் இணைந்த சட்ட அலுவலர்கள் மற்றும் குற்றவியல் வழக்கறிஞர்களின் செயல்பாட்டினைக் கண்காணிப்பதற்கும் இயலும் வகையில், தமிழக அரசு குற்ற வழக்குத் தொடரும் பணி இயக்ககத்தை மீண்டும் ஏற்படுத்தியது. காவல்துறை தலைவர் பதவித் தரத்தில் உள்ள அதிகாரி ஒருவர் குற்ற வழக்குத் தொடரும் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். குற்றவியல் வழக்குத் தொடரும் உதவி இயக்குநர்கள்,குற்றவியல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில் உள்ள கூடுதல் அரசு வழக்கறிஞர்கள், அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை 1 (நிருவாகம்), அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை 1 மற்றும் 2 ஆகியோரின் நிருவாகப் பணிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரியாக குற்றவழக்குத் தொடரும் இயக்குநர் இருக்கிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களை நடத்தி நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை நுணுக்கமாகப் பரிசீலித்து முடிவு செய்து வருகிறார். அவர் களத்திலுள்ள

[1997 ஏப்ரல் 11

குற்றவழக்குத் தொடரும் அதிகாரிகளின் செயல்பாட்டினை முதற்கண் ஆய்வு செய்யவும், வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணவும், தொடர்புடைய குற்றவியல் மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆகியோரைச சந்திப்பதற்கும் அடிக்கடி கள ஆய்வு செய்கிறார். நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும், அவற்றை விரைவில் முடிவு செய்யவும், குற்ற வழக்குத் தொடரும் இயக்குநர் தக்க உத்தரவுகளையும் வழிகாட்டிக் குறிப்புகளையும் காவல்துறை அதிகாரிகளுடன் நடத்தும் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவ்வப்போது பிறப்பிக்கிறார்.

மாநிலக் காவல்துறை தலைவரின் உத்தரவுப்படி, காவல்துறைக் கண்காணிப்பாளர்களும், காவல்துறை ஆணையர்களும் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் தொடர்பான மாத அறிக்கைகளை வழக்குத் தொடரும் இயக்குநருக்கு அனுப்புகின்றனர். இந்த மாதாந்திர அறிக்கைகளை வழக்குத் தொடரும் இயக்குநர் பரிசீலனை செய்து, நீதிமன்ற வழக்குகள் குறித்துச் சிறந்த முறையில் பணியாற்ற வழிகாட்டிக் குறிப்புகளை அந்தந்தக் காவல் துறை அதிகாரிகளுக்கு வழங்குகிறார்.

வழக்குத் தொடரும் உதவி இயக்குநர் என்ற பதவிப்பெயர் கொண்ட எட்டு வட்டாரச் சட்ட அலுவலர்கள் பதவிகளுக்கு அரசு அனுமதி வழங்கியது. அப்பதவிகளில் முதுநிலைச் சட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்குத் தொடரும் உதவி இயக்குநர்கள், மாவட்ட அளவில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, மாவட்டத்திலுள்ள உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை 1 மற்றும் 2 ஆகியோர் உட்படச் சட்ட அலுவலர்களின் செயல்பாட்டை ஆய்வு செய்கின்றனர். மாவட்டங்களிலுள்ள தலைமை குற்றவியல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களைச் சேர்ந்த மற்றும் சென்னையிலுள்ள தலைமைப் பெருநகர் குற்றவியல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களைச் சேர்ந்த 22 [illegible] நடத்துநர்கள், நிலை [illegible] அரசு வழக்கு நடத்துநர் பதவி[illegible]க நிலை உயர்த்தப்பட்டு, அந்த பதவிகளும் தற்போது நிரப்பப்பட்டுவிட்டன.

1995 ஜூன் முதல் 1996 டிசம்பர் வரை 1,87,823 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன.

கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த சட்ட அலுவலர்கள் அரசின் நிரந்தர அலுவலர்களாக உள்ளனர்.



1997 ஏப்ரல் 11]

1. வழக்குத் தொடரும் இயக்குநர்.
2. வழக்குத் தொடரும் உதவி இயக்குநர்கள்.
3. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்கள்.
4. அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை 1 (நிருவாகம்).
5. அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை 1.
6. அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை 2

மேற்கண்ட சட்ட அலுவலர்கள் நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளை நடத்துவது மட்டுமல்லாது, மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சட்ட ஆலோசனையையும் வழங்குகிறார்கள். காவல்துறை, சுகாதாரத்துறை, வேளாண்மைத் துறை, விழிப்புப்பணி-ஊழல் தடுப்புத்துறை ஆகிய துறைகளிலுள்ள பல்வேறு பிரிவுகளுக்கு அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை-1 மற்றும் 2 முகமையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## XIV. 1996-97-ல் வழங்கப்பட்ட முக்கிய அனுமதி ஆணைகள்

1. திண்டுக்கல்லிலுள்ள கூடுதல் சார் நீதிமன்றம் பழனிக்கு மாற்றப்பட்டு அங்கு சார் நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.
2. கடலூரிலுள்ள கூடுதல் சார் நீதிமன்றம் பண்ருட்டிக்கு மாற்றப்பட்டு அங்கு சார் நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.
3. விருதுநகரில் புதிதாகச் சார் நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.
4. ஆத்தூரில் புதிதாகச் சார் நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.
5. சிவகிரியில் மாவட்ட முன்சீப் குற்றவியல் மாஜிஸ்டிரேட்டு [illegible]ட்டுள்ளது.
6. இம்மாநிலத்திலுள்ள 15 குற்றவியல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் மாவட்ட முன்சீப் குற்றவியல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன.(விபரங்களுக்கு இணைப்பு 2 'அ' வைக் காண்க.)
7. முன்னோடித் திட்டம் நிலை 2-ன் கீழ் 55 கூடுதல் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (விவரங்களுக்கு இணைப்பு 2 'ஆ' வைக் காண்க)

8. கோவில்பட்டியில் சார் நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

9. சேலத்திலுள்ள இரண்டாவது குற்றவியல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தை மாற்றி, சேலத்தில் இரண்டாவது மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

10. பட்டுக்கோட்டை, அரக்கோணம், புதுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள குற்றவியல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களை மாற்றி முறையே மன்னார்குடி, சோளிங்கர், ஆலங்குடி ஆகிய இடங்களில் இடத்திற்கு ஒன்றாக 3 குற்றவியல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

11. இம்மாநிலத்திலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றம், மாவட்ட முன்சீப் குற்றவியல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், குற்றவியல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஆகிய ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் ஒரு தட்டச்சர் வீதம் 394 தட்டச்சர் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

12. மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களிலுள்ள பழைய மேஜை நாற்காலிகளுக்குப் பதிலாக புதிய மேஜை நாற்காலிகள் வாங்குவதற்காக ரூ. 50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

13. நீதிபதிகளுக்கான நேர்முக உதவியாளர் பதவிகள் 36, நீதிமன்ற அதிகாரி பதவிகள் 43 மற்றும் உயர் நீதிமன்ற 42 நீதிபதிகளுக்காக, அலுவலக உதவியாளர் பதவிகள் 95 ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

14. மாநிலத்திலுள்ள நீதிமன்றங்களின் பயனுக்காக 10 நகல் எடுக்கும் எந்திரங்கள் (ஜெராக்ஸ்) வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

15. மூன்று அரசு உதவி வழக்கு நடத்துநர்(குற்றவியல்) நிலை 1 பதவிகள் குற்ற வழக்குத் தொடரும் உதவி இயக்குநர் பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

16. குற்ற வழக்குத் தொடரும் உதவி இயக்குநர்கள் 11 பேர்களுக்குத் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

17. குற்ற வழக்குத் தொடரும் இயக்குநர் அலுவலகத்திலுள்ள அலுவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக ரூ. 4.42 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.





18. திருநெல்வேலியில் சட்டக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

19. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பயனுக்காக ரூ.24.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதியுள்ள அம்பாசிடர் கார்கள் வாங்குவதற்கும், அந்தக் கார்களை ஓட்டுவதற்கு ஏழு ஓட்டுநர்கள் பதவிகளுக்கும், அரசு அனுமதி அளித்துள்ளது.

20. நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கும் ரூ. 28.32 கோடி அனுமதி வழங்கப் பட்டுள்ளது. (விவரங்களை இணைப்பு 3-ல் காணலாம்).

21. இந்த மாநிலத்திலுள்ள வழக்குரைஞர்கள் சங்கங்கள் மற்றும் வழக்கறிஞர்கள் கழகம் ஆகியவற்றின் பல்வேறு கிளை அலுவலகங்களில் நூலகப் புத்தகங்கள், மேசை, நாற்காலிகள் ஆகியவற்றை வாங்கவும் ஏனைய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும் மானியமாக ரூ. 31.50 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

## XV. அரசால் முடிவெடுக்கப்பட வேண்டிய முக்கியச் செயற்குறிப்புகள்

### அ. சென்னையில் உச்சநீதிமன்ற ஆயம் ஒன்றை ஏற்படுத்துதல்

உச்ச நீதிமன்ற ஆயம் ஒன்றைச் சென்னையில் ஏற்படுத்த வேண்டும் என்ற இந்த அரசின் வேண்டுகோளைப் பரிசீலித்து முடிவைத் தெரிவிக்கும்படி, மத்திய அரசை, இந்த அரசு 1980-ஆம் ஆண்டில் கேட்டுக்கொண்டது. நீண்டகால கடிதத் தொடர்பிற்குப் பின்னர், இது குறித்து உச்ச நீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகள் கூட்டம், தலைமை நீதிபதி அவர்களின் தலைமையில் 11-5-94 அன்று நடத்தப்பட்டு அதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டது என்றும், உச்ச நீதிமன்ற ஆயத்தை, தென்னிந்தியாவில் சென்னையிலோ அல்லது நாட்டின் எந்தப்பகுதியிலுமோ ஏற்படுத்துவதற்கில்லை என்று ஒரு மனதாக முடிவு எடுக்கப்பட்டது என்றும், மத்திய அரசு 21-9-94-ஆம் நாளன்று தெரிவித்துள்ளது. சென்னையில் உச்சநீதிமன்ற ஆயம் ஒன்றை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானது என்று கருதுவதால், இது பற்றிய இவ்வரசின் வேண்டுகோள் தொடர்பாக உச்சநீதிமன்றம் ஏற்கெனவே எடுத்த தனது முடிவை மறு ஆய்வு செய்து அதன் சாதகமான முடிவைப் பெற உச்சநீதிமன்றத்தை அணுகுமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

[1997 ஏப்ரல் 11

**ஆ. மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை ஏற்படுத்துதல்**

சென்னை உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை மதுரையில் ஏற்படுத்துமாறு இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. இவ் வேண்டுகோளைத் தொடர்ந்து மாநிலத் தலைநகரங்கள் அல்லாத பிற இடங்களில், உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்த அனைத்துக் கூறுகளையும் ஆராய, மத்திய அரசு, ஜெஸ்வந்த் சிங் குழுவை அமைத்தது. சில நிபந்தனைகளை நிறைவு செய்வதற்குட்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை மதுரையில் ஏற்படுத்தலாம் என்று இக் குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்தது. இதுகுறித்து, உயர்நீதி மன்றத்துடன் கலந்தாலோசித்தபோது, தேவைப்படும் அடிப்படை வசதி களைச் செய்துதர வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, சென்னை உயர்நீதிமன்றம், அதன் ஆயம் ஒன்றை மதுரையில் ஏற்படுத்த இசைவளித்தது.

மதுரையில், சென்னை உயர்நீதிமன்ற ஆயத்தை அமைப்பதற்கு முதற்படியாக, 1894-ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்ட விதித்துறைகளின் கீழ், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், உலகனேரி கிராமத்தில், சர்வே எண்கள் 3/2 முதல் 39-எப் வரையுள்ள 75 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த நில எடுப்புக்கு, தோராயமாக ரூ. 4.25 கோடி செலவு ஆகும். இந்நிலத்தைக் கையகப்படுத்தும் பணி முடிவுற்று உடைமை மேற்கொள்ளப்பட்ட பிறகு, கட்டிடங்கள் கட்டுவதற்குச் சென்னை உயர்நீதிமன்றத்திடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டதும் அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இதற்கிடையில், அரசு மற்றும் மக்களின் விருப்பத்திற்கேற்ப, சென்னை உயர்நீதிமன்றம் தனது ஆயத்தை மதுரையில் அமைக்க இசைந்தால், மதுரை மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்தில், சென்னை உயர்நீதிமன்ற ஆயத்தைத் தற்காலிகமாக அமைப்பதற்கு ஏதுவாக, அக்கட்டிடத்தை தகுந்த முறையில் சீரமைக்க அரசு விருப்பம் கொண்டுள்ளது.

**XVI. முடிவுரை**

அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளவாறு, ''நாட்டுமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி'' கிடைக்கச் செய்யவேண்டும் என்று, மாபெரும் சமூக சீர்திருத்தவாதி தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கண்ட கனவினை நனவாக்கிட உறுதியான நடவடிக்கை எடுக்க இந்த அரசு தொடர்ந்து பாடுபடும்.



1997 ஏப்ரல் 11]

## இணைப்பு – 1

**(அ) சென்னை மாநகரில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் தீர்ப்பாயங்களின் விவரப் பட்டியல்**

| நீதிமன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | சார்பு நீதிபதி பதவித் தரம் | மாவட்டமுன்சிப் மற்றும் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் பதவித் தரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. மாநகர உரிமையியல் நீதிமன்றம் | 9 | 18 | 1 |
| 2. சிறு வழக்குகள் நீதிமன்றம் | 1 | 8 | 8 |
| 3. பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் | 3* | 6 | 16 |
| 4. தொழிலாளர் நீதிமன்றம் | 3 | - | - |
| 5. தொழிற்சாலை நடுவர் நீதிமன்றம் | 1 | - | - |
| 6. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் சிறப்பு நீதிமன்றம் | 1 | - | - |
| 7. தனியார் கல்லூரிகள் மேல்முறையீட்டு நடுவர் மன்றம் | 1** | - | - |
| 8. விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம் | 1 | 1 | - |
| 9. அரசு போக்குவரத்துக் கழக மேல்முறையீட்டு நடுவர் நீதிமன்றம் | 1 | - | - |

[1997 ஏப்ரல் 11

| | | | |
|---|---|---|---|
| 10. அரசுச் சொத்துத் தலைமைப் பொறுப்பாட்சியர் | 1 | - | - |
| 11. சென்னை உயர்நீதிமன்றம், தமிழ் சட்டப் பத்திரிகையின் தலைமைப் பத்திரிகை ஆசிரியர் | 1 | - | - |
| 12. சென்னை உயர்நீதிமன்றம், தமிழ் சட்டப் பத்திரிகையின் இணைப் பத்திரிகை ஆசிரியர் | - | 1 | - |
| 13. தமிழ் சட்டப் பத்திரிகையின் உதவிப் பத்திரிகை ஆசிரியர் | - | - | 1 |
| மொத்தம் | **23** | **34** | **26** |

* பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான இரண்டு கூடுதல் தலைமைப் பெருநகர மாஜிஸ்டிரேட் பதவிகளை உள்ளடக்கியது.

** சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாகவும் செயல்படுகிறார்.



1997 ஏப்ரல் 11]

**(ஆ) மாவட்டங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் தீர்ப்பாயங்கள்**

| | மாவட்ட நீதிபதிகள் பதவித் தரம் | | | | | | | மாவட்ட முன்சீப் பதவித் தரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டங்கள் | மாவட்ட நீதிபதி | கூடுதல் மாவட்ட நீதிபதி தலைமை மாஜிஸ்டிரேட் | தொழிலாளர் நீதி மன்றம் | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் சிறப்பு நீதிமன்றம் | மத்திய புலனாய்வுத் துறை நீதிமன்றம் | குடும்ப நீதிமன்றம் | துணை நீதிபதி நீதிமன்றம் | மாவட்ட முன்சீப் | மாவட்ட முன்சீப் மற்றும் கூடுதல் நீதித்துறை மாஜிஸ்டிரேட் | நீதித்துறை மாஜிஸ்டிரேட் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1. செங்கல்பட்டு | 1 | 1 | - | - | - | - | 5 | 8 | 1 | 17 |
| 2. சிதம்பரனார் | 1 | 1 | - | - | - | - | 1 | 5 | 2 | 5 |
| 3. கோயமுத்தூர் | 2 | 1 | 1 | 1 | - | 1 | 8* | 7 | 4 | 14 |
| 4. தருமபுரி | 2 | 2 | - | - | - | - | 4 | 3 | 4 | 5 |
| 5. திண்டுக்கல் மன்னர் திருமலை | 1 | 1 | - | - | - | - | 2 | 5 | 2 | 5 |
| 6. காமராஜர் | 1 | 1 | - | - | - | - | 3 | 3 | 3 | 6 |
| 7. கன்னியாகுமரி | 1 | 1 | - | - | - | - | 4 | 8 | 1 | 6 |
| 8. மதுரை | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 9** | 7 | 3 | 12 |
| 9. நாகை காயிதே மில்லத் | 1 | 1 | - | - | - | - | 4 | 8 | - | 7 |
| 10. நீலகிரி | 1 | - | - | - | - | - | 1 | 1 | 3 | 1 |
| 11. வடஆற்காடு அம்பேத்கர் | 1 | 1 | 1 | - | - | - | 3 | 8 | 2 | 16 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | 1 | 1 | - | - | - | - | 2 | 4 | 2 | 3 |
| 13. பெரியார் | 2 | 1 | - | - | - | - | 5 | 9 | 1 | 10 |
| 14. புதுக்கோட்டை | 1 | 1 | - | 1 | - | - | 1 | 3 | 2 | 3 |
| 15. இராமநாதபுரம் | 1 | 1 | - | - | - | - | 1 | 3 | 3 | 3 |
| 16. சேலம் | 3 | 1 | 1 | 1 | - | 1 | 4 | 9 | 1 | 18 |
| 17. தென்னாற்காடு வள்ளலார் | 1 | 1 | 1 | - | - | - | 4 | 6 | 1 | 9 |
| 18. தஞ்சாவூர் | 1 | 1 | - | 1 | - | - | 4 | 6 | 1 | 9 |
| 19. திருச்சிராப்பள்ளி | 3 | 1 | 1 | - | - | - | 7 | 14 | 1 | 18 |
| 20. திருநெல்வேலி கட்டபொம்மன் | 2 | 1 | 1 | - | - | - | 4 | 9 | 1 | 12 |
| 21. திருவண்ணாமலை சம்புவராயர் | 1 | 1 | - | - | - | - | 2 | 7 | 2 | 6 |
| 22. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் | 1 | 1 | - | - | - | - | 2 | 11 | 2 | 9 |
| மொத்தம் | **31** | **22** | **7** | **5** | **1** | **3** | **80** | **144** | **42** | **194** |

* குடும்ப விவகார நீதிமன்றத்திற்கான நீதிபதிகள், தற்காலிகமாக ஐந்து வருடங்களுக்குப் பணியமர்த்தப்படுகின்றனர். மற்றும் அவர்கள் நீதிமன்றப் பணியைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

** மதுரை மற்றும் கோயமுத்தூர் ஆகிய மாநகரங்களுக்கு சார் நீதிபதி தரத்தில் கூடுதல் நீதிபதி பதவி மற்றும் அதே நகரங்களுக்கு சார் நீதிபதி தரத்தில் நீதித்துறை அலுவலர்.





## இணைப்பு – 2

### 1996-97-ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட கூடுதல்/புதிய நீதிமன்றங்களின் பட்டியல்

**உரிமையியல்**

| வ. எண் | நீதிமன்றங்கள் குறித்த விவரம் | செலவினம் | |
|---|---|---|---|
| | | தொடரும் செலவினம் | தொடரா செலவினம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | திண்டுக்கல்லிலிருந்து கூடுதல் சார் நீதி மன்றத்தைப் பழனிக்கு மாற்றி பழனியில் சார் நீதிமன்றம் அமைத்தல் | 10.65 | 4.96 |
| 2. | கடலூரிலிருந்து கூடுதல் சார் நீதிமன்றத்தைப் பண்ருட்டிக்கு மாற்றி, பண்ருட்டியில் சார் நீதிமன்றம் அமைத்தல் | 10.30 | 2.12 |
| 3. | சார் நீதிமன்றம், ஆத்தூர் | 12.61 | 3.96 |
| 4. | சார் நீதிமன்றம், விருதுநகர் | 12.00 | 2.00 |
| 5. | மாவட்ட உரிமையியல் குற்றவியல் நீதிமன்றம், சிவகிரி | 12.00 | 3.00 |
| 6. | 15 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களை மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களாக மாற்றியமைத்தல் [விவரங்களுக்குக் கீழே இணைப்பு 2 (அ)-வைக் காணலாம்] | 5.96 | - |
| 7. | முன்னோடித் திட்டம், பகுதி-2-ன் கீழ் 55 கூடுதல் நீதி மன்றங்களுக்கு அனுமதி அளித்தல் [விபரங்களுக்கு இணைப்பு 2 (ஆ)-வைக் காணலாம்] | 216.25 | 55.00 |

| | | |
|---|---|---|
| 8. தூத்துக்குடியில் கூடுதல் சார் நீதிமன்றம் அமைப்பதற்குப் பதிலாக கோவில்பட்டியில் சார் நீதிமன்றம் அமைத்தல். | 8.00 | 2.00 |
| 9. சேலத்தில் இரண்டாவது நீதித் துறை குற்றவியல் நடுவர் மன்றத்தை மாற்றி சேலத்தில் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைத்தல். | - | - |
| மொத்தம் .. | **287.77** | **73.14** |
| குற்றவியல் | | |
| 1. பட்டுக்கோட்டையிலிருக்கும் முதலாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மன்னார்குடிக்கு மாற்றி, மன்னார்குடியில் குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல். | - | 0.05 |
| 2. அரக்கோணத்திலிருக்கும் இரண்டாவது குற்றவியல் நீதிமன்றத்தை சோளிங்கருக்கு மாற்றி, சோளிங்கரில் குற்றவியல் நீதி மன்றம் அமைத்தல். | - | 0.55 |
| 3. புதுக்கோட்டையிலிருக்கும் முதலாவது குற்றவியல் நீதி மன்றத்தை ஆலங்குடிக்கு மாற்றி, ஆலங்குடியில் குற்ற வியல் நீதிமன்றம் அமைத்தல். | 0.36 | 0.05 |
| 4. கோயமுத்தூரில் மத்தியப் புலனாய்வுப் பிரிவு வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம் அமைத்தல். | 8.43 | 1.73 |
| மொத்தம் | 8.79 | 2.38 |
| பெருமொத்தம் (உரிமையியல் + குற்றவியல்) | 296.56 | 75.52 |

**1996-97ஆம் ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்ட மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை 81.**



**(அ) குற்றவியல் நீதிமன்றங்களை மாவட்ட உரிமையியல் குற்றவியல் நீதிமன்றங்களாக மாற்றி அமைத்தல்**

1. குற்றவியல் நடுவர் மன்றம், ஆம்பூர்
2. குற்றவியல் நடுவர் மன்றம், ஆர்க்காடு
3. குற்றவியல் நடுவர் மன்றம், செங்கம்
4. குற்றவியல் நடுவர் மன்றம், திட்டக்குடி
5. குற்றவியல் நடுவர் மன்றம், பறங்கிப்பேட்டை.
6. குற்றவியல் நடுவர் மன்றம், திருக்கழுக்குன்றம்
7. குற்றவியல் நடுவர் மன்றம், சைதாப்பேட்டை
8. குற்றவியல் நடுவர் மன்றம், அம்பத்தூர்
9. குற்றவியல் நடுவர் மன்றம், திருவொற்றியூர்
10. குற்றவியல் நடுவர் மன்றம், ஓமலூர்
11. குற்றவியல் நடுவர் மன்றம், ஒரத்தநாடு
12. குற்றவியல் நடுவர் மன்றம், நான்குநேரி
13. குற்றவியல் நடுவர் மன்றம், சேரன்மாதேவி
14. குற்றவியல் நடுவர் மன்றம், போடிநாயக்கனூர்
15. குற்றவியல் நடுவர் மன்றம், ஆண்டிப்பட்டி

**(ஆ) முன்னோடித் திட்டம் பகுதி—2-ன் கீழ் அனுமதிக்கப்பட்ட கூடுதல் நீதிமன்றங்களின் பட்டியல்**

1. கூடுதல் சார் நீதிமன்றம், நாகர்கோவில்
2. கூடுதல் சார் நீதிமன்றம், விழுப்புரம்
3. கூடுதல் சார் நீதிமன்றம், விழுப்புரம்
4. கூடுதல் சார் நீதிமன்றம், திண்டிவனம்
5. கூடுதல் சார் நீதிமன்றம், கடலூர்
6. கூடுதல் சார் நீதிமன்றம், கடலூர்
7. கூடுதல் சார் நீதிமன்றம், விருத்தாசலம்
8. கூடுதல் சார் நீதிமன்றம், திருவண்ணாமலை
9. கூடுதல் சார் நீதிமன்றம், திருவண்ணாமலை

10. கூடுதல் சார் நீதிமன்றம், ஈரோடு
11. கூடுதல் சார் நீதிமன்றம் கோபிச்செட்டிபாளையம்
12. கூடுதல் சார் நீதிமன்றம், கோபிச்செட்டிபாளையம்
13. கூடுதல் சார் நீதிமன்றம், தஞ்சாவூர்
14. கூடுதல் சார் நீதிமன்றம், கும்பகோணம்
15. கூடுதல் சார் நீதிமன்றம், திண்டுக்கல்
16. கூடுதல் சார் நீதிமன்றம், திண்டுக்கல்
17. கூடுதல் சார் நீதிமன்றம், திண்டுக்கல்
18. கூடுதல் சார் நீதிமன்றம், தென்காசி
19. கூடுதல் சார் நீதிமன்றம், தென்காசி
20. கூடுதல் சார் நீதிமன்றம், திருநெல்வேலி
21. கூடுதல் சார் நீதிமன்றம், நாகர்கோவில்
22. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி
23. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருக்கோவிலூர்
24. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உளுந்தூர்ப்பேட்டை
25. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்
26. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குழித்துறை
27. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
28. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், எரேனியல்
29. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்
30. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், விருத்தாச்சலம்
31. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவண்ணாமலை
32. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி
33. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யார்
34. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கும்பகோணம்



35. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்
36. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திண்டுக்கல்
37. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செஞ்சி
38. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி
39. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருக்கோவிலூர்
40. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், விருத்தாச்சலம்
41. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், விருத்தாச்சலம்
42. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்
43. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவண்ணாமலை
44. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவண்ணாமலை
45. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யார்
46. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி
47. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கும்பகோணம்
48. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கும்பகோணம்
49. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வலங்கைமான்
50. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி
51. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்
52. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்
53. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்
54. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குழித்துறை
55. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குழித்துறை

## இணைப்பு - 3

### 1996-97-ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்ட இனச் செலவு

| வ. எண் | திட்ட விவரம் | மொத்தச் செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களுக்குக் கூடுதலாக அறைகள் கட்டுதல் | 500.00 |
| 2. | காமராஜர் மாவட்டம், விருதுநகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுதல் | 310.00 |
| 3. | சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றுள்ள தமிழ்நாடு அரசு நிருவாகத் தீர்ப்பாயத்திற்குக் கூடுதல் வசதிகள், மாற்றங்கள் செய்து தருதல் | 7.55 |
| 4. | உதகமண்டலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும் கட்டுதல் | 788.90 |
| 5. | கடலூரில் நீதிமன்றக் கட்டடங்களும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும் கட்டுதல் | 131.92 |
| 6. | கோயமுத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல் | 929.44 |
| 7. | கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் வழக்குரைஞர்களுக்கான அறைகள் கட்டுதல் | 37.87 |
| 8. | திருத்தணியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல் | 126.39 |
| | மொத்தம் .. | **2832.07** |



## இணைப்பு - 4

### 1997-98-ஆம் நிதியாண்டில் திட்டம் சாரா இனத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்களின் விபரப்பட்டியல்

| வ. எண் | திட்டங்கள் குறித்த விவரம் | செலவினம்: தொடரும் செலவினம் | செலவினம்: தொடராச் செலவினம் | 1997-98-ஆம் ஆண்டில் செலவினம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | | (4) |
| 1. | சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திற்கு எஃகு அலமாரி வழங்குவதுட்பட நீதிமன்றங்களுக்கு அறைக் கலன்கள் வழங்குதல் | - | - | 100.00 |
| 2. | மேட்டூரில் சார் நீதிமன்றம் அமைத்தல் | 14.50 | 3.94 | 16.04 |
| 3. | சாத்தான் குளத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைத்தல் | 14.38 | 3.20 | 15.16 |
| 4. | சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் அறைகளுக்கு நிலமேடை. மின் விசிறிகள் வழங்குதல் | - | 1.52 | 1.52 |
| 5. | திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களுக்குக் கூடுதல் பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்குதல் | 15.46 | - | 12.87 |
| 6. | திருவண்ணாமலையிலுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கழிப்பறை கட்டுதல் | - | 2.20 | 2.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | விழுப்புரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் | - | 3.20 | 3.20 |
| 8. | 6 புகைப்பட நகலெடுக்கும் இயந்திரங்கள் வழங்குதல் | - | 9.00 | 9.00 |
| 9. | சிவகங்கையில் முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தில் பொதுமக்களுக்கு 'இ' வகைக் கழிப்பறை கட்டுதல் | - | 1.30 | 1.30 |
| 10. | சிவகங்கையில் கூடுதல் மாவட்ட நீதிபதி / நீதித் துறைத் தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் அலுவலகப் பணியாளர்களுக்காகக் கழிப்பறை கட்டுதல் | - | 1.30 | 1.30 |
| 11. | வழக்குத் தொடரும் அதிகாரிகளின் பயன்பாட்டிற்காகச் சட்டப் புத்தகங்கள் வழங்குதல் | - | 3.11 | 3.11 |
| 12. | குற்றவழக்குத் தொடர்புத் துறைக்கு நிகரி இயந்திரம் 12 வழங்குதல் | - | 2.76 | 2.76 |
| 13. | குற்றவழக்குத் தொடர்புத் துறைக்கு ஏழு படிப்பெருக்கிகள் வழங்குதல் | - | 0.44 | 0.44 |
| 14. | சென்னை குற்ற வழக்குத் தொடர்பு இயக்குநர் அலுவலகத்திற்கு ஒரு தொலைபேசி வழங்குதல | 0.24 | 0.15 | 0.39 |
| 15. | சென்னைக் குற்ற வழக்குத் தொடர்பு இயக்குநரகத்திற்கு ஒரு "EPABX" வசதி செய்து தருதல் | - | 0.30 | 0.30 |
| | மொத்தம் .. | 44.58 | 132.42 | 169.59 |



## இணைப்பு - 5

### தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை பற்றிய விவர அறிக்கை

| தொடர் எண். | நீதிமன்றம் | சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாநிலத்திலுள்ள சார்பு நீதி மன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | | | | | 1996 ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்றத்திலும் சார்பு நீதிமன்றங்களிலும் தொடரப்பட்ட, முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளிவிவரங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | அந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டவை | முடிவு செய்யப்பட வேண்டியவை | அந்த ஆண்டில் முடிவு செய்யப்பட்டவை | அந்த ஆண்டின் இறுதியில் நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| **(அ) உரிமையியல்** | | | | | | | | | | |
| 1. | உயர்நீதிமன்றம், சென்னை | 2,15,500 | 2,34,616 | 2,61,115 | 2,94,800 | 2,75,175 | 81,849 | 3,57,024 | 72,272 | 2,84,752 |
| 2. | மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை | 53,041 | 53,780 | 60,513 | 65,223 | 68,960 | 67,050 | 1,36,010 | 58,459 | 77,551 |
| 3. | சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை | 17,029 | 17,407 | 16,279 | 13,480 | 15,490 | 11,049 | 26,539 | 10,148 | 16,391 |
| 4. | மாவட்ட நீதிமன்றங்கள் | 10,356 | 10,860 | 11,950 | 14,327 | 13,904 | 63,721 | 77,625 | 58,865 | 18,760 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | சார்பு நீதிமன்றங்கள் | 1,39,171 | 1,16,486 | 1,47,158 | 1,02,648 | 1,54,515 | 1,08,864 | 3,23,377 | 1,86,147 | 1,36,910 |
| 6. | மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் | 2,74,613 | 2,68,235 | 3,23,176 | 3,16,624 | 3,12,115 | 3,44,472 | 6,86,587 | 4,18,722 | 2,67,865 |
| | மொத்தம் | 7,09,710 | 7,01,384 | 8,20,191 | 8,67,102 | 8,70,157 | 7,37,005 | 16,07,162 | 8,04,903 | 8,02,259 |
| (ஆ) | குற்றவியல் | | | | | | | | | |
| 1. | உயர்நீதிமன்றம், சென்னை | 20,104 | 30,179 | 33,042 | 16,014 | 22,206 | 18,167 | 40,373 | 19,196 | 21,177 |
| 2. | அமர்வு நீதிமன்றங்கள் | 7,602 | 8,865 | 9,529 | 6,969 | 5,889 | 11,461 | 17,350 | 11,848 | 17,350 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 66,829 | 50,506 | 64,054 | 16,332 | 48,073 | 1,72,003 | 2,20,076 | 1,75,339 | 44,737 |
| 4. | நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2,47,129 | 2,37,496 | 2,17,578 | 2,06,309 | 2,05,447 | 6,13,909 | 8,19,356 | 6,64,882 | 1,54,474 |
| | ஆ-வின் மொத்தம் | 3,41,664 | 3,27,046 | 3,24,203 | 2,75,624 | 2,81,615 | 8,15,540 | 10,97,155 | 8,71,265 | 2,25,890 |
| | பெருமொத்தம் (அ)+(ஆ) | 10,51,374 | 10,28,430 | 11,44,394 | 11,42,726 | 11,51,772 | 15,52,545 | 27,04,317 | 16,76,168 | 10,28,149 |



இணைப்பு-II

*(70 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காணவும்)*

# 14-ஆம் எண் மானியக் கோரிக்கை

# தமிழ்நாட்டில் சிறைகள், அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் மேல்பாக்கம் அரசு காப்பு முகாமின் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

## 1997-98

## சிறை நிருவாகம்

### I. முன்னுரை:

குற்றவியல் நீதி நிருவாக அமைப்பின் வரிசை முறையில் சிறைத் துறை இறுதி அங்கமாக திகழ்கிறது. குற்றவியல் நீதி நிருவாக அமைப்பில் காவல் துறை, நீதிமன்றங்கள் ஆகியவை மற்ற இரு அமைப்புகளாகும்.

2. இந்த நவீன காலத்தில் சிறைத் துறையின் முக்கிய குறிக்கோள் குற்றவாளிகளைச் சிறையில் அடைத்து அவர்கள் மேலும் குற்றம் இழைக்காவண்ணம் தடுப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களைச் சீர்திருத்தி, மறுவாழ்வளித்து சமுதாயத்தில் பயனுள்ள நபர்களாகத் திகழச் செய்வதாகும். இக்குறிக்கோளைக் கருத்திற்கொண்டு, பல சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறைமுறைகளில் பல்வேறு மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சிறை நிருவாகத்தின் பரிமாண வளர்ச்சியைக் காணும்போது சிறைகளில் குறிப்பிடத்தக்க மற்றும் அதிக அளவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது. சிறை மற்றும் கைதிகளின் நலனுக்குப் புதிய வசதிகள் மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

### II. அமைப்புமுறை மற்றும் நிருவாகம்:

#### (அ) சிறைப் பிரிவு:

3. சிறைத் துறையின் நிருவாக அமைப்பு இக்குறிப்பின் இணைப்பு I-ல் உள்ள அமைப்பு முறை விளக்க அட்டவணையில்

[1997 ஏப்ரல் 11

கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள சிறைகள் சிறைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பின்வரும் நிறுவனங்களின் அமைப்பு முறை, கட்டுப்பாடு, நிருவாகம் ஆகியவற்றை இத்துறை கவனித்து வருகிறது:

| | | | |
|---|---|---|---|
| 1. | மத்திய சிறைகள் | - | 8 |
| 2. | மகளிர் தனிச் சிறைகள் | - | 2 |
| 3. | தனி கிளைச் சிறைகள் | - | 7 |
| 4. | கிளைச் சிறைகள் | - | 113 |
| 5. | திறந்த வெளிச் சிறை | - | 1 |
| 6. | சேலம் மத்திய சிறையுடன் இணைக்கப்பட்ட பண்ணைச் சிறை | - | 1 |
| 7. | புதுக்கோட்டை இளைஞர் சீர்திருத்தப்பள்ளி | | 1 |

4. இந்திய காவல்துறைப் பணி உயர் அதிகாரி சிறைத் துறைத் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக தலைமையிடத்து சிறைத் துறை துணைத் தலைவர் மற்றும் நான்கு சரக சிறைத் துறை துணைத் தலைவர்கள் உள்ளனர். இச்சரகங்கள் முறையே சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோவையில் அமைந்துள்ளன. இவர்கள் தத்தம் சரக எல்லைக்குள் வருகின்ற மத்திய சிறை மற்றும் ஏனைய நிறுவனங்கள்மீது அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். மத்திய சிறைச்சாலை ஒவ்வொன்றும் ஒரு கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்குகிறது. இவருக்கு உதவியாக பல நிருவாக, மருத்துவ, தொழில்நுட்ப மற்றும் அலுவலகப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

### (ஆ) நன்னடத்தைப் பிரிவு:

5. நன்னடத்தைப் பிரிவு சிறைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. இது தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. இவர் சிறைத் துறைத் தலைவரின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின்கீழ் அவர் கட்டளைகளுக்கு உட்பட்டு செயல்படுகிறார். ஒரு மண்டல நன்னடத்தை அலுவலருடன் இயங்கும் ஒரு ஆராய்ச்சிப் பிரிவு நன்னடத்தை பிரிவின் ஒரு அங்கமாகும். 1958 ஆம் ஆண்டின் குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டத்தை அமலாக்குதல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

6. இப்பிரிவில் 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களும், 96 நன்னடத்தை அலுவலர்களும் பணியாற்றுகின்றனர். அவர்கள்



1997 ஏப்ரல் 11]

குற்றவாளிகளின் நடைமுறைப் பழக்கங்கள் மற்றும் அவர்கள் வாழும் புறச் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்கின்றனர். தண்டனை காலத்திற்கு முன்னரே பிணையில் விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள் அல்லது பார்ஸ்டல் பள்ளியில் உரிமத்தில் அல்லது விடுதலை செய்யப்பட்ட நபர்கள், சீர்திருத்தப்பள்ளி, கண்காணிப்பு இல்லம் ஆகியவற்றிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆகியோரைக் கண்காணித்தல் ஆகியவை இப்பிரிவின் முக்கிய அலுவல்கள் ஆகும். விடுதலை செய்யப்பட்ட கைதிகள் மறுவாழ்வினைத் தொடங்க நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து நிதியுதவி பெறவும், இந்த நன்னடத்தை அலுவலர்கள் உதவி செய்கின்றனர். இந்த நன்னடத்தை அலுவலர்களின் பணியை மண்டல நன்னடத்தை அலுவலர்கள் கண்காணிக்கின்றனர்.

### (இ) அரசினர் மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் காப்பு முகாம்:

7. அரசினர் மறுவாழ்வு இல்லங்களும் மேல்பாக்கத்தில் உள்ள அரசினர் காப்பு முகாமும் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. இப்பிரிவு சிறைத் துறைத் தலைவரின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது.

### (ஈ) பணியாளர்களும் செலவினங்களும்:

8. சிறைத் துறையின் பணியாளர் தொகுதி அமைப்பில் அலுவலர்களும் பணியாளர்களும் பல்வேறு பிரிவுகளாக மொத்தம் 4,319 பேர் உள்ளனர்.

9. சிறைத் துறையின் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து செலவு குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| ஆண்டு | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| 1992-93 | 2,381.63 |
| 1993-94 | 2,304.61 |
| 1994-95 | 3,171.10 |
| 1995-96 | 3,655.93 |
| 1996-97 | 3,496.39 |
| 1997-98 (வரவு-செலவு திட்ட மதிப்பீடு) | 3,718.00 |

## III. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல்:

10. மத்திய அரசின் உள்துறை விவகாரங்களின் அமைச்சகம் சிறை நிர்வாகத்தை நவீனப்படுத்தும் திட்டத்தை 1993 ஆம் ஆண்டிலிருந்து 1997 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு திட்ட செலவினத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசு 1993-97 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு நமது மாநிலத்திற்கு மேற்படி திட்டத்தின் கீழ் ரூ. 675 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு வரையறுத்த நெறிமுறைகளின்படி 1994-95 ஆம் ஆண்டிலிருந்து 1996-97 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் ரூ. 1222 இலட்சத்திற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

11. 1996-97 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 110 இலட்சம் முதல் தவணையாக சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசு 1996-97 ஆம் நிதி ஆண்டிற்கு மத்திய அரசின் பங்கு உதவித் தொகையாக ரூ. 65.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. (தமிழக அரசின் பங்கு ரூ. 45 இலட்சம் ஆகும்)

### 75:25 விழுக்காடு மானிய அடிப்படையில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து மத்திய சிறைகள், புதுகை பார்ஸ்டல் பள்ளி மற்றும் வேலூர் பெண்கள் தனிச் சிறை போன்றவற்றில் அமைக்கப்பட்டிருக்கும் ஃபேக்ஸ் இயந்திரத்தில் எஸ்டிடி. வசதி செய்தல். | 4.00 |
| 2. | அனைத்து சிறைத் துறைத் துணைத் தலைவர்கள் மற்றும் மத்திய சிறைகளுக்கு பேஜர் கருவி வழங்குதல். | 1.00 |
| 3. | அனைத்து மத்திய சிறைகளுக்கும் எலெக்ட்ரானிக் தட்டச்சு இயந்திரம் வழங்குதல். | 4.00 |
| 4. | சேலம், திருச்சி, கோவை மற்றும் வேலூர் போன்ற மத்திய சிறைகளுக்கு ஜெராக்ஸ் இயந்திரம் வழங்குதல். | 4.00 |
| 5. | திருச்சி, சேலம், கோவை, பாளையங்கோட்டை மற்றும் புதுகை பார்ஸ்டல் பள்ளிக்கு எலெக்ட்ரிகல் இன்சுலேட்டர் மற்றும் மின்சார வசதிகள் செய்தல். | 27.00 |
| | மொத்தம் | 40.00 |



### 50:50 விழுக்காடு மானிய அடிப்படையில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 6. | வேலூர் பெண்கள் தனிச் சிறையில் பிரதான வெளி சுற்றுச்சுவரை உயர்த்துதல். | 3.00 |
| 7. | வேலூர் பெண்கள் தனிச்சிறையில் அமைந்துள்ள புதிய வெளிச் சிறையின் மேல் தளத்தினை மாற்றுதல். | 3.00 |
| 8. | சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனையில் அமைந்துள்ள தண்டனை சிறைவாசிகள் தொகுதியின் சுற்றுச்சுவரை உயர்த்துதல். | 6.00 |
| 9. | திருச்சி மத்திய சிறைக்கு அலுவலக கார் வழங்குதல். | 3.00 |
| 10. | கோவை மத்திய சிறையை நவீனப்படுத்துதல் மற்றும் இரட்டை அகல மின்சார தறிகள் மோட்டார் மற்றும் உதிரி பாகங்களுடன் வழங்குதல். | 25.00 |
| 11. | மருத்துவமனை மற்றும் நீதிமன்றகளுக்கு சிறைவாசிகளைக் கொண்டு செல்ல லாரிகள் வழங்குதல். | 30.00 |
| | மொத்தம் | 70.00 |

## IV. திருச்சி, சேலம், கோவை மத்திய சிறைகளில் தீவிர பாதுகாப்பான அடைப்புகள் அமைத்தல்:

12. பிற மாநிலத்தைச் சார்ந்த ஆபத்தான சிறைவாசி மற்றும் தீவிரவாதிகளுக்காக பாதுகாப்பு அடைப்புகள் அமைக்கும் பொருட்டு மத்திய அரசு முழு உதவித் தொகையின் அடிப்படையில் ரூ. 155.14 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களை அங்கீகரித்து அனுமதித்துள்ளது. இதற்காக கோவை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மத்திய சிறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இதுவரை ரூ. 135 இலட்சம் மத்திய அரசால் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## V. 1997-98 ஆம் நிதி ஆண்டில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி 2 திட்டங்கள்:

13. சிறைத் துறைக்கென 1997-98 ஆம் ஆண்டிற்கு கீழே தரப்பட்டுள்ள பகுதி 2 திட்டங்களுக்கு ஏற்பளிப்பு தரப்பட்டுள்ளது.

| தொடர் எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. | 1972-87 ஆம் ஆண்டுகளில் வாங்கப்பட்ட பழைய அலுவலக கார்களுக்கு பதிலாக புதிய 5 அலுவலக கார்கள் வழங்குதல். | 17.50 |
| 2. | சேலம் மத்திய சிறையில் கருமார் தொழிற்பிரிவு தொடங்குதல். | 3.00 |
| | மொத்தம் | 20.50 |

## VI. மனித வளம், பயிற்சி மற்றும் ஊக்குவிப்பு:

### (அ) சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி, வேலூர்:

14. இபபயிற்சிப் பள்ளியில் இரண்டாம் நிலைக் காவலர்கள் 100 பேருக்கு பயிற்சி அளிக்கும் திறனுண்டு. இப்பயிற்சியின் காலம் 6 மாதங்களாகும். உடற்பயிற்சி, ஒழுக்கம், சிறை நிருவாகக் கோட்பாடு. சீர்திருத்த நடைமுறை போன்ற பல்வேறு தன்மைகளில் பயிற்சி கற்றுத்தரப்படுகிறது. இது தவிர. 25 முதல் நிலை சிறைக் காவலர்களுக்கும் 4 முதல் நிலை தலைமைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு புத்தாக்கம் நினைவு கூறு பயிற்சியளிக்கப்படுகிறது. சிறைக் கைதிகளுடன் சீர்திருத்த நவீன அணுகுமுறையை இப்பயிற்சி வலியுறுத்துகிறது. நவீனப்படுத்தும் மைய அரசின் திட்டத்தின் கீழ் பயிற்சி பொருட்கள், நூலகம், தொலைக்காட்சி. வீடியோ, வீடியோ கேசட், வாகனம் போன்ற வசதிகளை செய்து கொடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, பல்நோக்கு உடற்பயிற்சி கூடம், குடியிருப்பு போன்ற உள் அமைப்பு வசதிகளை செய்து தா உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வகைகளுக்காகும் மொத்த செலவு ரூ. 96 இலட்சமாக இருக்கும். தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், போராளிகள் மற்றும் பயங்கர சிறைவாசிகளை சிறையில் அடைப்பதைக் கருத்திற்கொண்டு பயிற்றுநர்களுக்கு ஏ-கே.47, ஸ்டென்கன், பிஸ்டல் முதலிய நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறைகளை பயிற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறைகளுக்கு அவசர காலத்தில் நிலைமைகளை சமாளிக்கும் வகையில் நவீன ஆயுதங்கள் வழங்கப்படும். இரண்டு வாரத்திற்கான முன்கூட்டிய பயிற்சி சிறைத்துறை கண்காணிப்பாளர்களால் கொடுக்கப்படுகின்றது.



### (ஆ) குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிலையம், வேலூர்:

15. நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு) சீர்திருத்த அதிகாரிகளுக்கு 1997 ஆம் ஆண்டு முதல் இம்முன்மாதிரி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர்திருத்த மற்றும் அது சம்பந்தப்பட்ட நிருவாகத்தில் பணியாற்றும் சிறைப் பிரிவு, நன்னடத்தைப் பிரிவு, சீர்திருத்தப்பள்ளி அது சம்பந்தப்பட்ட நிலையங்களின் அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதே இதன் நோக்கமாகும். குற்றங்களைத் தடுத்தல், குற்றவாளிகளை நடத்தும் முறை, தொழில் சம்பந்தப்பட்ட நுணுக்கங்கள் மற்றும் திறமைகள், குற்றவாளிகள் திருத்தும் முகத்தான் பயிற்சியாளர்களை உருவாக்குகிறது. குற்றவாளிகளை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கும், சமுதாயத்தில் மறுவாழ்வு பெறுவதற்கும் இம்மையம் தயார் செய்கிறது. குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளஞ்சிறார் குற்றங்கள், நன்னடத்தை, சமூக பிரச்சினை, வேலை, சட்டம், நிருவாக மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகள் சமீப காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய சிறை உதவி சிறை அலுவலர் முதல் கூடுதல் கண்காணிப்பாளர் வரையுள்ளவர்களுக்கும், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த 295 அதிகாரிகள் இப்பயிற்சி பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தின் தொடரின, தொடராயினச் செலவுகளை 4 தென் மாநிலங்கள் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. ஒரு ஆராய்ச்சி மேம்பாட்டுப் பிரிவு ரூ. 68.92 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, ஆராய்ச்சி மேற்கொண்டு சிறை மற்றும் சீர்திருத்தம் குறித்த தகவல்களை சேகரித்து ஆய்வு செய்கிறது.

### (இ) சிறைத்துறை நற்பணிக்காக தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்குதல்:

16. 1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் சிறைத் துறையில் சீரிய பணிபுரிபவர்களுக்கு வழங்குவதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ளது. இத்துறை பணியாளர்கள் நேர்மை, வாய்மை. கடமையுணர்வு, திறமை, உயரிய ஒழுக்கம், தியாக உணர்வு ஆகியவற்றுடன் பணி புரிவதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் நாளன்று தெரிந்தெடுக்கப்பட்ட 20 சிறைக் காவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இப்பதக்கத்தை வழங்குகிறார். இப்பதக்கம் பெற்ற முதல்நிலை சிறைக் காவலர்கள் மாதமொன்றுக்கு ரூ. 25 என்ற நிர்ணயித்த வீதத்திலும், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மாதமொன்றுக்கு ரூ. 20 என்ற நிர்ணயித்த வீதத்திலும் தொகை பெறத் தகுதி உடையவர்கள்.

## VII. தனித்தன்மையுடைய நிறுவனங்கள்:

### (அ) திறந்த வெளிச்சிறை:

17. தற்போது, இம்மாநிலத்தில் கோவை மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் திறந்த வெளிச்சிறை ஒன்று உள்ளது. இதில் 100 சிறைவாசிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. சிறைகளில் உள்ள நெருக்கடியை தவிர்த்தலும், சிறைவாசிகளுக்கு நவீன வேளாண்மை முறையில் பயிற்சியளிப்பதும் இதன் நோக்கமாகும். இது அவர்களின் மறுவாழ்வுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இதற்காக உதவி வேளாண்மை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

### (ஆ) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை:

(i) பார்ஸ்டல் பள்ளியில் 16 முதல் 23 வரை வயதுடைய வளரிளமையாளர்களே அனுமதியளிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு பின்வரும் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

1. தச்சு வேலை
2. கருமார் வேலை
3. புத்தகம் கட்டுதல்
4. தையல் வேலை
5. வேளாண்மை
6. கட்டுமான வேலை
7. சலவைத் தொழில்
8. வாத்தியம் இசைத்தல்
9. சமையல் போன்ற வீட்டு வேலை

(ii) விடுதலையான பின்னர் வேலையில் சேர இயலும் வகையில் சிறைவாசிகளுக்கு சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன. இப்பள்ளியில் உள்ள துயிற் கூடங்களில் ஒன்று வளரிளமை பருவ மையமாக மாற்றப்பட்டுள்ளது, 16 முதல் 23 வயதுடைய குற்றவாளிகள் இம்மையத்தில் அடைக்கப்பட்டு வருகிறார்கள்.

(iii) மாணவர்கள் 23 வயது வரையில் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். 1894-ம் ஆண்டு சிறைகள் சட்டத்தின் கீழ் பார்ஸ்டல் பள்ளியின் துயிற்கூடம் சிறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விடுதலைக்குப் பின்னர் தொழில் கருவிகள், கறவை மாடுகள் வாங்க நிதியுதவி



அளிக்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் கடன் சுலபத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் வசூலிக்கப்படுகிறது.

(iv) தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு பரிந்துரைத்தபடி பார்ஸ்டல் பள்ளியைச் சேர்ந்த 25 பேர்களுக்கு 15 நாட்களுக்கு ஆண்டு முகாம் நடத்தப்படுகிறது.

### (இ) புழலில் அமையவிருக்கும் நவீன சிறைச்சாலை:

18. தற்போது சென்னையில் உள்ள மத்திய சிறையினை நகர்ப் புற எல்லையை ஒட்டி மாற்றும் பொருட்டு புழல் கிராமத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி நடைபெற்றுவருகிறது. முதல் மற்றும் இரண்டாம் கட்ட பணிகளுக்காக ரூ.320.97 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணிகள் யாவும் முற்று பெற்றுவிட்டன. தற்போது சிறை நிருவாகத்தினை நவீனப்படுத்தும் மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் அரசு ரூ.79.48 இலட்சத்திற்கான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

19. தற்போது இலங்கை அகதிகள் புழல் சிறையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனால் பொதுப்பணித் துறையினரால் சில பணிகள் செய்ய இயலாததால் இச்சிறையினை சிறைத் துறையிடம் ஒப்படைக்க இயலவில்லை. எனவே, இலங்கை அகதிகளை அங்கிருந்து அகற்றி அருகிலுள்ள காவலாங்கரை கிராமத்தில், வருவாய்த் துறை மற்றும் சிறைத் துறை அதிகாரிகளால் தேர்வு செய்யப்பட்ட 5 ஏக்கர் நிலத்தில் தங்க வைக்க முடிவெடுக்கப்பட்டது. இதற்கென 210 குடிசைகள் கட்டுவதற்காக ரூ.10.71 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. குடிசைகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு, இலங்கை அகதிகள் மாற்றப்பட உள்ளனர். அதன் பிறகு புழலில் உள்ள சிறை இயங்கத் துவங்கும். முதலில் இங்கு தண்டனைக் குற்றவாளிகள் வைக்கப்படுவர். விசாரணைக் கைதிகள் தற்போதுள்ள சென்னை மத்திய சிறையிலேயே தொடர்ந்து வைக்கப்படுவர்.

## VIII. சிறைச்சாலைகளின் கொள்திறனும் சிறைவாசிகள் வகைகளும்:

### (அ) சிறைகளில் இடவசதி:

20. எல்லா சிறைச்சாலைகளிலும் (கிளைச் சிறைகளைச் சேர்த்து) உள்ள அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 18,228 ஆகும், தற்போது பதிவு செய்யாத இலங்கை அகதிகள் இரண்டு கிளைச் சிறைகளில் வைக்கப்பட்டு அவர்கள் வருவாய்த் துறையின் பாதுகாப்பில் உள்ளனர். பூந்தமல்லியில்

உள்ள கிளைச்சிறை பெருமளவு செலவினத்தில் சிறப்பு சிறையாக மாற்றப்பட்டுள்ளது. அதில் முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் வைக்கப்பட்டுள்ளனர்.

**(ஆ) சிறைப்பட்ட நிலையில் பிரித்தெடுத்த சிறைகளின் வகைப்பாடுகள்:**

*21.* பொதுவாக ஒரு திங்களுக்கு மேலாக தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். காவல் வைப்பு மற்றும் விசாரணை சிறைவாசி மற்றும் ஒரு மாதத்துக்குக் குறைவாக சிறை தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த சிறைவாசிகள் இளங்குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். பெண் சிறைவாசிகள் ஆண் சிறைவாசிகளிடமிருந்து தனித்தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்வதையே வழக்கமாக கொண்ட சிறைவாசிகள் சேலம் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். பெண் சிறை அதிகாரிகளால் முழுமையாக நிர்வகிக்கப்படும், பெண் சிறைவாசிகளுக்கென உள்ள வேலூர் மற்றும் மதுரை பெண்கள் தனிச்சிறைகளில் ஒரு மாதத்திற்கு மேலாக சிறைத் தண்டனை பெற்ற பெண் சிறைவாசிகள் வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டையில் உள்ள பார்ஸ்டல் பள்ளி இளம் குற்றவாளிகளை காவல் வைப்பதற்காக உள்ளது. மனநோய் வாய்ப்பட்ட குற்றவாளிகள் மற்றும் மன ஊனமுள்ள குற்றவாளிகள் சென்னை அரசினர் மன நல காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோய் சிறைவாசிகளுக்காக இணைப்புக் கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன.

**(இ) சிறைவாசிகளின் வகைப்பாடு:**

*22.* தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் `எ` மற்றும் `பி' என இரண்டு வகுப்புகளாக பிரிக்கப்படுகின்றனர். விசாரணை மற்றும் காவல் வைப்பு சிறைவாசிகளுக்கு சிறப்பு வகுப்பு பாகுபாடு நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. குற்றவாளிகளுக்கு `ஏ' சிறைவாசி என்ற பாகுபாடு தற்காலிகமாக நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. அவை அச்சிறைவாசியின் சமூக தகுதி, கல்வி, வாழ்க்கைதரம், நடத்தை மற்றும் முன் வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் அரசால் உறுதி செய்யப்படுகிறது. சிறைவாசியின் சமூக தகுதி, கல்வி, வாழ்க்கைத்தரம் மற்றும் உயர்தர வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் `ஏ' வகுப்பு பெறத் தகுதியுடையவர்கள். முற்றிலும் நாகரிகமற்ற (அ) நன்னடத்தை அற்ற முறையில் குற்றத்தை செய்ததற்காக தண்டிக்கப்படும் எவரும் `ஏ' வகுப்பினை பெறத் தகுதியில்லை. சமுதாயத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததற்காக



தண்டிக்கப்படும் சிறைவாசிகளும் `ஏ' வகுப்பைப் பெற தகுதியற்றவர்கள் ஆகிறார்கள். `ஏ' வகுப்பைச் சேராத 'சிறைவாசிகள் 'பி' வகுப்பு சிறைவாசிகள் வகைப்பாட்டில் அடங்குவர்.

## IX சிறைகளில் செய்து தரப்பட்டுள்ள ஒட்டுமொத்த வசதிகள் மற்றும் சலுகைகள்:

*23.* குற்றம் செய்தவர்களையும் விசாரணை தொடங்குவதற்கு முன்னரோ அல்லது தண்டனை அளிக்கப்பட்ட பின்னரோ குற்றவாளிகளாகக் கருதப்படும் நபர்களையும் அனுமதித்து கைதிகளாக வைக்க ஏற்பாடு செய்யப்படும் இடம் சிறைச்சாலையாகும். கைதிகளுக்கு அளிக்கப்படும் பல்வேறு வசதிகள் மற்றும் சலுகைகள் பற்றிய விவரங்கள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) உணவு:**

*24.* பழங்காலத்தில் பொதுவாக சிறை வாழ்க்கை என்பது சிறைவாசிகளுக்கு தரமற்ற உணவு வழங்கப்பட்டு துயருக்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்ட நிலையாகும். அவர்களை கடின வேலைகளில் ஈடுபடுத்தும் நிலையும் இருந்தது. தற்போதைய நிலை மாறுபட்டுள்ளது. தற்போது சிறைவாசிகளுக்கு நல்ல உணவு வழங்கப்படுகிறது.

*25.* `ஏ' வகுப்பு சிறைவாசிகளுக்கு கொடுக்கப்படும் பல்வேறு வகை உணவு விவரங்கள் அவற்றிற்கான செலவு கீழே தரப்பட்டுள்ளன.

| | நாள் ஒன்றுக்கு வேலை செய்பவர் | நாள் ஒன்றுக்கு வேலை செய்யாதவர் |
|---|---|---|
| சைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு | ரூ.31.76 | ரூ.30.79 |
| அசைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு | ரூ.32.35 | ரூ.28.47 |

*26.* `பி' வகுப்பு சிறைவாசிகள், சாதாரணக் காவல், விசாரணை சிறைவாசிகள் ஆகியோருக்கு உணவு வகைகள் வழங்குவதற்கான செலவு பின்வருமாறு:-

[1997 ஏப்ரல் 11

| | அரிசி உணவு | கோதுமை உணவு |
|---|---|---|
| வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாத ஒருவருக்கு நாளொன்றுக்கு. | ரூ. 16.47 | ரூ.17.09 |

27. பாலூட்டும் பெண் சிறைவாசிகளுக்கு சிறப்பு உணவாக 1/2 லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுடன் தங்கும் ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் கிளாஸ்கோ, அமுல் போன்ற குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

28. 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் தங்களுடைய சொந்த செலவில் பழங்கள் மற்றும் பிஸ்கட், கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற ஊட்டச்சத்து வாய்ந்த உணவுப் பொருட்களை வாங்குவதற்கு அனுமதியளிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டும் வழங்கப்படுகிறது. எனினும் சில சிறப்பு நேர்வுகளில் சிறைவாசிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க மருத்துவ அலுவலர் அனுமதிக்கலாம்.

29. பொங்கல் மற்றும் சுதந்திர தினம் ஆகிய ஒவ்வொரு நாட்களிலும் ஒவ்வொரு சிறைவாசிக்கும் ரூ. 5/-கூடுதல் செலவில் சிறப்பு உணவு வழங்க ஒப்பளிப்பு தரப்பட்டுள்ளது.

**(ஆ) உடையும் படுக்கையும் :**

30. 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் சொந்தப் படுக்கையை பயன்படுத்தவும், சிறை உடையை அணிய வேண்டிய வேலை நேரத்தை தவிர மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'ஏ' வகுப்புச் சிறைவாசிகள் அவர்களின் உறவினர்களை நேர்காணலின் போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். ஆனால் 'பி' வகுப்பு சிறைவாசிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும். பெண் சிறைவாசிகளுக்கு இரண்டு டவல்களும், மூன்று ஜோடி வழக்கமான உடைகளும் வழங்கப்படுகிறது. ஆயுள் தண்டனை பெண் சிறைவாசிகளுக்கு நீலநிற கரை போட்ட வெள்ளை புடவையும், இதர தண்டனை பெண் சிறைவாசிகளுக்குப் பச்சை நிற கரை போட்ட வெள்ளைப் புடவையும் வழங்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 11]

**(இ) பிற வசதிகள் மற்றும் பயன்கள் :**

31. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைவாசி ஒவ்வொருவருக்கும் மாதமொருமுறை 30 கிராம் நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு சீகைக்காய் தூளும், சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைவாசிகளுக்கு சுத்தம் செய்வதற்கு கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்பு சிறைவாசிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

32. 'பி' வகுப்பு சிறைவாசிகள் தங்களது துணிகளை சிறையில் உள்ள சலவையகத்தில் அவர்களது சொந்த செலவில் சலவை செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

33. 'ஏ' வகுப்புச் சிறைவாசிகள் இரும்பு அறைகலன்கள், சாப்பாட்டு பாத்திரங்கள், கொசுவலை ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப் படுகிறார்கள். அவர்கள் தானே சமையல் செய்து கொள்வதற்குத் தேவைப்படும் சொந்தப் பாத்திரங்கள், புகையிலை, ஆகியவை போன்ற பிற வசதிகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனை சிறைவாசிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்தும் இரவு காவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவர் ஆவர்.

34. சிறைவாசிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள இளைஞர் சீர்திருத்தப் பள்ளியிலும் முடிதிருத்துநர்கள் உள்ளனர்.

**(ஈ) மருத்துவ சுகாதார வசதிகள் :**

35. சிறை நிர்வாகத்தினால் சிறைவாசிகளின் நல்வாழ்வு வசதிகள் மற்றும் சுற்றுப்புற நலன் ஆகியவை கவனித்துக் கொள்ளப்படுகின்றன அனைத்து மத்திய சிறையிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர் திருத்தப் பள்ளியிலும், மருத்துவமனைகள் உள்ளன. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும் ஒரு செவிலியரும் ஒன்று அல்லது இரண்டு மருந்தாளுநரும் இரண்டு அல்லது மூன்று மருத்துவ உதவியாளர்களும் உள்ளனர். கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசு செலவில் தேவைப்படுகின்ற சிறைவாசிகளுக்கு இலவசமாக

மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும் சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் சிறைவாசிகளுக்கு பல்நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில் தொழுநோய் சிறைவாசிகள் தனியாக பிரிக்கப்பட்டு, தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக உடல் இயக்க பயிற்சி மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத சிறைவாசிகள், மனநோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை உளநோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு மனநல காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அரசு தற்போது அனைத்து மத்திய சிறைகளிலும் நோயுற்ற சிறைவாசிகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல ஒரு நோயாளர் ஊர்தி வழங்கி உள்ளது.

36. அனைத்து மத்திய சிறை, இளைஞர் சீர்த்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூர் ஆகியவற்றில் ஆய்வகம் மற்றும் இ.சி.ஜி. சாதனம் சிறைவாசிகள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

37. சுற்றுப்புற மற்றும் துப்புரவு வசதிகளுக்கு வருவோமானால் அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் பெண்கள் தனிச்சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும், தனிக்கிளைச் சிறைகள் மற்றும் அனைத்து கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**(உ) தகவல் தொடர்பு வசதிகள் :**

**(i) நேர்காணல் மற்றும் கடிதங்கள் :**

38. அனைத்து சிறைவாசிகளும் வாரம் ஒருமுறை கடிதம் பெறுவதற்கும் எழுதுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒரே சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**(ii) செய்தித்தாள்களும், கால வெளியீடுகளும் :**

39. நான்கு சுவர்களுக்கப்பால் என்ன நிகழ்கிறது என்ற நாட்டு நடப்புகளைத் தெரிந்து கொள்வதற்காக சிறைவாசிகளுக்கு கால பத்திரிகைகளும், நாளிதழ்களும் அரசு செலவில் இலவசமாக வழங்கப்படுகின்றன. 40 சிறைவாசிகளுக்கு ஒரு செய்தித்தாள் என்ற வீதம் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் செய்தித்தாள்களாவன:—

1. தினமணி' 2. தினத்தந்தி'
3. தினமலர்' 4. தி இந்து'



ஒவ்வொரு மத்திய சிறைக்கும் இரண்டு இந்து நாளிதழ்கள் வழங்கப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட காலமுறை பத்திரிகைகள் 100 சிறைவாசிகளுக்கு ஒன்று என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது.

40. சிறைவாசிகள் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். கல்வி மற்றும் இலக்கியத் திறன் கொண்ட நல்ல தரமான புத்தகங்கள் சிறைவாசிகள் படிப்பதற்காக சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட புத்தகங்கள் உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்து பெறப்பட்டு சிறைவாசிகளுக்கு படிப்பதற்காக வழங்கப்படுகின்றன.

**(ஊ) பொழுதுபோக்கு வசதிகள் :**

41. சிறைவாசிகளுக்கு விளையாட்டு மற்றும் தொலைக்காட்சி போன்ற பொழுதுபோக்கு வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் தியான முறை மற்றும் யோகா வசதிகள் உள்ளன. ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் மத்திய சிறைகளிலுள்ள எல்லா சிறைக் கைதிகளும் கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூரிலுள்ள பெண்கள் தனிச்சிறையில் பெண் சிறைவாசிகள் வளைப்பந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியான முறை அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும் மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் சிறைவாசிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள மத்திய சிறைவாசிகளுக்கு சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தற்போது அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறை, வேலூர், மதுரை மற்றும் திறந்த வெளிச்சிறை, சிங்காநல்லூர் ஆகிய சிறைகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**(எ) கல்வி வசதிகள் :**

42. சிறைத் துறை நிருவாகத்தினரால் சிறைவாசிகளின் கல்வித் தேவைகள் நன்கு கவனித்துக் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்பிக்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் சிறைவாசிகளுக்கு கல்வி புகட்டப்படுகிறது. முதியோர் கல்விப் பயிற்சிக்கான பொருட்கள் மாநில வள ஆதார நிறுவனம் மூலமாக சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்பாளர்கள் வெளியிலுள்ள கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும்

வரவழைத்து சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். பல்வேறு முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் பி.ஜி.எல்., பி.எல்., பி.எட்., போன்ற தொழிற்படிப்பு அஞ்சல்வழிக் கல்வி மூலம் பயில சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளுள் ஒருவர் பி.எச்.டி. பட்டம் பெற்றுள்ளார் என்பது மனநிறைவளிக்கும் செய்தியாக உள்ளது. இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வு கட்டணம் குறித்த செலவு, இதர இடைநிகழ் செலவு ஆகிய செலவுகள் முழுவதும் அரசு ஏற்றுக் கொள்கிறது. தேர்வில் தேர்ச்சி பெறாத சிறைவாசிகள் மூன்று முறை மீண்டும் அரசுச் செலவில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகள் தேர்வு எழுதச் செல்லும்பொழுது கவனம் சிதறாமல் இருக்க சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போன்று அவர்களை காவல் காத்து அழைத்துச் செல்லும் வழித்துணைக் காவலர்களும் சாதாரண உடை அணிந்து செல்கின்றனர். தற்போது 19 சிறைவாசிகள் உயர் கல்வி கற்கின்றனர். நீதி அல்லது மதம் சம்பந்தமாக சொற்பொழிவுகள் என்ற பெயரால் மதமாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில் மதம், நீதிநெறி வகையான சொற்பொழிவுகள் விருப்பப்படும் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

**(ஏ) சிறைவாசிகளை விடுப்பில் விடுவித்தல் மற்றும் விடுப்பு வசதிகள்:**

43 (i) மூன்று ஆண்டு ஆரம்ப சிறைத் தண்டனை அனுபவித்துள்ள சிறைவாசிகளுக்கு முதலில் ஒரு மாத சாதாரண விடுப்பு சிறைத் துறைத் துணைத் தலைவரால் அளிக்கப்படுகிறது. தனி நேர்வுகளில் இந்த விதியினைத் தளர்த்தி காப்பு விடுப்பில் செல்ல அரசு அனுமதி அளிக்கிறது. இன்னும் 3 ஆண்டுக்காலம் மட்டும் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய சிறைவாசிகளுக்கு அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒருமாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

(ii) இவ்விடுப்புடன, நன்னடத்தையுள்ள சிறைவாசிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்கள் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து விட்டாலோ அவர்களைச் சென்று பார்க்கவும் அவர்களது திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும் சிறைக் கண்காணிப்பாளரால் அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டில் நான்கு முறையாக 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டது.





**(ஐ) தண்டனை குறைப்பு மற்றும் அரசால் வழங்கப்படும் சிறப்பு தண்டனை குறைப்பு:**

44 (i) சிறைவாசிகளின் மிக முக்கியமான உரிமையாக இருப்பது சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் தண்டனை குறைப்பு ஆகும். பலவிதமான தண்டனை குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைவாசிகள் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், சாதாரண வகை தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. இவ்விதிகளின் கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்புடன் சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும் ஏனைய சிறை விடுமுறை நாட்களில் சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்வோராகவும் பணிபுரிய வேண்டிய சிறைவாசிகளுக்கு ஒரு காலாண்டிற்கு 3 நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. தண்டனை சிறைவாசிக் காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு பெறுகிறார்கள். சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைப் பேணி வரும் சிறைவாசிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும் சிறந்த நற்பணிக்காக சிறப்பு தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் சிறைத் துறைத் தலைவரால் அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் சிறைவாசிகள் அதிகபட்சமாக ஓராண்டுகால சிறப்புத் தண்டனைக் குறைப்பு பெறுகிறார்கள். மேலும் இரத்த தானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரே சமயத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது. இதைத் தவிர மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனையடைந்த சிறைவாசிகளை முன்னதாக விடுதலை செய்வது குறித்து ஒவ்வொரு சிறையிலுள்ள அறிவுரைக் கழகம் பரிசீலனை செய்கிறது. சிறைக் கைதியின் கடந்த கால குறிப்பையும், உள்ளூர் அதிகாரிகளின் அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், நன்னடத்தை அலுவலர், கண்காணிப்பாளர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து அச்சிறைவாசியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறை தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க, அரசு பரிசீலிக்க இக்குழு தனது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

(ii) குற்றவியல் நடைமுறை விதி தொகுப்பு 433-ஏ பிரிவின்படி ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகள் (அதாவது 18-12-1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தண்டனை அடைந்தவர்கள்) 14 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்த பின்பே முன் விடுதலைக்காக பரிசீலனை செய்யப்படுகிறார்கள்.

(iii) இருப்பினும் 18-12-1978க்கு முன் ஆயுள் தண்டனை பெற்ற கடு நோயுற்ற சிறைவாசிகளை மருத்துவக் காரணங்களை முன்னிட்டு முன் விடுதலை செய்வது தொடர்பாக சிறை மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் உள்ள விதிகளின்படி பரிசீலனை செய்யப்படுகிறது.

(iv) அனைத்திந்திய சிறை சீர்த்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு ஆணை எண் 1762, உள்துறை (சிறை.6) நாள் 20-7-1987ல் கீழ்க்காணும் வகையைச் சார்ந்த சிறைவாசிகளின் நேர்வுகள் முன் விடுதலைக்காக பரிசீலிக்கப்படக்கூடாது என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(அ) கற்பழிப்பு, பொய்க் கையெழுத்து, கொள்ளை ஆகிய குற்றங்களுக்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள், பயங்கரவாத குற்றவாளிகள் மற்றும் மாநிலத்திற்கெதிரான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள் மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவுகள் 224, 376, 396 முதல் 400 வரை 402, 467, 471, 472, 474, 489ஏ, 489பி மற்றும் 489டி ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனை அடைந்த சிறைவாசிகள்.

(ஆ) பொருளாதாரக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள். பொருட்களை பதுக்கி வைத்தல், கடத்தல் மற்றும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள்.

(இ) இலஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டம் மேலும் பரத்தமை தடைச் சட்டம், மருத்துவச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள்.

(v) புதுக்கோட்டை சீர்த்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த வரையில் தண்டனைக் காலம் முடியும் முன் விடுதலை செய்யும் முறை (விடுதலை அல்லது நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல்) செயலில் உள்ளது. 1925ஆம் ஆண்டு சீர்த்திருத்தப் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15-ம் பிரிவைச் சேர்ந்த (1)ஆம் உட்பிரிவின்படி வெளியூர்களாயிருந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள நன்னடத்தை அலுவலர்களுக்கும், சென்னை மாநகரை பொருத்தமட்டில் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளருக்கும், சீர்த்திருத்தப்பள்ளி கண்காணிப்பாளர் நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற தொழிற்பயிற்சி குறித்த விவரங்களையும் உரிய விசாரணை செய்து, அவற்றின் மூலம் பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும்





வகையில், அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள இளம் குற்றவாளிகள் பற்றி சிறைத்துறைத் தலைவர் பரிசீலிக்கிறார். பிறகு ஆணை வெளியிடுகிறார்.

**(ஓ) இவ்வரசால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு:**

45. இவ்வரசு மனித நேயத்தின் பேரிலும், நல்லெண்ணத்தின் பேரிலும் காலஞ்சென்ற முதலமைச்சர் திரு. சி.என். அண்ணாதுரை அவர்களின் 88-வது பிறந்த நாளை முன்னிட்டு பொது மன்னிப்பு வழங்கியது. இதன் மூலம் 370 ஆயுள் சிறைவாசிகள்/ குறுகிய கால தண்டனை சிறைவாசிகள் 15-9-96 அன்று விடுதலை செய்யப்பட்டனர்.

**(ஓ) சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவி வழங்குதல்:**

46. தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் கழகம் விசாரணைச் சிறைவாசிகளுக்கும், தண்டனை சிறைவாசிகளுக்கும் இலவச சட்ட உதவி வழங்கி வருகிறது. சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவி அளிப்பதற்காக இக்குழு பணி வழக்குரைஞர்களை அனைத்து சிறைகளுக்கும் அனுப்பி வருகிறது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் கழகத்தின் உதவியால் பெருமளவில் சிறைவாசிகள் பயன் பெறுகின்றனர்.

**(ஔ) சிறையில் புகார் பெட்டிகள் வைத்தல்:**

47. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொருட்டு அவர்களிடமிருந்து புகார்களைப் பெறும் பொருட்டு அனைத்து மத்திய சிறைகளிலும் புதுக்கோட்டை சீர்த்திருத்தப்பள்ளியிலும் மூடப்பட்ட மூன்று புகார் பெட்டிகளும், வேலூரிலுள்ள மகளிருக்கான தனிச் சிறைச்சாலையில் இரண்டு புகார் பெட்டியும் தக்க முத்திரையிட்டு வைக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு எழுதுபொருட்களும் கொடுக்கப்படுகின்றன. சிறை அதிகாரிகள் ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய முதற்பணி நாளன்று இந்தப் புகார் பெட்டிகளைக் கொண்டு வந்து சம்பந்தப்பட்ட மாவட்ட அமர்வு நீதிபதியிடம் அளிக்கப்பட்டு அவர் அப்பெட்டிகளைத் திறந்து அவற்றிலுள்ள புகார் மனு ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்து, சிறை அதிகாரிகளால் அல்லது அரசால் அல்லது சிறைத்துறைத் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவற்றின் பகுதி நகல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பார். சிறைவாசிகள் கொடுக்கும் புகார் மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 11

**(க) சிறைகளைப் பார்வையிட சிறைப்பார்வையாளர்களுக்கு வசதி அளித்தல்:**

48. அலுவல்சார் சிறைப்பார்வையாளர்களால், சிறைச்சாலைகள் ஆய்வு செய்ய வேண்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்த தேவையில்லை. இம்முறை சிறைச்சாலைகளில் ஏற்படும் முறைகேடுகளை அச்சுறுத்தி கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாஜிஸ்டிரேட்டுகளையும், நீதிபதிகளையும் மற்றும் மருத்துவம், நல்வாழ்வு, தொழில்கல்வி, தீயணைப்புப் பணிகள் ஏனையத் துறைகளிலிருந்து தேர்வு செய்யப்படுபவர்கள் அரசு சார்புள்ள பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இதுதவிர இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள் முக்கியமாக சமூகப் பணியாளர்கள், அறிவியலாளர்கள் உள்நோய் மருத்துவர்கள், உளநூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியோர் ஒவ்வொரு சிறையிலும், அலுவல் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நடத்தும்விதம், சிறைகளை நிர்வகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆகியன சிறைகளில் உரியவாறு செயல்படுத்தப்படுகின்றனவா என்று அவர்கள் கண்டறிகின்றனர். மேலும் அவர்கள் சிறைகளை பார்வையிட்டு சிறைவாசிகளை சந்தித்து குறை கேட்கின்றனர். சிறைப் பார்வையாளரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

**(ங) சிறைவாசிகளுக்கான நலப்பணிகள்:**

49. சிறைவாசிகளின் நலனுக்காக ஒவ்வொரு மத்திய சிறையிலும் ஒரு நல அலுவலர் வீதமும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச் சிறை மற்றும் புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் ஒவ்வொரு நல அலுவலர் வீதம் உள்ளனர். இந்த நல அலுவலர்கள், சிறையின் நடைமுறை விதிகளுக்கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்து வருகின்றனர். அவர்களுடைய உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ளும் வகையில் உதவி செய்தும் வருகின்றனர். மேலும் தனிப்பட்ட முறையில் மேல்முறையீடு செய்ய வசதி இல்லாத சிறைவாசிகளுக்கு மேல்முறையீடு செய்யவும் உதவி செய்கின்றனர்.

50. பெண் சிறைவாசிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு சிறையில் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக வேலூர் மகளிர் தனிச்சிறையில் குழந்தைகள் காப்பகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன் அவர்களை சரியான முறையில் வைத்துப் பராமரிக்க எவரும் முன்வராவிட்டால், சென்னையில் உள்ள பாலமந்திர் மருத்துவமனைக்கும், மதுரை காந்தி கிராமத்திலுள்ள சிறுவர்



1997 ஏப்ரல் 11]

இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர். தாம்பரத்திலுள்ள எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் சிவானந்தா அனாதை இல்லத்தில் சிறைவாசிகளின் குழந்தைகளை கவனித்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த பண்பாட்டுக் குழு கைதிகளின் நன்மைக்காக சிறைவளாகத்திற்குள் கால முறைப்படி வெளியில் உள்ளவர்களைக் கொண்டு பலவகை-கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வதோடு திரைப்படமும் காட்டுகிறது. அனைத்து மத்திய சிறைகளிலும் திரைப்படம் காட்டும் கருவி உள்ளது.

51. மத்திய சிறைகள் அனைத்திலும், கைதிகளுக்காக சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைவாசிகளும் பணிக்கொடை ஈட்ட இயலும் சிறைவாசிகளும், அனைத்து மத்திய சிறைகளிலுமுள்ள இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் 'ஏ' வகுப்பு சிறைவாசிகள், தனிவகுப்பு விசாரணை மற்றும் விசாரணை எதிர் நோக்கியுள்ள சிறைவாசிகள், தனி வகுப்பு, தடுப்புக் காவல் சிறைவாசிகள் ஆகியோர் சிறை தேநீர் விடுதியிலிருந்து காபி, டீ, பன், பிஸ்கெட், மற்றும் இதர பொருட்கள் வாங்கும் பொருட்டு அனுமதி அளிக்கப்பட்ட தொகையின் உச்சவரம்பினை ரூ. 45-லிருந்து ரூ. 75 ஆகவும், 'பி' வகுப்பு சிறைவாசிகள் சாதாரண விசாரணை சிறைவாசிகள் மற்றும் விசாரணை எதிர்நோக்கியுள்ள சிறைவாசிகள் ஆகியோருக்கு அனுமதிக்கப்பட்ட தொகையின் உச்சவரம்பினை ரூ. 30-லிருந்து ரூ. 45 ஆகவும் அக்டோபர் 1996 முதல் உயர்வு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

52. மரண தண்டனை சிறைவாசிகளை காணவரும் அவருடைய நெருங்கிய உறவினர்களுக்கு போக்குவரத்து செலவினை அளிப்பதற்கு அனைத்து மத்திய சிறை கண்காணிப்பாளர்களுக்கும், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை, பெண்கள் தனிச் சிறைச்சாலை, வேலூர் மற்றும் மதுரை கண்காணிப்பாளர்களுக்கும் அரசு அதிகாரமளித்துள்ளது. இச்சலுகை தந்தை, தாய், மனைவி, கணவன், மகன், மகள், சகோதரன், சகோதரி ஆகிய சிறைவாசியின் ஐந்து நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பயணச் செலவு இம்மாநிலத்திற்குள் புகைவண்டி அல்லது பேருந்து மூலம் குறுகிய வழித்தடத்தில் குறைந்தபட்ச வகுப்பில் பயணம் செய்வதற்கு மட்டும் வழங்கப்படும். இச்சலுகை பல்வேறு சிறைகளில் மரண தண்டனை குற்றவாளிகளின் நெருங்கிய உறவினர்கள் அவரை மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு முன் சென்று பார்ப்பதற்காக அரசால் அனுமதிக்கப்படுகிறது.

**(ச) தியான பயிற்சி மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள்:**

53. வேலூர் மத்திய சிறை மற்றும் வேலூர் பெண்கள் தனிச்சிறை மாதிரி சிறைகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் இவ்வாண்டு துவக்கப்பட்டுள்ளன:

1. விபாசன தியான பயிற்சி முறைக்கு ஏற்பாடு செய்து அந்தப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற மையங்கள் மூலம் சிறைவாசிகளுக்கு கற்றுத் தரப்படுகின்றன.
2. இராஜயோக பயிற்சி முறை பிரஜபிதா பிரம்மகுமாரி பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்றுவிக்கப்படுகிறது.
3. மன நல மருத்துவர் மூலம் போதைப் பொருள் அடிமைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.
4. சிறைவாசிகளுக்கு முதியோர் கல்வி அறிவு புகட்டும் பணியினை அறிவொளி இயக்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

**(ஞ) விடுதலை அடைந்த சிறைவாசிகளுக்கு புதுவாழ்வு அமைப்புப் பணிகள்:**

***(அ) தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம்:***

54. தமிழ்நாடு விடுதலையான சிறைவாசிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும், இளங்குற்றவாளிகளும் கைதேர்ந்த குற்றம் புரிபவர்களாக மாறுவதைத் தடுக்கும் நோக்குடன் சிறைவாசிகளுக்குப் புதுவாழ்வு அளித்தலும் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்து கொடுத்தலும், இச்சங்கத்தின் நோக்கமாகும். விடுதலை செய்யப்பட்டவர்கள் சிறுதொழில் நடத்தவும், கருவிகள், தேநீர் கெட்டில் தையல் எந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச்சங்கம் பண உதவி வழங்குகிறது. மேலும் இரயில், பேருந்து கட்டணமும் வழங்குகிறது. தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும் வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்ளவும் சட்ட உதவி அளிப்பதற்கும் முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கும் கடன் வழங்குவதோடு ஆடைகள், மூக்குக் கண்ணாடிகள் போன்றவற்றையும் விடுதலையான சிறைவாசிகளுக்கு வழங்குகிறது. அரசு இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு உதவி மானியமாக ரூ. 18,000 வழங்குகிறது.





***(ஆ) விடுதலையாகும் சிறைவாசிகளுக்கு நிதியுதவி:***

55. சிறைச்சாலைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகளுக்கு உதவி தொகை அளிக்கும் பொருட்டு 1994-95 ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கீடு தொகையை அரசு ரூ. 1 லட்சத்திலிருந்து ரூ. 10 லட்சமாக உயர்த்தி உள்ளது. தற்போது இந்தத் தொகையைச் சிறைவாசிகளுக்கு எவ்வாறு பயன்தரத்தக்க முறையில் வழங்கலாம் என்பதற்கான வரைமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு உதவித் தொகையாக ரூ. 33,000 அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## X. சிறையில் உள்ள தொழிற் கூடங்களிலும் தொழில்களிலும் சிறைவாசிகளை பயன்படுத்துதல்:

56. சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு அவர்களுக்குச் சிறையிலுள்ள தொழிற்சாலைகளில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகின்றது. கடுந்தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகள், காவல் வைப்பு, விருப்பப்படும் விசாரணைச் சிறைவாசிகள் ஆகியோர் இந்த சிறைகளிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்வதோடு அதற்கான ஊதியமும் பெறுகின்றனர். இவ்வாறு செய்வதால் சிறைவாசிகள் விடுதலை அடைந்த பின்பு தாங்களே தங்களது புதுவாழ்வினை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு இப்பயிற்சி உதவியாக இருக்கும். சிறைகளில் கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு வேலைகள் என சிறைவாசிகளுக்கு மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி வேலை கொடுக்கப்படுகிறது. சிறைவாசிகள் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல் மற்றும் பினாயில் செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை ஆகிய தொழில்களிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு சிறை சீர்திருத்தக்குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில், எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் உள்ள சிறைவாசிகளுக்குக் கீழ்க்காணும் எளிய தொழிற் பயிற்சிகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது:

| | | | |
|---|---|---|---|
| 1. | செங்கல் கட்டுமானத் தொழில் | .. | மத்திய சிறை, வேலூர். |
| 2. | குழாய்களை பழுதுபார்த்து இணைத்தல் | .. | மத்திய சிறை, மதுரை, சேலம், திருச்சி, பாளையங்கோட்டை. |

[1997 ஏப்ரல் 11

| | | |
|---|---|---|
| 3. | எளிய மின் இணைப்புப் பயிற்சி .. | மத்திய சிறை, சென்னை, கடலூர் மற்றும் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை. |
| 4. | வண்ணம் பூசுதல், பெயர் பலகை.. எழுதுதல் | மத்திய சிறை, கோயம்புத்தூர். |

கோயம்புத்தூரிலுள்ள மத்திய சிறையில் நெசவுப் பிரிவு மற்றும் சாயப் பிரிவு அடங்கிய சிறைவாசிகளால் நடத்தப்படும் துணி நூல் ஆலை ஒன்று உள்ளது. இந்த சிறை தொழில் பிரிவுகளில் சுமார் 5 இலட்சம் சிறைவாசிகள் வரை வருடந்தோறும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அரசு சிறைத்துறையை பணித்துறையாக அறிவித்துள்ளது. எனவே, சிறை தொழில் பிரிவுகளில் செய்யப்பட்டு அரசுத் துறைக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கு தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இதனால் இந்த சிறைத் தொழிற்கூடங்களில் தயாரிக்கப்படும் பொருட்களை பயன்படுத்தும் துறைகளிடமிருந்து தேவைப்பட்டியல்களை சிறைத்துறை அதிக அளவில் பெறுகிறது. இதனால் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. சிறைத் தொழிற் பிரிவுகளின் ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு ரூ. 4 கோடி ஆகும்.

57. வேலூர் பெண்கள் தனிச் சிறையிலுள்ள இருபது பெண் சிறைவாசிகளுக்கு ஒவ்வோராண்டும் வேலூர் நேரு யுவக்கேந்திரா பயிற்சி ஆசிரியர்கள் மூலம் தையல் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அத்தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்கள், அரசினர் தொழில் நுட்ப தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். ஓராண்டில் சராசரியாக 1,000 சிறைவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

58. அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் மற்றும் வேலூர் மற்றும் மதுரை பெண்கள் தனிச் சிறையிலும் கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் தற்போது செயலிலுள்ளது. சிறைவாசிகள் தங்கள் தொழில் திறமைக்கேற்ப இத்திட்டத்தின் கீழ் ஊதியம் ஈட்டலாம். இத்திட்டத்தின் கீழ் சிறைவாசிகளுக்கு அளிக்கப்படும் ஊதிய வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன .

| | | |
|---|---|---|
| 1. | தேர்ச்சி பெற்றவர் | ரூ. 6.00 |
| 2. | ஓரளவு தேர்ச்சி பெற்றவர் | ரூ. 4.00 |
| 3. | தேர்ச்சி பெறாதவர் | ரூ. 2.00 |

இவ்வூதிய ஈட்டுத் திட்டம் சிறைவாசிகள் பொருளீட்டவும் தங்களால் சேமிக்கப்பட்ட இந்த பணத்தினை விடுதலைக்கு பின்னர் பிற்கால வாழ்க்கைக்குப் பயன்படுத்தவும் உதவும்.



1997 ஏப்ரல் 11]

## XI. அரசு மறுவாழ்வு இல்லங்கள் :

59. தொழுநோயால் அவதியுறும் பிச்சைக்காரர்கள் நோயினைக் குணப்படுத்தவும் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கவும் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளது :

1. பரனூர் - அண்ணா மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை - இராமசாமி படையாச்சியார் மாவட்டம்.
3. பர்கூர் - தருமபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை - புதுக்கோட்டை மாவட்டம்.
5. விண்ணம்பள்ளி - பெரியார் மாவட்டம்.
6. மனையேறிப்பட்டி - தஞ்சாவூர் மாவட்டம்.
7. ஓய்.புதுப்பட்டி - மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி - சம்புவராயர் மாவட்டம்.
9. செல்லியம்பட்டி - தருமபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி - சேலம் மாவட்டம்.

## XII. நிருவாகம் :

60. முன்னர், மருத்துவப்பணி மற்றும் குடும்ப நல இயக்குநரின் கீழ் இயங்கிவந்த இவ்வரசு மறுவாழ்வு இல்லங்கள் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ஆம் நாள் முதல் சிறைத்துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு இயங்கி வருகின்றன. ஒவ்வொரு இல்லமும் ஒரு நிருவாக அலுவலரால் நிருவகிக்கப்படுகிறது. அவர் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகிறார்.

## XIII. அனுமதி மற்றும் வெளியேற்றம் :

61. ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் (ஆண் பெண் உட்பட) 25 சிறுவர்களும் தங்குவதற்கு வசதியுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தானாக வரும் பிச்சைகாரர்களும், பிச்சை எடுத்ததற்காக தண்டனை வழங்கப்பட்டவர்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப் படுகிறார்கள். மணமானவர்களின் கணவரோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால் மற்றவரையும் இவ்வில்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.

இல்லத்தில் புதிய அனுமதிக்கு 1994 முதல் விதிக்கப்பட்ட தடை 4-10-96-ல் நீக்கப்பட்டு, தொழுநோய் இல்லவாசிகள் தற்போது அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

62. இவ்வில்லவாசிகளுள் தொழுநோய் இல்லாதவர்கள் என்று மருத்துவ அதிகாரிகளால் சான்று அளிக்கப்பட்டால் அவர்கள் சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்த இயலுமாயின் அவர்கள் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். மேலும், திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வோர் மற்றும் சீரிய முறையில் இல்லம் நடைபெற தடையாய் இருப்போர் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

## XIV. இல்லத்திலிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள் :

63. இவ்வில்லவாசிகளுக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும், திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**(அ) உணவு :**

64. தொழுநோயால் பாதிக்கப்பட்ட முதிய இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ. 15 வீதமும் அவர்களுடைய குழந்தைகளுக்கும், சார்ந்துள்ளவர்களுக்கும் நாளொன்றுக்கு ரூ. 10 வீதமும் உணவுக்கு வழங்கப்படுகின்றன. இல்லத்திலிருப்பவர்களுக்கு காலை தேனீருடன், சிற்றுண்டியும், மதிய உணவும், மாலைத் தேநீரும் மற்றும் இரவு உணவும் அளிக்கப்படுகின்றன. நாள்தோறும் மோர் வழங்கப்படுகிறது. இறைச்சி விலைவாசி உயர்வினால் வழங்கப்படுவதில்லை. காந்தி ஜெயந்தி, சுதந்திர தினம் போன்ற சிறப்பான நாட்களில் ஒவ்வொரு இல்லவாசிக்கும் கூடுதல் ரூ. 3-க்கு சிறப்புணவு வழங்கப்படுகிறது.

**(ஆ) இருப்பிடம் :**

65. உளுந்தூர்பேட்டை, பர்கூர் மறுவாழ்வு இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (ப்ளாக்) கீழ்த்தளத்தில் அமைந்துள்ளன. மேலும், முதல் மாடியில் தனி நபர் தங்குவதற்குத் துயிற்கூடங்கள் (டார்மிடரிஸ்) கட்டப்பட்டுள்ளன. உளுந்தூர்பேட்டை மற்றும் பர்கூர் இல்லங்கள் ஒற்றைத் தள கட்டிடமாகவும், நிரந்தர கொட்டகைகளாகவும் உள்ளன.





**(இ) உடை, பாய் போன்றன :**

66. பொங்கல் நாள், சுதந்திர நாள் ஆகிய தினங்களில் இல்லவாசிகளுக்கு இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. அண்மையில் பொங்கலை முன்னிட்டு இலவச சேலைகளும், வேட்டிகளும் இவ்வில்லவாசிகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டது. அவர்களுக்கு ஆண்டுதோறும் சிறப்பான வகை இரப்பர் காலணிகளும் வழங்கப்படுகின்றன. மேலும் மூன்று ஆண்டுகளுக்கொரு முறை ஒரு போர்வையும் வழங்கப்படுகிறது. இது தவிர தட்டு, டம்ளர், ஸ்பூன் மற்றும் பாய் முதலியவை வழங்கப்படுகின்றன.

**(ஈ) மருத்துவ வசதிகள் :**

67. இல்லவாசிகளுக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலியர்கள், ஒரு ஆய்வுக்கூட தொழில் நுட்ப பணியாளர், ஒரு மருந்தாளுநர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு பேறுகால உதவியாளர், ஒரு உதவி பெண் செவிலியர், ஒரு உதவி ஆண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வொரு இல்லத்திலும், இல்லவாசிகளின் மருத்துவத் தேவைகளை கவனிக்கின்றனர். அங்கு இல்லவாசிகளுக்குத் தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமின்றி மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள், 10 பேர் தங்கக்கூடிய தனி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு சிறப்புணவு மற்றும் மருந்துகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சைக் கூடங்கள் பர்கூர், உளுந்தூர்பேட்டை இல்லங்கள் தவிர்த்து மற்ற இல்லங்களில் உள்ளன. கைவிரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு சரியில்லாத நிலையிலுள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

68. கண் நோயால் அவதியுறுபவர்களுக்கு பரிசோதனைக்குப் பின் மூக்குக் கண்ணாடிகளும் மற்றும் கறுப்பு மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மாவட்ட காசநோய் மருத்துவ நிபுணரும் மற்றும் கண் மருத்துவரும் இல்லவாசிகளின் நோய்களை கண்டறிய முறைப்படி பார்வையிடுகின்றனர்.

69. தனிச்சிறப்பு வாய்ந்த காலணிகள் மற்றும் செயற்கை உறுப்புகள் (கை, கால் முதலியவைகள்) வழங்க இல்லம் ஒவ்வொன்றுக்கும், ஆண்டொன்றுக்கு ரூ. 300 செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

70. இவ்வில்லங்களில் விரல்கள் செம்மையாக இல்லாதவர்களுக்கு மட்டும் பல்பொடி மற்றும் பல் துலக்கும் பிரஷ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

**(உ) உடற் பயிற்சியும், தொழில் பயிற்சியும் :**

*71.* ஒவ்வொரு இல்லத்திலும், ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். மின் கருவி (எலக்ட்ரிகல் ஸ்டிமுலேடர்) மெழுகு பூச்சு சாதன தொட்டி (வாக்ஸ் பாத்) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்பினர்களுக்கும், உடற்கூறு பயிற்சி தேவையுள்ள இல்லவாசிகள் அனைவருக்கும் உடற்கூறு பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. புண் மற்றும் உருச்சிதைந்த நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக்காக தேர்ந்தெடுக்கின்றனர். புண்ணாவதை தவிர்ப்பதற்காக இல்லவாசிகளுக்கு நுண்ணிய துளைகளுடன் கூடிய இரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன.

**(ஊ) பொழுதுபோக்கு வசதிகள் :**

*72.* ஒவ்வொரு இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 200 அரசு அனுமதித்துள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகளின் பொழுதுபோக்குக்காக வருடத்திற்கு ரூ. 400-க்கு இசைக் கருவிகளும் வாங்கி அளிக்கப்படுகிறது.

**(எ) கல்வி மற்றும் இதர வசதிகள் :**

*73.* இவ்வில்லவாசிகளின் இலக்கியம் மற்றும் பொது கல்வி மேம்பாட்டிற்காக இரண்டு தின செய்தித்தாள்கள் மற்றும் இலக்கியப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

## XV. இல்லவாசிகளின் குழந்தைகளுக்கான வசதிகள்:

*74.* தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் தாலுக்காவில் இத்தாப்பூர் என்னுமிடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமான வரையில் தனியாகப் பிரிக்கபபட்டு, இவ்வில்லங்களின் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

(i) சீருடை, புத்தகங்கள், பெட்டி முதலியவைகளுக்காக ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரம்ப செலவினமாக ரூ. 75 அரசு வழங்குகிறது.

(ii) மேலும், இவ்வில்லங்களிலுள்ள பள்ளிச்செல்லும் குழந்தைகளுக்கு வரும் ஆண்டு கல்விக்காகவும் கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ள அரசு ஆணை வழங்கியுள்ளது:



இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை ரூ. 20 (ரூ. 120 ஆறு ஆண்டுகளுக்கு ஆகின்றன).

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளுக்கு ரூ. 30 (ரூ. 60 இரண்டாண்டுகளுக்கு ஆகிறது).

பத்தாம் வகுப்பிற்கு ரூ. 50 பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கு ரூ. 75 (ரூ. 150 என இரண்டாண்டுகளுக்கு).

## XVI. இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள்:

*75.* இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் உடல் நலத்துடன் இருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி)
2. பாய் பின்னுதல்
3. காலணி தயாரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்
4. தையல்
5. தச்சு வேலை
6. விவசாயம்
7. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில் மட்டும்).

*76.* பரனூர், அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள இல்லவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு காட்பாடியிலுள்ள ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவை சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இல்லவாசிகளுக்குப் பட்டறைகளில் (லேத்) தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக, இத்தொழிற் சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையினை வளர்க்க உதவுகின்றன.

## XVII. கைத்தறிகள் மற்றும் விசைத் தறிகள்:

*77.* தற்பொழுது 135 கைத்தறிகளும், 77 பாய்த் தறிகளும் பத்து இல்லங்களிலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட

[1997 ஏப்ரல் 11

மருத்துவ மனைகளுக்கு விற்கப்படுகின்றன. ஓய். புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ள ஊரக நூற்பாலைகளில் மாதத்திற்கு 10,000 சிட்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 34 தையல் இயந்திரங்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள் தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

## XVIII. காகித உறை தயாரிப்பு பிரிவு:

78. புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தயாரிப்புப் பிரிவு 1-2-1978 முதல் இயங்கி வருகிறது.

## XIX. இல்லவாசிகளின் எண்ணிக்கை மற்றும் இதர விவரங்கள்:

79. தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை உற்பத்திப் பிரிவுகளில் உற்பத்தி, விற்பனை, இல்ல நிருவாகப் பணியாளர்கள், ஆதாயம்/இழப்பீடு பட்டியல் ஆகியன முறையே இணைப்புகள் 2 மற்றும் 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## XX. அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம்:

80. காவல்துறையின் நிருவாகத்தில் 1-3-1954 முதல் நடத்தப்பட்டு வந்த மேல்பாக்கம், அரசினர் காப்பு முகாம் இத்தகைய முகாம்களில் முதன்மையானதாகும். சென்னை நகரில் பிச்சைக்காரர்களின் பிரச்சினைகளை தீர்க்கவும், அவர்களுக்கு அவர்களின் திறமைக்குத் தக்க வகையில் தொழிற் பயிற்சி கொடுத்து அவர்களைத் திசை திருப்பி மறுவாழ்வு தந்து சிறந்த ஒரு குடிமகனாக ஆக்குவதே இல்ல விடுதியின் நோக்கமாகும்.

81. இவ்வில்ல நிருவாகம் 1-10-1973 முதல் சென்னை காவல்துறைத் தலைவர் பொறுப்பிலிருந்து சமூக நல இயக்குநர் தலைமைப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டு, மீண்டும் 1-12-1984 முதல் சிறைத் துறைத் தலைவர் தலைமையின் கீழ் மாறறப்பட்டுள்ளது. இக்காப்பு முகாம் ஒரு ஆசிரியரின் கீழ் இயங்கி வருகிறது. அவர் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறார்.

## XXI. அனுமதி, வெளியேற்றம் மற்றும் இல்லவாசிகளின் எண்ணிக்கை:

82. இவ்விலத்தின் அங்கீகரிக்கப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை 950 பிச்சைக்காரர்கள் (770 ஆண்கள், 180 பெண்கள்) ஆகும். அரசாணை



1997 ஏப்ரல் 11]

நிலை எண் 891, சமூக நலத்துறை, நாள் 30-9-1972-ல் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க இவ்வில்லம் நடத்தப்பட்டு வருகிறது. 1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் நிர்ணயித்த காலத்திற்கு இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டு வைக்கப்படுகிறார்கள். இங்கு சேர்க்கப்படும் இல்லவாசிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவடைகின்ற தேதியில் விடுவிக்கப்படுகிறார்கள். எந்த ஒரு இல்லவாசியும், குற்றத் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்ட தண்டனைக் காலம் முடிந்த பின் விடுதியில் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை.

## XXII. இல்லத்தில் அளிக்கப்படும் வசதிகள்:

83. இவ்வில்லத்திலிருப்போருக்கு இலவசமாக உணவு, தங்கும் வசதி, ஆடைகள், மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதுடன் பல்வேறு துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

### (அ) உணவு :

84. இல்லவாசிகளுக்கு உணவுக்காக நாளொன்றுக்கு பெரியவர் ஒரு நபருக்கு ரூ. 15.00 வீதம் உணவு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு சைவ உணவு வழங்கப்பட்டு வருகிறது. காலை கேழ்வரகு கஞ்சி மற்றும் வெங்காயம், பகல் உணவு, இரவு உணவு வழங்கப்பட்டு வருகின்றன. தினமும் மோரும் வழங்கப்படுகிறது. முக்கியமான நாட்களான புதுவருடப் பிறப்பு, சுதந்திர தினம் போன்ற குறிப்பிட்ட நாட்களிலும், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற சில பண்டிகை நாட்களிலும் ஒரு இல்லவாசிக்கு கூடுதலாக ரூ. 3.00 வீதம் சிறப்புணவு வழங்கப்படுகிறது.

### (ஆ) இருப்பிடம் :

85. இவ்வில்லம், ஏறக்குறைய 9 ஏக்கர் மொத்தப் பரப்பளவில் அமைந்துள்ளது. ஒரே தளமுள்ள கட்டிடமாக துயிற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒரு கூடத்தில் 100 பேர் கொள்கிறன் கொண்ட தங்குவதற்குரிய நான்கு படுக்கைக் கூடங்கள் உள்ளன. இந்த நான்கில் ஒன்று பெண்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### (இ) உடை :

86. இரண்டு துண்டுகள், இரண்டு சட்டை மற்றும் இரண்டு கால் சட்டைகள் ஆண்களுக்கும், பெண்களுக்கு இரண்டு சேலைகள் மற்றும் இரண்டு ரவிக்கைகள் ஆண்டுக்கு ஒருமுறை இலவசமாக வழங்கப்படுகிறது. இவற்றுள் விடுதியில் சேர்க்கப்படும் நாளன்று ஒரு ஜதை வழங்கப்படுகிறது.

**(ஈ) இதர வசதிகள் :**

87. (1) ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய் படுக்கை விரிப்பு, தட்டு டம்ளர் மற்றும் நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது.

(2) இல்லத்தில் அனுமதிக்கப்படும்போது ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஒரு அஞ்சல் அட்டையும், மேலும் அவர்களின் தேவைக்கு ஏற்ப கூடுதல் அஞ்சல் அட்டையும் வழங்கப்படுகிறது.

(3) தண்டனைக் காலம் முடிந்து வெளியேறும் இல்லவாசிகளுக்கு அவர்களின் சொந்த ஊர் செல்ல வசதியாக வாரண்ட் அல்லது பேருந்து கட்டணம் அளிக்கப்படுகிறது.

(4) இல்லவாசிகளுக்கு இரண்டு தினசரி செய்தித்தாள்கள் வழங்கப்படுகிறது.

(5) இல்லவாசிகளுக்கு கேளிக்கை வசதிகளுக்கென விளையாடுவதற்கான வசதியும், படிப்பதற்கான வசதியும் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி பார்க்க வசதியும் வானொலி போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**(உ) மருத்துவ வசதிகள்:**

88. இவ்விடுதிக்கென ஒரு மருத்துவமனை இணைக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலரும், ஒரு செவிலியரும், ஒரு ஆண் உதவி செவிலியரும், ஒரு பெண் உதவி செவிலியரும் மற்றும் இரண்டு மருந்தாளுநரும் பணியாற்றுகின்றனர். சாதாரண பிணிகளை நீக்கும் மருந்துகளும் மற்றும் மாத்திரைகளும் போதிய அளவில் உள்ளன. சிறப்புத் தன்மை உடைய வைத்திய வசதிக்காக நோய்களுக்கேற்ப சென்னையில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு இல்லவாசிகள் அனுப்பப்படுகிறார்கள். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், உளுந்தூர்பேட்டை தொழுநோய் மறுவாழ்வு இல்லத்திற்கு மாற்றப்படுகிறார்கள். சென்னை கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையிலிருந்து மனநல மருத்துவர் வாரத்திற்கு ஒருமுறை, விடுதிக்கு வந்து மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்.

## XXIII. மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள்:

89. இவ்வில்லம் உடல் வலிமையுள்ள பிச்சைக்காரர்கள் தினசரி உடல் உழைப்பிற்காக ஏற்படுத்தப்பட்டது. இவ்வில்லவாசிகளுக்கு நெசவு, தச்சு மேலும் தையல் போன்ற கைத்தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.



**(அ) மண்பாண்டங்கள் பிரிவு :**

இப்பிரிவில் சுமார் 8 இல்லவாசிகள் தினந்தோறும் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். இப்பிரிவில் தயாரிக்கப்படும் பூந்தொட்டிகள் மற்றும் பிற தொட்டிகளும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களுக்கு அளிக்கப்படுகின்றன.

**(ஆ) தையல் பிரிவு :**

இப்பிரிவில் ஆறு தையல் இயந்திரங்கள் தினந்தோறும் இவ்வில்லவாசிகளுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு பயன்படுத்தப்படுகிறது.

**(இ) தச்சு வேலை :**

இப்பிரிவில் சுமார் 7 இல்லவாசிகள் வேலை செய்கிறார்கள். அரசுத் துறையிலிருந்து பெறப்படும் எல்லாவிதமான மரச் சாமான்களும் இங்கு பழுது பார்க்கப்படுகின்றன.

## XXIV முடிவுரை:


90. மேலேயுள்ள பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் இருந்து சிறை நிருவாகம் நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் இம்மாநில சிறை நிருவாகத்தை நவீனப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது தெளிவாகும். வரும் ஆண்டுகளில் இந்நிறுவனங்கள் பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் கீழ் மைய அரசிடம் இருந்து பெறப்படும் சிறைகள் மேம்பாட்டுக்கான மானியத்தைக் கொண்டு மேலும் வலுப்படுத்தப்படும். சிறைக் கைதிகள் மறுவாழ்வுக்கும் சீர்திருத்தத்திற்கும் முக்கியத்துவம் அளித்து அவர்கள் விடுதலை அடைந்த பின்னர் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட நபர்களாகவும் சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாகவும் வாழும் பொருட்டு அவர்களை சீர்திருத்தி சமுதாயத்தோடு இயல்பாக இணைந்து நல்வாழ்வினைத் தொடங்க ஊக்கமளிப்பதுமே இத்திட்டங்களை செயல்படுத்துவதன் நோக்கமாகும். இது தவிர, அரசு மறு வாழ்வு இல்லங்களிலும் மேல்பாக்கம் அரசு காப்பு முகாமிலும் உள்ள நபர்கள் நல்வாழ்வு மீதும் பரிவு நோக்கோடு இவ்வரசு கவனம் செலுத்தி வருகிறது என்பதைக் கண்கூடாகத் தெரிந்து கொள்ளலாம்.

l1]

## ANNEXURE I

*(vide Item No. II).*

## ORGANISATION CHART OF PRISON DEPARTMENT




1. சிறைத் துல Prisons
2. சிறைத் துல neral of Prisons, (Headquarters)
3. சிறைத் துல neral of Prisons, Madras Range.
4. சிறைத் துல neral of Prisons, Trichy Range.
5. சிறைத் துல neral of Prisons, Coimbatore Range.
6. சிறைத் துல neral of Prisons, Madurai Range.
7. தலைமை ந erintendent.
8. தலைமைக் t.
9. மத்திய சி as, Vellore, special Prison for Women, Vellore, special Sub-Jails, Sub-Jails,
. North Arcot Ambedkar, Tiruvannamalai Sambuvarayar Districts, After
செங்கற்ப es, Puzhal, Warders Training Centre, Vellore.
சம்புவரா e
10. தலைமைய y, Cuddalore/Special Sub-Jail/Trichy Sub-Jails, Trichy/Pudukkottai/South
11. மத்திய சி ram Ramasamy Padayachiyar/Tanjavur/Nagappattinam Quaid-e-Milleth
புதுக்கோ hool, Pudukkottai.
நாகப்பட batore/Salem/Open Air Prison, Singanallur/Special Sub-Jails, Coimbatore
12. மத்திய சி s, Coimbatore/Salem /Periyar, Dharmapuri and the Nilgris Districts.
சேலம், கி rai/Palayamkottai, Special Prison for Women, Madurai, Special Sub-Jail,
13. மத்திய சி Jails of Madurai/Ramnad, Kamaraj, Pasumpon Muthu Ramalingam,
கொக்கிர man, Dindigul-Anna , V.O. Chidambaranar and Kanyakumari Districts.
திருநெல் Officers.
மாவட்ட itation Homes
14. மண்டல amp, Melpakkam
15. அரசு மறு
16. அரசு காட
17. திருவாகம் s
18. கணக்குக
19. சிறைத் து
20. கணக்கு
21. நன்னடத்

## Annexure - II

**டிசம்பர் '96 மாதத்தில் அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதியில் உள்ள இல்லவாசிகள் விவரம்**

| வ. எண். | அரசு மறுவாழ்வு இல்லத்தின் பெயர் | மொத்த எண்ணிக்கை (400 பெரியவர் 25 குழந்தைகள்) | பெரியவர் | | சிறியவர்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | பரனூர் | 425 | 166 | 114 | 13 | 14 | 307 |
| 2. | மல்லவாடி. | 425 | 109 | 61 | 8 | 10 | 188 |
| 3. | உளுந்தூர்பேட்டை | 425 | 84 | 56 | 2 | 7 | 149 |
| 4. | செல்லியம்பட்டி. | 425 | 133 | 70 | 7 | 5 | 215 |
| 5. | தேவியாக்குறிச்சி | 425 | 117 | 68 | 6 | 3 | 194 |
| 6. | விண்ணம்பள்ளி. | 425 | 109 | 70 | 5 | 3 | 187 |
| 7. | பா. புதுப்பட்டி | 425 | 196 | 111 | 7 | 16 | 330 |
| 8. | புதுக்கோட்டை | 425 | 156 | 92 | 3 | 4 | 255 |
| 9. | பருகூர் | 425 | 143 | 98 | 12 | 8 | 261 |
| 10. | மனையேறிப்பட்டி | 425 | 149 | 68 | 1 | 4 | 222 |
| 11. | அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம், சென்னை | 950 | 56 | 22 | - | - | 78 |
| | மொத்தம். | 5,200 | 1,418 | 830 | 64 | 74 | 2,386 |

[1997 ஏப்ரல் 11

## Annexure–III

### மறுவாழ்வு இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாயம்/இழப்பு விவரம்

| (1) | 1990-91 (2) | 1991-92 (3) | 1992-93 (4) | 1993-94 (5) | 1994-95 (6) | 1995-96 (7) |
|---|---|---|---|---|---|---|
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு. | 4.04 | 3.03 | 5.54 | 4.73 | 5.20 | 5.18 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு | 4.85 | 4.43 | 6.50 | 7.20 | 6.51 | 5.73 |
| ஆதாயம்/இழப்பு | (+) 0.81 | (+)1.40 | (+)0.96 | (+)2.47 | (+)1.31 | (+)0.55 |



1997 ஏப்ரல் 11]

## இணைப்பு - III

(72 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மீன் வளத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 1997-98

**முன்னுரை**

தமிழ்நாடு இயற்கையாகவே வளமை மிக்க மீன்வளத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. 1.9 இலட்சம் சதுர கி.மீ. பரப்பளவுள்ள பிரத்தியேக பொருளாதார மண்டலத்தை உடைய இம்மாநிலம் 1,000 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைப் பெற்றுள்ளது. இக்கடற்கரைப் பகுதியானது கோரமண்டலம், பாக் ஜலசந்தி, உயிருள்ள பவழங்களையுடைய 21 பவளத்தீவுகளைக் கொண்ட மன்னார் வளைகுடா, மேற்கு கடற்கரையோரம் கடற்கரை காயல்கள் மற்றும் கழிமுகங்களை உள்ளடக்கியதாகும்.

உள்நாட்டு மீன்வளத்தைப் பொறுத்தமட்டிலும் 52 பெரும் நீர்த்தேக்கங்கள் மற்றும் பல குளங்கள், குட்டைகள், கழிமுகங்கள் மற்றும் காயல்கள் அடங்கிய 3.71 இலட்சம் ஹெக்டேர் நீர்ப்பரப்பு உள்ளது. இந்நீர்த்தேக்கங்களும், குளங்களும் அவற்றின் நீர்த்தேவைக்கு, இரு பருவ மழைக் காலங்களை சார்ந்துள்ளன. பருவ காலங்களில் நிகழக் கூடிய மாற்றங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்களில் ஏற்படும் மாறுதல்கள் உள்நாட்டு நன்னீர் மீன் உற்பத்தியில் பிரதிபலிக்கின்றன. இந்த இயற்கை நீர்நிலைகள், துடுப்பு மீன்கள், சிப்பிகள் - கிளிஞ்சல்கள் மற்றும் நீர் வாழ் தாவரங்கள் ஆகியவற்றைக் கொண்டு மாநிலத்தின் மீன்வளப் பெருக்கத்திற்கு இருப்பிடமாகத் திகழ்கின்றன.

பல்வேறு திட்டப்பணிகளின் மூலம் பொதுமக்களுக்குப் பயனளிக்கும் வகையில், மீன்வளம் நிறைந்த ஆதார நீர்நிலைகளைப் பயன்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு மாநிலம் முனைந்து செயல்படுகின்றது. இதனைத் தவிர மீனவ சமுதாயத்தின் பொருளாதாரம் மற்றும் சமூக நலன்களை மேம்படுத்துதல் ஆகிய இரண்டு முக்கிய குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய மீன்வளக் கொள்கையானது வகுக்கப்பட்டுள்ளது.

**மீன்வளக் கொள்கையின் நோக்கங்கள்:**

1) மீனவர்களின் ஒத்துழைப்புடன், நிலை நிறுத்தக் கூடிய அதிக பட்ச மீன் உற்பத்தியைப் பெருக்குதல் மற்றும் மக்களின் ஊட்டச் சத்து தரங்களை உயர்த்துதல்;

2) கடல் மீன்பிடிப்பில் குறிப்பாக அண்மைக் கடலோர பகுதிகளில் நிலை நிறுத்தக்கூடிய அதிகபட்ச கடல் மீன்பிடிப்பை நடத்தி, சிறந்த நிர்வாக வழி முறைகளை ஏற்படுத்துதல்;

3) பெரும் நீர்த்தேக்கங்களில், விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் மீன்வளப் பெருக்கத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு, இன்னும் கூடுதலான பகுதியை உள்நாட்டு மீன்வளத்துக்குப் பயன்படுத்துதல்;

4) கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு வசதியை ஏற்படுத்தி வருவாயை அதிகரிக்கச் செய்தல்;

5) நன்கு இயங்கக்கூடிய மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு உறுதுணை புரிதல்;

மற்றும்

6) மீனவ சமுதாயத்தின் சமூக மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்திட ஆவன செய்தல்.

1997-98-ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களின் விவரங்கள் கீழே சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன:—

**1) கடல் மீனளம்:**

(அ) தமிழ்நாட்டின் கடலோர பகுதியில் தற்போது 8,900 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் 38,300 பாரம்பரிய கட்டுமரங்கள்/வள்ளங்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. ஒரு அலகின் (யூனிட்) சராசரி மீன்பிடிப்பு. கடந்த சில ஆண்டுகளாக குறைந்து வருவதாக ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில், அண்மைக்கடல் மீன்வளம் அளவிற்கும் மிகவும் கூடுதலாக பயன்படுத்தப்பட்டுவிட்டது. எனவே, தற்போதுள்ள வளமான மீன்பிடி தளங்களை நன்கு பாதுகாத்து நிலைநிறுத்தக் கூடிய அளவில் கடல் மீன்பிடிப்பை மேற்கொள்ள வேண்டும் என்பது நம்முடைய கடல் மீன் வளக் கொள்கையாக உள்ளது. கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்கள் மூலம் பாரம்பரிய



முறைகளில் மீன்பிடித்தலை ஊக்குவித்தல், பல்வகை மீன்பிடி தளவாடங்களைப் பயன்படுத்தி பல்வகை மீன்பிடிப்புகளை மேற்கொள்ளுதல், மீன்பிடி விசைப்படகு மற்றும் பாரம்பரிய மீனவர்களுக்கு இடையே ஏற்படும் சச்சரவுகளை அந்தந்த உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப தீர்த்து வைத்தல் ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

**ஆ) பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்:**

இத்திட்டம், பாரம்பரிய மீன்பிடி கலன்களில் (கட்டுமரம்/வள்ளம்) உட்பொருத்தும் இயந்திரம் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரம் ஆகியவற்றினைப் பொருத்தி இயந்திரமயமாக்கிவிட மீனவர்க்கு உதவி புரிகின்றது. இதற்கான மானியத் தொகையை மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ், உட்பொருத்தும் இயந்திரம் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரம் ஆகியவற்றினை வாங்கிட, அவற்றின் விலையில் 50 விழுக்காடு தொகை அல்லது உச்சவரம்புத் தொகையாக முறையே ரூ.12,000/- அல்லது ரூ.10,000- மீனவர்களுக்கு வழங்கப்படுகிறது.

1996-97-ல் பாரம்பரியப் படகுகளை இயந்திரமயமாக்குவதற்காக அரசு ரூ.11.00 கோடிக்கு செலவின அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை 1,500 படகுகளுக்கு இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், பாரம்பரிய மீனவருக்கு மீன்பிடி வலைகள் வாங்கிட ஒவ்வொரு மீனவருக்கும் மானியமாக தலா ரூ.6,000/- வழங்கப்படுகிறது. இத்திட்டம், கடலில் மீன்பிடிப்பு நடத்தப்படாத மிகவும் தூரமான பகுதிகளுக்குச் சென்று, நீண்ட நேரம் கடலில் தங்கி, மீன்பிடிப்பு மேற்கொள்ளவும் கரைக்கு விரைவாக திரும்பி வரவும் மீனவர்களுக்கு உதவிடும். இத்திட்டம் 1997-98-ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**இ) மீனவர்கள் மீன்பிடி வலைகள் வாங்குதல்:**

ஒரு மீன்பிடி கலனில் 1 அல்லது 5 மீனவர்கள் இருப்பார்கள். தற்போது, மாநிலத்தில் 38,300 கடல் மீன்பிடி அலகுகள் உள்ளன.

ஒரு வலையை 2 வருடங்களுக்குத்தான் மீன்பிடிக்கப் பயன்படுத்த முடியுமாதலால் மீனவர்கள் ஒவ்வொரு வருடமும் தங்களிடம் உள்ள வலைகளில் 50 விழுக்காடு வலைகளை மாற்றிட நேரிடுகின்றது. கடல் மீனவர்களுக்கு ஏற்படும் இந்த இடர்பாட்டை நீக்குவதற்காக, 1996-97 ஆம் ஆண்டில் கடல் மீனவர்கள் வாங்கும் வலைகளின் விலையில்,

10 விழுக்காடு தொகையை மானியமாக வழங்கிட ரூ.100.00 இலட்சமும், இத்திட்டத்தினை செயலாக்கம் செய்திட தமிழ்நாடு மாநில முதன்மை மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு பங்கு மூலதனமாக ரூ.10.00 இலட்சமும் வழங்கிட அரசு, செலவின அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

**ஈ) வள்ளங்கள் மற்றும் கட்டுமரங்கள் வாங்குதல்:**

நம் கடற்கரை வாழ் மீனவர்களில் பெரும்பாலானோர் மீன்பிடிக்க கட்டுமரங்களையே பயன்படுத்துகின்றனர். மீனவர்களுக்கு இருக்கும் பல முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்களின் ஆயுட்காலம் மிகவும் குறைவாக இருப்பதாகும். ஒரு கட்டுமரத்தின் ஆயுட் காலம் மூன்று முதல் 5 ஆண்டுகளாகும். தஞ்சாவூரில் அதிராமப்பட்டினம் மற்றும் தூத்துக்குடிக்கு இடைப்பட்ட பகுதிவாழ் மீனவர்கள் வள்ளத்தைப் பயன்படுத்துகின்றனர். ஒரு வள்ளத்தின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். ஒரு கட்டுமரம் அல்லது வள்ளத்தின் விலை ரூ.20,000-லிருந்து ரூ.30,000 ஆக கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே கட்டுமாம் மற்றும் வள்ளம் வாங்கிட மீனவர்களுக்கு உதவிடுவதற்காக 1996-97 ஆம் ஆண்டில் அதன் விலையில் 20 விழுக்காடு தொகை அல்லது அதிகபட்ச மானியமாக ரூ.4,000 வழங்கிட, ரூ.80.00 இலட்சத்திற்கு அரசு செலவின அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**உ) கடலூர் மற்றும் சின்னமுட்டத்தில், கரையோர தகவல் தொடர்பு நிலையம் அமைத்தல் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் (வாக்கி டாக்கி) மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்குதல்:**

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் அவ்வப்போது மோசமான வானிலைகளினால் இன்னல்களுக்குள்ளாகின்றனர். இம்மாதிரி நிகழ்வுகளில் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க கரையோர மையங்களுக்கு வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் எச்சரிக்கைத் தகவல்கள் அளிக்கப்படுகின்றன. மீனவர்களுக்கு தகவல் தொடர்பு வசதிகளை இன்னும் அதிகரிக்கச் செய்திட அவர்களுக்கு மேலும் 1,500 தகவல் தொடர்பு சாதனங்கள் 1997-98-ல் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை மீன்பிடி துறைமுகத்திலிருந்து இயங்கும் மீனவர்களுக்கு 850 தகவல் தொடர்பு சாதனங்களும், கடலூர் பகுதி மீனவர்களுக்கு 450 தகவல் தொடர்பு சாதனங்களும்,



கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து இயங்கும் மீன்பிடி விசைப்படகு மீனவர்களுக்கு 200 தகவல் தொடர்பு சாதனங்களும் வழங்கப்படும். கடலூர் மற்றும் சின்னமுட்டத்தில் ரூ.8.65 இலட்சம் செலவில், இரு கரையோர தகவல் தொடர்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. 1997-98-ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு 1,500 தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்கி வழங்கிட 25 சதவீதம் மானியத் தொகையாக ரூ.75.00 இலட்சம் வழங்கப்படும்.

**ஊ) தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம்:**

கடலில் மீன்பிடித்தலை முறைப்படுத்தவும், பாரம்பரிய படகு மீனவர்கள் மற்றும் விசைப்படகு மீனவர்கள் இடையே ஆண்டு தோறும் அதிகரித்து வரும் மோதல்களைத் தவிர்க்கவும், 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தை அரசு இயற்றியுள்ளது. சச்சரவுகளை தீர்த்திட, உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப நடைமுறைப்படுத்திடப்படும் சில முறைகளை அங்கீகரிக்கும் வகையில், 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டு அவற்றை அரசு பரிசீலித்து வருகின்றது. மீனவர்களுக்குப் பாதுகாப்பினை அளிப்பது மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனைக் கருத்தில் கொண்டு இச்சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருவதன் மூலம் உயிர் காக்கும் சாதனங்கள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் ஆகியவற்றை மீன்பிடி விசைப்படகுகளில் எடுத்துச் செல்வதை கட்டாயமாக்கிட அரசு பரிசீலித்து வருகின்றது. இச்சாதனங்களைப் பயன்படுத்திடவும், கடலில் பாதுகாப்பாக இருந்திடவும் மீனவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்படும்.

**எ) பாக் ஜலசந்தியில் இலங்கை கடற்படையின் தாக்குதலால் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள்:**

பாக் ஜலசந்தி பகுதியில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற் படையினால் கண்மூடித்தனமாக தாக்கப்படுவது தமிழ்நாடு மீனவர்களிடையே மிகுந்த வேதனையையும் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்திட ஒரு காரணமாக அமைந்துள்ளது. 1996-ஆம் ஆண்டில் 21 நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளில் 29 படகுகள் தாக்கப்பட்டன. 2 படகுகள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. 35 மீனவர்கள் காயமடைந்தனர் மற்றும் 10 மீனவர்கள் உயிர் இழந்துள்ளனர். 1997-ஆம் ஆண்டில் (31-03-97 வரை), 6 தாக்குதல்கள் நிகழ்ந்ததில், ஒரு மீனவர் உயிர் இழந்தார் மற்றும் நால்வர் காயமடைந்தனர்.

தாக்குதல்களின் போது, ஒவ்வொரு நிகழ்வும் இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்டு, மத்திய அரசிற்கு முன்னுரிமை அடிப்படையில் உடனுக்குடன் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதே நேரத்தில், பாதிப்புக்குள்ளான மீனவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை அரசிடமிருந்து நட்ட ஈட்டுத் தொகை பெறுவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்தப் பிரச்சனைகளை மத்திய அரசின் கவனத்திற்கு இந்த அரசு கொண்டு செல்ல அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு கச்சத்தீவு அருகே பாரம்பரிய மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையைப் பாதுகாத்திட மத்திய அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது.

**ஏ) உள்ளமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் :**

**(அ) மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் உள்ளமைப்பு வசதிகள்:**

மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் நாட்டுப்படகுகளைப் பாதுகாப்பாக நங்கூரமிடவும், பிடிக்கப்பட்ட மீன்களை கரைக்குக் கொண்டு வந்து சுகாதாரமான முறையில் பாதுகாக்கவும், படகுகளைப் பழுது பார்த்திடவும், அடுத்த கடற் பயணத்திற்கான எரியெண்ணை, குடிநீர், பனிக்கட்டி தேவைகளைப் பெறுவதற்கும் தங்குதள வசதிகள் தேவைப்படுகின்றன. மீன்பிடி விசைப்படகுகளின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிறைவேற்றிட தேவையான மீன்பிடி துறைமுகம்/தங்குதளங்கள் அமைத்திட முக்கியத்துவம் அளித்து வரப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப் பட்ட சில மீன்பிடி இறங்கு தளங்களில் மீன்பிடி துறைமுகங்கள் அமைத்திடவும், பாரம்பரிய படகுகளுக்கென சிறிய அலை தடுப்புச் சுவர்கள் அமைத்திடவும் ஒரு பெரிய திட்டம் வகுக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் தொடக்கமாக, குளச்சல் மற்றும் இராமேஸ்வரத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து பெங்களூரிலுள்ள மத்திய கடலோர மீனள பொறியியல் ஆய்வு மையம் இராமேஸ்வரத்தில் விரிவான தொழில் நுட்ப பொருளாதார ஆய்வினை நடத்தி சாத்தியக்கூறுகள் குறித்தான அறிக்கையையும் தயாரித்து வருகிறது. குளச்சலை பொறுத்தவரை இதே போன்ற ஆய்வு நடத்தப்பட்டு, தொழில் நுட்ப பொருளாதார ரீதியில் இத்திட்டத்தைச் செயலாக்க சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்தான அறிக்கை தயாரித்திட தேவையான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.





**(ஆ) பழையாறு மீன்பிடி துறைமுகத்தில் சிறப்புப் பழுதுகள் மேற்கொள்ளுதல்:**

நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில், பழையாறு மீன்பிடித் துறை முகம் 1986-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 300-க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் இம்மீன்பிடி துறைமுகத்தைப் பயன்படுத்தி வருகின்றன. 1987-ஆம் ஆண்டிலிருந்து எந்தவிதமான பராமரிப்புப் பணிகளோ, துறைமுகப் பகுதியை ஆழப்படுத்தும் பணிகளோ இங்கு மேற்கொள்ளப்படவில்லை. 1997-98-ஆம் ஆண்டில் ரூ.8.00 இலட்சம் செலவில் மீன்பிடி துறைமுகத்தில் சேர்ந்துள்ள மணலை அகற்றிடவும், மீன்பிடி துறைமுகத்தினை ஆழப்படுத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(இ) தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் அடிப்படை வசதிகள் அமைத்தல்:**

400 மீன்பிடி விசைப்படகுகளுக்கான தங்குதள வசதிகளுடன் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் 1973-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இத்துறைமுகத்தில் ஏற்கெனவே ஒரு ஏலக்கூடம் கட்டப்பட்டது. தூத்துக்குடியில் உள்ள மீன்பிடி விசைப்படகுதாரர்கள் தாங்கள் பிடித்த மீன்களை சுகாதாரமான முறையில் ஏலமிடுவதற்கு ஏதுவாக இந்த மீன்பிடி துறைமுகத்தினுள் கூடுதலாக ஒரு ஏலக்கூடம் அமைக்கப்படவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். எனவே, 1997-98-ஆம் ஆண்டில், தூத்துக்குடி மீன்பிடி துறைமுக வளாகத்தில் கூடுதலாக ஒரு ஏலக்கூடம் அமைத்திட ரூ.13.20 இலட்சத்திற்கு செலவின ஒப்பளிப்பு அளிக்கப்படவுள்ளது.

**(ஈ) மல்லிப்பட்டினத்தில் உள்ள ஆர்.சி.சி. ஜெட்டிக்கு சிறப்புப் பழுதுகள் மேற்கொள்ளுதல்:**

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினத்தில் ஒரு ஆர்.சி.சி. ஜெட்டி கட்டப்பட்டு 1981-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இந்தத் தங்குதளத்தினை சுமார் 400 மீன்பிடி விசைப்படகுகள் பயன்படுத்தி வருகின்றன. தங்குதளத்தில் அமைக்கப்பட்டுள்ள கான்கிரீட் பலகைகளில் சில வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால் மீனவர்கள், தாங்கள் பிடித்த மீன்களை ஜெட்டியில் பழுது ஏற்பட்டுள்ள பகுதி வழியாக கரைக்கு கொண்டு வந்து ஏலமிடுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே பழுது ஏற்பட்டுள்ள பகுதியினை சீர் செய்ய வேண்டுவது மிகவும் அவசியம் என கருதப்பட்டது. எனவே, பழுது ஏற்பட்டுள்ள பகுதியினை சீர் செய்திட, 1997-98-ஆம் ஆண்டில் ரூ.17.30 இலட்சம்

[1997 ஏப்ரல் 11

செலவில் பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள செலவின ஒப்பளிப்பு அளித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஊரக உள்ளமைப்பு வசதிகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.5.19 கோடி செலவில் தற்போது தூத்துக்குடி, மல்லிப்பட்டினம் மற்றும் பழையாறில் உள்ள மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தவும் பராமரிக்கவும் சேறுவாரும் இயந்திரம் ஒன்று வாங்கவும், ரூ.21.75 கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேல மணக்குடி, கீழ மணக்குடிக்கு இடையேயும், எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் பழவேற்காட்டிலும், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் கடலூரில் பரவானூர் ஆற்றிடையேயும் பாலம் கட்டுவதற்கும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் நிதி உதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2. உள்நாட்டு மீன்வளம்

மீன்குஞ்சு உற்பத்தியில் தமிழ்நாடு சில பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. கட்லா, ரோகு, மிர்கால் ஆகிய மீன்கள் தென்மேற்கு பருவ மழைக் காலங்களில் இன உற்பத்தி செய்கின்றன. ஆனால், வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில்தான் பெரும்பாலான நீர்நிலைகளில் நீர் வரத்து உள்ளது. இதனால் மீன் குஞ்சு வளர்ப்பை கூடுதல் காலத்திற்கு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் இருப்பு செய்வதற்கு ஒரு ஆண்டிற்கு 170 மில்லியன் மீன் குஞ்சுகள் தேவைப்படுகின்றன என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், துறையின் ஓராண்டு மீன்குஞ்சு உற்பத்தித்திறன் 100 மில்லியன் மீன் குஞ்சுகள் ஆகும்.

மீன்குஞ்சு உற்பத்தியைப் பெருக்குதல், மீன்வளர்ப்பிற்குட்பட்ட பகுதியை அதிகரித்தல், உள்நாட்டு மீன் விற்பனையை ஊக்குவித்தல் ஆகியவை உள்நாட்டு மீன்வள மேம்பாட்டின் முக்கிய நோக்கமாக இருந்து வந்துள்ளது. மீன்வளர்ப்பில் துறையின் முயற்சியை தவிர, தனியார் மூலம் மீன்குஞ்சுகள் மற்றும் நன்னீர் இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்திட நிதியுதவி வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. இந்த முயற்சிகள் தனியார் மீன்வளர்ப்போர் மற்றும் பொதுமக்கள் மத்தியில், விஞ்ஞான ரீதியில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ள வேண்டுமென்ற விழிப்புணர்ச்சியை உருவாக்கியுள்ளது. நீர்த்தேக்க மீன்வள நிர்வாகம், மீன்குஞ்சு உற்பத்தி, மீன்வளர்ப்பிற்கான விஞ்ஞான முறைகளை பரப்புவதற்கான பயிற்சியும் விரிவாக்கப் பணிகளுமே உள்நாட்டு



1997 ஏப்ரல் 11]

மீன்வள மேம்பாட்டில் கவனம் செலுத்தப்பட வேண்டியனவாகும். ஏரிகள் மற்றும் குளங்களின் மீன்பிடி உரிமைகள் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் வசம் உள்ளது. பெரும் நீர்த்தேக்கங்கள் மற்றும் சில பெரிய பாசன ஏரிகளை நிர்வாகம் செய்வதில் மீன்துறை கவனம் செலுத்தும்.

உள்நாட்டு மீன் உற்பத்தியினைப் பெருக்குவதற்கு அரசு கீழ்க்காணும் திட்டங்களை வகுத்துள்ளது:

### அ) மிதவைக் கூடுகள் வாங்குதல்:

மீன்குஞ்சு உற்பத்தியில் உள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மிதவைக் கூடுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு முறையே பிரபலமானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. 1996-97-ஆம் ஆண்டில் 30 மிதவைக் கூடுகள் வாங்கிட ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் மீன்குஞ்சு வளர்ப்பிற்காக ரூ.2.50 இலட்சம் செலவில் 50 மிதவைக் கூடுகள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு துறையின் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலும் கூடுதலாக மீன்குஞ்சு உற்பத்தியைப் பெருக்கிட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இம்முயற்சிகள் அனைத்து நீர் நிலைகளிலும் போதிய அளவு மீன்குஞ்சுகளை இருப்பு செய்திட உதவும்.

### ஆ) லால்பேட்டையில் மீன்பண்ணை அமைத்தல்:

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், தென் ஆற்காடு வள்ளலார் மற்றும் வட ஆற்காடு அம்பேத்கர் ஆகிய மாவட்டங்களில் மீன்குஞ்சு தேவையினை பூர்த்தி செய்திட, 1997-98-ஆம் ஆண்டில் தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டத்தில் உள்ள லால்பேட்டை மீன்பண்ணையில் ரூ.10.00 இலட்சம் செலவில் இரண்டு சினை மீன் குளங்கள், எட்டு மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் மற்றும் தேவையான நீர் வசதி செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### இ) நீர்த் தேக்கங்களில் மீன்வளத்தைப் பாதுகாத்திட கண்ணாடியிழை படகுகள் வாங்குதல்:

நீர்த் தேக்கங்களில் மீன்வளத்தை முறையாகப் பாதுகாத்திடவும், திருட்டு மீன்பிடிப்பினை தடுத்து நிறுத்திடவும், அரசுக்கு வருவாயை பெருக்கிடவும் ஏதுவாக ரூ.5.00 இலட்சம் செலவில் வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்தப்பட்ட ஐந்து 18 அடி நீளமுள்ள கண்ணாடி இழைப் படகுகள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப் படகுகள் ஐந்து நீர்த்தேக்கங்களில் பயன்படுத்தப்படும்.

**(ஊ) நீர்த்தேக்கங்களுக்கு மீன்பிடி வலைகள் வாங்குதல்:** [1997 ஏப்ரல் 11

நீர்த் தேக்கங்களில் மீன்பிடிப்பை அதிகரிப்பதற்காக 1,200 கிலோகிராம் நைலான் மீன்பிடி வலைகள் வாங்குவதற்காக, 1996-97-ஆம் ஆண்டில் ரூ.3.00 இலட்சம் செலவின ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**(உ) மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்:**

உள்நாட்டு மீனவர்களுக்குப் பயிற்சி அளித்திடும் பணி, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மத்திய நிதியேற்பு திட்டத்தின்கீழ் 13 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. அவை ஒரு ஆண்டில் 700 மீன்வளர்ப்போருக்கு பயிற்சி அளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளன. இம்மாநிலத்தில் விஞ்ஞான ரீதியிலான மீன்வளர்ப்பினை, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டம் பிரபலமாக்கியுள்ளது.

**மீனவர் நல்வாழ்வு:**

மீனவர் மேம்பாட்டிற்காக நல்வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்துவதில் இந்த அரசு மிகவும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. மீனவர் நல்வாழ்விற்கான திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு எந்த முந்தய அரசும் அளிக்காத அளவுக்கு இந்த அரசால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் மீனவர் நலனுக்காக நிறைவேற்றப்படும் திட்டங்களுள் மிகவும் முக்கியமானவையாகும்:

1. இலவச வீடு கட்டும் திட்டம்;
2) மீனவர் வீடுகள் பழுது பார்த்தல்;
3) தெரு விளக்குகள் அமைத்தல்;
4) இணைப்புச் சாலைகள் அமைத்தல்;
5) குழுக் காபபுறுதி திட்டம்;
6) சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்;

<u>மற்றும்</u>

7) டீசல் எரியெண்ணெய் மீதான மத்திய ஆயத் தீர்வையைத் திரும்ப அளித்தல்.



1997 ஏப்ரல் 11]

**1) தமிழ்நாடு ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம்:**

1996-97-ஆம் ஆண்டில் "தமிழ்நாடு ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம்" என்று பெயரிடப்பட்ட ஒரு வீட்டுக்கு ஒரு மின் விளக்கு கொண்ட இலவச வீடுகள் கட்டுவது என்ற சிறப்புத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார். ஐந்து வருட காலங்களில் 2,000 வீடுகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் அடிப்படையில், கடலோர கிராமங்களில் குடிசைகளில் வசிக்கும் மீனவர்களுக்கு ஒரு வீட்டிற்கு ரூ.32,000/- செலவில், ஒரு மின் விளக்குடன் கூடிய 4,000 வீடுகளை 1996-97-ல் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மீன்வளத்துறையின் பொறியியல் பிரிவின் மூலமாக இந்த வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1997-98-ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

**2) மீனவர் விடுகள் பழுது பார்த்தல்:**

மாநில அரசு முந்தய ஆண்டுகளில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டி வழங்குவதற்கு மட்டுமே ஒப்புதல் அளித்து வந்தது. ஆனால், மீனவர்கள் வீடுகளை பழுது பார்ப்பது குறித்து இதுவரை எந்த முந்தய அரசும் பரிசீலித்ததே இல்லை. முந்தய ஆண்டுகளில் கட்டப்பட்டுள்ள மீனவர்களின் வீடுகளைப் பழுது பார்ப்பதற்காக, ஒரு முன்னோடித் திட்டமாக ஒரு வீட்டிற்கு ரூ.5,000/- வீதம் 1996-97-ம் ஆண்டில் ரூ.1.00 கோடிக்கு இந்த அரசு செலவின ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டம் 1997-98-லும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**3) தெரு விளக்குகள் பொருத்துதல்:**

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை சார்ந்த மீனவர்களுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பதை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்வசதி வாரியத்தின் ஒத்துழைப்புடன் 158 மீனவர் கிராமங்களில் 1205 தெரு விளக்குகளை 1996-97-ம் ஆண்டில் அமைப்பதற்காக ரூ.50.00 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**4) இணைப்புச் சாலைகள் அமைத்தல்:**

மீனவர்கள் கிராமங்களிலிருந்து, அருகில் உள்ள மீன் விற்பனை அங்காடிகளுக்கு மீன்களை உடனடியாகக் கொண்டு செல்வதற்கு உதவிடும் வகையில், 36 மீன்பிடி கிராமங்களில் 51.05 கி.மீ. நீளமுள்ள

இணைப்புச் சாலைகளை அமைப்பதற்காக, 1996-97-ம் ஆண்டில் ரூ.1.00 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 1997-98-லும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5) குழுக் காப்புறுதி திட்டம்:**

மீனவர்களுக்காக அரசு இதுவரை குழுக் காப்புறுதித் திட்டத்தைச் செயல்படுத்தி வந்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும், புது டெல்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திற்கு, மீனவர் ஒருவருக்கு ஆண்டு சந்தாவாக ரூ.9.75 வீதம் தமிழக அரசு செலுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், மீனவர்கள் இறக்கும் தருணங்களில், அந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.25.000/- காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. பகுதி ஊனமுற்ற, மீனவர்களுக்கு ரூ.12,500/- வழங்கப்படுகிறது. 1996-97-ஆம் ஆண்டில், புது டெல்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சமமேளனத்திற்கு, தமிழ்நாட்டில் உள்ள 2,90,480 உள்நாட்டு மற்றும் கடல் மீனவர்களுக்கு காப்பீட்டுச் சந்தாத் தொகையாக ரூ.28.32 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

1997-98-ஆம் ஆண்டில், மீனவர் இறப்பு நிகழ்வுகளில் நிதி உதவியினை ரூ.25,000/- ல் இருந்து ரூ.35,000/- ஆகவும், பகுதி இழப்பிற்கு ரூ.12,500/-ல் இருந்து ரூ.17,500/- ஆகவும் கூடுதலாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இருப்பினும் இத்திட்டத்தின்கீழ் நிவாரணத் தொகையை ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கும் பொருட்டு கூடுதலாக ரூ.15,000/-ஐ ஒப்பளித்திட அரசு தனியாக ஒரு திட்டம் வகுத்துள்ளது. இத்திட்டம் மாநில அரசு திட்டமாக அமுல்படுத்தப்படும்.

**6) சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்:**

ஒரு ஆண்டில் நான்கு மாத காலத்திற்கு பருவமழையின் காரணமாக, நமது கடற்கரையில் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடிவதில்லை. மீன்பிடி குறைவாக உள்ள இந்த நான்கு மாதங்களில், மீனவர்களுக்கு பிழைப்புதவி வழங்கிட வேண்டி சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டு முதல் 1996-97 ஆம் ஆண்டு முடிய மத்திய அரசு பங்கேற்று வந்தது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மீனவரும் ஒரு மாதத்திற்கு ரூ.45/- வீதம் எட்டு மாதங்களுக்கு ரூ.360/- செலுத்துவர். இதற்கு ஈடாக மத்திய அரசு ரூ.360/-ம் மாநில அரசு ரூ.360/-ம் தங்களது பங்காக வழங்கியதைச் சேர்த்து, மொத்தம் ரூ.1,080/- மீன்பிடிப்பு குறைவான நான்கு மாதங்களில் நான்கு தவணைகளில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.



1996-97-ஆம் ஆண்டில் 1,82,324 மீனவர்கள் இத்திட்டத்தால் பயனடைவர். இதற்காக ரூ.13.13 கோடியை தமிழக அரசு ஒப்பளித்துள்ளது.

1997-98-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தினை மாநில திட்டமாக தொடர்ந்து செயல்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. மீனவர் பங்கான ரூ.360/- உடன் தமிழக அரசு தனது பங்காக ரூ.360/-ஐ வழங்கி மொத்தத் தொகையான ரூ.720/- 1997-98-ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு வழங்கப்படும்.

**7) டீசல் எரியெண்ணெய் மீதான ஆயத் தீர்வையை திரும்ப அளித்தல்:**

மீன்பிடி விசைப்படகுகள் டீசல் எரியெண்ணெய் மீது செலுத்தும் மத்திய ஆயத் தீர்வையை அவர்களுக்குத் திரும்ப அளிக்கும் மத்திய நிதி உதவி திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் மத்திய அரசு 80 விழுக்காடு நிதி உதவியும் மாநில அரசு 20 விழுக்காடு நிதி உதவியும் அளிக்கிறது. இத்திட்டத்தை 1996-97-ல் ரூ.75.00 இலட்சம் செலவில் செயல்படுத்த மத்திய அரசு தனது பங்கான ரூ.60 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**4. ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கம்:**

**அ) ஆராய்ச்சி**

தற்போதுள்ள ஆறு ஆராய்ச்சி நிலையங்கள் ஒவ்வொன்றும் ஒரு மீன்துறை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களின்கீழ் தற்போது 36 ஆராய்ச்சி உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இத்தகைய ஆராய்ச்சிப் பிரிவின் செயல்பாட்டினை, குறிப்பாக செயல்முறை ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. துறையின் பல்வேறு ஆராய்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் மீன் ஆராயச்சி நிலையம் மற்றும் தூத்துக்குடி மீனவளக் கல்லூரி ஆகிய அமைப்புகளின் ஒத்துழைப்புடன் சிறப்பாக செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆ) மீனவர் பயிற்சி நிலையம்:**

தமிழ்நாட்டில் கடலோர பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு கடல் மீன்பிடிப்பில் பயிற்சி அளிப்பதற்காக ஆறு

மீனவர் பயிற்சி நிலையங்கள் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் ஆண்டிற்கு 50 முதல் 60 மாணவர்களுக்கு 10 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு பயிற்சியின்போது கடல் பயணம், நவீன மீன்பிடி முறைகள், மற்றும் கடல் மீன்பிடிப்பு சம்பந்தப்பட்ட இயந்திரங்களை பழுது பார்த்தல் போன்ற விஷயங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மீனவர் பயிற்சி நிலையங்களின் மூலமாக இதுவரை 8,979 மீனவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 1997-ஆம் ஆண்டில் ஆறு மீனவர் பயிற்சி நிலையங்களில் 332 மீனவர்கள் பயிற்சிக்கு சேர்ந்துள்ளனர்.

1996-97-ஆம் ஆண்டில் சென்னை மற்றும் நாகப்பட்டினம் மீனவர் பயிற்சி நிலையங்களுக்கு இரண்டு 43 அடி படகுகளை ரூ.19.12 இலட்சம் செலவில் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தற்போது நாகப்பட்டினம் மீனவர் பயிற்சி நிலையம் அமைந்துள்ள கட்டிடம் முப்பது வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள கட்டிடம் ஆகும். தற்போது அந்தக் கட்டிடம் பழுதடைந்துள்ளது. 1997-98-ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மீனவர் பயிற்சி நிலையக் கட்டிடத்தை ரூ.10.00 இலட்சம் செலவில் சிறப்பு பழுதுகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இ) விவசாய மனிதவள மேம்பாட்டுத் திட்டம்:**

உலக வங்கியின் நிதி உதவியுடன் இத்துறை விவசாய மனித வள மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்திற்கு ரூ.1.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் மீன்துறையின் மனித வள மேம்பாட்டினையும் நிர்வாகத்தையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சென்னையில் உள்ள மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி வசதிகளை ஏற்படுத்துதல், பயிற்சிக்குரிய கருவிகள், புத்தகங்கள், கணிப்பொறிகள் வாங்குவது போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும். பணியாளர் பயிற்சி நிலையத்தில் வகுப்பறை மற்றும் தங்கும் விடுதி கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.20.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். மீன்துறையின் பல்வேறு பகுதிகளிலும், பயிற்சியளிப்போருக்கு பயிற்சி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். 1996-97-ஆம் ஆண்டில் இரண்டு அலுவலர்கள் நன்னீர் மீன் வளர்ப்பு குறித்த பயிற்சிக்காக இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசிய நாடுகளுக்கு ஆசிய மீன்வள அபிவிருத்திக் கழகத்தில் பயிற்சி பெறுவதற்காக



மேலும் ஆறு அலுவலர்கள் அனுப்பப்படுவார்கள். 1997-98-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு ரூ.35.222 இலட்சம் செலவு செய்யப்படும்.

**5. மீனவர் கூட்டுறவு சங்கங்கள்:**

அ) மீனவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. தற்போது தமிழ்நாட்டில் 2,90,480 மீனவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு 687 பதிவு செய்யப்பட்ட கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன.

**ஆ) மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்:**

தற்போது தமிழ்நாட்டில் 40,110 மீனவ மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு 128 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மீன்களுடைய விரைவில் கெட்டுப்போகும் தன்மையை கருத்தில் கொண்டும் மீன்களை ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு செல்வதில் மீனவ மகளிருக்கு ஏற்படும் இன்னல்களை நீக்கிடவும், 1996-97 ஆம் ஆண்டில், ஒவ்வொரு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்துக்கும் ரூ.20,000/- செலவில் ஒரு மூன்று சக்கர வண்டியை 50 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இலவசமாக வழங்கிட ரூ.10.00 இலட்சம் செலவினத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மீன் பிடிக்கப்படும் இடங்களில் இருந்து மீன் அங்காடிகளுக்கு மீன்களை மீனவ மகளிர் சுமந்து செல்வதற்கு ஏதுவாக 1997-98-ஆம் ஆண்டில் 50 விழுக்காடு மானிய விலையில் ரூ.8.25 இலட்சம் செலவில் 7,500 அலுமினிய பாத்திரங்கள் வழங்கிட அரசு உத்தேசித்துள்ளது.

**6. தமிழ்நாடு மாநில முதன்மை மீனவர் கூட்டுறவு இணையம்:**

தமிழ்நாடு மாநில முதன்மை மீனவர் கூட்டுறவு இணையம் 19-10-1992 முதல் இயங்கி வருகிறது. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தையும், மீன்வள மேம்பாட்டையும் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அபிவிருத்தி அடையச் செய்வதே இந்த இணையத்தின் நோக்கமாகும். இதுவரை 403 மீனவர் கூட்டுறவு சங்கங்களும், ஒன்பது மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்களும் இந்த முதன்மை இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இணையத்தின் பங்கு மூலதனத்தில் மாநில அரசு பங்கேற்றுள்ளது. 31-12-96 அன்று உள்ளவாறு இந்த இணையத்தின் பங்கு மூலதனத்தின் மொத்த மதிப்பு ரூ.2.53 கோடி ஆகும்.

**அ) ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்:**

இந்தத் திட்டம் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாடு மாநில முதன்மை கூட்டுறவு இணையத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முதலீடு ரூ.15.88 கோடியாகும். 1993-94 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டு காலத்திற்கு இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர். நாகை காயிதே மில்லத், இராமநாதபுரம், வ.உ.சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து கடலோர மாவட்டங்களில் 44 மீனவ கிராமங்களில் செயல்படுத்தப்படும். இதுவரையிலும் தமிழக அரசு இத்திட்டத்திற்கு ரூ.9.57 கோடியை விடுவித்துள்ளது. 31-12-1996 வரை கட்டுமரம், வள்ளம், இயந்திரம், கடல் பிளைவுட் படகுகள், மீன்பிடி வலைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 775 யூனிட் மீன்பிடி சாதனங்கள் 2,423 மீனவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.3.34 கோடி செலவில் 1750 மீனவர்களுக்கு மீன்பிடி கலன்கள், மீன்பிடி வலைகள் மற்றும் இதர சாதனங்கள் உள்ளடக்கிய 701 யூனிட் சாதனங்களை வழங்கி உதவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் மீனவ கிராமங்களில் 2,649 மீனவர்கள் நவீன மீன்பிடி முறைகள், கூட்டுறவு, மீன்பிடி ஒழுங்குமுறைகள், வெளிப்பொருத்தும் இயந்திரங்களைப் பராமரித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் அமுல்படுத்தப்படும் மீனவ கிராமங்களில் மீனவருக்குப் பயனளிக்கும் வகையில் 218 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

**(ஆ) ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் -இரண்டாவது கட்டம்:**

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை ரூ.48.23 கோடி செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கட்டுமரம், வெவ்வேறு வகை வள்ளங்கள், மரைன் பிளைவுட் படகுகள் உள்ளடங்கிய 5000 யூனிட் மீன்பிடி சாதனங்கள் வழங்கப்படவுள்ளன. இத்திட்டத்தில், தமிழ்நாட்டில் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 100 மீனவர் கிராமங்களில் உள்ள 16,350 மீனவர்களுக்கு வெவ்வேறு வகையான வலைகளும், வெளிப்பொருத்தும் இயந்திரங்களும் வழங்கப்படும்.





ஏலக்கூடம் மற்றும் மீன் உலர்த்தும் மேடை, குளிர் சாதனம் பொருத்திய மீன் ஏற்றிச் செல்லும் வாகனங்கள், குளிர் சாதனப் பெட்டிகள், பழுது பார்க்கும் பணி நிலையங்கள் ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடவும் மீனவர்களும், இத்திட்டத்தை செயல்படுத்தும் கூட்டுறவு சங்கங்களும் பயன்பெறும் வகையில் விரிவாக்கப் பணிகளும் பயிற்சியும் அளித்திட இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மீன்பிடிப்பில் ஒரு ஆண்டுக்கு 55,350 டன் அளவு கூடுதலாக கிடைக்கும் எனவும், இதனால், ரூ.55.35 கோடி கூடுதல் வருவாய் ஈட்ட இயலும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்:**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டில் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகத்தின் மூலதனம் ரூ.500.00 இலட்சம், மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.435.52 இலட்சம் ஆகும்.

**1. இக்கழகம் தற்பொழுது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:**

(1) கிழக்குக் கடற்கரையில் விசாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு நான்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு நாவாய்கள் இயக்குதல்;

(2) எட்டு நீர்த்தேக்கங்களில் தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து பராமரிப்பதுடன், இந்நீர்த் தேக்கங்களில் வணிக ரீதியில் மீன்பிடிப்பு நடத்துதல் ;

(3) நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களில் இருப்பு செய்வதற்கும் மீன்வளர்ப்போருக்கு விற்பனை செய்வதற்கும் நீர்த்தேக்க பகுதிகளில் உள்ள மீன் குஞ்சு பண்ணைகளில் தூண்டுதல் முறையில் இனவிருத்தி மூலம் தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தல் ;

(4) சென்னை, மண்டபம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் குளிர்பதன நிலையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்கள் பராமரித்தல் ;

(5) மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு துறைகளில் மீனவர்களுக்கு சலுகை/குறைந்த விலையில் டீசல் விற்பனை செய்தல்;

[1997 ஏப்ரல் 11

(6) சென்னை மற்றும் இதர முக்கிய நகரங்களில், சில்லரை மீன் விற்பனை நிலையங்களின் மூலம் தரமான மீனை நல்ல நிலையில் நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்தல்;

(7) சென்னை இராயபுரத்தில் உள்ள மீன் வலை தயாரிப்பு நிலையத்தில் மீனவர்களுக்கு தரமான வலைகள் தயாரித்து விற்பனை செய்தல் ; மற்றும்

(8) வளர்ப்பு முத்து மற்றும் வளர்ப்பு முத்து சிப்பிகள் தயாரிக்கும் திட்டத்தினை நிர்வகித்தல்.

**2. கடல் வளம்:**

**ஆழ்கடல் மீன்பிடிப்பு:**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் விசாகப்பட்டினத்தை தளமாகக் கொண்டு நான்கு ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது. 1996-97 ஆம் ஆண்டு பிப்ரவரி 1997 முடிய 53.62 டன் இறால் மற்றும் 189.17 டன் மீன் பிடிக்கப்பட்டு ரூ.167.86 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**3. உள்நாட்டு மீன்வளம்:**

**(அ) நீர்த் தேக்கங்கள்:**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த் தேக்கங்களில் முறைப்படியான மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 1/3 பங்கு மீன்பிடிப்பினை மீனவர்களுக்கும் அளிக்கும் முறையில் மீனவர்களை பணியமர்த்தி மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது :

(1) சாத்தனூர் அணை
(2) பவானிசாகர்
(3) அமராவதி
(4) ஆழியார்
(5) திருமூர்த்தி
(6) உப்பார்
(7) மஞ்சளார்
(8) பாலார் பொறந்தலார்
(9) பெரும்பள்ளம்



1997 ஏப்ரல் 11]

1996-97 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய 308.14 டன் மீன்கள்
பிடிக்கப்பட்டு ரூ.72.64 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
மேற்கண்ட ஒன்பது நீர்த்தேக்கங்களில், உப்பார் மற்றும் பாலார்
பொறந்தலார் நீர்த்தேக்கங்கள் தனியாருக்கு குத்தகைக்கு
விடப்பட்டுள்ளன.

**(ஆ) மீன்குஞ்சு உற்பத்தி:**

சாத்தனூர் அணையில் ஒரு மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணையும்
அமராவதி, ஆழியார், திருமூர்த்தி, மஞ்சளார், பாலார் பொறந்தலார்
மற்றும் உப்பார் ஆகிய இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு
பண்ணைகளையும் இக்கழகம் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில்
உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் இக்கழகத்தின்
கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன்,
மீன் துறை, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் தனியார்
மீன்வளர்ப்போருக்கும் வழங்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டு பிப்ரவரி
திங்கள் முடிய 434.61 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி
செய்யப்பட்டன.

**4. டீசல் விற்பனை நிலையங்கள்:**

இக்கழகம் சென்னை (இராயபுரம்) மல்லிப்பட்டினம், தூத்துக்குடி,
பழையாறு உட்பட 16 இடங்களில் உள்ள மீன்பிடி துறைமுகங்களில்
மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு இயக்குபவர்களின் நலன்
கருதி டீசல் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. 1996-97 ஆம்
ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய 32.433 கிலோ லிட்டர் டீசல்
எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.33.01 இலட்சம் தரகுத்
தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

**5. மீன் விற்பனை:**

இக்கழகம் சென்னை மாநகரம், மதுரை, கோவை, பெரியார் ஆகிய
மாவட்டங்களில் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன்
மற்றும் வறுத்த மீன்களை விற்பனை செய்து வருகிறது. 1996-97 ஆம்
ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய 537.17 டன் மீன் ரூ.203.30 இலட்சத்திற்கு
விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**6. மீன் வலை தயாரித்தல்:**

இராயபுரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 75 டன் மீன் வலை தயாரிக்கும்
திறனுடன் மீன் வலை தயாரிப்பு நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

[1997 ஏப்ரல் 11

1996-97 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய 32.73 டன் நைலான் வலையும் எச்.டி.பி. வலையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு ரூ.67.68 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**7. உலர் மீன் கிடங்கு, தூத்துக்குடி:**

உலர் மீன் ஏற்றுமதியாளர்களின் நலனைக் கருதி கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் தூத்துக்குடியில் கட்டப்பட்ட உலர் மீன் கிடங்கை இக்கழகம் பொறுப்பேற்று நடத்தி வருகிறது. 1996-97 ஆம் ஆண்டு பிப்ரவரி 1997 திங்கள் முடிய ரூ.1.07 இலட்சம் வாடகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**8. வளர்ப்பு முத்து மற்றும் முத்துச்சிப்பி தயாரித்தல்:**

**(அ) வளர்ப்பு முத்து திட்டம்:**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட மதிப்பீடுக் குழு பரிந்துரையின்படி இக்கழகம் 1-8-1990 முதல் மண்டபத்தில், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அடிப்படையில் வளர்ப்பு முத்துக்களை தயாரிக்கும் திட்டத்தினை துவக்கியது.

**(ஆ) முத்துச்சிப்பி பொரிப்பகம்:**

புது தில்லியில் உள்ள உயிரியல் தொழில்நுட்ப இலாக உதவியுடன் மண்டபத்தில் முத்துச்சிப்பி பொரிப்பகம் ஒன்று நிறுவப்பட்டு சென்ற நிதியாண்டிலிருந்து (1995-96) செயல்பட துவங்கியுள்ளது.

ஸ்ரீ

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 216829. சென்னை-600 008
D
V211,31 N97
N97. 30.1.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.